# விடுதலைக்குப்பின் தமிழ் வளர்ந்த வரலாறு






சிலமபுச செல்வர்

ம.பொ.சிவஞானம்

Y31 ;N47
N78
122568

# விடுதலைக்குப்பின் தமிழ் வளர்ந்த வரலாறு

சிலம்புச் செல்வர்
ம.பொ.சிவஞானம்

பூங்கொடி பதிப்பகம்
22, வடகூர் செல்வ விநயகர் கோயில் தெரு,
மயிலாப்பூர் : : சென்னை-600004.

P31 V, N47
N78

முதற்பதிப்பு : 26–6–1978
உரிமை : ஆசிரியருக்கு
சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களின்
73-ம் ஆண்டு பிறந்த நாள் வெளியீடு

விலை ரூ. 10 00

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 102568
EGMORE, MADRAS

## Bibliographical Date

| | | |
|---|---|---|
| 1 | Title of the Book | "Viduthalaikkuppin Tamil Valarnda Varalaru" |
| 2 | Author | M. P. Sivagnanam |
| 3 | Date of Birth | 26-6-1906 |
| 4 | Language | Tamil |
| 5 | Edition | First |
| 6 | Date of Publication | 26, June 1978 |
| 7 | Copyright Holder | Author |
| 8 | Paper used | 10. 9. Kg. White Printing |
| 9 | Size of the book | 18.5×12.5 cms. |
| 10 | Printing points used | 10 Point |
| 11 | No of pages | 288 |
| 12 | No of Copies Printed | 1000 Copies |
| 13 | Printer | Moovendar Achagam Madras-14 |
| 14 | Artist | Amudhoon |
| 15 | Binding | Hard Board Binding |
| 16 | Price | Rs. 10.00 |
| 17 | Publisher | Poongodi Pathippagam Madras-4 |
| 18 | Subject | Literature |
| 19 | Summary | The growth of Tamil after Indipendence |
| 20 | Call Number | O, 31" VN 78 ← N 47 L 8 |



# நுழைவாயில்

பாரதப் பெருநாடும் அதனோடு சேர்ந்து தமிழ்த் திருநாடும் பிரிட்டிஷ் பேரரசின் பிடியிலிருந்து விடுபட்ட பின்னர், "மொழி வளர்ச்சிச் சகாப்தம்' ஒன்று தோன்றியிருக்கிறது. தமிழகத்தில் மட்டுமல்ல; இந்தியா முழுவதிலுமே!

ஆங்கிலேயருக்குத் தமிழர் அடிமைப் பட்டிருந்ததுபோல, ஆங்கில மொழிக்குத் தமிழ் மொழியும் அடிமைப்பட்டிருந்தது. ஆங்கிலேயரின் ஆதிக்கம் நீங்கியதுமே ஆங்கில மொழி

யின் ஆதிக்கமும் நீக்கப்பட வேண்டுமென்ற உணர்வும் உத்வேகமும் தேசபக்தியுடைய தமிழர்களுக்கு இயற்கை யாகவே ஏற்படலாயின.

இந்திய தேசபக்தர்களில் ஒருவன் என்ற முறையிலே தமிழகத்தில் ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை அகற்றவும், தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழ் மொழிக்கே முதலிடம் தேடவும் நானும் ஆர்வங் கொண்டேன். அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக 32 ஆண்டுகளுக்கு முன்பு தமிழரசுக் கழகத்தை அமைத்தேன்.

விடுதலைப் போராட்டத்தின் மத்தியிலே தமிழை வளர்ப் பதற்கான அரும்பணியிலும் தேசியத் தலைவர்கள் ஈடுபட் டனர். அது, தனி ஒரு வரலாறு ஆகும். அதனை "விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு" என்னும் பெயரில் எழுதி, 1970 ஜுன் 26ல்—அதாவது, எனது 65ஆவது பிறந்த நாளில் தனி நூலாக வெளியிட்டேன்.

தமிழை வளர்க்கும் பணியில் விடுதலைப் போராட்ட காலத்தில் தேசபக்தர்கள் பங்கு கொண்டது தனிப்பட்ட முறையில்தான். வலிமை பொருந்திய ஒரு ஏகாதிபத்தி யத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த போது அரசாங்கத்தின் துணைகொண்டு தமிழ்த் தொண்டில் ஈடுபடுவதற்குச் சந்தர்ப்பம் ஏது?

நாடு விடுதலை பெற்ற பின்னர் மாநிலங்களிலும் மத்தியிலும் ஆட்சிப் பொறுப்பு விடுதலை வீரர்களின் கைக்கு வந்தது. அதனால், விடுதலைக்குப் பின்னர், மத்திய—மாநில அரசுகளைப் பயன்படுத்தித் தேசியவாதிகள் தமிழ்மொழித்

தொண்டில் ஈடுபட்டனர். அந்த வரலாறு இந்த நூலில் விவரிக்கப்படுகின்றது.

நாடு விடுதலை பெற்ற பின்னும் 1947 முதல் 1956 வரை தென்னகம் மொழிவழி ராஜ்யங்களைக் கொண்டதாக இருக்க வில்லை. பன்மொழிப் பிரதேசமாகவே இருந்து வந்தது. அந்தக் காலத்திலும் சென்னை ராஜ்ய ஆட்சிப் பொறுப்பி லிருந்த காங்கிரஸ் தமிழர்கள் முடிந்தவரை ஆட்சியைப் பயன்படுத்தி தமிழ்வளர்ச்சிக்குப் பாடுபட்டனர். 1956 நவம்பரில் தென்புலத்தில் மொழிவாரி ராஜ்யங்கள் அமைந்தன. அதனையொட்டித் தமிழகத்தில், ''தமிழரசு'' தோன்றியது. அதிலிருந்து 1966 வரை ஆட்சிப் பொறுப்பி லிருந்த தமிழ் நாடு காங்கிரசானது புதிய புதிய சட்டங்களைத் தோற்றுவித்துத் தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டாற்றியது.

அதன்பின், 1967 முதல் 1975வரை தொடர்ந்து 9 ஆண்டுக்காலம் தி. மு. கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. இந்தக் காலத்திலும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தோற்று விக்கப்பட்ட சட்டங்களையும் திட்டங்களையும் பயன்படுத்தி தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டது. தி. மு. க. அரசு.

பின்னர், 1976ல் தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி தோன்றி ஒன்றரை ஆண்டுக் காலம் நீடித்தது இந்த ஆட்சியும் தமிழை. வளர்க்கவும், தமிழினத்தின் புகழைப் பெருக்கவும் இயன்றவரை பாடுபட்டது.

1977 ஜூன் திங்களில் மாண்புமிகு எம். ஜி ராமச்சந்திரன் அவர்கள் தலைமையிலே அனைத்திந்திய அண்ணா தி. மு. க ஆட்சி தோன்றியது. அதன் பின்னுள்ள ஓராண்டுக் காலத்

திலே அ. இ. அ. தி. மு. க. அரசு தமிழை வளர்க்கவும், தமிழருடைய வரலாற்றுச் சிறப்புகளுக்கு வாழ்வளிக்கவும் பல திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்தது.

இப்படி, கட்சி வேறுபாடின்றி 1947 முதல் 1977 முடிய உள்ள 30 ஆண்டுக் காலத்தில் மத்திய அரசும், இந்த மாநில அரசும் தமிழ் வளரவும் தமிழர் புகழ் பெருகவும் ஆற்றி வந்துள்ள பணிகள் இந்நூலில் தரப்பட்டுள்ளன. மத்திய—மாநில அரசுகளும், அதன் அங்கங்களாகவுள்ள சென்னை—மதுரை—அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களும், மாநில—மத்திய அரசுகளால் அமைக்கப் பெற்றுள்ள நிறுவனங்களும் ஆற்றி வந்துள்ள பணிகள் மட்டும் இந்நூலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. தனிப்பட்டவர்களும், வேறு தனி நிறுவனங்களும் ஆற்றியுள்ள பணிகளை இந்நூலில் கொண்டு வர நான் முயலவில்லை. அதற்கு, அந்த அளவுக்கு உழைத்துச் செய்திகளைச் சேகரிப்பதற்கு எனக்கு வசதியோ, வாய்ப்போ, சாதனங்களோ இல்லாததுதான் காரணமாகும்.

காழ்ப்புணர்ச்சியுடனோ, புறக்கணிக்க வேண்டுமென்ற உள்நோக்குடனோ நான் யாரையும் எதையும் விட்டுவிடவில்லை. செய்தி தெரியாததாலோ, தெரிந்திருந்தும் மறதி காரணமாகவோ விட்டிருக்கலாம். அவற்றை நினைவூட்டினால் மகிழ்ச்சியுடன் அடுத்த பதிப்பில் சேர்த்துவிடுவேன்.

“செங்கோல்” பத்திரிகையில் தொடர் கட்டுரையாக எழுதியதையே இந்நூல் வடிவில் தமிழினத்தாருக்குத் தந்துள்ளேன்.

தலைப்புகளையொட்டி 'கூறியவை கூறல்' பலவிடங்களில் தவிர்க்க முடியாததாகிவிட்டது. அதனை வாசகர்கள் ஒரு குறையாகக் கருதமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

யான் கோரியதற்கிணங்க, இந்நூலுக்குத் தேவைப்படும் தகவல்களைத் தந்துதவிய தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையினருக்கும், தமிழ் வளர்ச்சிக் கழகத்தாருக்கும், சென்னை—மதுரை-அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களுக்கும் மற்றும் தனிப்பட்ட நண்பர்களுக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை "பூங்கொடி பதிப்பக"த்தின் உரிமையாளர் திரு. வே. சுப்பையா அவர்கள் சிறந்த முறையில் பதிப்பித் திருக்கிறார். அவருக்கு எனது பாராட்டு.

சென்னை,
21—6—1978.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | நுழைவாயில் | ... 5 |
| 2. | விடுதலையின் போது தமிழகத்தின் நிலை | ... 9 |
| 3. | தமிழ்வளர்ச்சிக் கழகம் | ... 20 |
| 4. | இலங்கை தொடங்கி இமயம்வரை தமிழ்விழா | ... 31 |
| 5. | கவிஞர்களுக்குச் சிறப்பு | ... 51 |
| 6 | தமிழ் வாழவும் வளரவும் "தமிழரசு" கண்டோம் | ... 70 |
| 7. | அரியாசனத்தில் தமிழன்னை | ... 81 |
| 8. | தமிழ் வளர்ச்சி மன்றம் | ... 96 |
| 9. | தமிழ் பயிற்றுமொழி | ... 104 |
| 10. | ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் பிரசாரம் | ... 115 |
| 11. | பாரதி வைரவிழா | ... 136 |
| 12. | கலைச்சொல் அகராதி | ... 146 |
| 13. | சென்னை மாநகராட்சியில் தமிழ் | ... 155 |
| 14. | சங்கீத நாடக சங்கம் | ... 172 |
| 15. | காந்தி நூல் வெளியீட்டுக் கழகம் | ... 175 |
| 16. | "தமிழ்நாடு" பெயர் கோரிக்கை | ... 179 |
| 17. | நூலக இயக்கம் | ... 186 |
| 18. | உலகத் தமிழ் மாநாடு | ... 189 |
| 19. | நினைவுச் சின்னங்கள் | ... 193 |
| 20. | தொல்பொருள் துறை | ... 199 |
| 21. | மத்திய அரசின் தமிழ்ப்பணி | ... 202 |
| 22. | பல்கலைக்கழகங்களின் தமிழ்ப்பணி | ... 220 |
| 23. | சென்னையில் உலகத் தமிழ் மாநாடு | ... 236 |
| 24. | ஆங்கில ஆதிக்கப் பாதுகாப்பு மாநாடு | ... 240 |
| 25. | மீண்டும் பயிற்சி மொழிப் பிரச்னை | ... 249 |
| 26. | உலக நாடுகளில் தமிழ் | ... 270 |
| 27. | வள்ளுவருக்கு ஒரு கோட்டம் இளங்கோவுக்கு ஒரு கலைக் கோயில் | ... 281 |
| 28. | முடிவுரை | ... 286 |

# விடுதலையின் போது தமிழகத்தின் நிலை

இந்த இருபதாம் நூற்றாண்டிலே நம் தாய் மொழியான தமிழ் மொழியை வளர்க்கும் புனிதப் பணியானது இந்திய விடுதலைப் போருடன் சேர்ந்தே தொடங்கியது எனலாம். தமிழ் வளர்ந்த வரலாற்றை விடுதலைப் போர் வரலாற்றி லிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. அந்த அளவுக்கு அதனோடு தமிழ் பின்னிப் பிணைந்து கிடக்கிறது.

## முதல் நூல்

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் வளர்ந்த வரலாற்றை எழுத வேண்டுமானால், விடுதலைப் போராட்ட காலத்தை ஒரு பகுதியாகவும், விடுதலைக்குப் பின்னுள்ள காலத்தை ஒரு பகுதியாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி எடுத்துக் கொண்டுதான் "விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு" என்னும் நூலை எழுதி, அதனை, 1970 ஜூன் 26ல்—எனது பிறந்த நாளில்—வெளியிடச் செய்தேன்.

சுதந்திரப் போராட்ட காலத்திலே தமிழ் போன்ற பிரதேச மொழிகளை வளர்க்கும் பணியில் அரசு ஆர்வம் காட்டவில்லை. காரணம், அப்போதைய அரசு இந்திய

மக்களை அடிமை கொண்ட ஆங்கிலேயரின் ஆதிக்கமாக இருந்ததுதான். அதனாற்றான், அன்னியர் ஆதிக்கத்தால் புறக்கணிக்கப்பட்ட கைத்தொழில் வளர்ச்சி, கல்விப் பெருக்கம், மொழி வளர்ச்சி ஆகியவற்றிலே விடுதலைப் போரில் ஈடுபட்டிருந்த தேசபக்தர்கள் கவனம் செலுத்த லாயினர்.

## தமிழ் வளரத் தடை!

நாடு விடுதலை பெற்ற பின்னர் மத்தியிலும் மாநிலந் தோறும் அமைந்த காங்கிரஸ் அரசுகள் தமிழ் உள்ளிட்ட பிரதேச மொழிகளை வளர்க்கும் பணியை மேற்கொண்டன. அதற்கான சட்டங்களை நிறைவேற்றி, திட்டங்களை வகுத்தன. அதனால், விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு என்பதனை அடுத்து எழுதும் இந்நூலுக்கு 'விடுதலைக்குப் பின் தமிழ் வளர்ந்த வரலாறு' என்று பெயரிடலானேன். ஆம்; விடுதலைக்குப் பின் சுதந்திர அரசால் தமிழ் மொழியானது திட்டமிட்டு வளர்க்கப்பட்டு வருகிறது.

நாடு விடுதலை பெற்ற பிறகும் இந்திய மொழிகளை வளர்ப்பதற்குத் தடைகள் பல இருந்தன. அவற்றுள் மிகப் பெரிய தடை ராஜ்யங்கள் மொழி அடிப்படையில் பிரிக்கப் படாமலிருந்ததுதான். பிரதேச மொழிகளின் வளர்ச்சியைக் கருதியும் விடுதலைப் போராட்ட காலத்திலேயே, 'நாடு விடுதலை பெற்றதும் ராஜ்யங்கள் மொழிவாரி திருத்தி யமைக்கப்படும்' என்று இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை உறுதி கூறியிருந்தது. அதற்கு முன்னோடியாக, 1920 லேயே காங்கிரஸ் மாநிலங்கள் மொழிவாரியாகத் திருத்தியமைக்கப் பட்டன. மாநில காங்கிரஸ் கமிட்டிகளின் நடவடிக்கைகள் பெரும்பாலும் அந்தந்த மாநில மொழிகளிலேயே நடத்தப் பட்டு வந்தன.

துரதிர்ஷ்டவசமாக, தமிழ் நாட்டுக் காங்கிரஸ்காரர்கள் மொழிவாரி ராஜ்யப் பிரிவினையில் போதிய ஆர்வங் காட்டவில்லை. அவர்களிலே சிலர் எதிராகவும் இருந்தனர்.

ஆந்திர, கர்நாடக, கேரள மாநிலங்களிலே இந்த அவல நிலை இருக்கவில்லை. அங்கெல்லாம் மொழிவாரிப் பிரிவினையை உடனடியாக நிறைவேற்றி வைக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் வலுவாக இருந்து வந்தன. இந்தக் குறைபாட்டிலிருந்து தமிழகத்தை மீட்டாலொழிய—மொழிவாரி ராஜ்யக் கோரிக்கைக்குத் தமிழ்நாடு காங்கிரஸ்காரர்களிடையேயும் ஆதரவு திரட்டினாலொழிய—சுதந்திர இந்தியாவிலேயும் தமிழ்மொழி வளர முடியாது என்று கருதினேன்.

## புலவர்கள் நிலை

தமிழ் நாட்டிலே காங்கிரசுக்குப் புறம்பாக 'நீதிக்கட்சி,' 'சுயமரியாதை இயக்கம்', 'திராவிடர் கழகம்' என்னும் பெயர்களால் இயங்கிவந்த அமைப்புகளும் தமிழ் மாநிலக் கோரிக்கையிலே அவ்வளவாக ஆர்வங் காட்டவில்லை. சமஸ்கிருத வெறுப்பும் இந்தி எதிர்ப்புந்தான் தமிழ் மொழியை வளர்ப்பதற்கான வழிகள் என்ற தவறான எண்ணம் தமிழ் மக்களிடையே—குறிப்பாக, தமிழ்ப் புலவர்களிடையே பரப்பப்பட்டு வந்தது. மேலே சொன்ன மூன்று இயக்கங்களும் ஆக்க வழியில் தமிழ்மொழிக்குப் பணிபுரிவதிலே அக்கறை காட்டவில்லை. இந்தக் குறைபாடும் தமிழ் வளர்வதற்குத் தடையாக இருந்தது.

## ஆங்கில மோகம்!

பொது இயக்கங்களின் நிலை இதுவாக இருக்க, தமிழர் சமுதாயத்திலுள்ள படித்த மக்களும் தமிழ் மொழியை வளர்ப்பதிலே ஆர்வங் காட்டவில்லை. இதற்குக் காரணம் அவர்களைப் பிடித்திருந்த ஆங்கில மோகந்தான். சென்னைப் பல்கலைக் கழகத்தில் பெயரளவில் 'தமிழ்த் துறை' என்பதாக ஒன்று இருந்து வந்ததென்றாலும், பாட போதனைக்குத் தமிழையே கருவியாகக் கொள்ள வேண்டுமென்ற நியாயத்தை அந்தப் பல்கலைக் கழகம் புறக்கணித்து வந்தது. இதனால், பல்கலைக் கழகத்தின் ஒரு அங்கமாக விளங்கும் தமிழ்த் துறையும் வளர்ச்சியற்றுக் கிடந்தது.

## மோதல்

"நாட்டிற்கு நல்ல துரைத்தனம் வந்தாலும் தோட்டியின் தலையில் புல் சுமைதான்" என்பது பழமொழி அதன் படி, நாடு விடுதலை பெற்ற பின்னரும் தமிழுக்கு விடுதலை இருக்காது என்பதனை அனுமானித்து அறிய முடிந்தது. துரதிர்ஷ்டவசமாக, நாடு விடுதலை பெறவிருந்த நேரத்திலே தமிழ் நாட்டளவில் மொழிப் பற்றுளருக்கும் நாட்டுப் பற்றுளருக்கு மிடையே மோதல் இருந்து வந்தது. எப்பாடு பட்டேனும் இந்த மோதலைத் தவிர்த்தாலொழிய, அவர்கள் தமிழை வளர்ப்பதற்கு ஒன்றுபட்டுத் தொண்டாற்ற முடியாதென்ற நிலை இருந்தது. அப்படிப்பட்ட மோசமான சூழ்நிலையை மாற்றி யமைக்கவும், நாடு அடையும் சுதந்திரத்தின் பயனை சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள சாதாரண மக்கள் தங்கள் தாய்மொழியின் வாயிலாக அனுபவிக்கவும் பாடுபடுவதற்கு ஒரு இயக்கம் தேவைப்படுவதனை உணர்ந்தேன். அப்படி ஒரு இயக்கம் நாடு விடுதலை பெற்ற நேரத்தில் தமிழர் மத்தியில் இருக்கவில்லை என்பதனை இங்கு நான் உறுதியாகச் சொல்லியாக வேண்டும்.

## த. அ. க. தோற்றம்

தமிழ் மாநிலம் அமைத்தல், தமிழக எல்லைப் பகுதிகளை மீட்டல், தலைநகர் காத்தல் ஆகியவை தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழே முதலிடம் பெறச் செய்வதற்கான முன்னோடிப் பணிகள் என்று நான் உறுதியாக நம்பினேன். தமிழ்ப் புலவர்களிலே பெரும்பாலோர் இந்த உண்மையை அப்போது உணர்ந்திருக்கவில்லை. உணர்ந்தவர்களும் இதற்காக ஒன்றுபட்டு உழைக்கும் சூழ்நிலையைப் பெற்றிருக்கவில்லை. ஆகவே, அந்தப் பணியை நானே மேற்கொள்ளலானேன். திரு. வி. க, தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் ஆகிய இருபெரும் சான்றோர்களுடைய உதவியையும் விரும்பிப் பெறலானேன்.

1946 நவம்பர் 21ஆம் நாளன்று தமிழரசுக் கழகம் என்னும் பெயரில் ஒரு இயக்கத்தைத் தொடங்கினேன். அப்போது நான் தமிழ் நாடு காங்கிரசின் முன்னணிப் பேச்சாளர்களில் ஒருவனாக :இருந்து வந்தேன். ராஜாஜி, காமராசர் போன்ற பெருந்தலைவர்களின் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவனாக இருந்தேன். நான் காங்கிரசில் இருந்தேன் என்றாலும், தமிழரசுக் கழகத்தை, காங்கிரசின் ஒரு கிளையாக அல்லாமல், சுதந்திரமாகச் செயல்படும் ஒரு பொது நிறுவனமாகத் துவக்கினேன்.

## புதிய கோஷங்கள்

"தமிழினமே ஒன்றுபடு!" என்ற புதிய ஒற்றுமைக் கோஷத்துடன் தமிழரசுக் கழகம் பிறந்தது. "எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்" என்னும் கோரிக்கைக்குக் குரல் கொடுத்துக் கொண்டே பிறந்தது. "தமிழர்வாழ, தமிழ்வளர, தமிழ் மாநிலம் தேவை" என்று பிரகடனம் செய்து கொண்டே கழகம் பிறந்தது. "உரிமைக்கு எல்லை வேங்கடம்; உறவுக்கு எல்லை இமயம்" என்று கூறி, மொழிப்பற்றையும் நாட்டுப்பற்றையும் இணைத்துச் செயல்படக் கழகம் முனைந்தது.

## கூட்டறிக்கை

"1947 ஜனவரி 14-ல்—தைத் திங்கள் முதல் நாளில்—வரும் பொங்கல் திருநாளைத் "தமிழர் திருநாள்" என்னும் பெயரில் தமிழினத்தை ஒருமைப்படுத்தும் ஒற்றுமைத் திருநாளாகக் கொண்டாடும்படி வேண்டுகோள் விடுத்தது தமிழரசுக் கழகம். அந்த வேண்டுகோளில் திருவாளர்கள் திரு. வி கலியாணசுந்தர முதலியார், கு. காமராசர், டி. கே. சிதம்பரநாத முதலியார், 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், பாவேந்தர் பாரதிதாசன், தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், தோழர் ப. ஜீவானந்தம், டாக்டர் மு. வரதராசனார், த. செங்கல்வராயன், வ. ரா. ஆகியோருடைய கையொப்பங்களைப் பெற்று கூட்டறிக்கை

யாக செய்தித் தாள்களில் வெளிவரச் செய்தேன். அந்தக் கூட்டறிக்கையில் நானும் கையொப்பமிட்டிருந்தேன். பெரியார் ஈ. வே ரா, அறிஞர் அண்ணாத்துரை ஆகியோருடைய கையெழுத்துக்களையும் பெற முயன்றேன். எனது முயற்சி வெற்றி பெறவில்லை. எப்படியோ தமிழை வளர்க்கவும், தமிழினத்தை ஒற்றுமைப்படுத்தவும், தமிழ் மாநிலம் அமைக்கவும் ஒரு பேரியக்கத்தை உருவாக்கி விட்டேன். இதற்கு அதிகமாக தமிழரசுக் கழகம் பற்றி இங்கு கூறத் தேவையில்லை. அவசியப்படும் இடங்களிலே, தமிழ் வளர்ச்சிப் பணியில் அந்தக் கழகத்திற்கு இருந்த தொடர்பைச் சுருக்கமாகக் கூறுவேன்.

1947 ஆகஸ்டு 15ல் தமிழ்நாடு உள்ளிட்ட இந்தியப் பெருநாடு விடுதலை பெற்றது. நாடு விடுதலை பெற்ற பின்னரும் தமிழ் வளர்ச்சிப் பணி அவ்வளவு எளிதானதாக இருக்கவில்லை. பிற்காலச் சோழர் ஆட்சி வீழ்ச்சியுற்ற பின்னர், தமிழகத்தில் வேற்று மொழியினர் ஆட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றித் தோன்றி தமிழ் மொழி தலையெடுத்து வளராதபடித் தடை செய்து வந்தன.

## தெலுங்கு மொழி

ஆந்திர நாயக்க மன்னர்கள் ஆட்சிக் காலத்திலே தமிழகத்தில் எங்கும் எதிலும் தெலுங்கு மொழி ஏற்றம் பெற்றது. அதனைத் தேசியக் கவிஞரான பாரதியின் வாக்காலேயே அறிவோம்:

"தெலுங்கர் தமிழரை ஆண்ட அடையாளங்கள் நமது பாஷையிலும் அசராதிகளிலும் அழிக்க முடியாதபடிப் பதிந்து கிடக்கின்றன.

"நமது ஸங்கீதமும் நாட்டியமும் தெலுங்கிலேயே இன்று வரை மூழ்கிக் கிடக்கின்றன.

"பாடகர்கள் பாடும் கீர்த்தனங்களில் உயர்தரமெல்லாம் தெலுங்குக் கீர்த்தனங்கள்.

"தாசிகள் ஆட்டத்தில் பாடும் வர்ணங்கள், ஜாவளிகள் முதலியவற்றில் நல்ல உருப்படியெல்லாம் தெலுங்கு.

"நமது விவாக காலங்களில் பாடும் பத்யம், லாலி முதலானதெல்லாம் தெலுங்கு முறை.

"நமது பாஷையில் "கவனம்" (ஆழ்ந்து நோக்குதல்), "ஜொகுஸு", "எச்சரிக்கை", "துரை", "வாடிக்கை", "கொஞ்சம்" முதலிய பதிற்றுக்கணக்கான தெலுங்குச் சொற்கள் சேர்ந்திருக்கின்றன."

("பாரதி தமிழ்"; பக். 205-6)

## *சிறுபான்மையினர்*

தெலுங்கு நாயக்க மன்னர்கள் ஆட்சிக் காலத்திலே ஆந்திர நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு ஏராளமான தெலுங்கர் தருவிக்கப்பட்டனர். அவர்களின் வழித் தோன்றல்களாகப் பல லட்சக்கணக்கான தெலுங்கர்கள் தமிழ் நாட்டில் வாழ்கின்றனர். தெலுங்கர் மிகுதியாக வாழும் ஊர்களையும் தமிழகத்தில் காணலாம்.

தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு மராத்தியர் தமிழகத்தின் ஒருபகுதியை ஆண்ட காலத்திலே மகாராஷ்டிர மொழியும் இங்கு செல்வாக்குப் பெற்றது. மகாராஷ்டிர மக்களும் குடிபுகலாயினர்.

ஆந்திரர், மகாராஷ்டிரர் ஆட்சிக் காலங்களிலே தமிழர் வாழ்வில் சமஸ்கிருதத்தின் செல்வாக்கு 'ஆதிக்கம்' என்று சொல்லக் கூடிய வகையில் வளர்ந்தது. சமஸ்கிருத மொழியைப் பண்டுதொட்டே தமிழ்ப் புலவர்கள் விரும்பிப் பயின்று வந்தனர் என்றாலும், தமிழின் தனித்தன்மை கெடு மளவுக்கு அந்த மொழியைப் பயன்படுத்தவில்லை. தமிழ் வளர்ச்சிக்கும் தமிழருடைய ஆன்மிக வாழ்வுக்கும் தேவைப் படும் அளவில் சமஸ்கிருதத்தைப் பயன்படுத்தினர். ஆனால், ஆந்திர, மகாராஷ்டிர மன்னர்கள் ஆட்சிக் காலங்களிலே

தமிழின் தனித்தன்மை காக்கப்படவில்லை. அதற்கு முன்பு களப்பிரர்களும் பல்லவர்களும் தமிழகத்தை ஆண்ட காலத்திலேயும் சமஸ்கிருதத்தின் செல்வாக்கு வரம்பு மீறி வளர்ந்தது.

மொகலாய மன்னர்களும், அவர்களுடைய பிரதிநிதிகளான ஆர்க்காட்டு நவாபுகளும், மைசூர் சுல்தான்களும் தமிழர் மீது செல்வாக்குப் பெற்றிருந்த காலத்திலே உருது, அரபு, பாரசீக மொழிகள் தமிழகத்தில் ஆதிக்கம் பெற்றன. "பஜார்", "ரஜா", "கிஸ்தி", "வஜா" முதலிய அரபுச் சொற்கள் தமிழில் கலந்தன.

இஸ்லாமியராக இங்கு குடிபுகுந்தவர்களின் வழித் தோன்றல்களும், அவர்களைச்சார்ந்து இஸ்லாத்தைத் தழுவிய பூர்வகுடித் தமிழர்களின் வாரிசுகளும் ஒரு கணிசமான அளவில் தமிழகத்தில் வாழ்கின்றனர். சில ஊர்களில் அவர்கள் பெரும்பான்மையினராகவும் இருக்கின்றனர். அவர்களிலே ஒரு கணிசமான தொகையினர் உருது மொழியை வீட்டு மொழியாகக் கொண்டு வாழ்கின்றனர்.

### *புதிய சாதி*

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயும் தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் ஆங்கில மொழியே ஆதிக்கம் செலுத்தியது. ஆங்கில மொழி பயின்றவர்தான் அறிவாளி என்று நம்பும் அறியாமையும் பிறந்தது. அறிவுக் கலைகள் எல்லாம் ஆங்கிலத்திலேயே சிறைப்பட்டிருந்ததும் இதற்குக் காரணமாகும். ஆங்கிலேயர் ஆட்சியில் ஆங்கிலோ—இந்தியர் என்னும் புதிய சாதி ஒன்றும் தோன்றிவிட்டது. அவர்களுக்கு ஆங்கிலமே வீட்டு மொழியாகி விட்டது.

இவ்வளவையும் இங்கு நான் கூறுவதற்குக் காரணம், பிரிட்டிஷாரிடமிருந்து விடுதலை பெற்ற தமிழகத்திலேயும் தமிழை வளர்ப்பது அவ்வளவு எளிதான காரியமாக இல்லை என்பதனை நினைவூட்ட வேண்டுமென்பதுதான்.

## புதிய பிரச்னைகள்

தமிழ் வளர்ச்சிப் பாதையிலே ஒவ்வொரு அங்குல முன்னேற்றத்திற்கும் ஒவ்வொரு பிரச்சினை தோன்றலானது. மொழிக் கல்வியிலே மொழிவழிச் சிறுபான்மையினர் பிரச்னை தோன்றியது. இதனால், ஆரம்பக் கல்வியில் பயில வேண்டிய மொழிகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது. ஆம்; தமிழ் அல்லாத வேற்று மொழியை வீட்டு மொழியாகக் கொண்டவர்களுக்கு ஆரம்பக் கல்விக் கட்டத்திலேயே அம்மொழியைப் பயில வசதி செய்து தரவேண்டியிருந்தது.

தெலுங்கருக்குத் தெலுங்கையும், கன்னடருக்குக் கன்னட மொழியையும், இஸ்லாமியரில் ஒரு சாராருக்கு உருது—அரபு மொழிகளையும், ஆங்கிலோ — இந்தியருக்கு ஆங்கில மொழியையும் பள்ளிகளில் பாடங்களாக்க வேண்டிய தேசியக் கடமை அரசுக்கு ஏற்பட்டது.

தேசத்தின் பொதுமொழி என்ற வகையில் இந்தியை நடுத்தரப் பள்ளிகளில் பாடமாக வைக்க வேண்டிய பொறுப்பும் இந்தி வழங்காத மாநிலங்களுக்கு ஏற்பட்டது.

இவை அன்றி, நடுத்தரக் கல்வியில் பிரதேச மொழிக்குப் பதிலாக சமஸ்கிருதம் பயில வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் பிறந்தது.

கல்வித் திட்டத்தில் சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளுக்கு இடம் தரக் கூடாது என்ற எதிர் கோரிக்கைகளும் பிறந்தன.

## மேட்டுக் குடியினர்

இத்துடன், ஆங்கிலத்தை ஒரு மொழியாக மட்டும் பயில்வதோடு திருப்தியடையாதவர்கள், ஆங்கிலேயர் காலத்தில் இருந்ததுபோலவே உயர்நிலைப் பள்ளிகளில் மேல் வகுப்பு

களிலும், கல்லூரிகளிலும் ஆங்கிலத்திலேயே அனைத்துப் பாடங்களையும் போதிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர். சமுதாயத்திலுள்ள மேட்டுக்குடி மக்களிடமிருந்து பிறந்த இந்தக் கோரிக்கையானது, படித்த வகுப்பாரின்—ஏன்? படிப்பை விரும்பும் மக்களின் பொதுக் கோரிக்கையாகவும் வலுப்பெறலானது.

ஆலயங்களில் தமிழையே அர்ச்சனை மொழியாக்க வேண்டும், இசையரங்குகளிலே தமிழிலேயே பாட வேண்டும் என்ற இயக்கங்களும் பிறந்தன.

## தேசத் தலைவர்கள்

இவ்வளவும் இந்திய நாடு சுதந்திரம் பெற்ற ஆரம்பக் கட்டத்திலேயே தோன்றி ஆளுவோரை அச்சுறுத்தின என்று சொல்லலாம். இந்தப் பிரச்சினைகளில் எல்லாம் நேருஜி போன்ற மேலிடத்துத் தேசியத் தலைவர்களுக்குத் தெளிவு இருந்தது. செயல் முறையிலே திடத்தன்மையும் இருந்தது. குழந்தைகளின் ஆரம்பக் கல்வி அவர்கள் தாய்மொழியில் தான் இருக்கவேண்டும் என்பதில் அவர்கள் உறுதிகாட்டினர். உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பிரதேச மொழியே போதனை மொழியாக இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினர். நாளடைவில் மாநில அரசுகளிலும், மாநிலந்தோறும் உள்ள நீதிமன்றங்களிலும் அந்தந்த மாநில மொழியே நிர்வாக மொழியாகப் பயன்படுத்தப்பட வேண்டுமென்றும் காங்கிரஸ் தலைவர்கள் அடிக்கடி தெளிவு படுத்தி வந்தனர்.

இந்தி மொழி இந்தியாவின் தேசிய மொழியாக ஏற்கப் பட்டதென்றாலும், இந்தி வழங்காத பிரதேசங்களின் மக்கள்மீது அம்மொழியைத் திணிக்கக் கூடாது என்பதிலே மத்திய அரசு உறுதி காட்டி வந்தது.

மொழிவழிச் சிறுபான்மையினர் தங்கள் வீட்டு மொழியைப் பயில்வதற்கு வசதி செய்து தரப்பட வேண்டும் என்று

மத்திய அரசு வற்புறுத்தியது என்றாலும், அவர்களும் தங்கள் வீட்டு மொழியல்லாத பிரதேச மொழியை—தங்கள் வாழ்க்கை நலன் கருதி—பயில வேண்டியதன் அவசியத்தை உணர்த்தி வந்தது.

## உணர்ந்தும் உணராதவர்போல...

இப்படி, மொழிப் பிரச்சினையில் மத்திய அரசுக்குத் தெளிவான கொள்கையும், சிக்கலற்ற நடைமுறையும் இருந்தனவென்றாலும், மொழிவாரி மாநிலக் கோரிக்கையை உடனடியாக அமுல் நடத்தி வைக்க 'அது முன்வரவில்லை. அப்படிப்பட்ட கோரிக்கையை வற்புறுத்துவது கூடப் பிரிவினைப் போக்கு—குறுகிய புத்தி என்றெல்லாம் தேசத் தலைவர்களிலே சிலர் அடிக்கடி பேசி வந்தனர். ராஜ்யங்களை மொழிவழி திருத்தியமைத்தாலொழிய ஆங்கில மொழியின் ஆதிக்கத்திலிருந்து நாடு விடுதலை பெறுவது சாத்தியமில்லை என்பதனை மேலிடத்து ஆட்சியாளரும், தேசியத் தலைவர்களும் தெளிவாக உணர்ந்திருந்தும், உணராதவர்கள்போல நடந்துகொண்டனர்.

இதனால் எல்லாம் பிரதேச மொழியை வளர்க்கவும் வாழ்விக்கவும் திட்டமிட்டுச் செயல் புரிவது நாடு சுதந்திரம் பெற்ற முதல் 10 ஆண்டு காலம்வரை மாநில அரசுகளால் முடியாமல் இருந்தது. குறிப்பாக, நான்கு மொழிப் பிரதேசங்களைக் கொண்ட சென்னை மாநில அரசால் பிரதேச மொழி வளர்ச்சியில் தீவிரமாகக் கவனம் செலுத்த இயலவில்லை.

அந்த நிலையிலும் 1947 முதல் தமிழ் மொழி வழங்கும் பிரதேசம் தனியரசு மாநிலமாக அமைந்த 1956 வரை சென்னை மாநில அரசு தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகப் பலவகையிலும் பாடுபட்டது.

# தமிழ் வளர்ச்சிக் கழகம்

நாடு சுதந்திரம் பெறுவதற்கு ஒன்றரை ஆண்டுகட்கு முன்பு அப்போதைய சென்னை மாகாண சட்ட மன்றத்திற்குத் தேர்தல் நடைபெற்றது. அதில் காங்கிரஸ் கட்சியே வெற்றி பெற்றது. அந்த வெற்றிக்குப் பின் 'ஆந்திர கேசரி' டி. பிரகாசம் தலைமையில் அமைந்த அமைச்சரவையிலே கோவை திரு. தி. சு. அவினாசிலிங்கஞ் செட்டியார் அவர்கள் கல்வி அமைச்சராஞர். திரு. செட்டியார், காந்தியத்தில் ஆழ்ந்த பற்றுடையவர். அதுகாரணமாக, ஆங்கில மோகம் இல்லாதவர்; ஆங்கில ஆதிக்கத்தை அகற்றித் தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழ் மொழியே முதலிடம் பெறச் செய்யவேண்டு மென்பதிலே ஆர்வமுடையவர்.

## அரசு பெற்ற கழகம்!

1946ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே திரு. தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் கல்வி அமைச்சராகி விட்டாரென்ருலும், 1947 ஆகஸ்டு 15ல் நாடு விடுதலை பெற்றதன் பின்னரே, தமிழ் வளர்ச்சிக்கான பணியில் அவர் தீவிரமாக ஈடுபட முடிந்தது அத்துறையில் அவர் மேற்கொண்ட முதற் பணி, "தமிழ் வளர்ச்சிக் கழகம்" என்ற பெயரில் ஒரு புதிய

நிறுவனத்தைத் தோற்றுவித்ததாகும். சென்னை மாநில அரசின் கல்வி அமைச்சர்தான் அதனைத் துவக்கினாரென்றாலும் சுதந்திர நிறுவனமாக இயங்க அது வாய்ப்புப் பெற்றது. திரு. செட்டியார் அவர்களே அதன் தலைவரானார்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் குறிக்கோள்கள் வருமாறு:

தமிழில் வெளியாகும் சிறந்த நூல்களுக்கு ரொக்கப் பரிசும் பரிசுப் பத்திரமும் வழங்கி, தமிழ் எழுத்தாளர்களுக்கு ஊக்கம் அளித்தல். (2) ஆண்டுதோறும் வெவ்வேறு இடங்களில் தமிழ் விழா நடத்தல். (3) தமிழ் மொழியில் கலைக் களஞ்சியம் தயாரித்து வெளியிடல்.

சுதந்திரம் கிடைப்பதற்கு எட்டுத் திங்களுக்கு முன்பே— சுதந்திரம் கிடைப்பது உறுதியாகியிருந்த நிலையிலே— அதாவது, 1946 டிசம்பரில் தமிழ் வளர்ச்சிக் கழகம் பிறந்தது. இதிலிருந்துதான் அரசு பொறுப்பேற்று அமைக்கும் ஒரு நிறுவனம் 'கழகம்' என்னும் தூய தமிழ்ப் பெயரைத் தாங்கும் மரபு தோன்றியதெனலாம்.

'கழகம்' என்ற சொல்லைக் கண்டு தேசியவாதிகள் வெறுப்படையும் வகையில் அச்சொல் அரசியல் கட்சிப் பூசலுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த நேரத்திலே, அதைப் பற்றிக் கவலைப்படாமல், அரசு ஏற்படுத்தும் ஒரு நிறுவனத்திற்கு அச்சொல்லைப் பயன்படுத்திய திரு. செட்டியாரின் துணிச்சலைப் பாராட்ட வேண்டும். தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகப் பாடுபடுவதற்கென்று தமிழரசுக்கழகம் தோன்றிய ஒரு திங்களுக்குப் பின்னர் தமிழ் வளர்ச்சிக் கழகம் பிறந்தது குறிப்பிடத்தக்கது.

## கலைக் களஞ்சியப் பணி

சுதந்திரம் பிறப்பதற்கு முந்தின நாளிலே கல்வி அமைச்சர் திரு. தி. சு. அவினாசிலிங்கனார் கலைக் களஞ்சியம் தயாரிக்கும் பணியில் கருத்துச் செலுத்தலானார். எந்தச் சூழ்

நிலையில் தாம் கலைக் களஞ்சியம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டா ரென்பதை அவரே கூறுகிறார், கேட்போம்:

"1947 ஆகஸ்டு 15ஆம் தேதி இந்தியா பூரண சுதந்திரம் பெற்ற நாள். நூற்றாண்டின் முயற்சி, பல தலைமுறைகளின் கனவு நனவான நாளன்றோ அந்நாள்?

"எங்கும் மகிழ்ச்சியின் அறிகுறிகள்; எல்லோர் உள்ளத்திலும் எதிர் காலத்தைப்பற்றிய நம்பிக்கையான எண்ணங்கள்; அரும்பெருஞ் செயல்களை மேற்கொள்ள வேண்டும், மேற்கொண்டால் முடிக்க முடியும் என்ற உறுதியான கருத்துக்கள் அன்று தோன்றின.

"மக்கள் உள்ளத்தில் பொங்கியெழுந்த இந்த உற்சாக வெள்ளத்தைச் செயல் என்ற வாய்க்கால் வழியே கரை கோலிச் செலுத்தினால் நற்பயன் விளையும் என்ற எண்ணம் எனக்குத் தோன்றிற்று. கலைக் களஞ்சியம் ஒன்றை ஆக்கும் அரிய வேலையில் நாம் ஈடுபட வேண்டும் என்று அறிக்கை ஒன்றைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் சுதந்திர தினத்திற்கு முந்தின நாள் வெளியிட்டிருந்தேன்."

['கலைக்களஞ்சியம்'; முதல் தொகுதி—முன்னுரையில்]

## நிதி குவிந்தது!

கல்வி அமைச்சர் என்ற முறையில் அல்லாமல் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் என்ற முறையில்தான் திரு. செட்டியார் மேலே காட்டிய அறிக்கையை வெளியிட்டார், ஆகஸ்டுப் பதினான்காம் நாளிலே! அந்த அறிக்கையிலே தமிழில் கலைக் களஞ்சியம் தயாரிக்கும் பணிக்குப் பொருள் உதவிபுரியுமாறும் தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். அறிக்கைபிறந்த இரண்டே நாட்களில் வள்ளல் டாக்டர் ஆர். எம். அழகப்ப செட்டியார் ரூபாய் பத்தாயிரம் வழங்குவதற்கு முன்வந்தார். அதே அளவுத் தொகையை ராசா சர். எம். ஏ. முத்தைய செட்டியாரும், தருமபுரம் ஆதீனத்

தலைவரும் உடனடியாக வழங்கினர். மற்றும், கோவை டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், மதுரை கருமுத்து தியாக ராச செட்டியார், சென்னை ட்ரோஜன் அண்ணாமலை செட்டியார், 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி, வடபாதிமங்கலம் வி. எஸ். தியாகராய முதலியார், திருவாவடுதுறை ஆதீனத் தலைவர், மதுரை நா. ம. ரா. சுப்பராமன் ஆகியோரும் பெருமளவில் பொருளுதவி புரிந்தனர். இரண்டு நாட்களில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட தொகை சேர்ந்து விட்டது.

## மாநில அரசும் தந்தது

தமிழில் முழு அளவில் கலைக்களஞ்சியம் தயாரித்து முடிக்க ரூபாய் 14 லட்சம் செலவாகலாமென்று மதிப்பிடப் பெற்றது. இவ்வளவு தொகையையும் பொது மக்களிடமே எதிர்பார்ப்பது இயலாதென்று கருதி, சென்னை மாநில அரசிடமும் நிதி உதவி கேட்பதெனத் தமிழ் வளர்ச்சிக் கழகம் தீர்மானித்தது. அப்போது ஆந்திரரான திரு. பி. கோபால ரெட்டியார் சென்னை மாநிலத்தின் நிதி அமைச்ச ராக இருந்தார். சென்னை அரசு, ஆண்டுக்கு ஒரு இலட்ச மாக 5 லட்சத்திற்கு மிகாமல் வழங்குவதற்கு இசைந்தது

## மத்திய அரசும் வழங்கியது

மொழித் தொண்டுக்கே ஆனாலும், முழுச் செலவுக்கும் அரசு கஜானாவில் கைவைப்பது சரியான முறையாகாது தானே! பொது மக்களும் அரசும் பங்காளிகளாக இருந்து பணியாற்றுவதே முறை. இந்த நெறிப்படித்தான் கல்வி யமைச்சர் திரு. செட்டியார் அவர்கள், பொது மக்கள் சார்பில் தாம் தொடங்கிய தமிழ்ப் பணிக்கு அரசிடம் ஒரு பங்குதான் உதவி பெற்றார்.

அப்போது மத்தியில் தமிழ் வளர்ச்சியில் மிகுந்த நாட்ட முடைய டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் நிதி யமைச்சராக இருந்தார். அவர் ஆண்டுக்கு ரூ 75 ஆயிரமாக

நான்கு ஆண்டுகளுக்கு நிதி அளிக்க வாக்களித்தார். திருப்பதி தேவஸ்தானம் ரூபாய் 50 ஆயிரம் வழங்கியது.

1947 அக்டோபர் மாதம் விசயதசமி நாளிலே கலைக்களஞ்சியப் பணி சென்னைப் பல்கலைக் கழகக் கட்டிடத்தில் தொடங்கியது. இந்தப் பணிக்கான அலுவலகம் வைத்துக்கொள்ள நிரந்தரமாக இடந்தந்து உதவ சென்னைப் பல்கலைக் கழகம் முன்வந்தது. திரு. ம. ப. பெரியசாமித் தூரன் அவர்கள் கலைக்களஞ்சிய ஆசிரியராக நியமிக்கப் பெற்றார்.

இந்திய மொழிகளிலேயே எல்லாப் பொருள்களுக்கும் முழு அளவில் கலைக்களஞ்சியம் தயாரிக்கும் பணியானது முதன் முதலில் தமிழ் மொழியில்தான் தொடங்கப்பட்டு, அது வெற்றிகரமாக முடிக்கப்பட்டும் இருக்கிறதென்பது தமிழரெல்லாம் பெருமையோடு நினைவில் கொள்ளத்தக்க அரிய சாதனையாகும்.

## பொருள் என்ன?

"கலைக் களஞ்சியம்" என்பதன் பொருள் என்ன? அதனை நம் தமிழ்க் கலைக்களஞ்சியமே கூறுகிறது, கேட்போம்:

"கலைக் களஞ்சியம்; மக்கள் கற்று அறிய வேண்டிய முக்கியமான பொருள்கள் அனைத்தும் அடங்கியது என்பது இதன் பொருள்.

"கலைக் களஞ்சியம் அகராதியினின்றும் வேறுபட்டதாகும். ஒரு சொல்லின் பொருள், அதன் வேர்ச்சொல் முதலிய அச்சொல் பற்றி அறிய வேண்டியவற்றை மட்டுமே அகராதி தரும். கலைக் களஞ்சியம் ஒரு பொருளைப்பற்றி அறிய வேண்டியவற்றைக் கூறும். இதுவரை மனிதன் அறிந்துள்ள அறிவுப் பொருள்களிலும், அழகுப் பொருள்களிலும் சாரமானவற்றைத் தனித் தனியாக அகர வரிசையில் சுருக்கமாகக் கூறும் நூலே கலைக் களஞ்சியம் ஆகும்."

[கலைக் களஞ்சியம்; தொகுதி—3 பக்: 335]

## எவ்வளவு உழைப்பு!

'கலைக் களஞ்சியம்' என்பதற்கு ஆங்கில மொழியில் 'என் சைக்ளோப்பீடியா' என்று பெயர். முறையாக வளர்ச்சி பெற்று வந்துள்ள ஆங்கிலம் போன்ற மொழியில் கலைக் களஞ்சியம் வெளி வருவதில் கஷ்டம் ஒன்றுமில்லை. வெளி வந்திருப்பதையும் பார்க்கிறோம். ஆனால், பல நூற்றாண்டு களாக அடுத்தடுத்துத் தோன்றி வந்துள்ள அன்னிய மொழி களின் ஆதிக்கங்களால் வளர்ச்சியற்றுப் போய்விட்ட தமிழ் மொழியிலே—குறிப்பாக, விஞ்ஞானத் துறையில் மிகவும் பின்தங்கிவிட்ட நமது தாய் மொழியிலே கலைக் களஞ்சியம் தயாரிப்பதிலுள்ள கஷ்டத்தை சாமான்ய மக்கள் எளிதில் அறிந்துகொள்ள முடியாது. இதுபற்றி 1963ல் வெளியான தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் 9வது தொகுதியில் திரு. ம. ப. பெரியசாமித் தூரன் தந்துள்ள நன்றியுரையில் கூறியிருப்பது வருமாறு:

"நமது மொழியிலே இவ்வளவு விரிவான முறையிலே எல்லாத் துறைகளையும் கொண்டதாக இதுவரை கலைக் களஞ்சியம் உருவாக்க முயற்சி நடைபெறவில்லை. இதை வெற்றியுடன் செய்து முடிப்பதற்குப் பலவகையான உதவி களும் முன்னேற்பாடுகளும் பெரிதும் தேவை. பொருள் மிகுதியாக வேண்டும். ஆயிரக்கணக்கான அறிஞர்களின் ஒத்துழைப்பு வேண்டும். தமிழிலே இல்லாத பல்லாயிரக் கணக்கான கலைச் சொற்களைத் திட்டம் செய்ய வேண்டும். இவை போன்ற இன்னும் பலப்பல முயற்சிகளிலே வெற்றி காண வேண்டும்.

"சென்னை அரசினரும் இந்திய அரசினரும் தமிழ் மக்களும் கலைக் களஞ்சியப் பணிக்கு அன்போடு பொரு ளுதவி செய்தார்கள். நூற்றுக்கணக்கான அறிஞர்களும் பேராசிரியர்களும், மிகப் பல குழுக்களிலும், பதிப்பாசிரியர் கழகத்திலும் இருந்து உதவி செய்ய முன் வந்தனர்.

"சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசுவாமி முதலியார் அவர்கள் தலைமையிலமைந்த திட்டக் குழு, கலைக் களஞ்சியப் பணிக்கு அன்புடன் வழிமுறை வகுத்துத் தந்தது. மாதக் கணக்காகப் பல அறிஞர்கள் நாள்தோறும் கூடி இருபத்தையாயிரத்துக்கும் மேற்பட்ட கலைச் சொற்களை அமைத்தார்கள். ஆயிரத்துக்கும் மேற்பட்ட அறிஞர்கள் கட்டுரைகள் வழங்கினார்கள். அக்கட்டுரைகளைப் பரிசீலனை செய்ய பல பேராசிரியர்கள் உழைத்தார்கள். இவ்வாறு இவர்கள் செய்த உதவி மிகப் பெரியது. இவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

"பிற நாட்டுத் தூதுவர் நிலையங்கள், பிரிட்டிஷ் கவுன்சில், அமெரிக்க ஐக்கிய நாட்டுச் செய்தி நிலையம் போன்ற நிறுவனங்கள், உலகத்திலே பல நாடுகளில் இருக்கும் பொருட்காட்சிச் சாலைகள், கலைக் கூடங்கள் ஆகியவைகள் எல்லாம் பல வழிகளிலே கலைக் களஞ்சியப் பணிக்கு உதவி புரிந்தன. சென்னைப் பல்கலைக் கழகம் கலைக் களஞ்சிய அலுவலகத்திற்கென இரண்டு பெரிய அறைகளை அன்புடன் உதவியுள்ளது. அவற்றிற்கும் எங்கள் நன்றி உரியது."

கலைக் களஞ்சியம் தயாரிக்கும் பணி தொடங்கி நான்காண்டுகளுக்குப் பின்னரே முதல் தொகுதி வெளியானது. இதன்பின், அநேகமாக ஆண்டுக்கொரு தொகுதியாக ஏழாண்டுகளுக்குள் எஞ்சிய எட்டுத் தொகுதிகளும் வெளியிடப் பெற்றன. அதன் விவரம் வருமாறு:

| தொகுதி | ஆண்டு | பக்கம் |
|---|---|---|
| 1 | 1954 | 742 |
| 2 | 1955 | 760 |
| 3 | 1956 | 756 |
| 4 | 1956 | 778 |
| 5 | 1958 | 750 |
| 6 | 1959 | 770 |

| தொகுதி | ஆண்டு | பக்கம் |
|---|---|---|
| 7 | 1960 | 754 |
| 8 | 1961 | 758 |
| 9 | 1963 | 751 |
| 10 | 1968 | 560 |

இந்தியா விடுதலை பெற்ற பின்னர் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக நடந்துள்ள பல பணிகளிலே கலைக் களஞ்சியம் தயாரித்த அரும்பணிக்கு நிகராக வேறு எதனை யும் சொல்வதற்கில்லை. இந்த அரிய பெரிய ;பணியை நாடு விடுதலை பெற்ற நாளிலேயே தொடங்கிய திரு. தி. சு. அவினாசிலிங்கம் செட்டியாரின் துணிவை மற்றொரு முறையும் பாராட்டியாக வேண்டும்.

## பயன் என்ன?

கலைக் களஞ்சியத்தினால் மக்கள் அடையக் கூடிய பயனைப்பற்றித் தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் 1956ல் வெளியான நான்காம் தொகுதியின் முன்னுரையில் கூறியிருப்பது வருமாறு:

"எதிர்காலத்தில் நம் மொழிகளின் வளர்ச்சிக்குப் பெரிய தோர் இடம் இருக்கிறது. இவ்வாண்டிலிருந்து நம் நாட்டில் ராஜ்யங்கள் மொழிவாரியாக வகுக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் மொழியும் நம் ராஜ்யத்தில் ஆட்சி மொழியாக விரை வில் அமையும். தவிர, தமிழ் நாட்டுக் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் தமிழ் போதனைக்குரிய மொழியாக அமைய வேண்டும். அப்பொழுதுதான் நம் மொழியில் அறிவுத்துறைகள் அனைத்திலும் புத்தகங்கள் தோன்றும். அதுதான் சாதாரண மக்களும் உயர்ந்த அறிவை எளிதில் பெற உதவியாக இருக்கும்.

"போதனை மொழி தமிழாக மாறுவதற்கான மகத்தான முயற்சியில் கலைக் களஞ்சியம் அடிப்படையான சேவை

செய்து வருகிறது. இதுவரை தமிழில் புத்தகங்களே இல்லாத துறைகளிலுள்ள விஷயங்களைத் தமிழில் எடுத்துச் சொல்ல முயற்சி செய்கிறது. இதில் சங்கடங்கள் பல உண்டு. அவை தவிர்க்க முடியாத சங்கடங்கள். எனவே, அவைகளை எதிர்த்துத் தீர்க்க முயற்சி செய்ய வேண்டும். ஆரம்ப முயற்சியாக இருப்பதால் இதில் முழுவெற்றியும் உடனே கிடைத்து விடாது. ஆனால் பின்வரும் முயற்சிகளுக்கு இம்முயற்சி ஊக்கம் கொடுத்து, அவைகளுக்கு அடிப்படையாக இருக்கலாம்."

தமிழில் கலைக் களஞ்சியம் தயாரிப்பதற்கான பணி தொடங்கியதன் விளைவாக, தெலுங்கிலும் அம்மாதிரியான முயற்சி ஆரம்பிக்கப் பெற்று, தொடர்ந்து நடைபெற்றது. ஒரியா, கன்னடம் ஆகிய மொழிகளிலும் தமிழில் தயாரிக்கப் பட்டது போன்ற எல்லாப் பொருள்களையும் பற்றிய கலைக் களஞ்சியம் உருவாக்கும் முயற்சி தொடங்கப் பெற்றது. அதற்கென நியமிக்கப்பட்ட குழுவினர் சென்னைக்கு வந்து, இங்கு சில நாட்கள் தங்கியிருந்து, தமிழில் கலைக் களஞ்சியம் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது என்பதை நேரில் கண்டு சென்றனர். இதனால், கலைக் களஞ்சியம் தயாரிப்பதிலே நம் தாய் மொழியான தமிழ் மொழியே சகோதர மொழிகளுக்கு வழிகாட்டியாக அமைந்தது எனலாம்.

கலைக் களஞ்சியம் பத்துத் தொகுதிகளையும் முறையே வெளியிட்ட பத்து அறிஞர்கள் வருமாறு:

(1) தமிழக நிதியமைச்சர் சி.சுப்பிரமணியம், (2) தமிழக ஆளுநர் ஸ்ரீபிரகாசா, (3) கே. சந்தானம் எம். பி., (4) தமிழக ஆளுநர் ஜான், (5) பிரதமர் நேரு, (6) பாரதக் கல்வி யமைச்சர் ஸ்ரீமாலி, (7) தமிழக முதல்வர் கே. காமராசர், (8) தமிழக ஆளுநர் விஷ்ணுராம் மேதி, (9) குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், (10) தமிழகக் கல்வி யமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்.

எல்லாப் பொருள்களுக்குமான கலைக் களஞ்சியம் 10 தொகுதியாக, ஒவ்வொரு தொகுதியும் 25 ரூபாய் விலையுடையதாகத் தயாரிக்கப்பட்டது.

## குழந்தைகள் கலைக்களஞ்சியம்

தமிழில் எல்லாப் பொருள்களுக்குமான கலைக் களஞ்சியத்தை 10 தொகுதிகளாகத் தயாரித்து முடித்தபின், அந்தச் சாதனையிலே மன நிறைவு கொண்டு தமிழ் வளர்ச்சிக் கழகம் ஓய்ந்துவிடவில்லை. அதனைத் தொடர்ந்து தமிழில் "குழந்தைகள் கலைக் களஞ்சியம்" தயாரிக்கும் பணியிலும் ஈடுபட்டது. இது, தமிழ் வளர்ச்சிப் பணிக்கு முடிவே கிடையாதென்பதை தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் நன்கு உணர்ந்திருந்தனர் என்பதையே காட்டுகிறது.

குழந்தைகள் கலைக் களஞ்சியம் பத்துத் தொகுதிகளாக, ஒவ்வொரு தொகுதியும் 100 பக்கங்களுக்கு உட்பட்டதாக, பத்து ரூபாய் விலையுடையதாகத் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டன.

தமிழ் வளர்ச்சிக் கழகம் தயாரித்த கலைக்களஞ்சியத் தொகுதிகளை மொத்தமாகச் சேகரித்து வைத்துப் பார்ப்போமானால், இவ்வளவு பெரிய சாதனையை அரசோ, பல்கலைக் கழகமோ அல்லாமல், தனி நபர்களைக் கொண்ட ஒரு நிறுவனத்தால் நிறைவேற்ற முடியுமா?—என்ற பிரமிப்புத் தோன்றத்தான் செய்யும். ஆனால், 'முடியும்' என்று செயல் மூலம் முடித்துக் காட்டியிருக்கிறது தமிழ் வளர்ச்சிக் கழகம் அந்தக் கழகம், சுதந்திரதேவி தமிழ் மொழிக்குத் தந்த வரப் பிரசாதம் என்று சொல்லலாம்.

## கிளர்ச்சியும் வளர்ச்சியும்

நாடு சுதந்திரம் பெற்ற நாளிலேயே இப்படி ஒரு அரிய பணி தொடங்கும்; இடையில் முறிந்துவிடாமல் தொடர்ந்து

நடந்து வெற்றிகரமாக முடியும் என்று தமிழறிஞர்களிலே கூட யாரும் நினைத்துப் பார்த்ததே இல்லை. தமிழ் வளர்ச்சி என்பது கிளர்ச்சியால் மட்டுமே சாதிக்கக் கூடியதல்ல; அறிஞர் பலர் கூடி அமைதியாக ஆழ்ந்த தமிழ்ப் பற்றுடன் உழைப்பதன் மூலமே சாதிக்கக் கூடியது என்ற உண்மையை கலைக்களஞ்சியங்களைத் தயாரித்த அறிஞர்கள் காட்டியிருக்கிறார்கள். கிளர்ச்சியிலேயே காலத்தைக் கழிப்பவர்கள் தமிழ் வளர்ச்சியைத் தடுத்துநிற்கும் தடைகளைத் தகர்க்கலாம். ஆனால், தமிழை வளர்க்க அதுமட்டும் போதாது. இந்த உண்மையை உணர்ந்து கலைக் களஞ்சியம் தயாரித்தவர்களை அவர்களும் பாராட்ட வேண்டும்.

தமிழ்க் கலைக் களஞ்சியமானது ஆங்கிலம் அறியாதவர்களும் அறிஞர்களாக மலரத் துணைபுரிகின்றது. தமிழானது ஆட்சி மொழியாகவும், கல்லூரிகளிலே பயிற்சி மொழியாகவும் வருவதற்குப் பயன்படும் வகையில் பல்லாயிரக்கணக்கான கலைச் சொற்களைத் தந்து உதவி புரிகின்றது.

• • •

# இலங்கை தொடங்கி இமயம்வரை தமிழ் விழா

கலைக் களஞ்சியம் தயாரிக்கும் பணிக்கு மத்தியிலே தமிழ் மக்களிடையே தாய்மொழிப் பற்றை வளர்க்கவும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் முயன்று வந்தனர். அதற்காக, தமிழகத்தின் முக்கிய நகரங்களிலும், தமிழகத்திற்கு வெளியே தமிழர் வாழும் நகரங்களிலும் தமிழ் விழாக்களை நடத்தினர். தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் மூன்று வேலைத் திட்டங்களிலே தமிழ் விழா நடத்துவதும் ஒன்றாகும் என்பதனை முன்பே அறிந்தோமல்லவா!

காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தேசியவாதிகள் அந்தக் கட்சிக்கு வெளியே இருந்தவர்களின்—ஏன், சில வகையில் விரோதமாகவும் இருந்தவர்களின் ஒத்துழைப்பையும் பெற்று தமிழ்ப்பற்றை ஊக்குவிக்கவும் வளர்க்கவும் பாடுபட்டனர் என்றால், அது, இன்றைய இளந் தலைமுறையினரால் நம்ப முடியாத அதிசயமாகவும் இருக்கும்.

*பாரதியார் பாதை*

தமிழ் வளர்ச்சிக் கழகமானது "தமிழ் விழா"க்களைப் புலவர்கள் மத்தியில் அல்லாமல், தமிழ்ப் பொது மக்கள் மத்தியிலேயே நடத்திய தென்பதனையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை— குறிப்பாக, இளைஞர்களை—மாணவர்களைத் திரட்டி வைத்துத் 'தமிழ் வாழ்க' என்று கோஷிப்பதை மொழி வெறியை வளர்க்கும் தேசிய விரோதச் செயலாகக் கருதுவோர் அன்றும் தமிழ் நாட்டில் இருக்கத்தான் செய்தனர். ஆனால்,

தமிழ் வளர்ச்சிக் கழகத்தை நடத்தும் தேசியவாதிகள் தமிழ்ப் பற்றுக்கும் நாட்டுப் பற்றுக்குமிடையே உறவை வளர்ப்பதில் மகாகவி பாரதியாரைப் பின்பற்றிப் பணி புரிந்தனர்.

"தமிழ் விழா" என்றால், சங்ககால—இடைக்கால—தற்காலக் கவிதை இலக்கியங்களைப் பற்றிப் புலவர் பெரு மக்கள் நிகழ்த்தும் சொற்பொழிவுகளாக மட்டும் இருக்கவில்லை. சரித்திரம், பொருளாதாரம், விஞ்ஞானம் ஆகியவை பற்றியும் அந்தப் பொருள்களிலே நிபுணத்துவம் பெற்றவர்களை அழைத்துத் தமிழ் விழாக்களில் பேச வைத்தது தமிழ் வளர்ச்சிக் கழகம். இந்தப் புதுமை இதற்கு முன்பு நடந்த எந்தத் தமிழ் விழாவிலும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை

தமிழ் விழா முதன் முதலாக மதுரையம்பதியில்தான் நடத்தப்பெற்றது. ஆம்; தமிழகத்தைத் தமிழரே ஆண்ட—தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழ் மொழி ஒன்றே ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில் மதுரையில்தானே தமிழ்ச் சங்கம் இருந்தது? இன்றும் தமிழினத்தின் கலாசாரத் தலை நகரம் மதுரைதானே? இந்த உண்மையை உணர்ந்தே தமிழ் விழாவானது முதன் முதலில் மதுரை நகரில் நடத்தப் பட்டது.

இரண்டாவது விழா திருவாரூரில் நடத்தப் பட்டது. திருத்தொண்டத் தொகையைப் பாடி திருத்தொண்டர் புராணம் இயற்ற சேக்கிழாருக்கு முதல் நூல் தந்த சுந்தரர் பிறந்தது திருவாரூர் நகரில்தானே!

மூன்றாவது தமிழ் விழா கோவையில் நடத்தப்பட்டது. மொழிப் பற்றை வளர்ப்பதற்கான தமிழ் விழாவானது தமிழ் நாட்டின் தொழில் நகரத்திலேயும் நடத்தப்பட்டது

அயல் நாடுகளில் சிதறிக் கிடக்கும் தமிழர்களுடன் உறவை வளர்ப்பதையும் தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது தமிழ் வளர்ச்சிக் கழகம். அதனால், நான்காவது

தமிழ் விழா, இலங்கையின் வடக்கு மாநிலமும் தமிழரே மிகுதியாக வாழ்வதுமான யாழ்ப்பாணம் நகரில் நடத்தப் பெற்றது.

ஐந்தாவது தமிழ் விழா தமிழகத்தின் தலைநகரான சென்னையம்பதியில் நடத்தப் பெற்றது. "மதருஸ் மனதே" என்ற ஆந்திரரின் கூக்குரல் ஒலித்துக் கொண்டிருந்த நேரத்திலே, அதே மதருஸ் நகரில், தமிழர் உள்ளங்களில் உறங்கிக் கிடந்த மொழிப் பற்றைத் தட்டி யெழுப்புவது போலத் தமிழ்விழா நடத்தப்பட்ட தெனலாம்.

## இமயம் வரை தமிழகம்

ஆறுவது தமிழ் விழா பாரதத்தின் தலைநகரான புதுடில்லியில் நடத்தப் பெற்றது. தமிழ் மூவேந்தர்கள், தங்கள் வில்—புலி—மீன் சின்னங்களை இமயத்தில் பொறித்தனர். தமிழ்மொழிக்கு எல்லை வேங்கடமலைதான் என்றாலும், தமிழரது தாயகத்தின் எல்லை அன்றும் இன்றும் என்றும் இமயமலைதான் என்று சிலப்பதிகாரம் கூறுவதனை யொட்டி, அந்த இமயமலையைச் சார்ந்ததான புதுடில்லியிலும் தமிழ் விழா நடத்தப்பெற்றது.

இந்த ஆறுவது விழாவோடு தமிழ் விழா நடத்தும் பணி முடித்து வைக்கப்பட்டது. தமிழ்ப் பற்றை ஊக்குவிக்க, நடந்து முடிந்த ஆறு விழாக்களே போதுமானவையாக இருந்தனவென்று சொல்லலாந்தானே!

தமிழகத்தின் நால்வேறு மண்டலங்களான சேர—சோழ—பாண்டிய—தொண்டை மண்டலங்களிலும், பாரதத் தலைநகரிலும், சேய் நாடான இலங்கைத் தமிழகத்திலும் நடத்தியதோடு தமிழ் விழாவை முடித்து வைத்ததில் தவறில்லை என்றே கருதுகிறேன்.

இதுவரை தமிழ் வளர்ச்சிக் கழகம் நடத்திய ஆறு தமிழ் விழாக்களைப் பற்றிச் சுருக்கமாக அறிந்தோம். இனி, விவரமாக அறிவோம்.

## தமிழ் அன்பர் மாநாடு

"உலகத் தமிழ் மாநாடு" என்ற பெயரில் 1965 தொடங்கி 1975 வரை கோலாலம்பூர் (மலேசியா), சென்னை, பாரிஸ் (பிரான்ஸ்), யாழ்ப்பாணம் (இலங்கை) ஆகிய நகரங்களில் தமிழ் விழா நடந்தது உலகறிந்ததாகும். இதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தது தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் 1948 தொடங்கி 1953வரை மதுரை, திருவாரூர், கோவை, யாழ்ப்பாணம், சென்னை, டில்லி ஆகிய நகரங்களில் நடத்திய தமிழ் விழா. ஆண்டுதோறும் நடத்தும் திட்டத்தின் அடிப்படையில் பதினாயிரக்கணக்கான மக்களைத் திரட்டி தமிழ் விழா நடத்துவது நாடு விடுதலை பெற்றபின் தொடங்கிய புதுமையாகும். இதற்குமுன் 1933 டிசம்பரில் சென்னை நகரில் பச்சையப்பன் கல்லூரி (தற்போது பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி) மண்டபத்தில் 'தமிழ் அன்பர் மாநாடு' என்ற பெயரில் ஒரு தமிழ் விழா நடைபெற்றது. இதுபற்றிச் சிறிது விரிவாக அறிந்து கொள்வது அவசியமாகும்.

திரு. கே. கிருஷ்ணசாமி ஐயர், திரு. பெ. நா. அப்புசாமி, திரு. 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தமிழ் அன்பர் மாநாடு நடத்தப் பொறுப்பேற்றனர், டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் வரவேற்புத் தலைவராவார். அப்போதிருந்த நீதிக் கட்சி ஆட்சியில் கல்வி அமைச்சராக இருந்த குமாரசாமி ரெட்டியார் மாநாட்டுத் தலைவராவார்.

"மோ. க. காந்தி" என்று தமிழில் கையொப்பமிட்டு காந்தியடிகள் தமிழ் அன்பர் மாநாட்டுக்குச் செய்தி அனுப்பியிருந்தார். அது வருமாறு:

> "தமிழ் அன்பர்களின் அன்பு, எவ்வளவு சிரமங்கள் ஏற்பட்டாலும் தாங்கிக்கொண்டு நீடித்து நிலைத்திருக்கும் என்று நம்புகிறேன். தமிழ் மொழியைப் பற்றி நான் அறிந்துள்ளது சொற்பமே. ஆனால், அந்தச் சொற்ப அறிவைக்கொண்டே அம்மொழியின் அழகையும் வளத்தையும் உணர்ந்திருக்கிறேன்."

## உ. வே. சா. தமிழரா?

"பிராமணர்கள் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருந்தாலும் அவர்கள் தமிழர் அல்லர்; ஆரியரே! தமிழருக்கு அந்நியரே" என்ற கொள்கையின் அடிப்படையில் சுயமரியாதை இயக்கத்தார் பிராமண எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த காலம் அது. தமிழ்ப் பற்று காரணமாக சமய இலக்கியங்களைப் போற்றுவதையும் அவர்கள் வெறுத்தனர். ஆகவே, பிராமண பிரமுகர்கள் முன்னின்று இறைவழிபாட்டுடன் நடத்திய தமிழ் அன்பர் மாநாட்டிலே சுயமரியாதை இளைஞர்கள் கலந்துகொண்டு குழப்பம் விளைவித்தனர். "உ. வே. சாமி நாதய்யர் தமிழ் அன்பர்தானா?" என்று எதிர்ப்பாளர்கள் வினா எழுப்பினர். மாநாட்டின் தொடக்கத்திலேயே குழப்பமும் தொடங்கிவிட்டது. சுமார் ஒருமணி நேரம் மாநாட்டு நடவடிக்கைகளை நடத்த முடியாமற் போய்விட்டது. பின்னர் ஒரு வகையாக மாநாட்டு நிர்வாகிகள் குழப்பக்காரர்களுடன் சமரசம் செய்து கொண்டனர். அந்நாளில் தமிழ் அல்லது தமிழர் என்ற பெயரால் மாநாடோ, விழாவோ நடக்குமானால், அங்கு இதுபோன்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்துவது ஒரு "நாகரிகமாக" இருந்து வந்தது இதனால் இடைநடுவில் கலைந்துபோன மாநாடுகள் பலவாகும்.

## 'கல்கி'யின் நன்றியுரை

நல்ல வேளையாக, தமிழ் அன்பர் மாநாடு அப்படிக் கலைந்து விடவில்லை. இறுதிவரை நடந்து 'கல்கி' ரா. கி. யின் நன்றியுரையோடு முடிந்தது. தமது நன்றியுரையில் ரா. கிருஷ்ணமூர்த்தி நகைச்சுவை ததும்பக் குறிப்பிட்டது வருமாறு :

"தமிழ் மொழியின் முன்னேற்றந்தான் தமிழ் அன்பர்களாகிய நமது நோக்கம். இந்த நோக்கத்தில் எவ்வளவு வெற்றியடைந்தோம் என்பதைப் புள்ளி விவரங்களைக்

கொண்டு நிரூபிக்க முடியாது. ரூபாய் அணு பைசா கணக்குப் போடும் விஷயம் இதுவல்ல. தமிழ்மொழி வளர்ச்சியில் முக்கியமான அம்சம் தமிழர்களின் மன மாறுதலேயாகும். இந்த மனமாறுதலைத் தமிழர்கள் பெற்று விட்டார்கள். என்பது இம்மாநாட்டின் மூலம் ஐயமற நிரூபிக்கப்பட்டிருக் கிறது.

''மகாகனம் சாஸ்திரியார், ராசா அண்ணாமலை செட்டி யார் முதல், சிறை புகுந்த தேசத் தொண்டர்கள் வரையில் தமிழ்த் தாயைப் போற்றும் எண்ணத்துடன் எப்போது இங்கு ஒன்று சேர்ந்தோமோ, அப்போதே தமிழுக்கு நல்ல காலம் பிறந்துவிட்டது என்பதில் என்ன சந்தேகம்?

''ஒரே ஒரு பக்கத்தார் மட்டும் இம்மாநாட்டில் கலந்து கொள்ள மாட்டார்களோ என்ற பயம் இருந்தது. சுயமரி யாதைக் கட்சியைச் சேர்ந்த நமது நண்பர்கள் ஈரோட்டி லும் சிவகங்கையிலும் இந்தத் தமிழன்பர் மாநாட்டைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்தார்கள். பத்திரிகையில் பிரசாரமும் நடத்தினார்கள். ஆனால், அவர் களும் அத்தீர்மானத்தைக் கைவிட்டு இம்மாநாட்டுக்கு வந்து தங்களுடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொண்டு ஒத்துழைக்கிறார்கள். இம்மாநாட்டின் வெற்றிக்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

''ஆயினும் ஒரளவு மனக்கசப்பும் சிரமமும் நேற்றும் இன்றும் இம்மாநாட்டில் ஏற்பட்டிருந்தது என்பதை யாரும் மறுப்பதற்கு இல்லை. இது சம்பந்தமாக நேற்று இங்கு வாசிக்கப்பெற்ற மகாத்மாவின் வாழ்த்துச் செய்தியை உங்க ளுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இப்போது யோசிக் கையில், அவருடைய செய்தியின் முதல் வாக்கியம் தீர்க்க தரிசனத்துடன் கூறப்பட்டதுபோல் தோன்றவில்லையா? ஆனால் அந்த மகான் நம்மிடத்தில் வைத்த நம்பிக்கையை மெய்யாக்கி விட்டோம்.''

('பொன்னியின் புதல்வன்', பக்கம். 413)

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் அன்பர் மாநாட்டை நடத்தியவர்கள் அதைத் தொடர்ந்து தமிழ் மாவட்டங்களின் தலைநகரந்தோறும் ஆண்டுக்கு ஆண்டு நடத்தி வரவும் திட்டமிட்டிருந்தனர் என்று தெரிகிறது. ஆனால், சென்னை மாநாட்டின்போது பெற்ற கசப்பான அனுபவத்தால் அவர்கள் அந்தத் திட்டத்தைக் கைவிட்டு விட்டனர்.

1933ல் கைவிடப்பட்ட அந்தத் திட்டம் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினரால் எடுத்துக்கொள்ளப்பட்டதென்று சொல்லலாம். ஆனால், சென்னை மாநில அரசின் பேராதரவோடு தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் தமிழ் விழா நடத்த முன்வந்த சமயத்திலும் தாய்மொழிப் பற்று காரணமாக எழுந்த பிற மொழித் துவேஷப் புயல் முற்றிலும் ஓய்ந்து விடவில்லை யென்பதனை, 1951ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் விழாவையொட்டி வெளியான சிறப்பு மலரின் முன்னுரையால் அறிய முடிகிறது. அது வருமாறு:

"...மறுமலர்ச்சியின் பெயரால் எத்தனையோ விபரீதங்கள் நிகழ்ந்து வருவனவும் உண்மையே. அவை நிலைக்க மாட்டா. எனினும் அவற்றை விரைந்து களையவேண்டியதும் எங்கள் கடமை. 'நிறைமதியிற் கறையுண்டு; ஆகையால் நிலாவை வெறுப்போம்' என்பார் போன்று எங்கள் காவியக் கோவில்களையும் பூஞ்சோலைகளையும் எரிப்பேம், அழிப்பேம் என்கிற கோஷங்கள், இடி முழக்கங்கள் மறுமலர்ச்சிப் பெயரால் எழுப்பப்பட்டிருப்பனவும் யாம் அறிந்தனவே. இத்தகைய விபரீதங்கள் பெருங்கேடு விளையுமாகையால், இப்பொழுது நாட்டிற் பரவி வரும் துவேஷத் தீயினை விரைந்து அவிக்க வேண்டியதும் எங்கள் கடமை."

('இலங்கைத் தமிழ் விழா மலர்'—முன்னுரை)

நாடு விடுதலை பெற்ற முதலாண்டு நிறைவு விழா கொண்டாடுவதற்கு முன்பே தமிழ் விழா கொண்டாடத் தொடங்கியது தமிழ் வளர்ச்சிக் கழகம். இதனை அப்போதிருந்த

காங்கிரஸ் அரசாங்கம் பொறுப்பேற்று நடத்தவில்லை. காரணம், அப்போது தமிழகம் தனியரசு மாநிலமாக இல்லா ததுதான். நான்கு மொழிப் பிரதேசங்களுக்கும் பொது வானதாக சென்னை மாநில அரசு இருந்ததால், தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பிலேயே தமிழ் விழாக் கொண் டாடும் பணி நடத்தப் பெற்றது. ஆனால், சென்னை மாநில முதல்வரும் கல்வி அமைச்சரும் தமிழ் நாட்டவராக இருந் தனர். அதனால், அரசாங்கத்தின் செல்வாக்கும் தமிழ் விழா சிறப்புப் பெறுவதற்குப் பயன்பட்டதெனலாம்.

## முதல் தமிழ் விழா

தமிழ் விழா முதன் முதலில் 1948ல் மதுரையில் மீனாட்சி கோயில் மண்டபத்தில் நடத்தப் பெற்றது. வாழ்நாள் முழுவதும் தம்மை நீதிக்கட்சியின் தலைவராகவே கருதிவந்த திரு. பி. டி. ராசன் அவர்கள், வரவேற்புக் குழுவின் தலைவ ராக இருந்து விழாவைச் சிறப்புடன் நடத்தி வைத்தார். திரு பி.டி ஆர்., தமிழிடத்துப் பற்றுடையவர். கட்சிக் காழ்ப்பற்று அனைத்துக் கட்சியினரையும் அணைத்துச் செயல் படும் பண்புடையவர். அதனால், தமிழினத்தார் அனைவரும் கலந்து நடத்தும் இன விழாவாகவும் அமைந்தது மதுரையில் முதன் முதலில் நடந்த தமிழ் விழா.

அப்போதைய சென்னை மாநில முதலமைச்சர் திரு. ஓ.பி. இராமசாமி ரெட்டியார், விழாவுக்குத் தலைமை வகித்தார். பாரத நிதியமைச்சராக இருந்த டாக்டர் ஆர்.கே. சண்முகம் செட்டியார், விழாவைத் தொடங்கி வைத்துப் பேசினார்.

"திறந்தவெளித் திடலிலே விழாவை வைக்கவில்லையே' என்று மக்கள் குறைபட்டுக் கொள்ளுமளவுக்குத் தமிழர் கூட்டம் திரண்டதால், கோயிலில் இட நெருக்கடி ஏற் பட்டது இந்தக் குறை அகல மாலையில் மதுரை மாரியம்மன் தெப்ப குளத் திடலில் மாபெரும் பொதுக்கூட்டம் நடத்தப் பெற்றது. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர்

டி. எஸ். எஸ். இராசன், நாமக்கல் கவிஞர் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர்.

## இரண்டாவது தமிழ் விழா

பாண்டி நாட்டுத் தலைநகரில் முதல் விழாவை வெற்றிகரமாக நடத்தி முடித்ததும், இரண்டாவது விழா 1949ஆம் ஆண்டில் திருவாரூரில் நடத்தப்பெற்றது. சிறந்த தேச பக்தரும், வேதாரண்யத்தில் நடந்த உப்பு சத்யாக்கிரகத்தின் போது ராஜாஜிக்கு வலது கரமாக இருந்தவரும், சிறை சென்ற தியாகியுமான சர்தார் வேதரத்தினம் பிள்ளையவர்கள் விழாக் குழுவின் தலைவராகவும், வடபாதிமங்கலம் திரு. வி. எஸ். தியாகராச முதலியார் செயலாளராகவும் இருந்து விழாவை மிகவும் சிறப்பாக நடத்தி வைத்தனர்.

ஔவை டி. கே. சண்முகம், கலைஞர் டி. கே. பகவதி ஆகியோரால் அப்போது நடத்தப்பட்டு வந்த டி. கே. எஸ் சகோதரர் நாடகக் குழுவினரால் "ஔவையார்" நாடகம் நடத்தப் பெற்றது. நாடு சுற்றும் "தமிழப் பாதிரி"யாக வாழ்ந்து மறைந்த ஔவைப் பாட்டியாகத் தோன்றி நடித்ததால் "ஔவை" என்ற சிறப்புப் பெயர் பெற்றார் டி கே. சண்முகம். அவர் மேனாட்டில் பிறந்திருந்தால், தமது நடிப்புத் திறனுக்காக உலகப் பெரும் பரிசான "நோபல்" பரிசையே பெற்றிருப்பார். "ஔவையார்" நாடகம் ஆரூர் தியாகேசர் கோயிலில் நடைபெற்றது. ஒலிபெருக்கியும் இடவசதியும் சிறப்பாகச் செய்யப்பட்டமையால், நாடகம் அமைதியாக நடந்தது.

திருவாரூர் தமிழ் விழாவிலும் முதலமைச்சர் ஓ. பி. இராமசாமி ரெட்டியாரே தலைமை வகித்தார். அன்னாரது வீட்டுமொழி தெலுங்காயினும், அவர் மனமார நேசித்தது தமிழைத்தான். " மதராஸ் மனதே" என்று ஆந்திரர் ஆரவாரித்தபோது, அதனை எதிர்த்து "சென்னை தமிழருடையதே" எனது குரல் கொடுத்துத் தமிழரசுக் கழகம் நடத்திய

கிளர்ச்சியை முதல்வர் பொறுப்பிலிருந்த ஓமந்தூரார் உறுதியாக ஆதரித்தார்.

அவர் முதலமைச்சராக இருந்தபோது ஒருமுறை திருப்பதியிலுள்ள வேங்கடேசுவரா கீழ்த்திசைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்று, மாணவர் கூட்டமொன்றில் பேச நேர்ந்தது. திரு. ரெட்டியார் தமது பேச்சைத் தமிழில் தொடங்கினர். "தெலுங்கில் பேசுங்கள்" என்று குரலெழுப்பினர், தங்களை ஆந்திரர்களாக நினைத்துக் கொண்ட தெலுங்கு மாணவர்கள். அதற்கு ரெட்டியார்,

> "நான் தமிழ் நாட்டைச் சார்ந்தவன். அதனால், தமிழில்தான் என்னால் பேச முடியும். தெலுங்கு எனது வீட்டுமொழி என்றாலும், அதிலே என்னால் நன்றாகப் பேச முடியாது. நான் படித்தது தமிழ் தான். பேசிப் பழகுவதும் தமிழில்தான்."

என்று பதிலளித்துப் பிடிவாதமாகத் தமிழிலேயே பேசினர். அப்பெரியார் தம்மைத் தமிழராகவே கருதி வாழ்ந்தார். வள்ளற் பெருமானிடம் அவர் எல்லையற்ற ஈடுபாடு கொண்டிருந்தார், அருட்பா பாடக் கேட்டால், மனமுருகிக் கண்ணீர் பெருக்குவார். இத்தகு பெரியார் இரண்டாவது முறையாகவும் திருவாரூரில் நடந்த தமிழ் விழாவில் தலைமை வகித்தது மகிழ்ச்சிக்குரியதுதானே?

இவ்விழாவில் டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார், எம். பக்தவத்சலனர், 'ரசிகமணி' டி. கே. சி., டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை, டாக்டர் மு. வரதராசனர், 'சுதேசமித்திரன்' ஆசிரியர் சி. ஆர். சீனிவாசன், டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன், டாக்டர் டி. எஸ். எஸ் ராசன் ஆகியோர் கலந்து கொண்டனர். "இசைவாணி" எம். எஸ். சுப்புலட்சுமி அவர்களின் இன்னிசை நிகழ்ச்சியும் இருந்தது. முத்தமிழ் விழா வல்லவா!

## மூன்றாவது தமிழ் விழா

1950 மே 20, 21 தேதிகளில் கோயமுத்தூரில் மூன்றாவது தமிழ் விழா மிகவும் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. நகர தொழிலதிபர் திரு. சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்கள், விழாக் குழுத் தலைவராக இருந்து விழாவைச் சிறப் புடன் நடத்தி வைத்தார். முதல்வர் பி. எஸ். குமாரசாமி ராசா விழாவைத் தொடங்கிவைத்துப் பேசினார்.

டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் ஆகியவர்கள் உரையாற்றினர். வரலாற்றுப் பேராசிரியர் திரு. சீனிவாச ஆசாரியார் தலைமை யில் "வரலாற்றுத் துறையில் தமிழ்" என்னும் கருத்தரங் கொன்றும் நடத்தப் பெற்றது.

கோவை விழாவிலே இலக்கியப்பகுதி, விஞ்ஞானப்பகுதி, வரலாற்றுப் பகுதி என மூவேறு பகுதிகள் நடத்தப் பெற்றன. இம் மூன்றுக்கும் முறையே பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை, சர். டி. எஸ். வெங்கடராமன், பேரா சிரியர் சி. எஸ். சீனிவாச ஆச்சாரியார் ஆகியோர் தலைமை வகித்தனர். புலவர்கள், வரலாற்றுப் பேராசிரியர்கள், விஞ்ஞானிகள், அரசியல் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விஞ்ஞானம் பற்றிய கருத்தரங்கில் 'உணவு உற்பத்தி யைப் பெருக்குதல்', 'பயிர் அபிவிருத்தி', 'கழிவு உரம்', 'இலக் கியங்களில் விவசாயம்'—'பயிர் நோய்கள்', 'பூச்சி இனங்கள்' ஆகிய பொருள்கள் பற்றி முறையே திருவாளர்கள் வி. டி. சுப்பையா முதலியார், சி. ஆர். சீனிவாச ஐயங்கார், எஸ். தருமலிங்க முதலியார், புலவர் இராசாக்கண்ணனார், டி. மருதராசன், டி. எஸ். இராமச்சந்திரன் ஆகியோர் பேசினர். செட்டி நாட்டரசர் ராசாசர் எம். ஏ. முத்தைய செட்டியார், கலைக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசினார்.

கோவை விழாவின் பந்தல் அழகும், அந்தப் பந்தலின் கீழ் இரண்டு நாட்களிலும் திரண்ட பதினாயிரக்கணக்கான மக்கள் காட்டிய ஆர்வமும் இன்னமும் என் அகக்கண்களுக்குக் காட்சியளிக்கின்றன.

*தமிழுக்குப் பரிசு*

தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் 1949-ஆம் ஆண்டில் வெளியான தமிழ் நூல்களில் சிறந்தவை என்று தேர்ந்தெடுக்கப்பட்டவற்றிற்குப் பரிசுகள் வழங்கினார்.

ஆராய்ச்சி, சிறுகதை, நவீனம், நாடகம், விஞ்ஞானம், வரலாறு ஆகிய துறைகளில் நூல்கள் எழுதிய பண்டிதமணி கதிரேசன் செட்டியார், கி. வா. ஜெகந்நாதன், டாக்டர் மு. வரதராசனார், கவிஞர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி, பி. கோதண்டராமன், எஸ். எஸ். மாரிசாமி ஆகியோர் பரிசுகள் பெற்றனர்.'

கவிஞர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி, "அந்தமான் கைதி" என்ற தமது நாடக நூலுக்காகப் பரிசு பெற்றார். இந் நாடகம் டி. கே. எஸ். சகோதரர் நாடகக் குழுவினரால் மிகவும் சிறப்பாக ஒரு நூற்றுக்கு மேற்பட்ட முறை நடத்தப் பெற்றது. திரைப்படமாகவும் எடுக்கப் பெற்றது. புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்தான் கதாநாயகனாக நடித்தார்.

கோவை விழாவுக்கான நிதியாக 21626 ரூபாய் திரட்டப் பெற்றது. அதில் செலவு போக மிச்சப்பட்ட பணத்தில் கலைக்களஞ்சியப் பணிக்காக ரூ. 3001-ம், திருக்குறள் ஆராய்ச்சிப் பணிக்காக ரூ. 1000-மும் வழங்கப்பட்டன

**போர்க் குரல்**

தமிழ் வளர்ச்சிக் கழகம் தமிழ் மக்களிடையே தாய் மொழிப் பற்றை வளர்க்கத்தான் அரசியல் கட்சி வேறு.

பாடின்றி ஆண்டுதோறும் வெவ்வேறு நகரங்களில் தமிழ் விழாவை நடத்தி வந்ததென்றாலும், தமிழ்மொழிக்கு ஊறு நேரும்போதெல்லாம் அதனை எதிர்த்துப்போராடுவதிலேயும் கருத்து செலுத்தியது.

கோவையில் தமிழ் விழா நடைபெற்றபோது, தமிழ் நாட்டு உயர்நிலைப் பள்ளிகளிலே தமிழ் கட்டாய பாடமாக இருந்த நிலைக்கு மாறாக, "தமிழை விரும்பினால் படிக்கலாம்; விரும்பாதவர்கள் இந்தி, சம்ஸ்கிருதம் போன்ற இந்திய மொழிகளில் எதையேனும் எடுத்துப் படிக்கலாம்" என்று சென்னை மாநில அரசின் கல்வித்துறை ஆணை பிறப்பித்திருந்தது. இந்த ஆணையை எதிர்த்துக் கோவை தமிழ் விழாவிலே தீர்மானம நிறைவேற்றப் பெற்றது.

தீர்மானத்தை டாக்டர் ஆர். கே. சண்முகம் முன் மொழிந்தும், திரு. டி. எஸ். அவனாசிலிங்கம் செட்டியார், திரு. கி. வா. ஜகன்னாதன் ஆகியோர் வழி மொழிந்தும் பேசினர்.

உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் கட்டாய பாடமாக இருந்ததற்கு மாறாக, அதனை விருப்பப் பாடமாகச் செய்தவர், திரு. டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியாரையடுத்து சென்னை மாநிலக் கல்வியமைச்சராக வந்த திரு. கே. மாதவ மேனன் ஆவார்.

## தலைவர்கள் கூட்டறிக்கை!

சென்னை மாநிலக் கல்வித்துறையார் தமிழ் மொழிக்கு இழைத்த இந்தக் கேட்டினைக் கண்டித்து, தமிழ் நாட்டுப் பிரமுகர்கள் 24 பேர் கூட்டாகக் கையொப்பமிட்டு அறிக்கை விடுத்தனர். அந்த அறிக்கையின் முக்கிய பகுதிகள் வருமாறு:

"இந்தி, சம்ஸ்கிருத மொழிகளைப் படிப்பதனை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால், தாய்மொழிக்குப் பதலாக அவற்

றைப் படிக்கலாம் என்ற ஏற்பாட்டை நாங்கள் ஏற்க முடியாது.

"வீட்டில் பேசுவதாலும் செய்தித் தாள்களைப் படிப்பதாலுமே தாய் மொழியில் ஞானம் பெற்றுவிட முடியுமென்று கூறுவது வியப்பைத் தருகிறது.

"தாய் மொழியில் திறமை பெறப் பண்டை இலக்கியங்களைப் படிப்பது இன்றியமையாதது. தமிழிலுள்ள கலைச் செல்வமும், இலக்கியச் செல்வமும் மிகப் பெருமை வாய்ந்தவையாகும். அந்தச் செல்வங்கள் அழிந்துபோகும்படித் தமிழ் மக்கள் எந்த நாளிலும் அனுமதிக்க மாட்டார்கள்."

இந்தக் கூட்டறிக்கையிலே அப்போதுதான் சென்னை மாநிலக் காங்கிரஸ் ஆட்சியின் கல்வியமைச்சர் பொறுப்பிலிருந்து விலகியிருந்த திரு. டி. எஸ். அவினாசியாரும், மத்திய காங்கிரஸ் ஆட்சியின் நிதியமைச்சர் பொறுப்பைத் துறந்திருந்த டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியாரும், தமிழ் நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினராக இருந்த நானும் கையொப்பமிட்டிருந்தோம். இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்கும் நாங்கள் பொறுப்பேற்றோமென்றும் சொல்ல வேண்டும்.

## அரசு பணிந்தது!

கோவை தமிழ் விழா மேடையில் சென்னை மாநில காங்கிரஸ் ஆட்சியின் முதல்வர் திரு. பி. எஸ். குமாரசாமி ராசா இருந்தார். அவரது முன்னிலையிலேயே காங்கிரஸ் ஆட்சியின் கல்வித் துறை விடுத்த ஆணையைக் கண்டிக்கும தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது. அதனை முன் மொழிந்தவரும் வழி மொழிந்தவர்களும் காங்கிரஸ் அரசின் கல்வித் துறையைக் கண்டித்துக் காரசாரமாக உரையாற்றினர் என்பதனையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

கோவை தமிழ் வளர்ச்சிக் கழக மாநாட்டின் தீர்மானமும், 24 பிரமுகர்களின் கூட்டறிக்கையும் பலன் தந்தன.

ஆம்; திரும்பவும் தமிழை உயர்நிலைப் பள்ளிகளில் கட்டாய பாடமாக்கும் வகையில் 8—7—50ல் அரசின் ஆணை திருத்தப் பெற்றது.

தமிழ் இலக்கியப் படிப்பைக் கட்டாய பாடமாக்க வேண்டியது அவசியம் இல்லையென்றும், அதற்குப் பதிலாக விஞ்ஞான பாடம் பிடிக்க வழி செய்யலாம் என்றும் இன்றுங் கூட ஒரு சிலர் கூறி வருகின்றனர். ஆம்; தமிழ் மொழியின் எதிர்காலம் இன்னமும் உறுதிப்படவில்லை.

## நான்காவது தமிழ் விழா

நான்காவது தமிழ்விழா இந்தியாவின் அண்டை நாடான இலங்கையில் யாழ்ப்பாணம் நகரில் 1951 ஏப்ரல் 28, 29, 30, மே 1 தேதிகளில் பரமேசுவரக் கல்லூரித் திடலில் அழகுற அமைக்கப் பெற்ற "விபுலானந்தர் பந்தலில்" நடை பெற்றது. தமிழ் வளர்ச்சிக் கழகம் நடத்திய ஆறு விழாக் களிலே யாழ்ப்பாணம் விழாவே தலைசிறந்ததெனலாம். விழா நடப்பதற்கு எட்டு மாதங்களுக்கு முன்பே தமிழ் வளர்ச்சிக் கழகச் செயலாளர்களான 'கல்கி' ரா கிருஷ்ணமூர்த்தியும், ம. ப. பெரியசாமித்தூரனும் இலங்கை முழுவதிலும் சுற்றுலாச் செய்து தமிழ் விழாவுக்கு வேண்டிய ஏற்பாடு களைக் கவனித்தனர்.

பிற்காலத்தில் இலங்கை அரசின் அமைச்சராக வந்த வரும், இலங்கையின் முடிசூடா மன்னர் எனத் திகழ்ந்த சர். பொன்னம்பலம் ராமநாதன் அவர்கள் மருமகனுமான யாழ்ப்பாணம் திரு. சு. நடேசப்பிள்ளை அவர்கள் விழாக் குழு வின் தலைவராக இருந்தார். திரு. க. நவரத்தினம், திரு க. அம்பிகைபாகன் ஆகிய இருவரும் செயலாளராக இருந்து பணியாற்றினர். கௌரவ கனகரத்தினம் (பிற்காலத்தில் இலங்கை அரசின் கல்வியமைச்சர்), ராச அரியரத்தினம், தனிநாயகம் அடிகள் ஆகியோரும் மாநாட்டின் வெற்றிக்குப் பாடுபட்டனர்.

இலங்கை பாதுகாப்புத் துறைச் செயலர் சர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் கலைக்காட்சியைத் திறந்து வைத்தார்.

இந்த விழாவில் "சுதேச மித்திரன்" ஆசிரியர் திரு. சி. ஆர். சீனிவாசன் அவர்கள் தலைமை வகித்தார். விஞ்ஞானி யான டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன், விழாவைத் தொடங்கி வைத்தார். தமிழ்ப் பேராசிரியர்கள் ரா. பி. சேதுப்பிள்ளை, தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், அ. சீனிவாச ராகவன், மு. வரதராசனார், பண்டிதர் கணபதிப் பிள்ளை, பிரம்மஸ்ரீ கணேசய்யர், திருமதிகள் ஈ. த. இராசேசுவரி, இராசம்மாள் தேவதாஸ், மகேசுவரி மகாதேவா ஆகியோர் பேசினர்.

இலங்கைத் தமிழகத்தில் நடைபெற்ற இந்த விழாவிலே இந்தியத் தமிழகத்திலிருந்து சுமார் 500க்கு மேற்பட்ட தமிழ் அறிஞர்களும், இலக்கிய ரசிகர்களும் கடல் கடந்து சென்று கலந்து கொண்டனர்.

சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி திரு. பி. வி. இராசமன்னார், இலங்கை இந்தியத் தூதுவர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் தமிழ் விழாபற்றித் திரு 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், தமது 'கல்கி' இதழில் "தெய்வ தரிசனம்" என்று தலைப்பிட்டு, நான்கு தொடர் கட்டுரைகள் எழுதினார். அதில் ஒரு பகுதி வருமாறு:

"யாழ்ப்பாண நகரில் தெய்வத்தைக் கண்டேன். நான் கண்ட தெய்வம் தமிழ்த் தெய்வம்தான். பக்தி ஆவேசம் கொண்ட அறுபதினாயிரம் மக்களின் மத்தியில் தமிழ்த் தெய்வம் கொலுவீற்றிருக்கக் கண்டேன். அந்தக் காட்சியை நான் என்றும் மறக்க முடியாது.

"சமய கோடிகளெல்லாம் தன் தெய்வம் என் தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும் நின்றதெது?" என்று தாயுமானவர் என்னும் பெரியார் பாடியிருக்கிறார்.

அவர் எந்தத் தெய்வத்தைக் குறித்து இவ்விதம் கூறினார்? தமிழ்த் தெய்வத்தைப் பற்றித்தான் அவர் சொல்லியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. சொல்லியிருந்தால் மிகப் பொருத்தமாய் இருக்குமென்பதில் ஐயமில்லை."

## ஐந்தாவது விழா

1952 ஆகஸ்டு 22, 23, 24 தேதிகளில் சென்னை தேனும் பேட்டையிலுள்ள காங்கிரஸ் திடலில் அமைக்கப் பெற்ற அழகிய பந்தலிலே ஐந்தாவது தமிழ் விழா நடத்தப் பெற்றது. இந்த விழாத் தேதிக்கு 4 மாதங்களுக்கு முன்புதான் மூதறிஞர் ராஜாஜி ஆந்திரத்தையும் தன்னுள் கொண்டிருந்த பெரிய சென்னை ராஜ்யத்தின் முதலமைச்சராகப் பொறுப் பேற்றார். 'மதறாஸ் மனதே' என்ற ஆக்கிரமிப்புக் கூச்சலும், 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' என்ற தமிழினத்தாரின் தற்காப்புக் கோஷமும் உச்ச நிலையில் இருந்த நேரம் அது.

சென்னை நகரின் முன்னாள் மேயர் திரு. எஸ். இராமசாமி நாயுடு தலைமையில் அமைந்திருந்த வரவேற்புக் குழு இந்த விழாவுக்குச் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தது. திரு அவினாசிலிங்கம் செட்டியாரும், அதன் செயலாளர் 'கல்கி' ரா கிருஷ்ணமூர்த்தி அவர்களும் மாநாட்டின் வெற்றிக்கு முழு மூச்சுடன் வேலை செய்தனர். தமிழரசுக் கழகம் தனது தொண்டர் படை முழுவதையும் கொடுத்து உதவியது.

விழாவில் தமிழ்த்தென்றல் திரு.வி.க. தலைமைவகித்தார். அவர் தமது தலைமையுரையில், "நான் முதலில் உலகமக்களில் ஒருவன்; அடுத்து, இந்தியக்குடிமகன்; மூன்றாவதாகத் தமிழ்க் குடிமகன்" என்று கூறினார்.

ஆளுநர் மேதகு ஸ்ரீபிரகாசா அவர்கள் விழாவில் கலந்து கொண்டார்.

முதலமைச்சர் ராஜாஜி தமிழ் விழாவைத் தொடங்கி வைத்தார். அவர் சென்னை மாநகரம் தமிழகத்திற்கே உரியது என்ற கருத்தை வலியுறுத்திப் பேசினார். சென்னை மாநிலக் கல்வி அமைச்சர் பொறுப்பிலிருந்த திரு. சி. சுப்பிரமணியம், ரசிகமணி டி. கே. சி. இருவரும் முக்கிய பேச்சாளர்களாக இருந்தனர்.

இலங்கையில் நடந்த நான்காவது தமிழ் விழாவை யடுத்து சென்னை மாநகரிலே ஐந்தாவது தமிழ் விழா நடைபெற்றதாதலால், இலங்கை அமைச்சர் திரு. சு. நடேசப் பிள்ளை அவர்கள் தலைமையில் புலவர் பெருமக்கள் அடங்கிய பெருங்குழு ஒன்று இந்தியத் தமிழகத்திற்கு வந்து சென்னை விழாவிலே கலந்து கொண்டது. மாநாட்டில் இந்தக் குழுவினருக்குச் சிறந்த முறையிலே வரவேற்பு தரப் பட்டது.

*ஆருவது விழா*

1953 ஆகஸ்டு 29, 30 ஆம் தேதிகளிலே இந்தியப் பெரு நாட்டின் தலைநகரான புது டில்லியிலே ஆருவது தமிழ்விழா நடைபெற்றது. அப்பொழுது டில்லித் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்த டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் அவர்கள் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து, இந்தியாவின் பல் வேறு நகரங்களிலிருந்து வந்திருந்த தமிழ் அன்பர்களை யெல்லாம் வரவேற்று மாநாட்டை மிகச் சிறப்பாக நடத்தி வைத்தார்.

டில்லி பிர்லாமந்திரி லிருந்து காஞட் சர்க்கஸ் வரை 2 கல் தூரம் நாதசுர இசை முழக்கத்துடன் ஊர்வலம் நடைபெற்றது. டில்லி வாழ்தமிழர் குடும்பம் குடும்பமாக ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி ராசன்பாபு, தமிழ் விழாவைத் தொடங்கி வைத்தார்.

நிதிமந்திரி சி. டி. தேஷ்முக் அவர்கள், தனியாக நடத்தப் பெற்ற ஆங்கிலக் கருத்தரங்கில் தலைமை வகித்தார். அவர் தமிழிலும் பேசினர்.

மத்திய மந்திரிகள், எம். பிக்கள், அயல் நாட்டுத் தூதுவர்கள், டில்லி உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

டில்லி சத்தியமூர்த்தி நினைவு மண்டபத்தில் டில்லி நகர கமிஷனர் திரு. சங்கர் பிரசாத் கலைக் காட்சியைத் திறந்து வைத்தார்.

இலங்கைத் தூதுவர் திரு. சி. குமாரசாமி, விழாவில் கலந்து கொண்டு தமிழில் பேசினர்.

தமிழ் விழா தொடங்குவதற்கு முதல் நாளிலே டில்லி நாடாளு மன்ற இந்தி சங்கத்தார் விழாவிற்கென வந்திருந்த தமிழ் அறிஞர்களுக்கு விருந்து வைத்துச் சிறப்பு செய்தனர். இந்த விருந்திலே பிரதமர் நேரு கலந்து கொண்டார். அவர் தமிழ்மொழியின் அருமை பெருமைகள் பற்றியும் பேசினர். தமிழறிஞர்களிலே ஒவ்வொருவருக்கும் தம் கையால் நேரு மாலை அணிவித்தார்.

திரு. டி. எஸ், அவினாசிலிங்கம் செட்டியார் எம். பி. அவர்களும், மத்திய ரயில்வே துணையமைச்சர் திரு. ஒ. வி. அளகேசன் அவர்களும் டில்லி தமிழ் விழா வெற்றி பெறப் பல வகையிலும் பாடுபட்டனர்.

இந்தியக் குடியரசின் துணைத் தலைவராக இருந்த டாக்டர் எஸ் இராதாகிருஷ்ணன், விழாவில் ஒரு நாள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். டில்லி மாநிலத்தின் முதல்வராக இருந்த திரு. ஓம்பிரகாஷ் தலைமையில், தமிழல்லாத வேற்று மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள டில்லி நகரவாசிகளுக்குத் தமிழ் மொழியின் அருமை பெருமைகளை உணர்த்தும் பொருட்டு, தொடக்க விழா நிகழ்ச்சி மட்டும் ஆங்கிலத்திலேயே நடத்தப் பெற்றது. டாக்டர் தெ. பொ. மீனட்சிசுந்தரனர், பேராசிரியர்

அ. சீனிவாசராகவன் இருவரும் ஆங்கிலத்தில் உரையாற்றினர். இந்த ஒரு வேளை நிகழ்ச்சி நீங்கலாக பொதுவாக விழா தமிழிலேயே நடைபெற்றது

விழாவின் வெற்றிக்காக டில்லித் தமிழ்ச் சங்கம் முழு அளவில் பொறுப்பேற்று உழைத்தது. கி. வா. ஜகந்நாதன், கொத்தமங்கலம் சுப்பு, டாக்டர் மு. வரதராசனார் திருக்குறள் முனுசாமி ஆகியோர் டில்லி விழாவில் சிறப்புரை யாற்றினர். ஔவை தி. க. சண்முகம், கலைஞர் தி. க. பகவதி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அப்போது டில்லியில் மக்கள் அவையும், மாநிலங்கள் அவையும் நடந்து கொண்டிருந்தன வாதலால், அந்த இரு அவைகளின் தமிழ் நாட்டு உறுப்பினர் அனைவரும் கட்சி வேற்றுமையின்றி இந்த விழாவில் கலந்து கொண்டனர்.

டில்லித் தமிழ்ச் சங்கம் தமிழகத்திலிருந்து சென்றிருந்த அறிஞர்களுக்கெல்லாம் தனியாக வரவேற்புக் கூட்டமும், விழாவின் இறுதியில் வழியனுப்புக் கூட்டமும் நடத்தி வைத்தது.

தமிழ் வளர்ச்சிக் கழகம் தமிழின் பெயரால் நடத்திய விழாக்களிலே முதலாவதாக மதுரையிலும், இரண்டாவ தாகத் திருவாரூரிலும் நடத்திய இரண்டு விழாக்களைத் தவிர மற்ற விழாக்களில் நானும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினேன்.

இதற்குப் பின் தமிழ் விழா தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப் பெறவில்லை. ஆனால், தமிழில் கலைக்களஞ்சியம் வெளியிடல், தமிழில் வெளிவரும் சிறந்த நூல்களுக்கு ஆண்டு தோறும் பரிசளித்தல் ஆகிய ஆக்கவழிப் பணிகளில் தொடர்ந்து கவனம் செலுத்தி வந்தது

1951 முதற்கொண்டே தமிழரசுக் கழகம் தனது மாநில—மாவட்ட—நகர—கிராம மாநாடுகளுடன் சேர்த்து இலக்கிய மாநாடு என்னும் பெயரால் தமிழ் விழா நடத்துவதை வழக்க மாகக் கொண்டுவிட்ட தென்பதனை இங்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

# கவிஞர்களுக்குச் சிறப்பு

பாரதப் பெருநாடு விடுதலை பெறுவதற்கு முன்பே வள்ளுவர், இளங்கோ, கம்பர் ஆகிய முப்பெரும் கவிஞர்களுக்கு விழாக் கொண்டாட வேண்டுமென்ற உணர்வு தேசிய வாதிகளுக்கு இருந்தது.

*பாரதி கண்ட கனவு*

இதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் மகாகவி பாரதியார் ஆவார். அவர் 'சுதேச மித்திரன்' இதழில் எழுதிய கட்டுரை ஒன்றில் கீழ்வருமாறு கூறுகின்றார்:

"எதனை விரும்புகிறோமோ அது தோன்றுகிறது. எதை ஆதரிக்கிறோமோ அது வளர்ச்சி பெறுகிறது. பேணாத பண்டம் அழிந்து போகும் பழக்கத்தில் இல்லாத திறமை இழந்துவிடப்படும். அறிவுடையோரையும் லோகோபகாரிகளையும், வீரரையும் கொண்டாடாத தேசத்தில் அறிவும், லோகோபகாரமும், வீரமும் மங்கிப்போகும் தமிழ் நாட்டில் இப்போது 'புதிய உயிர்' தோன்றியிருப்பதால், நாம் இவ் விஷயத்தில் தமோ குணஞ் செலுத்தாமல், கம்பன், இளங்கோ, திருவள்ளுவர் முதலிய மகா கவிகளுக்கு ஞாபகச் சிலைகளும் வருஷோத்ஸவங்களும் ஏற்பாடு செய்ய வேண்டும். திருவள்ளுவர் மயிலாப்பூரிலே பிறந்தவர். அங்கே திருவள்ளுவர் கோயில் இப்போது இருக்கிறது. ஜன்ம தினம் நிச்சயமாகத் தெரியவில்லை. ஒரு வேளை அந்தக் கோயிற் பூசாரிக்குத் தெரியக் கூடும்.

"ஐந்து மகாகாவியங்களிலே சிறந்ததாய் சிலப்பதிகாரம் செய்த இளங்கோ முனிவர் வஞ்சிநகரத்தில் பிறந்தவர். இந்த வஞ்சி நகரம் திருச்சினப்பள்ளிக்கு அருகேயுள்ள கரூர் என்று

பண்டித மு. ராகவய்யங்கார் தீர்மானம் செய்கிறார். இந்த ஆசிரியரது ஜன்ம தினத்தையும் நிச்சயமாகச் சொல்வதற்கு வழியில்லை.

"மயிலாப்பூரில் திருவள்ளுவர் கோயிலைச் செம்மையாகக் கட்ட வேண்டும். இப்போது மிகவும் ஏழை நிலைமையில் இருக்கிறது. திருவெழுந்தூரிலும், கரூரிலும் ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்த வேண்டும். ஜன்ம தினம் நிச்சயப் பட வழியில்லை. ஆதலால் ஸரஸ்வதி பூஜைக்கு முன்பு அல்லது பின்பு குறிப்பிட்டதொரு தினத்தில் இந்த மகான்களின் ஞாபகத்தைக் கொண்டாடுதல் பொருத்தமுடைய செய்கையாகும். நவராத்திரி உத்ஸவங்கள் நமக்குள் வழக்கமாக உள்ளதால், அந்த ஸமயத்தை ஒட்டி நமது மகாகவிகளுக்குத் திருவிழாக்கொண்டாடுதல் ஸுலபமாக இருக்கும்."

[பாரதி நூல்கள்—கட்டுரைகள்; பக் 402-403.]

## கனவு நனவானது

தேசிய மகாகவியின் அறிவுரைக்கிணங்க, விடுதலைப் போரில் ஈடுபட்டுச் சிறை புகுந்தவரான பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், முதுபெரும் தேசபக்தரான திரு. வி. கலியாணசுந்தரனார் ஆகியோர் "சென்னை தமிழ்ச் சங்கம்" என்ற பெயரில் ஒரு அமைப்பை நிறுவி, அதன் சார்பில் சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் இலக்கியங்களின் பெயரால் மாநாடுகளும், பண்டை நாள் கவிஞர்களின் நினைவு நாட்களும் நடத்தி மக்களிடையே தமிழ்ப் பற்றை வளர்த்தனர். மற்றும், ராய. சொக்கலிங்கனார் சா. கணேசன் ஆகியோர் காரைக்குடியில் கம்பர் கழகத்தை நிறுவி, அதன் சார்பில் ஆண்டுதோறும் கம்பர் விழாக் கொண்டாடும் வழக்கத்தை ஏற்படுத்தினர். கவியரங்கமும், பட்டி மன்றமும், கருத்தரங்கமுமாக விழா நிகழ்ச்சிகள் அமைக்கப்பெறுகின்றன. இறுதி நாளிலே கம்பர் மறைந்த ஊராகக் கருதப்படும் நாட்டரசன் கோட்டையிலுள்ள கம்பர் சமாதியின் முன்பு வழிபாடு நடத்தப் பெறுகிறது.

## திருவள்ளுவர் திருநாள்

நாடு விடுதலை பெறுவதற்கு முன்பே அரசியல் கட்சி சார்பற்ற புலவர் பெருமக்கள் பலர் கூடித் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடினர். இது நிகழ்ந்தது 1935ஆம் ஆண்டில் ஆகும். இதற்கு முன்பு அங்குமிங்குமாக சில ஊர் களில் ஒரு சில மன்றங்களால் ஆடம்பரமின்றி திருவள்ளுவர் நினைவுநாள் கொண்டாடப்பட்டிருக்கக்கூடும். ஆயினும், நாடு தழுவிய முறையில்—அப்போது வாழ்ந்து கொண்டு இருந்த பெரும் புலவர்கள் பங்கு கொள்ளத் தக்க வகையில் பெரு விழாவாக நடந்தது 1935 ஆம் ஆண்டில்தான். ஆகவே இதுபற்றிச் சற்று விரிவாக அறிந்து கொள்வது அவசிய மாகிறது.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் செயலாளர் வ. சுப்பையா பிள்ளையின் பெரு முயற்சியால் திரு. கா. நமச்சி வாய முதலியாரைத் தலைவராகவும், பாரிப்பாக்கம் திரு. கண்ணப்ப முதலியாரைச் செயலாளராகவும் கொண்டு நிறுவப் பெற்ற திருவள்ளுவர் திருநாட் கழகத்தின் சார்பில் 1935 மே 18, 19 ஆம் நாட்களில் சென்னை நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் (சீன பஜார்) சாலையிலுள்ள பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி மண்டபத்தில் திருவள்ளுவர் விழா நடை பெற்றது.

மறைமலை யடிகள் தலைமை வகித்தார். பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. வி.க, தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், க. ப. சந்தோஷம், ஜனாப் தாவூத் ஷா, ச. சச்சிதானந்தம் பிள்ளை, க. ர. கோவிந்த ராச முதலியார், வி. ரங்காச்சாரியார் ஆகியோர் உரை யாற்றினர்.

சென்னை நகரில் ஏழுகிணறு, திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் ஆகிய வட்டங்களிலும் திருவள்ளுவர் விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாக்களில் நீதிக்கட்சித்

தலைவர்களான திவான்பகதூர் சர். ஏ. ராமசாமி முதலியார், திரு. சி. என். அண்ணாத்துரை எம். ஏ. ஆகியோரும், திரு. எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் போன்ற தேசிய வாதிகளும் கலந்து கொண்டனர்.

சென்னை நகருக்கு வெளியே மாவட்டத் தலைநகரங்களிலும், வேறு பல துணை நகரங்களிலுமாக முப்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் திருவள்ளுவர் விழா நடத்தப்பெற்றது. அந்நிகழ்ச்சிகளிலே கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளை, எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை, மதுரை கவிஞர் ஜகவீர பாண்டியனார், கா. சுப்பிரமணியப் பிள்ளை, எஸ். டி. சற்குணர், தூத்துக்குடி ஏ. சி. பால் நாடார், பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை, கோவை சி. எம். ராமச்சந்திரஞ் செட்டியார், திரு. டி. எஸ். அவிநாசிலிங்கம், நெல்லை ந. சோமயாசுலு, எஸ். மகராசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கையில் காரை நகரிலும், யாழ்ப்பாணத்திலும் திருவள்ளுவர் விழா நடைபெற்றது. அப்போது "பிரெஞ்சிந்தியா" என்றழைக்கப்பட்ட பாண்டிச்சேரியிலும் விழா கொண்டாடப்பட்டது.

இவ்விழாவையொட்டி விழாக் குழுவின் சார்பில் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

திருவள்ளுவர் திருநாட் கழகத்தார் ஆண்டுதோறும் சென்னையில் திருவள்ளுவர் நினைவு நாள் கொண்டாடத் திட்டமிட்டிருந்தனர். ஆயினும், 1935ஆம் ஆண்டில் கொண்டாடியதுபோல் பெருஞ் சிறப்புடன் பிந்திய ஆண்டுகளில் தமிழகத்தில் திருவள்ளுவர் விழா கொண்டாடப்பட்டதாகத் தெரியவில்லை.

## கம்பர் எதிர்ப்புப் போர்!

வால்மீகி ராமாயணத்தைத் தமிழ் மொழியிலும், 'தமிழர் வழி'யிலும் தந்த மகாகவி கம்பருக்குத் தமிழ் நாட்டி

றுள்ள பல ஊர்களில் நாடறியும் வகையில் விளம்பரமின்றி நெடுங்காலமாகவே விழா நடைபெறுவது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. ஆயினும், தமிழகத்தின் தலை நகரிலே 1914க்கு முன்பு பெரும் புலவர்கள் கூடி ஆரவார மாகக் கம்பர் விழாவை நடத்தியதாகத் தெரியவில்லை.

1944 ஏப்ரல் 16ஆம் நாளில்தான் சென்னை கோகலே மண்டபத்தில் கம்பர் விழாவைச் சிறப்பாகக் கொண்டாட புலவர்கள் முதன் முதலாக முயற்சி செய்தனர். அந்த விழாவில் தலைமை தாங்க பண்டிதமணி கதிரேசன் செட்டி யார் அழைக்கப்பட்டிருந்தார்.

அப்போது சுயமரியாதை இயக்கத்தார் கம்பருக்கு எதி ராக ஒரு இயக்கமே நடத்திக் கொண்டிருந்தனர். இந்த எதிர்ப்புப் புயலானது கோகலே மண்டபத்தில் ஏற்பாடாகி யிருந்த கம்பர் விழா அரங்கிலும் புகுந்தது.

'சொற்போருக்குத் தயார்!'

விழாவில் இறை வணக்கம் பாடப்பட்டபோதே கேலிக் குரல்கள் ஒலித்தன. பண்டித மணி தமது தலைமை உரையைப் படிக்கத் தொடங்கியபோது, அதைப் படிக்க வொட்டாமல் அவரைப் பயமுறுத்தும் வகையில் ஆர்ப் பாட்டம் நடந்தது. எதிர்ப்பாளர்கள் வன்முறைகளையும் கையாண்டனர். கொச்சை மொழியில் கோஷங்கள் எழுப்பினர். இதுபற்றி, "பண்டிதமணி" என்னும் தலைப் பிட்டு "சோமலெ" எழுதி இன்ப நிலையத்தாரால் வெளி யிடப்பட்டுள்ள நூலில் (பக். 123-24ல்) வருணித்துள்ளதைப் பார்ப்போம்.

"பண்டிதமணி அவர்கள் தம் அரிய உரையை எழுதிக் கொண்டு வந்து படிக்கத் தொடங்கினர். அப்போது கூட்டத்திலிருந்த ஒரு சிலர் கூட்டம் நடக்க விடாமல் பல வகையாக இடையூறு புரிந்தனர். மேடை மீது தாற்காலிகள் பறந்தன. வானொலி நிலையத்தாரின் ஒலி

பெருக்கி நொறுங்கிற்று. அந்நிலையிலும் பண்டிதமணி அவர்கள், 'அறிவாளிகளுடன் சொற்போருக்கு நான் தயார். ஆனால் மற்போர் செய்ய நான் பருவம் கடந்துள்ளேன். என் உடல் நிலையும் இடந்தராது' என்று சுவைபடக் கூறினார்கள்.''

பண்டித மணியின் தலைமை உரையை ஆர்ப்பாட்டக் காரர்கள் எழுப்பிய எதிர்ப்புக் கோஷங்களுக்கும், கேலிக் குரல்களுக்குமிடையே பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை, திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் ஆகிய இருவரும் மாறி மாறி உரத்த குரலில் படித்து முடித்தனர். தலைமை உரையைப் படித்து முடித்ததும் கம்பர் விழா ஒரு விதமாக முடிந்தது.

*கி. வா. ஜ.வின் வேதனை!*

கம்பர் விழாவில் பண்டித மணி அவர்களுக்கு ஏற்பட்டு விட்ட இன்னலுக்காக அவருக்கு மன்னிப்புத் தெரிவித்து, விழாக்குழுவின் சார்பாக ''கலைமகள்'' ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் ஒரு கடிதம் எழுதினார். அதன் ஒரு பகுதி வருமாறு:

''கம்பரையும், கம்பர் திருவிழாவையும் சென்னை வாசிகள் என்றும் மறக்க முடியாதபடிச் செய்துவிட்டனர் சில தமிழர்கள். கம்ப ராமாயணத்தைத் திருப்பிப் படிக்கும் அவர்களுக்கு யுத்த காண்டந்தான் செயலில் முகிழ்க்கிறது.

''ஒரு பெருங்குறை. கூட்டத்தினர் மிகவும் ஆவலாகத் தங்கள் பேச்சைக் கேட்க விரும்பியிருந்தனர். எல்லோரும் ஏமாந்து போயினர். நாம் என்ன செய்வது? யாரை நோவது? இந்தத் துரதிர்ஷ்ட நாட்டில் கம்பன் பிறந்தது அதிர்ஷ்டக் குறைவு என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது.

''தங்களைத் தலைமைப் பதவியில் வைத்துக் கம்பன் புகழைப் பரப்பும் தொண்டர்களாக இருக்க வேண்டும் என்பது எங்கள் அவா. அது நன்கு நிறைவேறும் என்றே

நம்பியிருந்தோம். தவளை குதித்ததனால் யானை நிழல் கலங்கி விட்டது.

"தங்களுக்குப் பலவகையில் அசௌகரியம் நேரும்படி நாங்கள் செய்துவிட்டோம். எங்கள் வினைப்பயன் அது. ஒரு விதமாகக் கூட்டத்தை நிறைவேற்றியது ஓர் ஆறுதலைத் தருகிறது.

"இந்த நிகழ்ச்சியால் தங்கள் உள்ளமும் உடலும் மிகப் புண்பட்டுவிட்டன. தங்கள் அருள் உள்ளத்தில், 'தமிழர் இந்த உட்பகையினின்றும் நீங்கி உய்ய வேண்டும்' என்ற வேண்டுகோள் தில்லையம்பலவாணரை நோக்கி எழுந்தால், அதற்கு நல்ல பயன் உண்டாகும். அந்தப் பிரார்த்தனையில் தமிழர் அனைவரும் சேர்ந்து கொள்ள வேண்டும்.

"கம்பர் திருவிழாக் கழகத்தினர் சார்பில் தங்கள் மன்னிப்பை நான் இரக்கின்றேன்.

"சிறிதும் எதிர்பாராத இந்த அநுசிதத்தைத் தங்கள் திருவுள்ளத்தில் கொள்ளாது மறக்க வேண்டுகிறேன். தங்கள் பேரன்பு இந்தச் சிறு குறும்பை அலக்ஷியம் செய்து வீறிநிற்கும் என்ற துணிவு எனக்கு உண்டு.

"மீண்டும் தங்கள் மன்னிப்பை யாசிக்கிறேன்."

['பண்டிதமணி': பக். 124-26]

## பழித்தவர்களும் பாராட்டுகின்றனர்!

கோகலே மண்டபத்தில் நடந்த கம்பர் விழாவில் ஏற்பட்ட குழப்பம் சென்னை செய்தித் தாள்களில் ஒரு பக்க அளவில் விரிவாகப் பிரசுரிக்கப்பட்டது. கம்பருக்கு ஏற்பட்ட எதிர்ப்பினால் அவரது புகழ் குன்றிவிடவில்லை. அதன் பிறகு தான் நாட்டில் கம்பர் கழகங்கள் மலிந்தன. ஆண்டு தோறும் கம்பர் விழா நடத்தும் ஊர்களின் எண்ணிக்கை பெருகியது. கம்ப ராமாயணப் பதிப்புகள் அதிக அளவில்

வெளி வந்தன. கோகலே மன்றத்தில் நடந்த ஆர்ப்பாட்டங்களை யான் நேரில் கண்டவன் என்றாலும், அவற்றை விவரிக்கவோ, கண்டன ரீதியில் விமர்சிக்கவோ இங்கு நான் முயலவில்லை. திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் பண்டித மணிக்கு எழுதிய கடிதத்தில் கூறியுள்ளதுபோல, பண்டித மணியின் பிரார்த்தனையால் தமிழர் உட்பகையினின்று விடுபட்டு விட்டனர். காலம் மாறிவிட்டது. அன்று பழித்தவர்களும் இன்று தன்னைப் பாராட்டும் அளவுக்குக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் வெற்றி பெற்றிருக்கிறார். கம்பருக்கு எதிர்ப்பு காட்டிய வட்டாரத்தினரும் கம்பர் விழாவில் கலந்து அவருக்குப் புகழ் மாலை சூட்டுகின்றனர். இராம பக்தர்களுடன் ஒரே மேடையில் நின்று அஞ்சலி செலுத்துகின்றனர். கம்பர் விழாவுக்கு அழைப்பு வராதபோது, அதற்காக விம்முதலுற்று மனமுருகி வருந்தும் அளவுக்கு மனமாற்றம் அடைந்திருக்கின்றனர். இந்த மாறுதலுக்குத் தமிழ்ப் பற்றுடையோர் மரியாதை அளிக்க வேண்டும் அல்லவா!

## *விடுதலைக்குப்பின் வள்ளுவர் விழா*

நாட்டின் விடுதலைக்காக மக்கள் போராடிக் கொண்டிருந்தபோதே தமிழகத்தில் வள்ளுவருக்கும் கம்பருக்கும் விழாக் கொண்டாடப்பட்டதனை ஏற்கனவே கூறினேன். நாடு விடுதலை பெறவிருந்த ஆண்டிலும் அதற்குப் பிறகும் வள்ளுவருக்கும் கம்பருக்கும் நடைபெற்ற சிறப்பினையும் இனி அறிவோம்.

பிரிட்டிஷார் வெளியேறுவதற்கு எட்டுத் திங்களுக்கு முன்பே 1947 ஜனவரியில் தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் திருவள்ளுவர் விழாவைக் கொண்டாடுமாறு சென்னை மாநில அரசின் கல்வித் துறையினர் சுற்றறிக்கை விடுத்தனர். இதற்கு அப்போது கல்வியமைச்சராக இருந்த திரு தி. சு. அவினாசிலிங்கனார் காரணமாவார். நகரமன்றங்கள்

போன்ற உள்ளாட்சிகளின் கல்வி நிறுவனங்களும் இதிலே பங்கு பெற்றன.

இதிலிருந்துதான் அரசின் சார்பில் பொய்யா மொழிப் புலவரான வள்ளுவரைப் போற்றுகின்ற பணி தொடங்கியது எனலாம். அரசு ஊக்கிய தன் காரணமாக நாடெங்குமுள்ள தமிழ் மன்றங்களும் திருக்குறள் தந்த ஆசானுடைய நினைவு நாளைக் கொண்டாடின. சான்றுக்கு இரண்டு நகரங்களில் நடந்த விழாக்களைப் பார்ப்போம்.

## விருதையில் வள்ளுவர் விழா

சனவரி 26லே விருதுநகரில் நகரமன்றத்தின் சார்பில் திருவள்ளுவர் திருநாள் கோலாகலமாகக் கொண்டாடப் பெற்றது. நகரமன்றத் தலைவர் திரு. வி. வி ராமசாமி அவர்கள் இதனை நடத்தி வைத்தார்.

இந்தியா குடியரசு நாடான பின்னர், அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த சனவரி 26ஐக் குடியரசு நாளாக மக்கள் கொண்டாடி வருகின்றனர். இதற்கு முன்பு —அதாவது, விடுதலைப் போராட்ட காலத்திலே சனவரி 26ஐ பரிபூரண சுதந்திரக் கோரிக்கை நாளாகக் கொண்டாடினர். இந்த நன்னாளிலேதான் விருதுநகரில் திருவள்ளுவர் திருநாள் நடைபெற்றது. இரண்டு வெண் குதிரைகள் பூட்டிய கோச்சு வண்டியில் திருக்குறள் நூல் வைக்கப்பட்டு விருது நகர் தெருக்களிலே ஊர்வலமாகக் கொண்டு செல்லப் பட்டது.

குறட்பாக்களை இசைப் பாடல்களாகப் பயன்படுத்தி, பள்ளிச் சிறுவர்களும் சிறுமியர்களும் கும்மி, நடனம், நாடகம், பாட்டு ஆகிய கலை நிகழ்ச்சிகளை நடத்தினர். மாலை நேரத்தில் திறந்தவெளித் திடலில் வள்ளுவனார் புகழ் பேசும் பொதுக் கூட்டம் நடத்தப் பெற்றது. விருதுநகர் நகர மன்றத் தலைவராக இருந்த திரு. வி. வி. ராமசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். நான் தலைமை வகித்தேன்.

### தமிழரசு காணப் பிரதிக்ஞை

எனது தலைமை யுரையில் நான் எடுத்துக்கொண்ட பிரதிக்ஞை வருமாறு:

"இன்று இந்தியாவின் சுதந்திர கோரிக்கைத் திருநாள். நான் தேசியத் தமிழன். இந்த நன்னாளில் நான் மேற்கொள்ளும் சபதம் இது:

"ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் இத்தனை நாளும் போல இனி வரும் நாட்களிலும் இந்திய மக்களுடன் இணைந்து நின்று செயலாற்றுவேன். ஏகாதிபத்தியம் வெளியேறிய பின்னர், சுதந்திர இந்தியாவில் தமிழகத்தில் தமிழரசு காணவே நான் விரும்புகிறேன். இதை நான் எனது பிறப்புரிமையாகவும் கருதுகிறேன்.

"உரிமை பெற்ற தமிழகம் பிற மாநிலங்களுடன் சம அந்தஸ்தில் இணைந்து நின்று ஐக்கிய இந்தியாவை நிறுவ உதவி புரியும் என்று இந்திய மக்களுக்கு உறுதி கூறுகிறேன்.

"உரிமை பெற்ற தமிழகத்தின் அரசியல் வள்ளுவர் வகுத்த குறட்பாவின் வழியிலேயே அமைய வேண்டும் என்று ஆவல் கொள்கின்றேன். இதற்காக எவ்விதத் தியாகமும் செய்யப் பின்வாங்கமாட்டேன் என்று திருக்குறளின் மீது ஆணையிட்டுத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

['தமிழ் முரசு' 15—2—47 இதழில் வெளியானது.]

மேலே தந்துள்ளபடி நான் பிரதிக்ஞை எடுத்துக்கொண்ட போது பொதுக் கூட்டத்தில் குழுமியிருந்த மக்களிலே ஒவ்வொருவரும் என்னைப் பின்பற்றிப் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டனர்.

சென்னை நகரில் புரசையிலுள்ள முத்தைய செட்டியார் உயர்நிலைப் பள்ளித் திடலில் அமைக்கப் பெற்ற

அழகிய பந்தலிலே 1947 பிப்ரவரி 9 ஆம் தேதியன்று திருவள்ளுவர் விழா கொண்டாடப் பெற்றது.

இந்த விழாக் குழுவின் தலைவனாக இருந்து விழாவைச் சிறப்புடன் நடத்தி வைக்கும் பேறு எனக்குக் கிடைத்தது. புரசை திருவள்ளுவர் கழகம் இதற்கு முன்நின்று முயன்றது.

காலையில் அலங்கரிக்கப்பட்ட யானை மீது திருக்குறள் ஓலைச்சுவடி வைக்கப்பட்டு, சென்னை நகரின் பிரதான தெருக்களில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. நூற்றுக் கணக்கான தமிழறிஞர்கள் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

திருவள்ளுவர் விழாவைக் கொண்டாடுமாறு கல்வி நிலையங்களை ஊக்குவித்த கல்வி அமைச்சர் திரு. தி. சு. அவினாசிலிங்கனார், புரசையில் நடந்த விழாவைத் தொடங்கி வைத்தார். நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் தலைமை வகித்தார். நான் வரவேற்புரை நிகழ்த்தினேன். திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் உட்பட அறிஞர் பலர் சிறப்புரையாற்றினர்.

இவ்விழாவிலே, தமிழ்மொழி வழங்கும் நிலப்பரப்பு தனியரசு மாநிலம் ஆக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் என்னால் மொழியப்பட்டு, ஒரு மனதுடன் நிறைவேற்றப் பட்டது.

## இளங்கோவுக்கும் விழா

இளங்கோவடிகளும் அவர் படைத்த சிலப்பதிகாரக் காப்பியமும் நீண்ட நெடுங்காலமாகவே புலவர்களால் சரியானபடிப் போற்றப்படவில்லை. அதற்குக் காரணம் தமிழகத்தின் அகச் சமயங்களாகி விட்ட சைவத்தையோ, வைணவத்தையோ சாராத சமுதாயக் காப்பியத்தை இளங்கோவடிகள் படைத்ததுதான். தமிழ் இன ஒருமைப்பாட்டின் வழியில் இந்திய தேசிய ஒருமைப்பாட்டுக்கு உதவும் வகையில்

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைப் படைத்தார். அதனால், இன உணர்ச்சியில் பின்தங்கி விட்ட தமிழர் சமுதாயம் சிலம்பைச் சரியானபடிப் போற்றவில்லை. இளங்கோவடிகள் சமணர் எனக் கருதப்பட்டதாலும், வள்ளுவர்—கம்பர்—சேக்கிழார் ஆகிய மகாகவிகளுக்கு ஏற்பட்ட செல்வாக்கு தமிழர் மத்தியில் அவருக்கு ஏற்படவில்லை.

தமிழினத்தின் தேசிய ஸ்தாபனமான தமிழரசுக் கழகம் தோன்றிய பின்னர், தமிழ் இலக்கிய உலகில் ஒரு மறு மலர்ச்சி ஏற்பட்டது. சமயங்கடந்த சமுதாயப் பார்வையில் தமிழ் இலக்கியங்கள் ஆராயப்படலாயின. கழகம் பிறந்த 1946ஆம் ஆண்டிலேயே சிலப்பதிகாரத்தின் புகழ் பரப்பும்—இளங்கோவடிகளின் பெருமை பேசும்-பிரசாரமும் தொடங்கி விட்டது.

*சிலப்பதிகார மாநாடு*

1951 மார்ச்சு 21ல் சென்னை இராயப்பேட்டை காங்கிரஸ் திடலில் சிலப்பதிகார மாநாடு தமிழரசுக் கழகத்தினரால் நடத்தப் பெற்றது. கழகமும் காங்கிரசும் இணைந்து செயல் பட்ட காலம் அது. அந்த இணைப்பின் அடிப்படையிலேயே சிலப்பதிகார மாநாடு நடத்தப் பெற்றது. தமிழ் மொழியின் வரலாற்றில் பத்துப் பாட்டு மாநாடு, எட்டுத் தொகை மாநாடு, திருக்குறள் மாநாடு எனத் தொகை இலக்கியங்கள் பெயராலும், தனி இலக்கியங்கள் பெயராலும் புலவர் பெரு மக்களால் மாநாடுகள் நடத்தப் பெற்றனவென்றாலும், சிலப் பதிகாரத்தின் பெயரால் மாநாடு நடத்தப்படவில்லை. இந்தக் குறையைப் போக்கும் வகையில் தமிழ் மொழியின் வரலாற்றிலே முதன் முதலாக சிலப்பதிகார மாநாட்டை காங்கிரசின் கோட்டையிலேயே நடத்தினர், அப்போது காங்கிரசைச் சார்ந்திருந்த தமிழரசுக் கழகத்தார். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த திரு கு காமராசர் உள்பட காங்கிரஸ் பிரமுகர்களும், ஊழியர்களும் ஏராளமாக இந்த

மாநாட்டில் கலந்து கொண்டனர். தஞ்சை மாவட்ட காங்கிரஸ் பிரமுகர் வி. எஸ். தியாகராச முதலியார் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து மாநாட்டை நடத்தி வைத்தார்.

### த. அ. க. வின் பணி

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, மாநாட்டைத் தொடங்கி வைத்தார். பச்சையப்பன் கல்லூரி தமிழ்த் துறைத் தலைவராக இருந்த திரு. மு. வரதராசனார் மாநாட்டிற்குத் தலைமை வகித்தார். திரு. ந. சஞ்சீவி எம். ஏ அவர்கள் தமிழ்க் கொடியை உயர்த்தி வைத்தார்.

தமிழ், ஆங்கில மொழிகளில் வெளியாகும் செய்தித் தாள்கள் எல்லாம் சிலப்பதிகார மாநாட்டில் நிகழ்த்தப் பெற்ற உரைகளை விரிவாகப் பிரசுரித்தன.

இதற்குப் பின்னர் தமிழரசுக் கழக அரசியல் மாநாடு நடைபெறும்போ தெல்லாம் முதல் நாளிலே சிலப்பதிகார மாநாடும் நடத்தப்படுவது வழக்கமாகி விட்டது. கட்சிச் சார்பற்றமுறையில் புலவர் பெருமக்கள் இந்தமாநாடுகளுக்கு அழைக்கப்பட்டனர். பட்டி தொட்டிகள்தோறும் சிலப்பதிகார மாநாடு நடைபெற்றது தமிழில் எழுதப் படிக்கத் தெரியாதவரும் புரிந்து கொண்டு ரசிக்கத்தக்க வகையில் எளிய தமிழ்நடையில் பேசி சிலப்பதிகாரப் பிரச்சாரம் செய்யும் தொண்டைக் தமிழரசுக் கழகம் தொடங்கிவைத்தது. சாதி வெறி, கட்சிவெறி, இனவெறி ஆகியவற்றிற்கு அப்பாற்பட்ட முறையில் தமிழ் மொழிக்குப் பெருமை தேடும் வகையில் தமிழரசுக் கழகம் இலக்கியத் தொண்டில் ஈடுபட்டது.

### முதல் விழா

சிலம்பருளிய இளங்கோவடிகளுக்கு 1955-ல் சென்னை செயின்ட்மேரீஸ் மண்டபத்தில் விழா நடத்தப் பெற்றது.

இதுதான் தமிழ் மொழியின் வரலாற்றில் இளங்கோவடிகளுக்கு நடத்தப்பட்ட முதல் விழா. இளங்கோவடிகளின் பிறந்த நாளும் மறைந்த நாளும் தெரியாமையால், சிலப்பதிகார காலத்தில் இந்திர விழா நடந்ததாகச் சொல்லப்படும் சித்திரா பௌர்ணமி நாளிலே இளங்கோ விழாவை நடத்த 1—1—56ல் திருப்பரங்குன்றத்தில் கூடிய தமிழரசுக் கழகப் பொதுக்குழுக் கூட்டம் தீர்மானித்தது. அதன்படியே 24—4—56ல் சென்னை நகரம் உட்பட தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்கான ஊர்களில் இளங்கோ விழா கழகத்தாரால் கொண்டாடப்பட்டது.

சென்னையில் நாடகப் பேராசிரியர் திரு. பம்மல் சம்பந்த முதலியார் விழாவைத் தொடங்கி வைத்துப் பேசினர். தமிழவேள் பி. டி. ராசன், டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார். டாக்டர் மு. வரதராசனர் உள்படப் புலவர் பலர் கலந்து கொண்டனர். நாமக்கல் கவிஞர், ரா. பி. சேதுப்பிள்ளை, 'ஆனந்த விகடன்' ஆசிரியர் தேவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம் 'ஔவை' தி. க. சண்முகம் வரவேற்புக் குழுத்தலைவராக இருந்து விழாவைச் சிறப்பாக நடத்தி வைத்தார். நானும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினேன். ராஜாஜி, பெரியார் ஈ. வே. ரா., கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

## நாடே கொண்டாடுகின்றது!

தமிழரசுக் கழகம் தொடங்கி வைத்த இளங்கோவடிகள் விழா நாளடைவில் கல்லூரிதோறும் உள்ள மாணவர் மன்றங்களாலும், பல்வேறு ஊர்களிலுள்ள இலக்கிய மன்றங்களாலும் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இளங்கோ பெயரால் பல்வேறு மன்றங்கள் தோன்றியுள்ளன.

எண்ணற்ற ஊர்களிலே சாலைகளுக்கும் சோலைகளுக்கும் இளங்கோ பெயர் வைக்கப்பட்டுள்ளது.

*கம்பருக்கு நினைவாலயம்*

கம்பர் சமாதி கொண்ட இடம் தஞ்சை மாவட்டத்திலுள்ள தேரழுந்தூர் என்று சொல்லப்படுகின்றது. அதனால், அவ்வூரில் கம்பருக்கு ஒரு நினைவாலயம் எழுப்ப மொழிப் பற்றுடைய தேசியத் தமிழர் பலர் முயன்றனர். மாநில அரசும் அதற்கு உதவி புரிய இசைந்தது. ஆகவே, 1952ல் சென்னை மாநில ஆளுநராக இருந்த மேதகு ஸ்ரீ பிரகாசாவைக் கொண்டு தேரழுந்தூரில் கம்பர் நினைவாலய அடிக்கல் நாட்டு விழா சிறப்பாக நடத்தப்பெற்றது. ஆனால், என்ன காரணத்தாலோ இதுவரை அந்தப் பணி நிறைவேறவில்லை. இது ஒரு குறைதான்.

நாடு சுதந்தரம் பெற்றதை யொட்டி தேசக் கவிஞர்களின் உருவங்கள் பொறித்த தபால் தலைகள் வெளியிடும் பணியை மத்திய அரசு மேற்கொண்டது. ஆனால், தமிழ்க் கவிஞர்களை நினைவில்கொள்ளத் தவறியது. அந்த நிலையில் நான் 7—7—51ல் டில்லி சென்று அப்போது அஞ்சல்துறை அமைச்சராக இருந்த திரு. ஜெகஜ்ஜீவன்ராமைப் பேட்டி கண்டு, திருவள்ளுவர், ஔவையார், கம்பர், பாரதியார் ஆகிய தமிழ்க் கவிஞர்களின் திருவுருவங்கள் கொண்ட தபால் தலைகள் வெளியிட வேண்டுமென்று கோரும் விண்ணப்ப மொன்றைத் தமிழரசுக் கழகத்தின் சார்பில் கொடுத்தேன்.

இந்தப் பேட்டி நிகழ்ந்த இரண்டு வாரங்களுக்குள் 25—7—51ஆம் தேதியிட்ட கடிதமொன்று மத்திய அரசின் அஞ்சல் துறையினரிடமிருந்து எனக்குக் கிடைத்தது. அதில் எனது கோரிக்கை ஏற்கப்பட்டிருப்பதாகத் தகவல் தரப்பட்டிருந்தது. வள்ளுவர், ஔவையார், கம்பர் ஆகியோரின் உருவப் படங்களை அனுப்புமாறும் கேட்கப்

பட்டேன். அவற்றை அனுப்பியும் வைத்தேன். என்ன காரணத்தாலோ, தாமதம் ஏற்பட்டது.

1958ல் டாக்டர் சுப்பராயன் மத்திய அரசின் அஞ்சல் துறை அமைச்சரானதும், 4-1-59ல் த. அ. க. செயற்குழு கூடி மீண்டும் விண்ணப்பித்ததின் பேரில் திருவள்ளுவர் அஞ்சல் தலை வெளிவர மத்திய அஞ்சல் அமைச்சர் ஆணை பிறப்பித்தார். அது பற்றிக் கடிதம் மூலம் எனக்கும் தகவல் தந்ததுடன், திருவள்ளுவர் உருவத்தைத் தேர்ந்தெடுப்பதிலே தமக்கு நான் உதவிபுரிய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருந்தார். திரு. வேணுகோபால் என்பவர் ஒரு படத்தைத் தயாரித்து, அதற்கு தமிழ்நாட்டுத் தலைவர் பலருடைய ஆதரவைப் பெற்றார். யானும் அதற்கு ஆதரவளித்தேன். இறுதியில் அதுவே 15 காசுக்குரிய அஞ்சல் தலையில் போடப்பட்டு 15—2—60ல் வெளிவந்தது. இதனையடுத்து, டாக்டர் சுப்பராயன் அவர்கள் சி. சுப்பிரமணிய பாரதியார் திருவுருவங் கொண்ட 5 காசு அஞ்சல் தலைகளும் 11—9—60ல் வெளிவரச் செய்தார்.

### *அரசவைக் கவிஞர்*

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் அப்போது நம்மிடையே வாழ்ந்த கவிஞர்களைப் பெருமைப்படுத்துவதிலேயும் காங்கிரஸ் ஆட்சி கவனம் செலுத்தியது.

தமிழகத்தில் முடிமன்னர் ஆட்சி நடந்த காலத்திலே அவர்கள் அவைகளிலே அரசவைக் கவிஞர்கள் இருந்து வந்தனர். சிலப்பதிகாரத்தில் வரும் தண்டமிழ் ஆசான் சாத்தனார், சேரன் செங்குட்டுவனின் அரசவைக் கவிஞராக இருந்தார். கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர் ஆகிய கவியரசர்களும் புவியாண்ட சோழ மன்னர்களின் அரசவைக் கவிஞர்களாக இருந்திருக்கின்றனர். ஔவை மூதாட்டியாரும் தகடூர் மன்னன் அதியமானின் அரசவைக் கவிஞர் என்றே நம்பப்படுகின்றார். "அரசவைக் கவிஞர்" என்பது தமிழ்ப்

பெயர் வடமொழியில் "ஆஸ்தானக் கவிஞர்" என்பதாகும்.

தமிழ் நாடு மொழியாலும் நிறத்தாலும் அன்னியரான பிறநாட்டாருக்கு அடிமைப்பட்டுவிட்ட பிற்காலத்தில் இந்தப் பெருமையைக் கவிஞர் உலகம் இழந்திருந்தது. அதனைத் திரும்பவும் தமிழ்க் கவிஞர்களுக்கு வழங்க முனைந்தது திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார் தலைமையில் இயங்கிய காங்கிரஸ் ஆட்சி.

1948 செப்டம்பர் 11ல்–அதாவது, நாடு விடுதலை பெற்று ஒரு ஆண்டு முடிவதற்குள் எட்டயபுரத்தில் 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களால் நடத்தப்பட்ட பாரதி மண்டபத் திறப்பு விழாவிலே, "தமிழ்மொழிக் கவிஞர் ஒருவருக்கு 'அரசவைக் கவிஞர்' அந்தஸ்து சென்னை மாநில அரசால் வழங்கப்படும்" என்று முதல்வர் ரெட்டியார் பிரகடனம் செய்தார். இது, மிகுந்த கரகோஷத்துடன் மக்களால் வரவேற்கப் பெற்றது. இந்த விழாவிலே கவர்னர் ஜெனரல் ராஜாஜி அவர்கள் கலந்துகொண்டு, பாரதி மண்டபத்தைத் திறந்து வைத்தார் என்பதனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு பிரகடனம் செய்த ஆறு மாதங்களுக்குப் பின் —அதாவது, 1949 மார்ச்சு 22ல் தமிழ்மொழிக்காக நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் அரசவைக் கவிஞராக நியமிக்கப் பெற்றார்.

## சேய் மொழிகளுக்கும்...

அந்நாளில் தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளுக்குரிய பிரதேசங்களும் சென்னை மாநிலத்துடன் இணைந்திருந்தமையால், அந்த மொழிகளுக்கும், அவற்றுடன் சேர்த்து சம்ஸ்கிருத மொழிக்கும் அரசவைக் கவிஞர்கள் நியமிக்கப் பெற்றனர். அவர்கள் பெயர்கள் வருமாறு:

ஸ்ரீ. செல்லபில்ல வேங்கட சாஸ்திரி (தெலுங்கு), ஸ்ரீ. வள்ளத்தோல் நாராயண மேனன் (மலையாளம்), ஸ்ரீ. கோவிந்த பாய் (கன்னடம்), ஸ்ரீ. கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி (சம்ஸ்கிருதம்)

அரசவைக் கவிஞர்கள் ஐந்தாண்டு காலத்திற்கு மட்டுமே நியமிக்கப் பெற்றனர். இவர்களில் ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு ஆயிரம் ரூபாய் அரசால் சன்மானம் அளிக்கப் பெற்றது. ஐந்தாண்டுகளுக்குப் பின்னும் நாமக்கல் கவிஞரையே அவரது ஆயுள் காலம்வரை அரசவைக் கவிஞராக நியமிக்க வேண்டுமென்று தமிழ்ப் பிரமுகர் பலர் அரசுக்கு ஆலோசனை கூறினர். வேறு சில கவிஞர் பெயர்களும் பரிந்துரைக்கப் பெற்றது. இதிலுள்ள சிக்கலுக்கு அஞ்சி ஐந்தாண்டு காலத்தோடு அரசவைக் கவிஞர் நியமனம் தமிழ்நாட்டில் மட்டும் அரசால் கைவிடப்பட்டது.

## 'கல்கி'யின் பாராட்டு

அரசவைக் கவிஞர்கள் நியமனம் பற்றித் தமிழ் வளர்ச்சிக் கழகச் செயலாளர் 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தமது 'கல்கி'யில் எழுதிய குறிப்பு வருமாறு:

"சென்ற பத்து வருஷ காலத்தில் பல துறைகளில் சென்னை மாகாணம் முந்திக்கொண்டு பிற மாகாணங்களுக்கு வழிகாட்டியாக இருந்து வருகிறது. அந்தப் புகழை மேலும் நிலைநிறுத்தக் கூடிய காரியத்தை சென்னை சர்க்கார் சென்ற வாரத்தில் செய்திருக்கிறார்கள். சென்னை மாகாணத்தில் வழங்கும் முக்கிய பாஷை ஒவ்வொன்றுக்கும் அத்துடன் பாரத நாட்டின் ஆதி மொழியான சம்ஸ்கிருத பாஷைக்கும் சென்னை சர்க்கார் ஆஸ்தானக் கவிஞர்களை நியமித்திருக்கிறார்கள்.

"சுயராஜ்ய இந்தியாவில் முதல் ஆஸ்தானக் கவிஞர்களான ஐம்பெரும் புலவர்களையும் வாழ்த்திப் பாராட்டு

கிறோம். இந்த அருமையான நிகழ்ச்சியைக் குறித்து வசனத்தில் எவ்வளவு வாழ்த்துக் கூறினாலும் போதாது. கவி பாடி வாழ்த்துவதுதான் பொருத்தமாயிருக்கும். இதற்கு நமது ஆஸ்தானக் கவிஞர்களையே நாட வேண்டியவர்களாகிறோம்.

"ஆஸ்தானக் கவிஞர்கள் ஐவருக்கும் வணக்கம் கூறி, "அமருங்கள் பீடத்தில்" என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.''

['கல்கி', 27—3—49]

அரசவைக் கவிஞர் நியமனத்தின்போது, கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, பாவேந்தர் பாரதிதாசன் ஆகிய பெரும் கவிஞர்களின் பெயர்களும் ஆலோசிக்கப்பட்டன. அவர்களில் கவிமணியவர்கள் மன்னராட்சி நடந்த திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் குடிமகனாக இருந்தார். பாவேந்தர் வாழ்ந்த புதுவை அப்போது பிரெஞ்சுப் பிடியிலிருந்ததால் அவர் இந்தியக் குடிமகனாக இல்லை. இவர்களில் ஒருவரை சென்னை மாநிலத்தின் அரசவைக் கவிஞராக நியமிப்பதிலே சட்ட ரீதியான சிக்கல் இருந்தது.

# தமிழ் வாழவும் வளரவும் "தமிழரசு" கண்டோம்!

ஒரு செடி அல்லது கொடி வளர வேண்டுமானல், அதற்குக் கதிரவன் ஒளி இன்றியமையாது தேவைப்படுகின்றது. அதுபோல, ஒரு மொழி வளர்வதற்கும் சுதந்திரக் கதிரவன் ஒளி தேவைப்படுகின்றது. இதனை உணர்ந்தே, 'சுதந்திர தேவியின் துதி' என்னும் பாடலில்,

"தேவி!நின் னொளிபெருத
 தேயமோர் தேய மாமோ?
ஆவியங் குண்டோ! செம்மை
 அறிவுண்டோ? ஆக்க முண்டோ?
காவிய நூல்கள் ஞானக்
 கலைகள் வேதங்க ளுண்டோ?
பாவிய ரன்ரே நின்றன்
 பாலனம் படைத்தி லாதார்?"

என்று பாரதியார் பாடினர்.

## தமிழ் வளரத் தடை!

1947 ஆகஸ்டு 15ல் பாரதப் பெருநாடு முழுவதும் சுதந்திரம் பெற்றுவிட்ட தென்றலும், தமிழ்—தெலுங்கு—மலையாளம்—கன்னடம்—மராத்தி — வங்காளம் — இந்தி ஆகிய மொழிகள் வளர்வதற்கு அது மட்டுமே போதுமானதாக இல்லை. மாநிலங்கள் மொழி அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்டு, அந்தந்த மாநிலத்தில் அதனதன் மொழியையே அரசு அலுவலங்களில் ஆட்சி மொழியாகவும், கல்வி நிலையங்களில் போதனை மொழியாகவும், நீதி மன்றங்களில்

நிர்வாக மொழியாகவும் ஆக்க வேண்டியிருந்தது. சுருங்கச் சொன்னால், பிரதேச மொழிகள் வளர்வதற்குப் பன்மொழி ராஜ்யங்கள் தடையாக இருந்தன. ஆம்; நாட்டில் சுதந்திரக் கதிரவன் தோன்றிய பின்னரும் அந்தக் கதிரவனின் ஒளி பிரதேச மொழிகள்மீது படாதபடி பன்மொழி ராஜ்யங்கள் தடுத்து வந்தன எனலாம்.

## *காங்கிரசின் முயற்சி*

இந்த உண்மையை முதன் முதலில் உணர்ந்து, சுதந்திரம் வருவதற்கு முன்பே மொழிவாரி ராஜ்யக் கோரிக்கையை வற்புறுத்தியது காங்கிரஸ் மகாசபை. அதற்கு முன்னோடியாக 1920ல் காங்கிரஸ் மாகாணங்களை மொழிவாரி திருத்தியமைத்தது இதற்கு லோகமான்ய திலகரும் காந்தியடிகளும் காரணமாவர்.

காங்கிரஸ் மகாசபை வற்புறுத்தியதன் பேரில்தான் வடபுலத்தில் கல்கத்தா மாகாணத்திலிருந்து அஸ்ஸாம், ஒரிசா ஆகிய பிரதேசங்களைத் தனித்தனி ராஜ்யங்களாகப் பிரித்து, எஞ்சிய கல்கத்தாவை "வங்காள ராஜ்யம்" ஆக்கியது பிரிட்டிஷ் அரசு. ஆனால், தெற்கே தமிழகம், ஆந்திரம், மலபார் (மலையாளம்), தென் கன்னடம் ஆகிய நான்கு மொழிப் பிரதேசங்கள் கொண்ட சென்னை ராஜ்யத்தை மட்டும் மொழிவாரி பிரிக்க பிடிவாதமாக மறுத்து வந்தது பிரிட்டிஷ் அரசு.

## *"திராவிட அரசு!"*

இந்தியா விடுதலை பெற்ற பின்னர், சென்னை மாநிலத்தை மொழிவாரி ராஜ்யங்களாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை வலுத்தது. இதிலே ஆந்திரர்களே முன்னோடிகளாகத் திகழ்ந்தனர். "ஆந்திர ராஜ்யம் காவால" என்று ஆந்திரர் அனைவரும் கட்சி வேறுபாடின்றி ஒருமனப்பட்டுக் கோஷித்தனர். ஆனால், தமிழ் நாட்டிலே "தமிழ் ராஜ்யம

வேண்டும்'' எனக் கோருவோர் இல்லை. மாறாக, தமிழகம்—ஆந்திரம்—கேரளம்—கர்னாடகம் ஆகிய நான்கு பிரதேசங்களும் இணைந்த தனி ராஜ்யம்—அதாவது. ''திராவிட நாடு'' இங்குள்ள ஒரு சாராரால் கோரப்பட்டது. அது எஞ்சிய இந்தியாவிலிருந்து பிரிந்து சுதந்திர ராஜ்யமாக இருக்க வேண்டுமென்றும் கூறப்பட்டது.

இந்தியா முழுவதற்குமாக சுதந்திரம் கோரி நடந்த கிளர்ச்சியை முழு மூச்சுடன் எதிர்த்துக் கொண்டே—இந்தியாவின் மீது ஆதிக்கஞ் செலுத்திய அன்னியரான ஆங்கிலேயரை ஆதரித்துக் கொண்டே—திராவிட நாட்டுக்குச் சுதந்திரம் கோரினர் திராவிட இயக்கத்தார். இதனை, இந்திய சுதந்திரக் கிளர்ச்சிக்கு எதிர்க் கிளர்ச்சியாகத் தவிர, உண்மையில் திராவிட நாட்டுக்குச் சுதந்திரம் தேடும் இயக்கமாக அந்நாளில் தேச பக்தர்கள் மதிக்கவில்லை.

## தமிழரிடை பிளவு!

திராவிடத் தனி நாட்டுக் கோரிக்கைக்கு தமிழ் நாட்டுக்கு வெளியே ஆதரவு கிடைக்கவில்லை. தமிழ் நாட்டிலேயும் ''பிராமணரல்லாதார்'' என்று தங்களைக் கூறிக் கொள்வதிலே மகிழ்ச்சியடைவோர்தான் ''திராவிடர்'' என்றும் கூறிக்கொண்டு, தனித் திராவிடநாடு கோரினர். இதன் மூலம் ''தமிழர்'' என்ற இன உணர்வை மழுங்கடிக்க முயன்றனர். இந்தப் போக்கானது, மொழிவழி ராஜ்யம் கோரி ஆந்திரரெல்லாம் ஓரணியில் திரண்டு நின்ற நேரத்திலே, தமிழ் இனத்தவரைப் பிளவுபடுத்தியது. ''தமிழர் யார்?'' என்ற வினாவை எழுப்பி, அது காரணமாக ஒரு சர்ச்சையைத் தோற்றுவித்தது. இதையொட்டி வாதப் போர்கள் நிகழ்ந்தது.

## தேசியத் தமிழர் நிலை

திராவிடத் தனி நாட்டுக் கோரிக்கையை ஏற்காத தேசியத் தமிழர்களும் மொழிவாரி ராஜ்யக் கோரிக்கையின்

அடிப்படையில் "தமிழ் ராஜ்யம்" கோரினரல்லை. அவர்கள் குட்டித் திராவிடமாக விளங்கிய அன்றைய சென்னை ராஜ்யத்தை நீட்டிக்கச் செய்யவே விரும்பினர். தேச பக்தர்களிலும் தமிழ் அறிஞர்களிலும் இங்குமங்குமாக சிற்சிலரே தமிழ் ராஜ்யம் விரும்புவோராக இருந்தனர். அவர்கள்கூட ஒரு அமைப்பைத் தோற்றுவித்து ஒன்றுபட்டுச் செயலாற்ற முனைந்தார்களில்லை.

தமிழகத்தில் நிலவிய இந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு, கேரளர்கள், தமிழ் வழங்கும் தென் திருவிதாங்கூர். தங்களுக்கே உரியதென முடிவு செய்து கொண்டவர்களாகி, அதற்கு மேல் திருநெல்வேலி—கோவை—நீலகிரி மாவட்டங்களும் இணைந்த "ஐக்கிய கேரளம்" வேண்டுமெனக் கோரினர். ஆம்; பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தி லிருந்து இந்தியாவை விடுவிக்க காங்கிரஸ் நடத்திய போரிலே தமிழருடன் இணைந்திருந்த கேரள தேச பக்தர்கள், தமிழ் மாவட்டங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டு, "கேரள சாம்ராஜ்யம்" படைக்க முயன்றனர்.

அப்படியே, ஆந்திரர்களும், சித்தூர் மாவட்டத்தில் திருப்பதிக்குத் தெற்கேயுள்ள தமிழ்த் தாலுக்காக்களைத் தங்களுடையவையாகவே கருதிக்கொண்டு, அதற்கு மேல் சேலம்—வடாற்காடு—செங்கற்பட்டு ஆகிய தமிழ் மாவட்டங்களின் எல்லையோரப் பகுதிகளையும் கோரியதோடு, சென்னை நகரையும் தங்கள் உடைமையாக்கிக் கொள்ள விரும்பி, "மதறாஸ் மனதே" என்று கோஷித்தனர். இந்த அடிப்படையில் காண விரும்பிய ஆந்திர சாம்ராஜ்யத்திற்கு அவர்கள் 'விசாலாந்திரம்' என்று பெயர் தந்தனர்.

## த. அ. க. பிறந்தது!

உண்மையில் தத்தம் மொழியையும் அம்மொழிவழிப் பட்ட கலைகளையும் வளர்த்துக்கொள்ள ஒவ்வொரு மொழி

யினருக்கும் தனித்தனி ராஜ்யம் தேவைப்பட்டது. இதை அடிப்படையாக்கிக்கொண்டு பிற மொழியினரின் பிரதேசங்களையும் ஆக்கிரமிக்கும் சாம்ராஜ்ய வெறிப்போக்கை ஆந்திரரும் கேரளரும் வெளிப்படுத்தினர். தமிழர் மட்டுமே இந்த வெறித்தனத்துக்கு விலக்காக இருந்தனர் என்பது பெருமைக்குரிய விஷயந்தான். ஆனால், அவர்கள், தற்காப்புக்காக வேனும் பிரதேசவுணர்வுடன் செயல்படாதது தமிழகத்திற்குக் கேடாக முடியும்போல் இருந்தது.

இந்த நேரத்தில்தான் நான் "தமிழரசுக் கழகத்''தைத் தோற்றுவித்தேன்.

இந்தக் கழகத்தின் குறிக்கோள் மொழிவாரி ராஜ்ய அடிப்படையில் ''தமிழ் அரசு'' அமைப்பதும்; அதன் தெற்கெல்லை குமரி முனையாகவும், வடக்கெல்லை வேங்கடமாகவும், தலைநகர் சென்னையாகவும் இருக்கப் பாடுபடுவதும் என்று பிரகடனம் செய்யப்பட்டது.

*தார் கமிஷன் நியமனம்*

தமிழரசுக்கழகம் தொடர்ந்து மாநாடுகள், பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள், பிரசுரங்கள் மூலமாக தமிழ் மாநிலக் கோரிக்கையை வலியுறுத்தி வந்தது. வேறு அரசியல் சார்பற்ற பொது மாநாடுகளிலும் இந்தக் கோரிக்கைக்கு ஆதரவு தரப்பட்டது. நாளடைவில் தமிழ் நாடு காங்கிரசின் ஆதரவும் கிடைக்கலானது. ஆம்; அதன் மாநில மாநாடுகளிலே தீர்மான வடிவில் மத்திய அரசுக்குக் கோரிக்கை விடப்பட்டது.

தமிழ் எழுத்தாளர் மாநாடு, தமிழ் வளர்ச்சிக் கழகம் நடத்திய தமிழ் விழா ஆகியவற்றிலேயும் தீர்மான வடிவில் ஆதரவு தெரிவிக்கப்பட்டது. சுருங்கச் சொன்னால், மொழிவாரி மாநிலக் கோரிக்கைக்குத் தமிழகத்திலும் ஆதரவு வளர்ந்தது; வலுத்தது.

அதன் பேரில் மத்திய அரசு 1947ல் நீதிபதி தார் என்பார் தலைமையில் ''மொழிவாரி மாகாணக் கமிஷன்'' என்ற பெயரில் ஒரு கமிஷன் நியமித்தது, அந்தக் கமிஷனை ஓராண்டுக்கு மேலாக அனைத்து மாநிலங்களுக்கும் சென்று விசாரணை நடத்தி, பின்னர் 1948 டிசம்பரில் மொழிவாரி மாநில அரசு கோரிக்கை அவசியமற்ற தென்றும், அவசியமென்றாலும் அவசரமற்றதென்றும் பரிந்துரை தந்தது. அதனால் மொழி வாரி மாகாணப் பிரிவினை தள்ளிப்போடப்பட்டது.

## ஆந்திரம் பிரிந்தது

இதன் பின்னரும் மொழிவாரி மாநிலக் கோரிக்கை நீடித்தது. குறிப்பாக, ஆந்திர மாநிலக் கோரிக்கை ஒரு பெருங் கிளர்ச்சியாக மாறியது. 1952ல் பொட்டி சீராமுலு என்ற ஆந்திர தேச பக்தர் சென்னையைத் தலைநகராகக் கொண்ட ஆந்திர மாநிலம் கோரி சென்னை நகரில் உண்ணு விரத மிருந்தார். அப்போது சென்னை ராஜ்ய முதல்வராக இருந்த மூதறிஞர் ராஜாஜி அவர்கள், சென்னை நகரம் இல்லாத ஆந்திர ராஜ்யத்தை அமைப்பதற்கு ஆதரவு தெரிவித்து பிரதமர் ஜவகர்லால் நேருவுக்குக் கடிதம் எழுதினார். அது பயன்படவில்லை. துரதிர்ஷ்டவசமாக, உண்ணுவிரதி பொட்டி சீராமுலு உயிர் நீத்தார். அதன் விளைவாக, ஆந்திர நாடெங்கணும் கலகம் ஏற்பட்டது. ரெயில்களுக்குத் தீ வைத்தல், அரசாங்க சொத்துக்களை சேதப்படுத்தல் போன்ற நாச வேலைகள் பரவலாக நடந்தன. இதனால், பிரதமர் நேரு, அவசரம் அவசரமாக 1958 அக்டோபர் முதல் தேதியன்று ஆந்திரராஜ்யம் அமைக்கப்படுமென்று அறிக்கை விடுத்தார். அதன் பின்னர், ஆந்திராவில் கலவரங்கள் அடங்கின. தமிழகம்—ஆந்திர மாநிலங்களுக்கிடையிலான எல்லைத் தகராறுகளைத் தீர்க்க கமிஷன் அல்லது கமிஷன்கள் அமைக்கப்படும் என்று நேருஜி உறுதி கூறினார்.

அறிவித்தபடி 1—10—53ல் ஆந்திரப் பிரதேசம் சென்னை ராஜ்யத்திலிருந்து பிரிக்கப்பட்டு தனி ராஜ்யம் ஆக்கப் பட்டது.

ஆந்திரம் பிரிந்து போன பின்னர் தமிழ் மொழி வளர்வதற்கு வழி பிறந்தது. ஆனால், "எஞ்சிய சென்னை ராஜ்யம்" "தமிழ் நாடு" ஆகவில்லை. அதில், மலையாளம் வழங்கும் மலபார் மாவட்டமும், கன்னட மொழி வழங்கும் தென் கன்னட மாவட்டமும் இருந்து வந்தன. அவற்றையும் பிரித்துவிட்டு, தமிழரசு அமைக்க வேண்டுமென்று தொடர்ந்து தமிழரசுக் கழகம் கிளர்ச்சி நடத்தியது. கேரளரும் கன்னடியரும்கூடக் கிளர்ந்தெழுந்தனர். மராத்தி, குஜராத்தி மாநிலங்கள் கோரும் கிளர்ச்சிகளும் வலுத்தன. அதனால், 1955ல் நீதிபதி பஸல் அலி என்பவர் தலைமையில் திரு. பணிக்கர், திரு. குன்ஸ்ரு ஆகிய மூவர்கொண்ட கமிஷன் மத்திய அரசால் நியமிக்கப்பட்டு, அதற்கு "ராஜ்யப் புனரமைப்புக் கமிஷன்" என்று பெயர் தரப்பட்டது.

இதற்கிடையில், தென் திருவிதாங்கூரில் தமிழர் நடத்தி வந்த எல்லைக் கிளர்ச்சி வலுப்பெற்று, அதனால் கலகம் ஏற்பட்டு, மலையாள போலீசார் செய்த துப்பாக்கிப் பிரயோகத்தால், தமிழர் பலர் உயிர் நீத்தனர். பொதுவாக, 1946 தொடங்கி 1955 வரை நடைபெற்ற தெற்கெல்லைக் கிளர்ச்சியிலே 15க்கு மேற்பட்டவர்கள் துப்பாக்கிச் சூடு காரணமாக உயிர் நீத்தனர். அவர்களிலே தேவசகாயம், செல்லையா ஆகிய இருவரும் முக்கியமானவர்களாவர். தமிழரசுக் கழகத்தின் பேராதரவோடு திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் தெற்கெல்லைக் கிளர்ச்சியை நடத்தி வந்தது.

## *புதிய தமிழகம் பூத்தது!*

பஸல் அலி கமிஷன் விரிவாக விசாரணை நடத்திய பின்னர், ராஜ்யங்களை மொழிவாரிபிரிக்குமாறு பரிந்துரைத்தது. ராஜ்யங்களிடையிலான எல்லைகள் பற்றிய தகராறுகளைத் தீர்க்கவும் வழிவகுத்தது. சென்னை மாநகரமும் தமிழ்மாவட்டங்களும், திருவிதாங்கூர்சமஸ்தானத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு ஆகிய தாலுக்காக்கள் அடங்கிய புதிய கன்னியாகுமரி மாவட்டமும் கொண்ட தனியரசுத் தமிழ்

மாநிலம் நிறுவப் பரிந்துரை தந்தது. இத்துடன் திருவிதாங்கூரிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட செங்கோட்டை தாலுக்காவும் தமிழ் நாட்டுடன் இணைக்கப்படுவதற்குப் பரிந்துரைத்தது.

பஸல் அலி கமிஷன் அறிக்கையில் செய்யப்பட்டிருந்த எல்லை மாறுதல்களை எதிர்த்து நாடெங்கணும் மாகாண உணர்ச்சியுடன் கிளர்ச்சிகளும் கலவரங்களும் தோன்றின. அதனை ஒடுக்க துப்பாக்கிச் சூடுகள் நடைபெற்றன. மராத்தியர்—குஜராத்தியருக்கிடையே பம்பாய் நகரம் பற்றித் தோன்றிய போராட்டத்தில் அராஜகம் தலைவிரித்தாடியது. இதனால் பஸல் அலி கமிஷன் பரிந்துரைத்த மொழிவாரி மாகாண அமைப்பைக் கைவிட்டு இந்தியாவை ஐந்துமாநிலங்களாக அமைக்க மத்திய அரசு முன் வந்தது. அதன்படி, தெற்கே 'தட்சிணப் பிரதேசம்' அமைக்கத் திட்டமிடப்பட்டது. இதனை எதிர்த்து தமிழரசுக் கழகம் நடத்திய 15 நாள் போராட்டத்தில் கழகத் தோழர்கள் பல்லாயிரவர் சிறைப்பட்டனர்.

பின்னர் 1956 பிப்ரவரி 20ல் தட்சிணப் பிரதேசத் திட்டத்திற்கெதிராக தமிழ் நாடெங்கணும் கடையடைப்பு நடத்தப் பெற்றது. இதில், தமிழரசுக் கழகம், தி. மு. க. கம்யூனிஸ்டு ஆகிய கட்சிகள் முன்னணியில் நின்றன. இதனால் தட்சிணப்பிரதேசத் திட்டம் கைவிடப்பட்டது.

திரு. பஸல் அலி கமிஷன் தந்த பரிந்துரையை மத்திய அரசு சில திருத்தங்களுடன் நடைமுறைக்குக் கொண்டு வந்தது. ஆம்; 1956 நவம்பர் 1 ஆம் தேதியன்று இந்திய ராஜ்யங்களில் பெரும்பாலானவை மொழிவாரி திருத்தியமைக்கப்பட்டன.

1946 முதல் தமிழரசுக் கழகம் நேரில் பொறுப்பேற்று நடத்தி வந்த வடக்கெல்லைக் கிளர்ச்சியில் தமிழ்நாடு, ஆந்திர ராஜ்யங்களிடையே சமரசமாகப் பேசித் தீர்த்துக் கொள்வ

தென்ற உடன்பாடு ஏற்பட்டிருந்ததால், அதிலே பஸல் அலி கமிஷன் தலையிடவில்லை.

விடுதலைக்குப் பின் தமிழ் வளர்ந்த வரலாற்றைக் கூறும் போது, தமிழை வளர்ப்பதற்கிருந்த தடைகளையும், அந்தத் தடைகளை அகற்றுவதற்காக அன்றைய ஆட்சியாளர் ஏற்றுக் கொண்ட தொல்லைகளையும் நினைவூட்டவே இவ்வளவையும் கூறினேன். நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் ஏற்பட்ட புரட்சிகரமான மாறுதல், ராஜ்யங்களை மொழிவாரி திருத்தியமைத்ததாகும். இதனால், தமிழரசுக் கழகத்தின் நெடு நாளைய கோரிக்கை நிறைவேறியதெனலாம். கழகம், தமிழரசு அமைந்த நாளில் மயிலாப்பூர் ரசிக ரஞ்சினி சபையில் பெரு விழாக் கொண்டாடியது. அந்த நாள் தீபாவளிப் பண்டிகை நாளாகவும் இருந்தது.

## கமிஷன்களின் கருத்து

ராஜ்யங்கள் மொழிவாரி அமைந்தால் மட்டுமே மொழிகளும் கலைகளும் கலாசாரமும் வளர முடியுமென்பதும், பாமர மக்கள் அரசியல் ரீதியாக விழிப்பும் விவேகமும் பெற முடியுமென்பதும்பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே அடிக்கடி ஒப்புக் கொள்ளப்பட்டு வந்தது. இதோ சான்று:

"ஒரு மாநிலம் கல்வியில் முன்னேற்றமடைந்து தனது சொந்த மொழியிலேயே தன் அன்றாட வேலையைக் கவனிக்க வேண்டுமானால் அது ஒருமொழிப் பிரதேசமாக இருக்கவேண்டியது அவசியமாகும். அது ஒரு பன்மொழிப் பிரதேசமாக இருக்க நேர்ந்தால், தொடர்ந்து கஷ்டங்கள் ஏற்படுவதுடன் போதனா மொழியும் நிர்வாகம் நடப்பதற்கான மொழியும் இரண்டு அல்லது இன்னும் பல மொழிகளாகவும் இருக்கும்.

"ஆகவே, மாநிலங்களை மொழி அடிப்படையில் அமைப்பது விரும்பத்தக்கதாகிறது. ஒரு மொழி என்றாலே, அதற்கெனத் தனிப்பட்ட கலாசாரம், பாரம்பரியம், இலக்கியம் ஆகியவை இருக்கும். மொழிவழி மாநிலமொன்றில் இந்த

விஷயங்களெல்லாம் அந்த மாநிலத்தின் பொது வளர்ச்சிக்கு உதவிகரமாக இருக்கும்,"

இது, 1928ல் சர்வகட்சி மாநாட்டில் மோதிலால் நேரு கமிட்டி சமர்ப்பித்த அறிக்கையில் பக். 62ல் கூறப்பட்டுள்ளதாகும்

1953 டிசம்பரில் மத்திய அரசால் நியமிக்கப்பட்ட ராஜ்யப் புனரமைப்புக் கமிஷன் தயாரித்த அறிக்கையில் பக். 42ல் கீழ் வருமாறு கூறப்பட்டுள்ளது:

"வயது வந்தவர் எல்லோருக்கும் வாக்குரிமை அளிக்கும் அடிப்படையில் இந்தியாவில் நமக்கிருப்பதைப் போன்ற ஜனநாயகத்தில் ராஜ்யத்தின் அரசியல் வேலையும் நிர்வாகமும் பிரதேச மொழியிலேயே நடைபெற வேண்டியிருக்கிறது.

"ஏற்கெனவே சில ராஜ்யங்களின் சட்ட மன்றங்களிலுள்ள உறுப்பினர்களில் பெரும்பாலானவர்களுக்கு ஒரே ஒரு மொழிதான் தெரியும் என்றும், இந்தப் போக்கு நாளடைவில் வலுவடையக் கூடுமென்றும் எடுத்துக் காட்டப்படுகிறது சில ராஜ்யங்களில் அமைச்சர்களுக்கே ஒரே ஒரு மொழிதான் தெரியும். ஏராளமான உறுப்பினர் சட்டமன்றங்களில் நடக்கும் நடவடிக்கைகளைப் புரிந்துகொள்ள முடியாவிட்டால் அங்கே விவாதம் நடப்பது கஷ்டமாகிவிடலாம்.

"ஒரு ராஜ்யத்தின் சட்ட மன்றத்தில் பற்பல மொழிகளிலும் பேசும் குழப்ப இல்லாமலிருக்கவேண்டுமென்றால், அது தன் நடவடிக்கைகளை ஒரே மொழியில்—அதாவது மக்கள் மொழியில் நடத்த வேண்டும்."

மொழி அடிப்படையில் தமிழரசு அமைந்ததானது, தமிழகத்தின் வரலாறு காணாத புதுமையாகும். தமிழகம் சேர, சோழ, பாண்டிய, தொண்டை மண்டலங்களாகப் பிரிந்து கிடந்த அடிப்படையிலேயே தமிழினத்தின் அரசியல் வரலாறு அமைந்துள்ளது. எப்போதோ சில சந்தர்ப்பங்

களில் தமிழ் நாடு முழுவதும் ஒரே ஆட்சியின் கீழ் இருந்த துண்டு என்றாலும், அது 'சோழ சாம்ராஜ்யம்' என்றோ, பாண்டிய சாம்ராஜ்யம்' என்றோ, 'பல்லவ சாம்ராஜ்யம்' என்றோதான் அழைக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு மாறாக, தமிழகத்தின் வரலாற்றில் முதன் முதலாகத் தமிழ் வழங்கும் நிலப் பரப்பு முழுவதும் ஒரே அரசாக—"தமிழ் அரசு": ஆக, வயதுவந்த வாக்காளர் அமைத்த அரசாக 1956 நவம்பர் 1ல் தான் அமைந்தது. இந்தச் சாதனையிலே தமிழரசுக் கழகத்துக்குப் பெரும்பங்கு உண்டு என்பதை நினைக்கும்போது, என் மனம் பெருமித மடைகின்றது.

இதற்குப் பின், தமிழ் வளர்ச்சிப்பணியில் முன்னைவிடவும் அதிக தீவிரங்காட்டியது தமிழக அரசு.

# அரியாசனத்தில் தமிழன்னை !

தமிழ் நாடு தனியரசு மாநிலமாகி ஏழே வாரங்களுக்குள் —அதாவது, 18-12-56 ல் தமிழக சட்டப் பேரவையில் 1957—58 ஆம் ஆண்டுக்கான குறுகியகால வரவு—செலவுத் திட்டம் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டது. அதுவரை ஆங்கிலத்திலேயே வரவு—செலவுத் திட்டம் தயாரித்துச் சமர்ப்பிப்பது வழக்கமாக இருந்து வந்தது. அதற்கு மாறாக, முதன் முதலாகத் தமிழில் தயாரித்து சமர்ப்பிக்கப் பட்டது. நிதியமைச்சர் மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம், நிதி நிலை அறிக்கையையும் தமிழிலேயே தயாரித்துப் படித்தார். இந்த மாறுதலை சட்டப் பேரவை உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

## தமிழ் ஆட்சி மொழிச் சட்டம்

பேரவையில் வழக்கமாக ஆங்கிலத்தில் பேசிவந்த உறுப்பினர்களும், முதன் முதலாகத் தமிழில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு—செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தின்போது தமிழிலேயே பேசினர். ராஜா சர் முத்தைய செட்டியார் அவர்கள், வழக்கம் காரணமாக, சூழ்நிலை மாறியிருப்பதை மறந்து, ஆங்கிலத்தில் பேச முற்பட்டபோது, உறுப்பினர்களிலே சிலர் குறுக்கிட்டுத் தமிழிலே பேசுமாறு வற்புறுத்தினர். இயற்கையாகவே தமிழ் வளர்ச்சியில் ஆர்வங்காட்டி உழைத்து வரும் அப்பெரியார், தமிழிலே பேசலானார். தமிழில் பட்ஜெட் சமர்ப்பிக்கப் பட்டதை யடுத்து, 26-12-57-ல் சட்டப் பேரவை கூடியபோது, அறிக்கைகளும் குறிப்புகளும் தமிழிலேயே தயாரிக்கப்பட்டு அவையில் வைக்கப்பட்டன.

தமிழகத்தில் தமிழ் அரசு அமைந்த இரண்டே திங்களுக்குள்—அதாவது, 27-12-56-ல் தமிழை ஆட்சி மொழியாக்கும் மசோதா ஒன்றை சட்டப் பேரவையில் கொண்டு வந்தது காங்கிரஸ் ஆட்சி. இதைக் கொண்டு வருவதில் சட்ட அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் மிகுந்த ஆர்வங் காட்டினர்.

தமிழகத்தில் தமிழை ஆட்சி மொழியாக்கியதிலே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு செய்தி உண்டு. பிற்காலச் சோழர் ஆட்சி மறைந்த பின்னர் தமிழகத்தில் தோன்றிய நாயக்க மன்னர்கள் ஆட்சிக் காலத்திலே தெலுங்கும், நவாபுகள் ஆட்சிக் காலத்திலே உருது—அரபு மொழிகளும் ஆட்சியிலே செல்வாக்கு செலுத்தின இரண்டாந்தரமான மொழியாகவே தமிழ் பயன்படுத்தப் பட்டு வந்தது. ஆங்கிலேயர் ஆண்ட 200 ஆண்டு காலத்திலே ஆங்கிலம் ஒன்றே ஆட்சியில் துறைதோறும் ஆதிக்கம் செலுத்தியது.

இப்படி, தொடர்ந்து பல நூற்றுண்டுக் காலம் ஆட்சித் துறையில் புறக்கணிக்கப் பட்டிருந்த தமிழ் மொழியானது தமிழகம் தனியரசு மாநிலமாக ஆனபின்னர்தான் திரும்பவும் ஆட்சி மொழியாக வரும் வாய்ப்பினை முதன் முதலாகப் பெற்றது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாறுதலைச் செய்யும் பேறும் பெருமையும் காங்கிரஸ் ஆட்சிக்கே கிடைத்தது. ஆம்; மொழிவாரி மாநில அமைப்பு அமுலுக்கு வந்த பின்னர் கொஞ்சமும் காலந் தாழ்த்தாமல் தமிழ் அன்னையை அரியணையில் அமர்த்துவதில் காங்கிரஸ் ஆட்சி அக்கறை காட்டியது.

### திரு. சி. சு. வின் பெருமிதம்!

1956 டிசம்பர் 27 ஆம் தேதியன்று கூடிய தமிழக சட்டப் பேரவைக் கூட்டத்திலே "தமிழ் ஆட்சி மொழி மசோதா"வை சட்ட அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் பிரேரேபித்தார். அவர் மசோதாவைப் பிரேரேபித்துத்

தமிழில் பேசத் தொடங்கியபோது சட்ட மன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து அதனை வரவேற்றனர். ஆம்; வேறு மசோதாக்களைப் போல அல்லாமல் இந்த மசோதாவானது சட்ட அமைச்சரால் பிரேரேபிக்கப்பட்டபோதே சட்டமன்ற உறுப்பினர்களின் ஒருமித்த ஆதரவைப் பெற்று விட்டது. மசோதாவை எதிர்ப்போரே இல்லை. யாரும் முணுமுணுக்கக் கூட இல்லை. பார்லிமெண்டரி மரபுப்படி சில மசோதாக்கள் பொது மக்கள் கருத்தறிய அனுப்பப்பட வேண்டுமென்றும், செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு விடப்பட வேண்டுமென்றும் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியினரிட மிருந்து கோரிக்கை எழுவது உண்டு. இந்த மசோதா மீது யாரும் அப்படிப்பட்ட கோரிக்கையை எழுப்பவில்லை. சட்ட அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் தமிழ் ஆட்சி மொழி மசோதாவைப் பிரேரேபித்து முன்னுரையாகப் பேசியதில் ஒரு பகுதி வருமாறு:

"இந்த மசோதாவை இந்தச் சபை முன்பு பிரேரேபிப்பது நிர்வாகத் துறையிலேயே மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சி என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். நிர்வாகத் துறையிலே இது ஒரு முக்கியமான நிகழ்ச்சி என்று சொல்லும்பொழுது, அந்தத் துறைக்கு மட்டும் உரித்தானது அல்ல. இது மற்ற சூழ்நிலைக் கேற்ப நிர்வாகத்திலும் செய்யக்கூடிய ஒரு மாறுதல் என்பதைத் தான் நாம் நன்றாக உணர்ந்து கொள்ளவேண்டும்.

"ஒரு பூ மலர்கின்றது; அது மலர்கின்ற நிகழ்ச்சி நம் எல்லோருக்கும் மகிழ்வைக் கொடுக்கின்றது. அம்மலர்ச்சி ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி அல்ல. செடி வளர்ந்து, பிறகு அரும்பு விட்டு, போதாகி, அது மலர்கிறது. அது மலர்வதோடு நின்று விடுவதில்லை. அதில் காய் ஏற்பட்டு, அது பழுத்து மக்களுக்கு உதவுகிறது.

"அதே மாதிரிதான் தமிழ் மலர்கிறது என்றால், அது தனிப்பட்ட நிகழ்ச்சி அல்ல. நம் நாட்டிலே இந்த 50, 60

வருஷ காலமாக நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் ஒரு பலனாக இன்றைக்கு ஒரு செடியிலே ஒரு பூ மலர்கின்றது. இதிலும் நல்ல காயும் கனியும் ஏற்பட்டு, மக்களுக்குப் பலனளிக்கக்கூடிய நல்ல முறையிலே இது இன்னும் நன்றாக வளர்ச்சியடையும் என்பதில் எந்தவிதமான .சந்தேகமும் கிடையாது. ஆகையினால் நம்முடைய அரசாங்க மொழி தமிழாக இருக்கும் என்று பிரகடனம் செய்வதிலே, நாம் ஒரு பெரிய முன்னேற்றப் பாதையிலே ஒரு அடியை எடுத்து வைத்திருக்கிறோம்''

## முடிசூட்டும் விழா!

மசோதாவைப் பிரேரேபித்து முன்னுரையாகப் பேசிய சட்ட அமைச்சர், தனது முன்னுரையின் முடிவிலே சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கீழ் வருமாறு வேண்டுகோள் விடுத்தார்:

"இந்த மசோதாவை இப்போது சபை முன்பு சமர்ப்பிக்கிறேன். என்னுடைய விருப்பம் என்னவென்றால், ஏதோ சாதாரண மசோதாவைக் கவனிக்கும்போது இருப்பது போல சபையில் 10 அல்லது 20 அங்கத்தினர்கள் இருக்கக் கூடிய நிலைமை இல்லாமல் சபையின் எல்லா அங்கத்தினர்களும் இதை ஒரு விழா போலக் கருதி, கடைசி வரையில் இருந்தது, தமிழன்னையின் முடிசூட்டு விழாவில் எல்லோரும் பங்கெடுத்துக் கொண்டு இந்த மசோதாவை நிறைவேற்றி விட்டு, இது நாம் கடைசியிலே செய்த ஒரு மகத்தான காரியம் என்ற பெருமையுடன் எல்லோரும் இந்தச் சபையிலிருந்து கலைவோமாக! (பலத்த ஆரவாரம்)."

தமிழ் ஆட்சி மொழி மசோதாவானது சட்ட மன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது தமிழரசுக் கழகத்தின் ஆதரவாளராக திரு. கே. விநாயகம் அதில் அங்கம் வகித்தார். அவர், தமிழ் ஆட்சி மொழி மசோதாவை மனநிறைவுடன் வரவேற்றாரென்றாலும், ஆட்சி மொழியாக இருந்து வரும்

ஆங்கிலத்தை அகற்றுவதற்கு ஒரு கால வரம்பை ஏற்படுத்தும் விதியை மசோதாவில் சேர்க்கவேண்டும் என்று ஒரு திருத்தம் கொடுத்தார். தமிழரசுக் கழகத்தின் ஆலோசனையின் பேரிலேயே அவர் அந்தத் திருத்தத்தைப் பிரேரேபித்தார். தமிழை ஆட்சி மொழியாக்கி முடிப்பதற்கான கால வரம்பை நிர்வாக ரீதியில் அரசே ஏற்படுத்தும் என்று சட்ட அமைச்சர் உறுதி கூறினார். அதன் பேரில் திரு. கே விநாயகம் தமது திருத்தத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்.

தமிழ் ஆட்சி மொழி மசோதா மீது சரியாக இரண்டரை மணி நேரம் விவாதம் நடைபெற்றது. 31 பேர் விவாதத்தில் பங்கு பெற்றனர். அவர்களில் முக்கியமானவர்கள் பெயர்கள் வருமாறு:

திருவாளர்கள் ராமநாதபுரம் இராசேசுவர சேதுபதி (பொதுப்பணித்துறை அமைச்சர்), ப. ஜீவானந்தம், பி. ராமமூர்த்தி, எம். கல்யாணசுந்தரம், உ. முத்துராமலிங்கத் தேவர், நெல்லை எஸ். எம். சோமயாசுலு, கோவை பி. ஜி. கருத்திருமன், செல்லத்துரை.

இவர்கள் அனைவருமே தமிழ் ஆட்சி மொழி மசோதா மீது நடந்த விவாதத்தில் மிகுந்த உற்சாகத்துடன் பங்கு கொண்டனர். தமிழகத்தின் முதுபெரும் அரசியல் வாதியான திரு. பி. டி. ராசன் அவர்களும் மசோதாவை ஆதரித்துப் பேசினார்.

''தமிழ் வாழ்க!''

விவாதத்தை முடித்து வைத்து சட்ட அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் பேசியது வருமாறு:

"கனம் உதவி சபாநாயகர் அவர்களே! சட்ட சபையின் சார்பாக, தமிழ் மக்கள் சார்பாக இந்த மசோதாவைத் தமிழன்னையின் மலரடியில் சமர்ப்பிக்கின்றேன்.

"தமிழனாகப் பிறந்த பிறப்பின் பயனை யான் இன்று பெற்று விட்டதாகவே கருதுகிறேன் இந்த மசோதாவை இங்கு பிரேரேபித்து, இதைச் சட்டமாக்குவதற்கு நான் ஒரு கருவியாக அமைந்தது பற்றி உண்மையிலேயே பெருமைப் படுகிறேன்.

"அந்தப் பெருமை எனக்கு ஏற்பட்டது என்னுடைய தகுதியினால் அல்ல என்பதை உணருகிறேன். ஏதோ நான் செய்த தவப்பயன் காரணமாக அந்தப்பெருமை எனக்குக் கிடைத்தது என்று கருதுகிறேன்.

"தமிழிலே பெரும் பாண்டித்தியம் பெற்றவர்களெல்லாம் இருக்க, எனக்கு இந்தப் பாக்கியம் கிடைத்தது தனிப் பெருமை. அதைப்பற்றி உண்மையிலேயே எண்ணியெண்ணி மகிழ்கின்றேன்.

"இன்றைக்கு, உயிர்நீத்த தமிழ்ப் பெரியார்களின் ஆவிகள் எல்லாம் இதனைப் பார்க்கச் சக்திபெற்றிருக்குமானால், இன்று நமது சட்டசபையின் மேலிருந்து ஆரவாரம் செய்து கொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை,

"அப்பேர்ப்பட்ட ஒரு நல்ல நிகழ்ச்சியிலே பங்கு எடுத்துக் கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு கிடைத்தது நம் எல்லோருக்கும் பெரு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. ஆகையால் பாரதியார் சொன்ன வாக்குடன் என் உரையை முடித்துக் கொள்கிறன்.

"பாரதியார், 'வாழிய செந்தமிழ்' என்று சொன்னார். 'வாழ்க நற்றமிழர்' என்றும் சொன்னார். அந்த வாழ்வு ஏதோ பிரிந்த வாழ்வு என்று அவர் கருதவில்லை. 'வாழிய பாரத மணித் திருநாடு' என்றும் சொன்னார். அப்பேர்ப்பட்ட வாழ்வு எங்கெங்கும் ஓங்க வேண்டும். வாழ்க தமிழ்! வாழ்க தமிழ்!! வாழ்க தமிழ்!!! (பலத்த கைதட்டல்)."

அவைக்குத் தலைமை வகித்த திரு. பி. பக்தவச்சலு நாயுடு அவர்கள், வழக்கமாக ஆங்கிலத்தில் பேசுபவ

றென்றும், தமிழ் ஆட்சிமொழி மசோதா மீது வாக்கெடுப்பு நடத்தத் தொடங்கியபோது, வழக்கத்திற்கு மாறாகத் தமிழில் பேசினர். இந்த மாறுதலை அவையினர் ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

மசோதா எதிர்ப்பின்றி ஒரு மனதுடன் நிறைவேற்றப் பட்டதாக அவைத் தலைவர் அறிவித்தபோது 'வாழ்க தமிழ்', 'வாழ்க தமிழ்' என்ற வாழ்த்தொலி அவையின் மண்டபம் அதிர மும்முறை எழுந்தது. இது சட்ட மன்ற மரபு காணாத தாகும். ஆம்; தமிழுக்குப் புதுவாழ்வு கிடைத்ததை யொட்டி, சட்ட மன்றத்திலேயும் புதிய மரபு ஏற்பட்டது.

இந்தியாவோடு சேர்ந்து தமிழ்நாடு விடுதலை பெற்றது 1947 ஆகஸ்டு 15-ல். அதற்குப் பின்னும் சரியாக பத்தாண்டு காலம் தமிழ் மொழியானது அடிமைத் தனத்தில்தான் இருந்தது. அந்த அடிமைத்தனத்திலிருந்து தமிழுக்கும் விடுதலை தேடத்தான் சட்ட மன்றத்திலே தமிழ் ஆட்சிமொழி மசோதாவை சட்டமாக்கி வைத்தது காங்கிரஸ் ஆட்சி.

### *தி. மு. க. பிரவேசம்!*

தமிழ் ஆட்சி மொழி மசோதா நிறைவேற்றப்பட்ட நாளுக்கு ஒரு சரித்திர முக்கியத்துவம் உண்டு. 1952-ல் நடந்த பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்ட சட்ட மன்றத்தின் கடைசி நடவடிக்கையாக தமிழ் ஆட்சி மொழி மசோதாவை நிறைவேற்றிய நிகழ்ச்சி அமைந்தது. ஆம்: இந்த மசோதாவை ஏற்ற நாளிலே சட்ட மன்றத்தின் ஆயுள் முடிவுற்றது.

இதற்கு இரண்டு திங்களுக்குப்பின் 1957-ஆம் ஆண்டில் நடந்த இரண்டாவது பொதுத் தேர்தலிலே காங்கிரசுக்குக் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைத்தது. இந்தத் தேர்தலில்தான் முதன் முதலாகத் தி.மு.கழகம் 15-உறுப்பினர்களுடன் சட்ட மன்றத்தில்

பிரவேசித்தது. தமிழ் மாநில அமைப்பு மசோதாவுக்கு சட்ட மன்றம் அங்கீகாரம் அளித்தபோதும், தமிழ் ஆட்சிமொழி மசோதா சட்டமாக்கப்பட்டபோதும் தி.மு.கழகம் சட்ட மன்றத்தில் இல்லை.

தமிழகம் தனியரசு மாநிலமாவது உறுதிப்பட்டிருந்த நிலையில்தான் சமூக சீர்திருத்த இயக்கமாக மட்டுமே இயங்கி வந்த தி.மு.கழகம் பார்லிமெண்டரி அரசியல் கட்சியாகத் தன்னை மாற்றிக் கொண்டு, இரண்டாவது பொதுத் தேர்தலில் ஈடுபட்டு சட்ட சபைக்குள் பிரவேசித்தது. பிற்காலத்தில் ஆளுங்கட்சியாகவும் தி.மு.கழகம் வரமுடிந்ததென்றால், அதற்கான முக்கிய காரணம் தமிழ் வழங்கும் நிலப்பரப்பு தனியரசு மாநிலமாக தமிழரசுக் கழகத்தின் பேருழைப்பாலும், காங்கிரஸ் கட்சியின் பெரு முயற்சியாலும் அமைக்கப்பட்டதுதான். தி.மு.க. கோரிய திராவிடத் தனி நாடு கிடைத்திருந்தால், பழைய நான்குமொழிப் பிரதேசங்கள் கலந்த சென்னை ராஜ்யம் நீடித்திருந்தால் அது ஆட்சிக்கு வந்திருக்க முடியுமா என்பது ஐயப்பாடே.

### த. அ. க.வுக்குப் பாராட்டு

தமிழ் ஆட்சி மொழி மசோதா சட்டமாக்கப்பட்ட நிகழ்ச்சி தமிழரசுக் கழகத்தின் பெரு முயற்சிக்குக் கிடைத்த வெற்றி என்று வருணித்து, 'ஆனந்த விகடன்', 'தமிழ் நாடு' தேசபக்தர் திரிலோக சீதாராம் அவர்களை ஆசிரியராகக் கொண்ட "சிவாஜி" ஆகிய ஏடுகள் தலையங்கம் எழுதின. "ஆனந்த விகடன்" எழுதிய நீண்ட தலையங்கத்தின் ஒரு பகுதியை இங்கு பார்ப்போம்:

"தமிழ்நாட்டிலே தமிழ் ஆட்சி மொழியாவது ஓர் ஆச்சரியமா?' என்று பலர் கேட்கலாம். ஆச்சர்யந்தான்! இல்லாவிட்டால், காலமெல்லாம் காங்கிரசுக்கே உழைத்த ஸ்ரீ. ம. பொ. சிவஞான கிராமணியார் தனியே பிரிந்து போனது ஏன்? தமிழரசுக் கழகம் போராடியது எதற்கு?

"தமிழரசுக் கழகம் கேட்டதெல்லாம், தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும்; தமிழ் நாட்டைத் 'தமிழ் நாடு' என்றே அழைக்க வேண்டும்; தமிழ் எல்லைகள் திரும்பக் கிடைக்க வேண்டும் என்பவைதான்.

"இப்பொழுது தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட்டு விட்டது. எல்லைப் பிரச்னை தீர்க்கப்படும் தருவாயில் இருக்கிறது. 'தமிழ் நாடு' என்ற பெயரும் வழக்கத்தில் வந்து விடும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

"எனவே, கல்வியமைச்சர் சுப்பிரமணியத்தைக் காட்டிலும் இந்த விஷயத்தில் இன்னும் அதிகமாக மகிழ்ச்சி யடைய வேண்டியவர் ஸ்ரீ. ம. பொ. சிவஞான கிராமணியார் தான்.

"தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி. அவர்களின் சேவையும், அவரைப் பின்பற்றும் தொண்டர்களின் சக்தியும் இனி, தமிழ் நாட்டின் வருங்கால அரசியல் வாழ்வுக்கும் ஆக்க வேலைக்கும் பயன்பட வேண்டும்."

['ஆனந்த விகடன்'; 30-12-56]

இவ்வாறு தமிழரசுக் கழகத்திற்குப் பாராட்டு கூறிய "ஆனந்த விகடன்", "தமிழரசுக் கழகத்தார் தங்கள் கொள்கைகளை மாற்றிக் கொண்டு, இனி காங்கிரசோடு இணைந்துவிட வேண்டும்" என்றும் ஆலோசனை கூறியது.

தமிழ் ஆட்சி மொழி மசோதா சட்டமாக்கப்பட்டது தமிழரசுக் கழகத்திற்குக் கிடைத்த வெற்றி என்று நன்றி யுணர்வுடைய தமிழ் ஏடுகள் தலையங்கம் எழுதின வென்றாலும், தமிழரசுக் கழகம் வெற்றி விழா கொண்டாட வில்லை என்பதனை இங்குக் குறிப்பிட்டாக வேண்டும். தான் எடுத்துக் கொண்ட பிரச்னைகளிலே தனக்கு வெற்றி கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்த அடக்கத்தைத் தமிழரசுக் கழகம் கடைப்பிடித்து வந்திருக்கிறது.

இந்தியாவில் ராஜ்யங்கள் மொழிவாரி திருத்தியமைக்கப் பட்டதற்கு மத்திய அரசுக்கு ரூபாய் 11 கோடியே 37 லட்சம் செலவானதாக அறிவிக்கப்பட்டது. இவ்வளவு பெருஞ் செலவு செய்து அமைக்கப்பட்ட மாநிலங்களிலே மாநில மொழியை ஆட்சி மொழியாக்க முதன் முதலில் மசோதா கொண்டு வந்து சட்டமாக்கிய பெருமை தமிழ் மாநிலத் திற்கே உரியதாகும்.

*சட்ட மேலவையில்...*

தமிழக சட்டப் பேரவையில் தமிழ் ஆட்சிமொழி மசோதா ஒருமனதுடன் ஏற்கப்பட்ட மறுநாளே சட்ட மேலவையிலும் அது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. பழகு தமிழிலே உரையாடுவதற்கு இயலாத மலையாளியான பி. வி. செரியன் அவர்கள் அப்போது மேலவைத் தலைவராக இருந்தார். அது காரணமாகவும், மிகவும் முதியோர் பலர் அங்கம் பெற்றிருந்ததாலும் அப்போது மேலவையின் நடவடிக்கைகள் ஆங்கிலத்திலேயே நிகழ்ந்து வந்தன. சரளமாகப் பேசுவதற்கு ஆங்கிலத்தில் புலமை பெறாத உறுப்பினர்கள் மட்டுமே தமிழில் பேசி வந்தனர். அப்படியிருந்தும், இந்த மாமன்றத்திலேயும் உறுப் பினர்களில் ஒருவர் தவிர மற்றவர்க ளெல்லாம் தமிழிலே பேசி மசோதாவை ஆதரித்தனர். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் சென்னை மாநிலத்தின் தற்காலிக ஆளுநராக இருந்த சர் முகமது உஸ்மான் ஒருவர் மட்டும் ஆங்கிலத்தில் பேசினார். ஆனால், அவரும் மசோதாவை ஆதரித்தார். 41 உறுப்பினர்களே இருந்த மேலவையில் 17 பேர் ஆட்சி மொழி மசோதாவைப் பற்றிய விவாதத்தில் பங்கு பெற்றனர். அவர்கள் பெயர்கள் வருமாறு:

திருவாளர்கள் வி. சக்கரை செட்டியார், டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, டி. எம். தெய்வசிகாமணி ஆசாரியார், டி. புருஷோத்தமன், கவிஞர் வி. ராமலிங்கம் பிள்ளை, ஒய்வு பெற்ற நீதிபதி வி. பாஷ்யம் அய்யங்கார்

விருதுநகர் வி.வி. ராமசாமி, டாக்டர் ஏ. சீனிவாசன், ஏ. கஜபதி நாயகர், டி ஜி. கிருஷ்ணமூர்த்தி, ஜி.கிருஷ்ணமூர்த்தி, என். அண்ணாமலைப் பிள்ளை, ஏ.எம். அல்லாபிச்சை, கே. பால சுப்பிரமணிய ஐயர், சேலம் ஏ. சுப்பிரமணியம், எம். வி. சுதர்சனம் நாயுடு, எம். எதிராஜ், திருமதி. சோதியம்மாள்.

ஆங்கிலத்தில் பேசும் வழக்கமுடைய முதுபெரும் அரசியல் தலைவரான திரு. வி. சக்கரை செட்டியார், "தமிழ் ஆட்சிமொழி மசோதாவின் நினைவாக, இனி சட்ட மேலவையில் நான் தமிழிலேயே பேசுவதாக உறுதி மேற்கொள்ளுகிறேன்" என்று கூறினார். இவரது சூளுரையை மேலவை உறுப்பினர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

மேலவையில் ஆட்சி மொழி மசோதாவை பிரேரேபித்துப் பேசியபோதும், அதுபற்றிய விவாதத்தை முடித்து வைத்துப் பேசியபோதும் மிகவும் உருக்கமான முறையில் சட்ட அமைச்சர் சி. சுப்பிரமணியம் உரையாற்றினார். மேலவையிலும் மசோதா ஒருமனதுடன் நிறைவேற்றப் பட்டது.

தமிழ் ஆட்சி மொழி மசோதா தமிழக சட்டமன்றத்தின் இரு அவைகளாலும் அங்கீகரிக்கப்பட்டதும் அரசியல் சட்ட விதிகளுக்கிணங்கக் குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டது அப்போது, டாக்டர் இராசேந்திர பிரசாத் அந்தப் பதவியில் இருந்தார். அவர் "இந்தி தீவிரவாதி" என்று பெயர் எடுத்தவர். அப்படியிருந்தும், தமிழ் ஆட்சி மொழி மசோதாவை அங்கீகரிப்பதில் அவர் தாமதமோ, தயக்கமோ காட்டவில்லை. தமிழக அரசின் நிர்வாகத்திலே இந்தி மொழிக்கும் இடம் பிடிக்க நினைத்து, மசோதாவைத் திருத்துமாறு கோரித் திருப்பி யனுப்பவுமில்லை. மனநிறைவோடு அங்கீகாரம் அளித்தார்.

## தமிழ்ப் பகைவர் யார்?

இந்தி மொழி, மாநில அரசுகளிடையிலும், மாநில—மத்திய அரசுகளிடையிலும் தொடர்பு மொழியாகவும்,

மத்தியில் ஆட்சி மொழியாகவும் பயன்படுத்தப்பட வேண்டு மென்பதுதான் அன்றும் இன்றும் காங்கிரஸ் கட்சியின் கொள்கையாக இருந்து வருகிறது. இந்திய அரசியல் சட்ட மும் அந்த அளவில்தான் இந்தி மொழியை ஏற்றுக்கொண் டிருக்கிறது. மாநிலந்தோறும் அந்தந்த மாநில மொழியே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதே காங்கிரசின் நீண்ட நெடுங்காலக் கொள்கையாகும். அரசியல் சட்டத் தின்படியும் இதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் தமிழே அரசின் அனைத்துத் துறைகளிலும் ஆட்சி மொழியாவதற்கு மத்திய அரசோ, அரசியல் சட்டமோ, இந்தி தீவிரவாதிகளோ தடையாக இருக்கவில்லை. தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் நடைமுறைக்கு வந்து இருபது ஆண்டுகளாகியும் இன்னமும் ஆங்கிலமே இங்கு ஆட்சி மொழியாக நீடித்து வருகிறதென்றால், அதற் குத் தமிழரே காரணமாவர்.

தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை அமுல்படுத்துவதற் கான வழிமுறைகளை வகுத்துத் தருவதற்கென உயர் அலுவலர்களைக் கொண்ட தனிக்குழு ஒன்றை தமிழக அரசு நியமித்தது.

## நல்ல தமிழ்!

சட்டப் பேரவையைப் பொறுத்த வரையிலும் 1957 தொடங்கி, அதன் நடவடிக்கைகள் அநேகமாகத் தமிழிலேயே நடைபெற்று வருகின்றன. சட்ட மன்றத்தில் வைக்கப்படும் குறிப்புகள், நிகழ்ச்சி நிரல், படிக்கப்படும் அறிக்கைகள் ஆகியவற்றிற்கெல்லாம் தமிழே பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 'தமிழ்' என்றால், அதுவரை 'அரசாங்கத் தமிழ்' என்பதாக ஒன்று இருந்து வந்ததே, அதுவல்ல. நல்ல தமிழை அரசு 1956லேயே பயன்படுத்தத் தொடங்கியது. 1957—58ஆம் ஆண்டு குறுகிய கால வரவு—செலவுத் திட்டம் 18—12—56ல் சட்டமன்றத்தில் முதன் முதலாகத் தமிழில் தயாரித்து வைக்கப்பட்டபோது, அந்தத்

தமிழைப் பாராட்டி தோழர் ப. ஜீவானந்தம் சட்டப் பேரவையில் பேசியது வருமாறு:

"நமது சட்ட சபையின் சரித்திரத்திலேயே மக்களின் பிரதிநிதிகளான நாம் அத்தனை பேரும், நிதியமைச்சர் அவர்கள் வரவு—செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கிற போது புரிந்து கொள்ளத் தக்கதொரு தருணம் முதன் முறையாக இந்த வரவு—செலவுத் திட்டத்தில்தான் நமக்குக் கிடைத்திருக்கிறது என்பது நம் எல்லோருக்கும், தமிழ் மக்கள் எல்லோருக்கும் மிக மகிழ்ச்சியைத் தரத்தக்க செய்தியாகும்.

"தமிழில் இந்தப் பட்ஜெட் ஆக்கப்பட்டது மட்டுமல்ல; என்னைப் பொறுத்த மட்டில் மிகவும் நல்ல தமிழில் இந்தப் பட்ஜெட் ஆக்கப்பட்டிருக்கிறது என்று நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். ஏனென்றால், பத்துப் பதினைந்து ஆண்டு களுக்கு முன்னால் சர்க்கார் தமிழில் வெளியிட்டிருக்கிறார்கள். அவைகளைப் பார்த்தால், அது, ஆங்கிலமா, தமிழா, திமிழா? என்று அதைச் சொல்ல முடியாது. ஆனால், இப்போது நிதியமைச்சர் அவர்கள் நம் முன்னால் சமர்ப்பித் திருக்கும் இந்தப் பட்ஜெட்டில் இருக்கக் கூடிய தமிழ் நல்ல அருமையான தமிழ் என்பதே என்னுடைய அபிப்பிராயம்."

தோழர் ப. ஜீவானந்தம் தமிழில் திறமான புலமையுடை யவர். தமிழ் வளர்ச்சியிலும் அக்கறை கொண்டவர். தமிழின் தனித்தன்மை காக்கப்பட வேண்டும் என்பதிலும் ஆர்வ முடையவர். அவரே பாராட்டும் அளவுக்குக் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே அரசுத் துறைகளில் 'நல்ல தமிழ்' பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

## முத்தமிழுக்குச் சிறப்பு

தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் நடைமுறைக்கு வந்த சில மாதங்களுக்குள் — அதாவது, 1957 ஆகஸ்டுத் திங்களில்'

சுதந்திரப் புரட்சியின் முதல் நூற்றூண்டு விழா இந்தியா வெங்கணும் ஒருவார காலம் கொண்டாடப்பட்டது. 1857ல் வடபுலத்தில் நடந்த சிப்பாய்ப் புரட்சியை இந்திய சுதந்திரப் போரின் தொடக்கமாக வைத்துக்கொண்டு சுதந்திரப் போரின் முதல் நூற்றூண்டு விழாவை 1957 ஆகஸ்டு 15ல் நடத்த மத்திய அரசு முடிவெடுத்தது. அதனுடைய ஆணைப்படி தமிழக அரசும் சுதந்திர விழாவை ஒருவார காலம் கொண்டாடியது. ஆங்கிலேயரின் பிடியிலிருந்து நாடு விடுதலை பெற்றதன் விளைவாகத்தான் ஆங்கில மொழியின் ஆதிக்கத்திலிருந்து தமிழும் விடுதலை பெற வாய்ப்புக் கிடைத்தது என்ற உண்மையை காங்கிரஸ் அரசு உணர்ந்திருந்தது. அத்துடன், அரசியல் விடுதலைப் போரின் வெற்றிக்குத் தமிழ் மொழியும் பயன்பட்டதென்பதனை காங்கிரஸ் மறக்கவில்லை. அதனுல், சுதந்திரப் புரட்சியின் நூற்றுண்டு விழாவிலே முத்தமிழுக்குச் சிறப்பு செய்யத் தமிழக அரசு திட்டமிட்டது. இயற்றமிழுக்கு டாக்டர் மு. வரதராசனுரையும், இசைத் தமிழுக்குத் திருமதி கே பி. சுந்தராம்பாளையும், நாடகத் தமிழுக்குப் பம்மல் சம்பந்த முதலியாரையும் தேர்ந்தெடுத்து, அவர்களுடைய தமிழ்த் தொண்டைப் பாராட்டும் வகையில் அவர்களுக்குத் தமிழக அரசு தங்கப் பதக்கம் அளித்து, பொன்னுடை போர்த்திச் சிறப்புச் செய்தது. இதற்கென ஒரு தனி நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

## 'தொடக்கம்! இனி, தொடரும்!'

விடுதலைப் போரில் பங்கு கொண்டு சிறை புகுந்த முத்தமிழ் அறிஞர் பலர் காங்கிரஸ் கட்சியிலேயே இருந்தும், அவர்களை விட்டு, காங்கிரஸ் கட்சியைச் சாராத முத்தமிழ் அறிஞர் மூவரைத் தேர்ந்தெடுத்து அவர்களை காங்கிரஸ் அரசு சிறப்பித்தது நினைவில் கொள்ளத் தக்கதாகும். தமிழ்த் தொண்டு கட்சி வேற்றுமைக்கு அப்பாற்பட்டதுதானே!

அரசால் கௌரவிக்கப்பட்ட முத்தமிழ் அறிஞர்களுக்குத் தென்னிந்திய நடிகர் சங்கம் பாராட்டு விழா நடத்தியது. அதில் கலந்துகொண்டு பேசிய கல்வி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம், "முத்தமிழ்க் கலைஞர்களை அரசு பாராட்டுவது இன்னும் நிகழும்; இது முடிவல்ல!" என்று உறுதி கூறினர். பிற்காலச் சோழர் ஆட்சி மறைந்த பின்னர் முத்தமிழ்க் கலைஞர்களை அரசு கௌரவித்த முதல் நிகழ்ச்சி இதுவாகத்தான் இருக்க வேண்டும். இதை நினைக்கும்போது இதயம் பெருமிதமடைகிறது. உண்மையில் தகுதியுடைய மூவருக்கே அரசு சிறப்புச் செய்தது.

# தமிழ் வளர்ச்சி மன்றம்

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கான பணியை அரசின் கல்வித்துறை மட்டுமே கவனித்து வருவதோ, அதிகாரிகளை மட்டுமே சார்ந்திருப்பதோ எதிர்பார்க்கப்படும் பலனை உரிய காலத்திற்குள் தராது என்பதனை அரசு உணர்ந்தது. அது காரணமாக, தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடுவதற்கெனத் தனியாக ஒரு அமைப்பை நிறுவ அரசு முன் வந்தது.

1959 சனவரித் திங்களில் "தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்" என்ற ஒரு அமைப்பினை அரசு நிறுவியது. பின்னர், அதற்கெனத் தனியாக ஒரு இயக்குநரையும் நியமித்துத் தமிழ்ப் பணியைத் துரிதப்படுத்த முயன்றது. இந்த மன்றத்திற்குக் கல்வி அமைச்சரே தலைவராக இருப்பதற்கும் அரசு விதி வகுத்தது. மற்றும் 38 பேரை மன்ற உறுப்பினர்களாக அரசு நியமித்தது. அவர்களில் முக்கியமானவர்கள் பெயர்கள் வருமாறு:

கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை, டி. எஸ். அவிநாசிலிங்கம், டாக்டர் எஸ். சோமசுந்தர பாரதி, சி. என். அண்ணாத்துரை, தெ பொ. மீனாட்சிசுந்தரனார், ஏ. வேதரத்தினம், டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, எஸ். எஸ். வாசன், இரா. நெடுஞ்செழியன், நெ. து. சுந்தரவடிவேலு, பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை, ப. ஜீவானந்தம், டாக்டர் மு. வரதராசன், எம். எஸ். அப்துல்மஜீத், ஏ. சிதம்பரநாதன், கி. வா. ஜகந்நாதன், எம். பி. பெரியசாமித்தூரன், எம். அனந்தநாராயணன், பி. சவரிமுத்து. சேவியர் தனிநாயகம், கி. ஆ. பெ. விசுவநாதம், குமாரி மாசிலாமணி, குமாரி ஆர். ராசாமணி, ம. பொ. சிவஞானம்,

## மன்றத்தின் கொள்கை

இந்தப் புதிய மன்றம்பற்றி அரசு தந்த விளக்கம் வருமாறு:

'அமைக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி மன்றத்திற்கும் கட்சி அரசியலுக்கும் கொஞ்சம் கூடத் தொடர்பு இருக்காது.

"புதிய மன்றத்தில் அரசியல் தலைவர்கள் இடம் பெற்றிருப்பினும், அவர்களுடைய அரசியலமைப்புக்காக அல்லாமல், அவர்கள் தமிழுக்கு ஆற்றியுள்ள பணிகளுக்காகவே ஆராய்ச்சி மன்றத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்."

புதிய மன்றத்தின் குறிக்கோள் பற்றியும் அரசு அறிவித்தது. அது வருமாறு:

"கல்லூரிகளில் பாடங்களைக் கற்பிக்கும் மொழியாக தமிழைக் கொண்டுவர வேண்டும் என்ற அரசினரின் கருத்தை நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்ட முதலாவது உருப்படியான நடவடிக்கை இம் மன்றத்தை அமைத்ததாகும்.

"இக்குறிக்கோளை அடைவதற்கு இதிலுள்ள சிக்கல்களை ஆராய்ச்சி செய்ய வேண்டியது அவசியமாகிறது. பின்னர், துறையின் தன்மையையும், இம் மாறுதல்களைக் கொண்டுவர வேண்டிய பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றையும் முடிவு செய்ய வேண்டும்.

"எல்லா மக்களும் எளிதில் வாங்கக் கூடிய விலையில் மலிவான நூல்கள் தமிழில் வெளியிடப்பட வேண்டும்."

## வேலைத் திட்டம்

தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தின் அலுவல்கள் பற்றியும் அரசின் ஆணை தெளிவுபடுத்தியது. 9 அம்சங்கள் கொண்ட அந்த அலுவல் திட்டம் வருமாறு:

1. ஆட்சி மொழிச் சட்டம் செயல்படுத்தப்படும் குழுவினரால் செய்யப்படும் பணிகளின் வளர்ச்சி பற்றி ஆராய்வது.

2. மாகாணத்திலுள்ள பல்வேறு கோயில்களிலுள்ள எல்லா கல்வெட்டு(சாசனம்)களிலும் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களை எழுதி ஒழுங்குபடுத்துவது. அவற்றைக் குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் வெளியிடுவது. இதனை இந்திய அரசின் கல்வெட்டுச் சாசன வேலைகளோடு ஒன்றுபடுத்துவது.

3. தமிழக வரலாற்றுக் காலம் ஆகியவற்றின் தன்மையை முறையாக ஆராய்வது. இதனை இந்திய அரசின் தொல்பொருள் துறையின் வேலைகளோடு இணைப்பது.

4. வெளியிடப்படாத நூல்கள் உள்ள கல்வி நிலையங்கள், நூலகங்கள் ஆகியவற்றின் வேலைகளை வளர்ச்சியடையச் செய்வது. இதை பதிப்பு வெளியீட்டுத் துறையுடன் இணைப்பது.

5. மக்களிடையே நூல்களைப் படிக்கும் வழக்கத்தை வளர்க்கும் வகையில் சிறந்த நூல்களை வெளியிடும் எல்லா பதிப்பகங்களின் செயல்முறைகளை வளர்ச்சியடையச் செய்வது—குறிப்பாக, கிராமங்களை பொது நூலக வளர்ச்சித் துறையில் சேர்ப்பது.

6. தமிழில் குழந்தை நூல்கள் பல எழுதவும், அவற்றை வழங்கவும் ஏற்பாடு செய்வது. கிராமங்களுக்கான நூலக வளர்ச்சித் திட்டத்தோடு இந்தப் பணியையும் சேர்ப்பது.

7. நாடோடிக் கதைகள் பற்றிய ஆராய்ச்சி வளர்ச்சியடையச் செய்வது.

8. மாகாணத்திலுள்ள எல்லாக் கல்வி நிலையங்களிலும் ஏட்டுச் சுவடிகளாகவுள்ள நூல்களின் பட்டியல் ஒன்றைத் தயார் செய்வது; மேற்கோள் நூல்கள், அகராதிகள், கலைக் களஞ்சியங்கள், அடிப்படைச் சொற்றொகை முதலியவற்றை

வெளியிட ஏற்பாடு செய்வது. மற்றும் தொன்மைச் சிறப்பு மிக்க ஏட்டுப் பிரதிகளை ஆராய்வது, முறையாகக் கற்பது பற்றி வளர்ச்சி செய்ய இன்றியமையாது செய்ய வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வது.

9. தமிழ் மொழியை எல்லா வகையிலும் வளம் பெறச் செய்யவும் கல்வி மற்றும் பிற துறைகளில் எல்லாவற்றிற்கும் தமிழைப் பயன்படுத்தவும் தேவையானவற்றைச் செய்வது.

## தமிழ் நூல் வெளியீட்டுக் கழகம்

தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தின் தொடக்க விழா இந்திய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்த நாளான— அதாவது. இந்தியா குடியரசு நாடான 26—1—1950ல் நடை பெற்றது நடைமுறையிலுள்ள குடியரசுச் சட்டந்தான் தமிழுக்குப் புது வாழ்வு அளிக்க வழி வகுத்தது என்பதனைத் தமிழ் மக்களுக்கு உணர்த்துவதற்காகவே அரசு குடியரசு நாளைத் தேர்ந்தெடுத்தது.

இத்துடன் தமிழ் வெளியிட்டுக் கழகம் ஒன்றையும் அரசு ஏற்படுத்தி, இதன் சார்பில் தமிழ் போதனு மொழி வகுப்பிற் குத் தேவைப்படும் பாட நூல்களையும் பொதுஅறிவு நூல் களையும் வெளியிட வழிசெய்தது.

தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் அடிக்கடி கூடி தமிழ் வளர்ச்சிபற்றி ஆக்க முறையிலான கருத்துக்களை அரசுக்குப் பரிந்துரைத்து வந்தது.

தமிழில் ஆண்டுதோறும் வெளிவரும் நூற்களில் சிறந்த வற்றில் பொருள்வாரியாக இரண்டிரண்டு நூற்களைத் தேர்ந் தெடுத்துப் பரிசுகள் வழங்கும் பணியைத் திரு. தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களால் நிறுவப்பெற்ற தமிழ் வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டிருந்தது. அப்பணியை புதிதாகத் தோன்றிய தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் ஏற்றுக் கொண்டுவிட்டது.

## நூலக இயக்கம்

தமிழில் எழுதப்படும் அறிவு நூல்களை வெளியிட பதிப்பகங்கள் முன்வராத நிலை தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் தோன்றுவதற்கு முன்பு இருந்து வந்தது. இம் மன்றம் தோன்றிய பின், வெளியிடப்படாத நூல்களின் கையெழுத்துப் பிரதிகளை அதற்கென அமைக்கப்பட்ட குழு பார்வையிட்டு, பரிந்துரை தந்தபின், அதனை வெளியிடுவதற்காகும் செலவில் சரிபாதியை அந்நூலாசிரியருக்கு வழங்குவதற்கு அரசு பொறுப்பேற்றது. இதற்கான தொகை 5 ஆயிரத்திற்கு மேற்படாததாக இருக்க வேண்டும் என்றும் வரையறை செய்யப்பட்டது.

தமிழில் நூல்கள் பெருகுவதற்கு வாய்ப்பாக கிராமங்களிலும் நகரங்களிலும் நூலகங்களைப் பெருக்குவதற்கு 1948ல் பொது நூலகச் சட்டம் ஒன்றை தமிழக அரசு நிறைவேற்றியது என்பதை இங்கு நினைவூட்ட வேண்டும்.

தமிழகம் தனியரசு மாநிலம் ஆனபின்னர் தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் நடைமுறைக்கு வந்ததென்றாலும், தமிழகத்தின் நிரந்தரக் குடிகளாகிவிட்ட மொழிவழி சிறுபான்மையினர் — தமிழின் மூலம் கல்வி பயிலாதவர்கள் — பார்லிமெண்டரிப் பதவிகளிலும் உயர் உத்தியோகங்களிலும் ஏராளமாக இருந்தனர். தமிழை ஆட்சி மொழியாக்குவதற்கு இவர்களுடைய ஒத்துழைப்பு இன்றியமையாது அரசுக்குத் தேவைப்பட்டது.

## கன்னட சபாநாயகர்!

1957ல் நடந்த இரண்டாவது பொதுத் தேர்தலுக்குப் பின்னர் தமிழக சட்டமன்றத் தலைவர் பதவிக்குத் தமிழகத்தின் நிரந்தரக் குடிமகனான டாக்டர் யூ. கிருஷ்ண ராவ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவரது குடும்பம் சென்னை நகரிலேயே நெடுங்காலமாக வாழ்ந்து வருகிறது. இவரது தந்தை டாக்டர் யூ. ராமராவ்

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 102568
MADRAS
P31b
N78



சென்னை நகரத் தொகுதியிலே 1923ல் சென்னை ராஜ்ய சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1937ல் சென்னை ராஜ்ய மேலவைத் தலைவராகவும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

டாக்டர் யூ. கிருஷ்ணராவும் 1952ல் நடந்த முதல் பொதுத் தேர்தலிலும், 1957ல் நடந்த இரண்டாவது பொதுத் தேர்தலிலும் சென்னை நகரத் தொகுதியொன்றிலிருந்து சென்னை சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்னை மாநகராட்சிக்கு இவர் பலமுறை தேர்தெடுக்கப் பட்டார். ஒருமுறை மாநகராட்சி மேயராகவும் பதவி வகித்தார்.

## தமிழில் பேசினார்!

டாக்டர் யூ. கிருஷ்ண 'ராவ், காங்கிரஸ் கட்சியின் சார்பில் தமிழக சட்டப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால், "கன்னடர் தலைமையில் சட்டமன்றத்தைத் தமிழில் நடத்த இயலுமா?" என்ற பிரச்னை எழுந்தது. ஆனால், இவர், எவருடைய வற்புறுத்தலும் இல்லாத நிலையில் பதவியேற்ற மறுகணமே தமிழில் நடவடிக்கைகளை நடத்தத் தொடங்கினார், அதைப் பாராட்டும் வகையில் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் திரு. எம். கலியாணசுந்தரம் சட்டமன்றத்தில் பேசியது வருமாறு:

"நேற்று நீங்கள் விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்ட சமயத்தில் ஆங்கிலத்தில் பேசியதைப் பார்க்கும் பொழுது கொஞ்சம் பயம் ஏற்பட்டது. ஆனால், நீங்கள் சபாநாயகர் பதவியை ஏற்ற உடனேயே தமிழில் நடவடிக்கைகளை ஆரம்பித்தது எங்களுக்கு உற்சாகத்தை அளித்தது. தமிழ் நாட்டைத் தங்கள் தாய் நாடாகக் கொண்டுள்ளீர்கள். பல தலைமுறைகளாகத் தங்களுடைய முன்னோர்கள் தமிழ் நாட்டிலே இருந்து வந்திருக்கிறார்கள். உங்களுடைய தந்தையார் நம் நாட்டிற்குச் செய்த சேவையைத் தேசபக்தியுடைய ஒவ்வொருவரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்

கிறார்கள். உங்களுடைய தந்தையாரின் பெயருக்கும் புகழுக்குமேற்ப நீங்கள் அந்தப் பெயரை நிலை நாட்டுவீர்கள் என்று நம்புகிறேன்

"இதே சமயத்தில் நான் தங்களைக் கேட்டுக் கொள்வது ஒன்று உண்டு. அதாவது, தாங்கள் தமிழை இன்னும் நன்றாகக் கற்றுக் கொள்ள வேண்டுமென்பதுதான். வீரேபாஜி அவர்கள் இத்தனை வயதிற்குப் பிறகும் புதிய மொழிகளைக் கற்றுக் கொள்கிறார். ஆகையால் தாங்களும் தமிழை இன்னும் நன்றாகக் கற்றுக் கொண்டு இந்தச் சபையின் நடவடிக்கைகள் தமிழிலேயே நடைபெற உதவ வேண்டும் என்று கோருகிறேன்."

*பாராட்டு*

திரு. எம். கலியாணசுந்தரத்திற்குப் பதிலளித்து சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் யூ. கிருஷ்ண ராவ் பேசியதாவது:

"கனம் கலியாணசுந்தரம் அவர்கள், 'சபாநாயகர் தமிழில் பேசுவார்களோ என்ற சந்தேகம் இருந்தது' என்று சொன்னார். நான் கன்னட பரம்பரையில் வந்தாலும், தமிழ் நாட்டின் தலைநகரமான சென்னையில் பிறந்து, வளர்ந்து, சென்னை மக்கள் அன்புடன் சென்னை சட்டசபையிலோ அல்லது நகராண்மைக் கழகத்திலோ அவர்கள் பிரதிநிதியாக வளர்ந்து வந்தவன். தமிழ்நாடு, தமிழ் மக்கள், தமிழ் மொழி இம்மூன்றின் வளர்ச்சியிலும் எனக்கு ஒரு பங்கு உண்டு. அதில் எனக்கு ஒரு பெருமையும் உண்டு என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் (கரகோஷம்).

"சட்ட சபையின் அங்கத்தினர்கள் எல்லோரும் எனக்கு மேல் அழகாகத் தமிழில் பேசுவார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆகையினால், இந்தச் சபையில் நடவடிக்கைகளைத் தமிழில்தான் நடத்த வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம் (கரகோஷம்). ஆனால் அதின்

ஏதாவது தவறுகள் இருந்தால் அதை நீங்கள் மன்னிப்பீர்கள் என்று நம்புகிறேன். சில சந்தர்ப்பங்களில் ஆங்கிலத்தில் பேச வேண்டி வரலாம். அப்படிப் பேசுவதற்கு நீங்கள் எல்லோரும் சம்மதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.''

## மேலவையில் மலையாளி!

தமிழகம் தனியரசு மாநிலமாகி தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் நடைமுறைக்கு வந்தபோது தமிழக சட்ட மேலவைத் தலைவராகத் தமிழறியாத கேரளரான டாக்டர் பி. வி. செரியன் பதவி வகித்தார். இவரது மனைவியான திருமதி. தாராசெரியன் சுத்தத் தமிழ் மகள். திருநெல்வேலி வேளாள குடும்பத்தில் பிறந்தவர். கிறித்துவ மதத்தைச் சார்ந்து விட்டவர். இந்தத் தம்பதிகள் ஆங்கிலத்தையே வீட்டு மொழியாகவும் ஆக்கிகொண்டுவிட்ட காரணத்தால் டாக்டர் செரியன் தமிழகத்தின் தலை நகரிலேயே வாழ்ந்தும், தமிழில் பேசவும் பயிலாதவரானார். ஆயினும், மேலவையில் தமிழையும் பயன்படுத்துவதற்கு இவர் தடையாக இல்லை. ஆம் தமிழகத்தின் மாப்பிள்ளையாகி விட்டாரல்லவா?

இந்த வகையில் தமிழக சட்ட மன்றப் பேரவையிலும் மேலவையிலும் தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் நடைமுறைக்கு வரலானது. ஆயினும், கல்லூரிகளில் தமிழ்மொழி பயிற்று மொழியாகும் வரை தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது இயலாததாயிற்று.

# தமிழ் பயிற்று மொழி

உயர் கல்வியைத் தமிழின்மூலம் கற்பித்தாலொழிய, அரசு அலுவலர் பதவிக்கு வருவோர் தமிழில் நிர்வாகத்தை நடத்துவது சாத்தியமாகாது. இது போன்று, சட்டக் கல்லூரியில் கல்வி தமிழின் மூலம் போதிக்கப்பட்டாலொழிய பி. எல்., எம். எல். பட்டங்கள் பெற்று நீதி மன்றங்களிலே வழக்குரைப்போராகவும், நீதிபதிகளாகவும் வருவோர் தங்கள் தொழிலுக்குத் தமிழையே முதன் மொழியாகப் பயன்படுத்த இயலாது. இந்த உண்மையை உணர்ந்து தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் நடைமுறைக்கு வந்த சில திங்களி லேயே காங்கிரஸ் அரசு அனைத்துக் கல்லூரிகளிலும் அனைத்துப் பாடங்களையும் தமிழில் பயிற்றுவிப்பதற்கான வழிவகைகளைச் செய்வதிலே கருத்துச் செலுத்தியது.

## தடை தகர்ந்தது !

1946ல் திரு. டி. எஸ். அவினாசிலிங்கனார் கல்வி அமைச்சராக இருந்தபோது, திருச்சியில் ஒரு கல்லூரியில் சில பாடங்களுக்குமட்டும் தமிழ் போதனாமொழியாக்கப்பட்டது. சேலம் முனிசிபல் கல்லூரியிலும் இன்டர்மீடியட்டில் ஒரு பாடத்திற்கு மட்டும் தமிழ் பயிற்சிமொழியாக்கப்பட்டது. ஆனால், இந்த முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கவில்லை. இதற்குக் காரணம், அப்போது, ஆந்திரம்—மலையாளம்—கன்னடம் ஆகிய வேற்று மொழிப் பிரதேசங்கள் கொண்ட சென்னை ராஜ்யத்திலே தமிழகம் இணைந்திருந்ததுதான்.

1956ல் தமிழகம் தனியரசு மாநிலமாகி விட்டதால், தமிழை போதனா மொழியாக்குவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளத் தமிழக அரசு முன் வந்தது.

தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் கழகத்தின் முதல் கூட்டம் 1—3—59ல் தமிழக அரசின் தலைமை அலுவலகத்தில் அப்போதைய கல்வி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் கூடி, தமிழைப் போதனு மொழி யாக்கு வதற்குத் திட்டம் வகுத்தது அதன்படி, முன்னோடிக் கல்லூரியாகக் கோவை அரசினர் கல்லூரியைத் தேர்ந் தெடுத்து, அதில் 1960—61ஆம ஆண்டில் பி. ஏ. வகுப்புக்கு மட்டும் தமிழைப் பயிற்றுமொழி யாக்குவ தென்று தீர்மானித்தது இத்திட்டத்தை 1963—64ல் அனைத்துக் கல்லூரிகளுக்கும் விரிவுபடுத்துவ தென்றும் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் முடிவெடுத்தது.

கோவை அரசினர் கல்லூரியில் பி ஏ வகுப்பில் தமிழைப் பயிற்றுமொழி யாக்கியதற்கு முதலாண்டிலேயே வெற்றி கிடைத்து விட்டதால், மேலே எடுத்துக் காட்டியபடி 1963—64 வரை காத்திராமல், 1961—62ஆம் ஆண்டிலேயே தமிழ் பயிற்று மொழித் திட்டம் மேலும் பல கல்லூரிகளுக்கு விரிவுபடுத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டது. குறிப்பாக, கோவை பூ. சா. கோ. கலைக் கல்லூரி, பொள்ளாச்சி கலைக் கல்லூரி கோவை அவிஞசிலிங்கம் மனையியற் கல்லூரி மாயூரம் அன்பநாதபுரம் வகையரு அறக் கட்டளைக் கல்லூரி ஆகிய தனியார் கல்லூரிகள் பி. ஏ. வகுப்பில் தமிழைப் பயிற்று மொழியாக்க முன் வந்தன.

கல்லூரிகளில் தமிழைப் பயிற்றுமொழி யாக்குவதற்குச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன் அனுமதி தேவைப்படு கிறது. நாட்டிலுள்ள கல்லூரிகளில் சில அரசினரின் நேர் நிர்வாகத்தி லிருக்கின்றன. மற்றவை தனியார் நிர்வாகத்தி லிருக்கின்றன. பல்கலைக் கழகங்கள் மாநில அரசின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுத்தான் இயங்கி வருகின்றன. பல்கலைக் கழகங்களின் வேந்தராக ஆளுநரும், இணை வேந்த ராகக் கல்வி மந்திரியும் இருந்து வருகின்றனர். துணை வேந்தரை மாநில ஆட்சியின் இசைவுடன் ஆளுநர்தான்

நியமிக்கிறார். ஆயினும், நிர்வாக ரீதியில் பல்கலைக் கழகங்கள் சுயாட்சியுடைய நிறுவனங்களாகும் அரசினர் கல்லூரிகளில் தமிழைப் பயிற்றுமொழி யாக்குவதானாலும், அதற்குப் பல் கலைக் கழகத்தின் முன் அனுமதி பெற்றாக வேண்டும்.

1960-61ல் ஒரு கல்லூரியிலும், 1961-62ல் 5 தனியார் கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்றுமொழி யாக்கியது சென்னைப்பல்கலைக் கழகத்தின் முன் அனுமதியைப் பெற்றுத் தான் என்பதை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

## எதிர்ப்பு !

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. எல். முதலியார், அரசு கொடுத்த நிர்ப்பந்தத்தின் பேரில் தமிழைப் பயிற்று மொழி யாக்குவதைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டாரென்றாலும், மற்றொருபுறம் வெளிப் படையாக எதிர்ப் பிரசாரம் செய்து கொண்டே இருந்தார். பயிற்று மொழி மாறுவதால் அறிவுத் தரம் குறைந்து விடுமென்றும் அச்சுறுத்தினர். செல்வாக்குள்ள செய்தித் தாள்கள் சிலவும் அவரது கருத்துக்கு ஆதரவு அளித்து வந்தன. வாரப் பத்திரிகைகளும் இதற்கு விலக்காக இல்லை. மொத்தத்தில் படித்த சமுதாயம் ஆங்கிலம் பயிற்று மொழி யாக நீடிப்பதற்கே ஆதரவாக இருந்தது.

இதனால், தமிழ் ஆர்வமுடைய கல்வியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் ஆங்கில மொழி ஆதரவாளர்களுக்கு எதிராகப் பொது மக்களுடைய ஆதரவைத் திரட்டுவதற்குப் பிரசாரம் நடத்த வேண்டிய ஏற்பட்டது. அவர், தாம் கலந்து கொள்ளும் கல்வி—கலை—கலாசார சம்பந்தமான கூட்டங்களிலெல்லாம் தமிழைப் பயிற்றுமொழி யாக்கும் அரசு திட்டத்தின் நற்பலன்களை விளக்கிப் பேசி வந்தார்.

## கோவை "குருக்ஷேத்திரம்" ஆனது!

1960-61ல் கோவை அரசினர் கல்லூரியில் தமிழ் பயிற்று மொழியாக்கப்பட்டபோது, கல்லூரிகள் திறக்கப்பட்டநேரத்

தில் கோவை நகரில் தமிழ் பயிற்று மொழி ஆதரவு மாநாடு நடத்தப் பட்டது. இதில் கல்வியமைச்சர் திரு. சி. சு வும் கலந்து கொண்டு பேசினர். பல்வேறு கட்சிகளின் தலைவர் களும், கல்வி நிபுணர்களும் கலந்து கொண்டு உரை யாற்றினர்.

1961-62ம் ஆண்டில் கோவை நகரில் மேலும் 2 கல்லூ ளிலும், பொள்ளாச்சியில் ஒரு கல்லூரியிலும் தமிழ் பயிற்று மொழி யாக்கப்படுவதை யொட்டி மாணவர்களிடையில் அதற்கு ஆதரவு திரட்டுவதற்காக 21—5—61ல் கோவை நகரில் தமிழ் பயிற்று மொழி ஆதரவு மாநாடு நடத்தப் பெற்றது. அதிலே, நானும், தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி முதல்வர் பேராசிரியர் அ. சீனிவாசராகவன், ப. ஜீவானந்தம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, கோவை பூ. சா. கோ. பொறியியற் கல்லூரி முதல்வர் திரு ஜி. ஆர். தாமோதரம், மாவட்ட நீதிபதி எஸ். மகராசன் ஆகியோரும் கலந்து கொண்டோம். பயிற்றுமொழிப் போராட்டத்தின் தளபதி யாக விளங்கிய திரு. சி. சு. இதிலும் கலந்து கொண்டார்.

தமிழக அரசின் தமிழ்ப் பயிற்று மொழித்திட்டம் முதன் முதலில் கோவை மாவட்டத்திலுள்ள நான்கு கல்லூரிகளில் அமுல் நடத்தப்பட்டதால் அதற்கான பிரசாரத்திற்கும் கோவை நகரமே களமாக அமைந்தது. தமிழை பயிற்சி மொழி யாக்குவதற்கு ஆதரவு தெரிவிக்கும் மாநாடுகள் அடுத்தடுத்து அங்கேயே நடை பெற்றன.

கோவையில் வாழும் கல்வி நிபுணர் திரு. ஜி. ஆர். தாமோதரம் அதிக ஆதரவு காட்டினர். இதற்கெனவே "கலைக் கதிர்" என்ற விஞ்ஞான தமிழ்மாத ஏட்டினை நடத்த வும் முன் வந்தார். கோவையிலுள்ள பூ. சா. கோ. கலைக் கல்லூரி, பூ. சா. கோ. பொறியியற் கல்லூரி ஆகிய இரண்டுமே அவருடைய நிர்வாகத்திலுள்ளவை யாகும் என்பதனை இங்கு யான் நினைவூட்ட வேண்டும்.

கல்லூரிகளிலுள்ள தமிழ் மன்றம்—மாணவர் பேரவைகள் சார்பில் நடந்த கூட்டங்களில் கலந்துகொண்டு தமிழக ஆட்சியின் பயிற்று மொழித் திட்டத்தை விளக்கிப் பேசி, அதற்கு மாணவர்களிடையே ஆதரவு திரட்டினேன்.

## இருவேறு அணிகள்

ஆங்கிலமே பயிற்சி மொழியாக நீடிக்க வேண்டுமென்ற கொள்கை யுடையவர்களும் எதிர்ப் பிரசாரத்தில் ஈடுபட்டனர். "கல்கி" வாரப் பத்திரிகை இதில் முழு மூச்சுடன் ஈடுபட்டது. "இந்து" பத்திரிகை தமிழ் பயிற்று மொழித் திட்டத்தை எதிர்த்து நடைபெற்ற பிரசாரத்திற்கு அதிக முக்கியத்துவம் தரும் வகையில் செய்திகளைப் பிரசுரித்து வந்தது. தமிழ் நாளேடான "தினமணி" கூட இதற்கு விலக்காக இல்லை.

தமிழ் நாட்டுத் தலைவர்களில் அறிஞர் ராஜாஜியும் பெரியார் ஈ. வே.ரா வும் ஆங்கிலமே பயிற்று மொழியாக நீடிப்பதற்கு ஆதரவளித்தனர். இதனால், ஆங்கிலமே பயிற்று மொழியாக நீடிக்க வேண்டுமென்று ஒரு சாராரும், தமிழே பயிற்று மொழியாக்கப்பட வேண்டுமென்று மற்றொரு சாராரும் அணி பிரிந்து கருத்துப் போர் நடத்தும் சூழ்நிலை நாட்டில் ஏற்பட்டது.

தலைவர் ராஜாஜி, 1937 முதல் 1939 வரை பழைய சென்னை ராஜ்யத்தின் முதல்வராக இருந்தபோது, தமிழ் நாட்டின் உயர்நிலைப் பள்ளிகளில் தமிழைப் பயிற்று மொழியாக்குமாறு ஆணை பிறப்பித்தார். அதற்கு அப்போதைய கல்வித் துறை இயக்குநர் (டி. பி. ஐ) ஸ்டாதம் என்ற ஆங்கிலேயர் ஆட்சேபக் குறிப்பு எழுதினர். அதனை மறுத்து முதல்வர் ராஜாஜி எழுதிய மறுகுறிப்பில், "அடுத்த கட்டத்தில் கல்லூரிப் படிப்புக்கும் தமிழே பயிற்றுமொழி யாக்கப் படும்" என்றார்.

இதுவன்றி, "தமிழில் முடியுமா?" என்ற தலைப்பிட்டு—"முடியும்" என்று பதிலளித்து 1937ல் தமிழில் நூல் எழுதி வெளியிட்டார்.

ஆனால், 1961ல் அவர் தமது கருத்தை மாற்றிக் கொண்டு, ஆங்கிலமே பயிற்று மொழியாக நீடிப்பதற்கு ஆதரவு காட்டி எழுதியும் பேசியும் வந்தார்.

## மத்திய மந்திரியின் எதிர்ப்பு!

காங்கிரசிலேயும் இங்குமங்குமாக ஒரு சிலர் தமிழக அரசின் தமிழ் பயிற்று மொழித் திட்டத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்யலாயினர். அவர்களில் அப்போது மத்தியில் அஞ்சல் துறை அமைச்சராக இருந்த டாக்டர் பி. சுப்பராயன் அவர்களும் ஒருவராவர்.

இவர், 1961 செப்டம்பர் 11ல் சென்னை தேனாம்பேட்டை ஆபட்ஸ்பரி மண்டபத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடத்திய பாரதி விழாவைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், பாரதியார் ஆங்கில ஆதிக்கத்தின் எதிரி என்பதையும் மறந்து விட்டு, தமிழ்ப் பயிற்று மொழித் திட்டத்திற்கு எதிராகப் பேசினார். அன்று அவரது பேச்சு முழுவதும் அதுவாகவே இருந்தது. விழா மேடையிலிருந்த என்னைக் குறிப்பிட்டு, "ம. பொ. சி யைக் கேட்கிறேன், தமிழ் மட்டும் படித்து விட்டு உத்தியோகம் பார்க்க முடியுமா?" என்று மிகுந்த கோபத்துடன் கேட்டார்.

## ஆர்ப்பாட்டம்!

கூட்டத்திலிருந்தவர்களில் ஆத்திரமுற்ற தமிழரசுக் கழக இளைஞர் சிலர் அவரை மேலே பேசவிடாமல் ஆட்சேபக் குரல் கொடுத்து ஆர்ப்பாட்டம் செய்தனர். நான் தலையிட்டுப் பேசி அமைதியை ஏற்படுத்த வேண்டியிருந்தது. மத்திய அரசின் கல்வியமைச்சரும் அகில இந்திய காங்கிரசும் தமிழ் நாடு அரசின் தமிழ் பயிற்சி மொழித் திட்டத்திற்கு முழு

அளவில் ஆதரவாக இருந்தும், மத்திய அமைச்சரும் காங்கிரஸ்காரருமான டாக்டர் சுப்பராயன் எதிர்ப்பு காட்டிப் பேசினார். அதே பாரதி விழா மேடையில் நான் அவருக்குப் பதிலளித்துப் பேசினேன். அதில் ஒரு பகுதி வருமாறு:

"நான் தமிழ்தான் படிக்க வேண்டும் என்று சொல்லவில்லை. பொது அறிவுக்கான வரலாறு, பொருளாதாரம், கணக்கு, விஞ்ஞானம் ஆகிய பாடங்களைத் தமிழின் மூலம் படிக்கச் சொல்லுகிறேன். தமிழைப் படிப்பது வேறு; தமிழில் படிப்பது வேறு. இலையைச் சாப்பிடுவது வேறு; இலையில் சாப்பிடுவது வேறுதானே!

"ஆங்கிலத்தை ஒரு மொழி என்ற அளவில் தினமும் ஒரு பகுதி நேரத்தில் படிப்பதை நான் எதிர்க்கவில்லை; ஆதரிக்கிறேன். டாக்டர் ப. சுப்பராயன் தமது தமிழ் விரோதப் பிரசாரத்திற்குப் பாரதி விழா மேடையைப் பயன்படுத்தியதற்குத்தான் வருந்துகிறேன்."

## சென்றவிட மெல்லாம்...

1937ல் டாக்டர் சுப்பராயன் சென்னை மாநிலக் கல்வியமைச்சராக இருந்தபோதுதான்—அவருடைய கையொப்பத்தையும் பெற்றுத்தான்—முதல்வர் ராஜாஜி உயர்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் தமிழை மட்டுமே பயிற்று மொழியாக்கினார் என்பதையும் அவருக்கு நினைவூட்டினேன். அப்போதே, "அடுத்த கட்டத்தில் கல்லூரிகளிலும் தமிழ் மட்டுமே பயிற்று மொழியாகும்" என்று டாக்டர் சுப்பராயன் அவர்களே மாநில கல்வி அமைச்சர் என்ற முறையில் அறிவித்ததையும் எடுத்துக் காட்டினேன். எனது வாதம் பாரதி விழா அரங்கிலிருந்த மக்களுக்கு மன நிறைவைத் தந்தது. ஆனால், மத்திய அமைச்சருக்கு மனமாற்றத்தைத் தரவில்லை.

டாக்டர் சுப்பராயன், ஆபட்ஸ்பரி பாரதி விழாவையடுத்து திருப்பத்தூர் (வ. ஆ), வேலூர் ஆகிய நகரங்களில் பேசிய கூட்டங்களிலும் தமிழ்பயிற்று மொழித் திட்டத்தைக்

தாக்கினர். அங்கெல்லாம் தமிழரசுக் கழகத் தோழர்கள் எதிர்ப்புக் குரல் கொடுத்து ஆர்ப்பாட்டம் நடத்தி, அவரைப் பேசவிடாமல் செய்தனர்.

டாக்டர் சுப்பராயன் போன்ற காங்கிரஸ்காரர் சிலர் காங்கிரஸ் அரசே அமுல் நடத்தும் மக்கள் திட்டத்தை எதிர்க்கக் காரணம் அந்நாளில் தமிழகக் காங்கிரசில் நிலவிய கோஷ்டி மனப்பான்மைதான்!

பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் "தாய்ப் பால் பைத்தியம்" என்று தலைப்பிட்டுத் தமது "விடுதலை"யில் தமிழ் பயிற்சி மொழித் திட்டத்தை எதிர்த்து நீண்ட கட்டுரை ஒன்றை எழுதினர். அதற்காகக் "கல்கி"யால் அவர் பாராட்டப்பட்டார். ஈ. வே. ரா. தமது கட்டுரையில் தாய்மொழிப் பற்று அறிஞர்கள் வெறுக்கத்தக்க ஒருவகைப் பைத்தியம் என்றும், வீட்டு மொழியாகக் கூட ஆங்கிலத்தை ஏற்றால் தான் மக்கள் அறிவு வளர்ச்சி பெற முடியுமென்றும் வாதத் திறமையோடு எழுதினர்.

## கல்வி நிபுணர்கள் கூட்டம்

இந்த எதிர்ப்புக்களால் கல்வியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் தளர்ந்துவிடவில்லை. தமது கொள்கையில் மேலும் உறுதி காட்டினர். தம்மை எதிர்த்த ராஜாஜி, டாக்டர் சுப்பராயன், பெரியார் ஈ. வே. ரா. ஆகியோருக்கு திரு. சி. சு. நேரடியாகப் பதிலளிக்கவில்லை. ஆனல், பொது மக்களுடைய ஆதரவைத் திரட்டுவதற்கான செயல் முறைகளை மேற்கொண்டார்.

"தமிழால் முடியும்" என்னும் நூலை எழுதி வெளியிட்டார். தமிழ் பயிற்று மொழித் திட்டத்தை விளக்கி தமிழக சட்ட மன்றத்தில் 'வெள்ளை அறிக்கை' ஒன்றை சமர்ப்பித்து சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றார்.

சென்னைப் பல்கலைக் கழகக் கட்டிடத்தில் தமிழ் நாட்டிலுள்ள கல்வி நிபுணர்கள், அரசியல் தலைவர்கள் ஆகியோரின்

கூட்டமொன்று நடத்தப்பட்டது. அதில் நான், ப. ஜீவானந்தம், "குத்தூசி" குருசாமி, காரைக்குடி சா. கணேசன் ஆகிய அரசியல்வாதிகளும் கலந்து கொண்டோம்.

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஆ. இலட்சுமணசுவாமி முதலியார், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. டி. எம். நாராயணசாமிப் பிள்ளை ஆகியோரும், டாக்டர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை, டாக்டர் மு. வரதராசனார் பேராசிரியர் ச. சோமசுந்தர பாரதியார் உள்ளிட்ட தமிழ் அறிஞர்களும் கலந்து கொண்டனர்.

கல்லூரி முதல்வர்கள், விஞ்ஞானப் பேராசிரியர்கள் முதலியோரும் இக்கூட்டத்திற்கு வந்திருந்தனர். பொதுவாக, நல்ல பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தது. இதற்கான அழைப்பு கல்வி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் பெயரால் அனுப்பப்பட்டது. அவரே தலைமை வகித்தார்.

கூட்டம் காலை மாலை ஆகிய இருவேளைகளிலும் நடைபெற்றது பலர் பயிற்று மொழி பற்றித் தம் கருத்துக்களை எடுத்துரைத்தனர். நானும் தமிழரசுக் கழகத்தின் கல்விக் கொள்கையை விளக்கிப் பேசினேன். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட இரு துணைவேந்தர்களும் பேசினர்.

வியப்பென்னவென்றால், பேசியவர்களில் ஒருவர்கூட தமிழ் பயிற்சி மொழித் திட்டத்தை எதிர்க்காததாகும். துணைவேந்தரிருவரும் ஒன்றிரு கல்லூரிகளின் முதல்வர்களும் "இதில் அவசரங் காட்டக் கூடாது. படிப்படியாகத்தான் முன்னேறவேண்டும்" என்று கூறினர். இதுதான் அவர்கள் காட்டிய "எதிர்ப்பு!"

## *எதிர்ப்பாளர் தந்திரம்!*

கூட்டத்தில் முன்னுரையாகவும் முடிவுரையாகவும் திரு. சி. சுப்பிரமணியம் பேசினார். அவர் அரசின் தமிழ்

பயிற்சி மொழித் திட்டத்தை ஆதரித்து ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தைத் தமது முன்னுரையில் வற்புறுத்தினர். ஆனால், முடிவுரையில், எல்லோரும் தமது திட்டத்தை ஏற்றுக் கொண்டு விட்டதால் தீர்மானம் அவசியமில்லை என்று தாம் கருதுவதாகக் கூறினர்.

பொதுவாக, கல்வியமைச்சர் கூட்டிய இந்தக் கூட்டம் ஆங்கில ஆதரவாளர்களும் தமிழ்ப் பற்றுளர்களும் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள நன்கு பயன்பட்டதெனலாம்.

தமிழைப் பயிற்று மொழியாக ஏற்றுக் கொண்டுவிட்ட கல்லூரிகளுக்குத் தேவைப்படும் தமிழில் தயாரிக்கப்பட்ட பாட நூல்களை வெளியிட ஒரு தனித்துறையைத் தமிழக அரசு நிறுவியது. இத் தமிழ் நூல் வெளியீட்டுக் குழு பொது அறிவு நூல்களையும் வெளியிடலானது.

அறிவியல் பாடங்களைத் தமிழிலே போதிப்பதற்கான திறமையை கல்லூரி ஆசிரியர்களுக்குத் தருவதற்கென்று விசேஷ முயற்சிகளை அரசு எடுத்துக் கொண்டு, அதற்கான வகுப்புகளை கோடைக் காலத்தில் நடத்தலானது.

தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துப் படிக்கும் மாணவர்களின் அறிவுத் திறமையை ஆய்வு செய்யத் தமிழ்நாடு கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களின் பேராசிரியர்கள் கொண்ட குழு ஒன்றையும் அரசு நியமித்தது.

இதே நேரத்தில் தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை அமுல் நடத்துவதிலேயும் காங்கிரஸ் அரசு போதிய கவனம் செலுத்தி வரலானது. அதற்கென ஆய்வு அதிகாரி நியமிக்கப்பட்டார். மற்றும், நீதிமன்றத்திலே தமிழை நிர்வாக மொழியாகச் செய்வதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. அதற்காக, ஆங்கிலத்திலுள்ள சட்ட நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்துத் தர ஒரு தனிக் குழுவும் நியமிக்கப்பட்டது.

இந்த நேரத்தில் மத்தியில் ஸ்ரீமாலி என்பவர் கல்வி அமைச்சராக இருந்து வந்தார். அவர் பிரதேச மொழிகளைக்

கல்லூரிகளில் போதனா மொழியாக்குவதிலே அதிக ஆர்வம் காட்டினார். அத்துறையில் முயற்சி மேற்கொண்டுள்ள தமிழக அரசுக்கு மனநிறைவோடு உதவி புரிந்து வந்தார்.

## மான்யம் தர மறுப்பு

தமிழ் பயிற்சி மொழித் திட்டத்திற்குத் தொடக்கத்தில் அதிக ஆதரவு காட்டி வந்த தனியார் கல்லூரிகள் அத்திட்டத்திற்குக்கடுமையான எதிர்ப்பு தோன்றிவிடவே பின்வாங்கலாயின. இக்கல்லூரிகளைத் தமிழ்வழிப்படுத்துவதற்காக, பட்டப்படிப்புக்கு தமிழைப் பயிற்றுமொழியாக்க மறுக்கும் தனியார் கல்லூரிகளுக்கு அரசு மானியம் நிறுத்தப்படும் என்று திட்டவட்டமாக கல்வியமைச்சர் சி. சுப்பிரமணியம் அறிவித்தார். இதற்குக் கடுமையான கண்டனம் எழுந்தது. "எதேச்சாதிகாரப் போக்கில் அறிவு மொழியான ஆங்கிலம் அழிக்கப்படுகிறது'' என்றும் அரசுமீது ஆங்கில பக்தர்கள் குற்றஞ்சாட்டலாயினர். ஆனால், அரசு தன் போக்கில் உறுதி காட்டி வந்தது.

இந்த நேரத்தில்—1962ல், நாட்டில் 3ஆவது பொதுத் தேர்தல் நடைபெற்றது. அதிலே, தமிழக சட்ட மன்றத்தைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் கட்சியே வெற்றி பெற்றுத் திரும்பவும் ஆட்சிக்கு வந்தது. திரு. காமாசரே தொடர்ந்து முதல் மந்திரியானார். ஆனால், இந்தத் தேர்தலில் திரு. சி. சுப்பிரமணியம், நாடாளு மன்றத்திற்குப் பொள்ளாச்சித் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டு மத்தியில் அமைச்சரானார். இது காரணமாக, தமிழகத்தில் திரு. எம். பக்தவத்சலனார் கல்வியமைச்சரானார். இந்த மாறுதலால் அரசின் தமிழ் பயிற்சிமொழித் திட்டம் தொடர்ந்து அமுல் படுத்தப்படாமற் போய்விடுமோ என்ற ஐயம் என்போன்றவர்களுக்கு ஏற்பட்டது.

# ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் பிரசாரம்

ஆளுங்கட்சியும் ஆட்சியின் முதல்வரும் மாறாத நிலையில் கல்வித்துறை கை மாறியதால் மட்டுமே அரசின் கல்விக் கொள்கை மாறுவதற்கு நியாயமில்லை யாதலால், புதிய கல்வி யமைச்சரும், "தமிழ் பயிற்று மொழித் திட்டம் தொடர்ந்து அமுல் நடத்தப்படும்" என்று முதலில் அறிவித்தார். ஆனால், கல்வித் துறைக்குப் பொறுப்பேற்ற ஒரு திங்களுக்குள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட வகையில் பலமுறை பயிற்சி மொழி பற்றிக் கருத்துக்கள் வெளியிட்டார். மொத்தத்தில் தமிழ்ப் பயிற்று மொழித் திட்டத்தில் முந்தைய கல்வியமைச்சர் காலத்தில் அரசு காட்டிய ஆர்வம் தொடர்ந்து காட்டப்பட மாட்டாது என்பது புலனானது.

"தமிழ் பயிற்றுமொழி விஷயத்தில் அரசின் கொள்கையில் மாறுதல் எதுவும் இல்லை" யென்று புதிய கல்வியமைச்சர் திட்டவட்டமாகத் தெரிவித்தா ரென்றாலும், "விரும்பாத கல்லூரிகள்—மாணவர்கள் மீது அத்திட்டம் திணிக்கப்பட மாட்டாது" என்றும் அவர் கூறினார். அத்துடன், ஆங்கில மொழியைப் புறக்கணிப்பதிலுள்ள "கேடுகளை" அடிக்கடி வருணித்து அபிப்பிராயம் தெரிவிக்கலானார்.

மொத்தத்தில் பழைய கல்வியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம், "1963—64ஆம் கல்வியாண்டில் அனைத்துக் கல்லூரிகளிலும் பி. ஏ. படிப்புக்குத் தமிழ் பயிற்றுமொழி யாக்கப்படும்" என்று பிரகடனம் செய்திருந்ததை அரசு முழு அளவில் அமுல் நடத்தாதென்ற நிலை ஏற்பட்டது.

## சந்திப்பு

இது எனக்கு மிகுந்த வேதனையைத் தந்தது. பெரியவர் பக்தவத்சலனாரும் நானும் நீண்ட காலம் காங்கிரஸ் கட்சியிலிருந்து தோழமை புணர்வுடன் தொண்டாற்றியவர்கள். ஆகஸ்டுக் கிளர்ச்சியின்போது வட புலத்திலுள்ள அமராவதிச் சிறையில் ஓராண்டு காலம் அடுத்தடுத்த அறையில் அடைபட்டிருந்தவர்கள். ஆதலால், அந்த நட்புணர்ச்சியுடன் தமிழரசுக் கழகத்தின் சார்பில் அவரை யணுகி உரையாடிப் பயிற்சிமொழி விஷயத்தில் ஏற்கெனவே அரசு அறிவித்த உறுதி மொழியை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டேன். ஆனால், மனத்துக்குத் திருப்தியளிக்கும் வகையில் அந்தப் பெரியவரிடமிருந்து எனக்குப் பதில் கிடைக்கவில்லை. ஒரே அடியாக பயிற்றுமொழிக்குரிய இடத்திலிருந்து ஆங்கிலத்தை அகற்றி விடுவதை அவர் விரும்பவில்லை என்பது எங்கள் சந்திப்பின்போது எனக்குப் புலப்பட்டது.

திரு. சி. சுப்பிரமணியம் காலத்தில் பயிற்சிமொழி பற்றிய வாதப் பிரதிவாதத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளாதிருந்த தமிழக முதல்வர் திரு. கு. காமராசரும் திரு. பக்தவத்சலனாரின் மாறுதல் நிலையை ஆதரித்து வெளிப்படையாகவே அடிக்கடி அபிப்பிராயம் தெரிவிக்கலானார். அவரது இந்தப் போக்கு எனக்கு அதிர்ச்சியைத் தந்தது.

## அச்சமே காரணம்!

ஆங்கிலத்திற்குப் பதிலாகத் தமிழைப் பயிற்றுமொழியாக்குவதற்குள்ள தடைகளை நான் அறியாதவனல்ல. திரு சி. சுப்பிரமணியமும் அவற்றை அறிந்திருந்தார். அந்தத் தடைகளை அகற்றவும் ஆக்க வழியில் செய்ய வேண்டியவற்றையெல்லாம் அவர் செய்து வைத்திருந்தார். ஆயினும், ஆங்கில தீவிரவாதிகள் காட்டிய எதிர்ப்பு முதல்வருக்கும் புதிய கல்வியமைச்சருக்கும் அச்சத்தைத் தந்திருக்கலாம் அந்த எதிர்ப்பைப் புறக்கணித்து தமிழைப் பயிற்றுமொழி

யாக்கும் திட்டத்தை அமுல் நடத்துவதால் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு பாதிக்கப்பட்டு விடும் என்றும் அவர்கள் அஞ்சியிருக்கலாம் ஆங்கிலம் பயிற்று மொழியாக இருப்பது அகற்றப்படுவதால் கேடு நேரக் கூடுமென்றும் அவர்கள் உண்மையிலேயே நம்பியிருக்கலாம். அவர்கள் தமிழுக்கு வளர்ச்சி தர விரும்பாதவர்கள் என்று நான் சொல்ல மாட்டேன். இதனால், தமிழ்ப் பயிற்றுமொழித் திட்டத்திற்கு பொது மக்களுடைய ஆதரவைத் திரட்டுவதன் மூலந்தான் அவர்களுடைய போக்கில் மாறுதல் ஏற்படுத்த முடியுமென்று நான் கருதினேன்.

தமிழ் பயிற்சி மொழித் திட்டத்தை மாறுதல் எதுவுமின்றி அமுல் நடத்துமாறு அரசை வற்புறுத்தி மாநாடுகளும் பொதுக் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடத்துமாறு தமிழரசுக் கழகக் கிளைகளுக்கு ஆணை பிறப்பித்தேன். இக் கிளர்ச்சியில் கல்லூரி மாணவர்களும் தமிழ் மன்றங்களும் ஈடுபட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன். சர்வோதய மண்டல், சர்வ சேவா சங்கம், பி. சோ. கட்சி, கம்யூனிஸ்டுக் கட்சி ஆகிய அமைப்புகளைச் சார்ந்தவர்களும், தனிப்பட்ட காங்கிரஸ் பிரமுகர் பலரும் தமிழ் பயிற்சி மொழிக் கிளர்ச்சிக்கு ஆதரவளிக்க முன் வந்தனர்.

## கிளர்ச்சி!

"ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு" என்ற பெயரிலேயே மாநாடுகளும் பொதுக் கூட்டங்களும் எங்கும் நடந்தன. குடந்தை மூர்த்தி கலையரங்கு, திருச்சி தேவர் மண்டபம், மதுரை காந்தி மியூசியம், கோவை பிரசிடெண்ட் ஹால், சென்னை கோகலே மண்டபம் ஆகியவற்றில் "ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு மாநாடு" தமிழரசுக் கழகத்தின் பெயராலேயே நடத்தப் பெற்றன ஆம்; "ஆங்கில ஒழிப்பு" என்ற பெயரை நான் விரும்பாததால், "ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு" என்ற பெயரைப் பயன்படுத்தச் செய்தேன்.

ஆலைத் தொழிலாளர் வாழும் பிரதேசமான சூளை (சென்னை), மதுரை, ரெயில்வே தொழிலாளர் வாழும் பகுதியான பெரம்பூர் (சென்னை), பொன்மலை (திருச்சி) ஆகிய பகுதிகளிலெல்லாம் அடிக்கடி ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் பொதுக் கூட்டங்கள் கிளைக் கழகங்களால் நடத்தப்பட்டன.

*பிரசார நூல்கள்*

கல்லூரிகளில் பயிற்சி மொழியாக ஆங்கிலம் நீடிப்பதால் விளையும் கேடுகளை விளக்கி அடுத்தடுத்துப் பல நூல்களை எழுதி வெளியிட்டேன். அவை வருமாறு:

(1) பாரதியும் ஆங்கிலமும்
(2) காந்தியடிகளும் ஆங்கிலமும்
(3) தமிழா, ஆங்கிலமா?
(4) தமிழும் கலப்படமும்
(5) ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு வரலாறு
(6) மொழிச் சிக்கலும் மாநில சுயாட்சியும்
(7) இன்பத் தமிழா, இந்தி—ஆங்கிலமா?

பயிற்சி மொழிப் பிரச்னையை யொட்டி கோவை "கலைக் கதிர்" பத்திரிகையின் சார்பில் சிறப்பு மலர் ஒன்றும் வெளி விடப் பெற்றது.

*அடக்குமுறை*

கல்வியமைச்சரை ஆதரித்து "பயிற்சி மொழிப் பிரச்னை" என்ற சிறு நூலொன்று தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் வெளியிடப் பெற்றது. இந்தப் பிரச்னையில் தமிழரசுக் கழகத்தாரின் நடவடிக்கைகள் நாளடைவில் தீவிரப்படலானது. தமிழ் நாட்டில் கல்வியமைச்சர் செல்லுமிடந்தோறும் அரசின் பழைய தமிழ் பயிற்சி மொழித் திட்டத்தை முழு அளவில் அமுல் நடத்தக் கோரி அவருக்

கெதிரே தமிழரசுக் கழகக் கிளைகள் ஆர்ப்பாட்டம் நடத்தின. இதனால், நூற்றுக்கணக்கான தோழர்கள் கைது செய்யப் படுவதும் பின்னர் விடுதலைசெய்யப் படுவதுமான அடக்கு முறைகளும் ஆங்காங்கே நடைபெற்றன. சில தோழர்கள் இரவு நேரங்களில் போலீஸ் வான்களில் ஏற்றப்பட்டு, நெடுந் தொலைவிலுள்ள காடுகளில் கொண்டு போய் விடப்பட்டனர். சில நகரங்களில் முதலமைச்சருக்கு எதிரே ஆர்ப்பாட் டங்கள் நடைபெற்றன. இதனால், மொழிப் பிரச்னையானது நான் விரும்பாத வகையில் அரசியல் வண்ணம் பெற்று விட்டது.

தமிழைப் பயிற்றுமொழி யாக்குவதற்கு ஆதரவாக தமிழரசுக் கழகம் நடத்திய கிளர்ச்சிக்கு மாணவருலகில் அதிக ஆதரவு கிடைத்தது கோவை, மதுரை, சென்னை ஆகிய பெரு நகரங்களில் மாணவர்கள் தாங்களே நேரடி யாகக் கிளர்ச்சி நடத்தினர்.

இந்த நிலையில் 1962 அக்டோபரில் சீனப் படையெடுப்பு காரணமாக, பயிற்சி மொழிக் கிளர்ச்சியைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்து, தேசப் பாதுகாப்புப் பிரசாரத்தில் தமிழர சுக் கழகம் ஈடுபட்டது.

சீனப் படையெடுப்பு அபாயம் சரியாக ஒரு வாரத்திற் குள் நீங்கிவிட்டது. ஆயினும், தேசிய ஒருமைப்பாடு—தேசப் பாதுகாப்புபற்றிய பிரசாரம் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்று மத்திய அரசு அறிவித்தது. சீனப் படை யெடுப்பையொட்டி பிறப்பிக்கப்பட்ட "நெருக்கடி நிலைமைப்" பிரகடனமும் நீடித்தது. இதனால், தமிழரசுக் கழகம் தமிழக அரசின் சார்பில ஏற்பாடு செய்யப்பட்ட தேசப் பாதுகாப்புப் பிரசாரத்தில் முழு அளவில் பங்கு கொண்டது.

ஆனால், ஆங்கில ஆதரவாளர்கள் திரும்பவும் பயிற்சி மொழிப் பிரச்னை பற்றிய கருத்துப் போரைத் தொடங்கினர். அதனால், ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக் கிளர்ச்சியைத் திரும்ப

வும் தொடங்கியாக வேண்டிய கட்டாயச் சூழ்நிலை உருவாயிற்று.

*புகை நடுவினில் தீ*

9—12—62 அன்று சென்னை லயோலா கல்லூரியில் "தேசிய ஒருமைப்பாடு—தேசப் பாதுகாப்பு"ப் பிரசார மாநாடு ஒன்று அறிஞர் அண்ணாவின் தலைமையில் நடத்தப் பெற்றது. அதில் கலந்துகொண்டு பேசிய மூதறிஞர் ராஜாஜியும் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் ஏ. எல். முதலியாரும் தேசப் பாதுகாப்புக்கு ஆங்கிலம் இன்றியமையாது தேவைப்படுவதாகக் காரணம் காட்டி, "எங்கும் எதிலும் ஆங்கிலமே நீடிக்க வேண்டும்" என்று பேசினர்.

*கல்லூரி முதல்வர்கள் மாநாடு*

தமிழக அரசும்—அதாவது, தமிழகக் கல்வித் துறையும் ஆங்கில ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் "திருப்பணி"யில் தீவிரங் காட்டியது. கல்வியமைச்சரவர்கள், 15—1—63-ல் தமிழகத்திலுள்ள அனைத்துக் கல்லூரிகளின் முதல்வர்கள் கொண்ட "அந்தரங்க" மாநாடு ஒன்றைச் சென்னையில் நடத்தினர்.

அம்மாநாட்டை 15—12—62-ல் நடத்தப் போவதாக கல்வியமைச்சர் அறிவித்தபோது அதன் முன்பு அரசின் கல்விக் கொள்கையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாகத் தமிழரசுக்கழகம் அறிவித்திருந்தது அதனாலோ என்னவோ, அந்த மாநாடு கடைசி நேரத்தில் தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப் பட்டது.

*முடிவை மாற்ற முடிவு*

இப்போது, ''நெருக்கடி நிலைமை" நடைமுறையிலிருந்த சூழ்நிலையில் அந்த மாநாடு அந்தரங்கமாக நடத்தப்

பெற்றது. முதல்வர்கள் மாநாட்டிலே, "1963—64 ஆம் கல்வி ஆண்டில் அனைத்துக் கல்லூரிகளிலும் பி ஏ. பட்டப் படிப்புக்குத் தமிழைப் பயிற்சிமொழி யாக்குவது என்று அரசு முன்பெடுத்த முடிவு நடைமுறை சாத்திய மற்றதாதலால், அது கைவிடப்படுகிறது" என்ற பொருள்பட ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஆயினும், கோவையில் 3 கல்லூரிகளில் தமிழ் பயிற்று மொழியாக்கப்பட்டுள்ளது நீட்டிக்கப்படுமென்றும், ஏதேனும் ஒரு கல்லூரியின் நிர்வாகம் விரும்பினால், 15க்குக் குறையாத மாணவர்கள் முன் வந்தால் பி. ஏ. பட்டப் படிப்புக்கு மட்டும் தமிழைப் பயிற்றுமொழி யாக்குவதற்கு அனுமதி அளிக்கப்படும் என்றும் கல்லூரி முதல்வர்கள் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

## 3ஆம் வகுப்பில் ஆங்கிலம்

முதல்வர்கள் மாநாட்டையடுத்து, தமிழக சட்ட மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு இயங்கும் கல்விக் குழுவும் கூடி முதல்வர்கள் எடுத்த முடிவிற்கு ஆதரவு அளித்தது. இந்தக் குழு மீது ஆட்சிக்குச் செல்வாக்குண்டு.

ஆங்கில ஆதிக்கம் நீடிக்க ஆதரவு காட்டும் போக்கு பயிற்சி மொழிப் பிரச்னையோடு நிற்கவில்லை ஆங்கிலம் பயிற்சி மொழியாக நீடிப்பதற்கு ஆதரவும் எதிர்ப்பும் ஏற்பட்டு, அது காரணமாக ஒரு கருத்துப் போர் நிகழ்ந்து வந்த நேரத்திலே, ஆரம்பப் பள்ளிகளில் ஆங்கிலத்தைத் திணிக்கும் நடவடிக்கையும் அரசால் எடுக்கப்பட்டது.

## காந்தீயக் கல்விக்குச் சீட்டு!

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஆரம்பப் பள்ளிகளில் 3வது வகுப்பிலேயே ஆங்கில மொழிப் போதனை ஆரம்பமானது. பால் மணம் மாறாத பாலர்கள் கல்வி பயிலும் ஆரம்பப் பள்ளிகளில் அன்னிய மொழிக் கல்வியைப்

புகுத்தக் கூடாதென்பது காந்தியடிகளின் கொள்கை. காங்கிரசும் அதை ஏற்றது. அதன்படி, திரு. டி. எஸ். அவினாசி லிங்கம் செட்டியார் கல்வியமைச்சராக இருந்தபோது, அவரால் ஆரம்பப் பள்ளிகளிலிருந்து ஆங்கிலக் கல்வி அகற்றப்பட்டு, உயர்நிலைப் பள்ளிகளில் தொடங்கப்பட்டது.

பின்னர், திரு. சி. சு. கல்வியமைச்சராக இருந்த போதே 5ஆம் வகுப்பில் ஆங்கிலமொழிப் போதனை புகுத்தப் பட்டு, அடுத்த ஆண்டில் 4ஆம் வகுப்பிற்கும் விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டது. திரு. பக்தவத்சலனார் கல்வியமைச்சராக வந்த பின் அது நடைமுறைக்கு வந்தது. அடுத்து, 1963ல் 3ஆம் வகுப்பிலும் ஆங்கில மொழிக் கல்வி திணிக்கப்பட்டது. ஆம்; பிரிட்டிஷ் காலத்திய நிலையில் ஆங்கிலக் கல்வி முறை அமுலுக்கு வந்தது.

## ஹையர்கிரேடு ஒழிப்பு

5ஆம் வகுப்பில் ஆங்கிலக் கல்வி புகுத்தப்பட்டபோது, கல்லூரிகளில் தமிழே போதனை மொழியாக்கப்படுவதால் மாணவர்களுடைய ஆங்கில மொழி அறிவின் தரம் குறைந்து விடுமென்றும், அதனை ஈடு செய்யவே 3ஆம் வகுப்பு தொடங்கியே ஆங்கிலக் கல்வி போதிக்க வழி செய்யப்படுவதாகவும் சமாதானம் சொல்லப்பட்டது. ஆனால், கல்வியமைச்சகம் கைமாறி, அனைத்துக் கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்று மொழியாக்கும் திட்டம் கைவிடப்பட்ட நிலையிலும் 3 ஆம் வகுப்பிலே ஆங்கிலக் கல்வியைப் புகுத்தியது கொடுமையினும் கொடுமையாகும்.

ஆரம்பப் பள்ளிகளில் ஆங்கிலக் கல்வியைப் போதிக்கத் திறமையற்றவர்களெனக் காரணம் காட்டப்பட்டு, ஹையர் கிரேட் ஆசிரியர் பயிற்சியை அடியோடு கைவிட்டு, செகண்டரி கிரேடு ஆசிரியர்களையே ஆரம்பப் பள்ளிகளுக்கு நியமிப்பதென்றும் அரசு முடிவு செய்தது.

26—7—64ல் தமிழரசுக் கழகச் செயற்குழு சென்னையில் கூடி, கல்லூரிப் பயிற்சிமொழி விஷயத்தில் தமிழக அரசு மேற்கொண்ட விரும்பத் தகாத முடிவுகளை எதிர்த்துப் போராடுவது பற்றி ஆலோசனை செய்தது.

## தரும சங்கடம் !

உண்மையில், பயிற்சிமொழிப் பிரச்னையில் அரசுக்கு எதிராக ஒரு போராட்டம் தொடங்குவது என்பது என் மனத்திற்கு மிகுந்த வேதனையளிப்பதாக இருந்தது. தமிழ் வழங்கும் பிரதேசம் தனி மாநிலமான பின்னர் "தமிழக அரசு" என்பது தமிழரால் இயக்கப் படுவதாகவே இருந்து வருகிறது. தமிழின் மூலமே மாணவ—மாணவிய ருக்குக் கல்வியளிப்பது தமிழரால் நடத்தப்படும் அரசின் தவிர்க்க முடியாத கடமையாகிறது. இந்தக் கடமையி லிருந்து அரசு தவறி விட்டது என்பதை உலகறிய விளம்பரப் படுத்தக் கிளர்ச்சி நடத்துவது எனக்கு எப்படி மகிழ்ச்சி தருவதாக இருக்கும்?

தமிழினத்தை ஒன்றுபடுத்துவதே எனது உயிர் மூச்சான கொள்கையாக இருந்து வருகிறது. இந்நிலையில், தமிழ் மொழி காரணமாக தமிழரிடையே பிளவு ஏற்படுவதை என் மனம் விரும்பவில்லை.

காங்கிரஸ் கட்சியும் அதன் செல்வாக்கிலிருந்த மாநில— மத்திய அரசுகளும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் தமிழ் இனத்தாரின் நல்வாழ்வுக்கும் எவ்வளவோ சட்டதிட்டங்களை அமுல் நடத்தியுள்ளன.

தனிப்பட்ட முறையில் என்னிடம் தமிழக அரசும், திரு. கு. காமராசர், திரு. எம். பக்தவத்சலனார் ஆகிய பெரியவர்களும் அன்புடன் நடந்து கொண்ட நேரம் அது. நான் 1964 சனவரியில மலேசியா புறப்பட்டபோது, எனக்கு மயிலை புது உட்லண்ட்ஸ் ஓட்டலில் தமிழரசுக் கழகத்தார் நடத்திய வழியனுப்பு விருந்துபசாரத்தில் ராஜாஜி, முதல்வர்

பக்தவத்சலனார், காங்கிரஸ் தலைவர் காமராசர் ஆகியோர் கலந்துகொண்டு என்னை அன்புடன் பாராட்டி எனக்கு வாழ்த்து கூறி வழியனுப்பினர்.

## ஒரே கட்சி!

காங்கிரசை விட்ட பின்னரும் நான் அந்த மாபெரும் தேசிய ஸ்தாபனத்தின் நலனை விரும்புபவனாகவே இருந்தேன். காங்கிரஸ் ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்துவது என்னையே நான் அவமதித்துக் கொள்வதாகும் என்றும் நான் நம்பினேன். தமிழரசுக் கழகம் தமிழ் மாநில அளவில் செயல்படும் ஓர் இயக்கம். அது பார்லிமெண்டரி அரசியல் கட்சி அல்ல. அதனால், அனைத்திந்திய அரசியலில் அது விரும்பும் ஒரே அரசியல் கட்சி அன்றும் காங்கிரசாகத்தான் இருந்தது. ஆகவே, காங்கிரஸ் ஆட்சிக்குப் பலவீனம் ஏற்படுத்தாத வகையில் கல்வி அமைச்சருக்கு எதிராக ஓர் அடையாள பூர்வமான நடவடிக்கையை எடுக்க முடிவு செய்யுமாறு செயற்குழுவுக்கு ஆலோசனை கூறினேன்.

அதன்படி, கல்வியமைச்சர் பொது நடவடிக்கைகளில் கலந்து கொள்ளும்போது அரசின் கல்விக் கொள்கையை ஆட்சேபிக்கும் வகையில் மிகவும் அமைதியான முறையில் கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்வதெனச் செயற்குழு தீர்மானித்தது. இந்த ஆர்ப்பாட்டமானது எந்த வகையிலும் நடைமுறையிலுள்ள எந்தச் சட்டத்தையும் மீறுவதாக இருக்கக்கூடாது என்றும் செயற்குழு தெளிவுபடுத்தியது.

இந்த நடவடிக்கையின் அவசியத்தைப் பொது மக்களுக்கு விளக்கிக் கூற ஆகஸ்டு 6 முதல் 12 வரை ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு வாரம் கொண்டாடுவதென்றும் செயற்குழு முடிவெடுத்தது.

## பத்திரிகை உலகம்

செயற்குழுவின் இந்த முடிவுகள் ஆங்கில, தமிழ் நாளேடுகளி லெல்லாம் பெரிய தலைப்புகள் தந்து பிரசுரிக்கப்

பட்டன. ஆம்; நான் எதிர்பார்த்ததைவிடவும் செயற்குழு வின் முடிவுக்கு நாளேடுகள் முக்கியத்துவம் தந்தன.

காங்கிரஸ் நாளேடான 'நவ சக்தி' ஒன்று மட்டும் 'ம. பொ. சியின் புதிய மிரட்டல்' என்ற தலைப்புத் தந்து எதிர்ப்புணர்ச்சியை வெளிப்படுத்தியது.

ஆங்கில நாளேடான "இந்து"வில் செயற்குழுவின் தீர்மானத்தை ஆதரித்துச் சில கடிதங்களும், எதிர்த்துப் பல கடிதங்களும் பிரசுரிக்கப்பட்டன.

மற்றொரு ஆங்கில நாளேடான "இந்தியன்எக்ஸ்பிரஸி"ல் செயற்குழுவின் முடிவைக் கடுமையாகக் கண்டித்துத் தலையங்கம் எழுதப்பட்டது.

'மாலை முரசு' 27-7-64 இதழில் "ம.பொ சியின் போர்க் கொடி" என்னும் தலைப்பிட்டு எழுதப்பட்ட நீண்ட தலையங்கத்திலே, கழகச் செயற்குழுவின் முடிவுக்கு ஆதரவு தரப் பட்டது. அது வருமாறு!

"ம. பொ. சிவஞானம் போராட்டம் துவக்க விருக்கிறார். கடுகு சிறுத்தாலும் காரம் போகாது என்பார்கள். அதுபோல, ம. பொ. சிவஞானம் உருவத்தில் சிறியவரானாலும் போராட்டத்தில் தீவிரமாக இருப்பார்.

"ம. பொ. சி. களத்தில் இறங்குகிறார். "தமிழ் பாட மொழித் திட்டத்தைக் கைவிடாதீர்" என்று கோரிப் போராட்டம் நடத்தத் திட்டமிட்டிருக்கிறார். தமிழ் மக்கள் அனைவரும் இதை வரவேற்பார்கள். தமிழை ஆட்சி மொழியாக்குகிற திட்டம் தூய்மையானதாக இருந்தால் ஏன் தமிழ் பயிற்சி மொழித் திட்டத்தைக் கை விடுகிறார்கள்? இதற்காக அதிகமாகச் செலவழித்து விட வில்லையே? தமிழ் படித்த மாணவர்கள் வேலை கிடைக்காது என்று தெருவில் அலைந்தாலும், தமிழை எடுத்துப் படிக்க மாணவர்கள் தயங்குவதில்லையே? பின் ஏன் பணத்தை நிறுத்தினார்கள்?

"அரசாங்கம் பதில் சொல்ல வேண்டிய நேரம். ம. பொ. சி. அதற்கான சூழ்நிலையை உண்டாக்குகிறார். உடனடியாக இந்தப் போர்ப்படலம் ஏற்பட்ட பின்னர் தான் பிரச்சினைக்கு வழி ஏற்படும்."

அரசியல் முதறிஞரான திரு. கே. சந்தானம் (அப்போது நாடாளு மன்ற உறுப்பினர்) அவர்கள், "மெயில்" பத்திரிகை 30-7-64 இதழில் பயிற்சி மொழி பற்றி எழுதிய சிறப்புக் கட்டுரையில்,

"தமிழ்மொழியின் எதிர்காலம்பற்றித் திரு.ம.பொ. சிவஞான கிராமணியாருக்குள்ள ஆர்வத்தில் நானும் பங்கு கொள்கிறேன். ஆனால், பொதுஜனக் கிளர்ச்சியின் மூலமோ, சட்ட மறுப்பின் மூலமோ நிர்ப்பந்தப்படுத்த அவர் முயல்கிறார். அதனை நான் ஆதரிப்பதற்கில்லை."

என்று குறிப்பிட்டார்.

அப்போது இந்தியக் குடியரசுக் கட்சியின் புகழ்மிக்க தலைவராக விளங்கிய திரு. என். சிவராஜ் எம். பி. அவர்கள் தமிழரசுக் கழகச் செயற் குழுவின் முடிவைக் கண்டித்தும் கல்லூரிகளில் ஆங்கிலமே போதனை மொழியாக நீடிக்க வேண்டுமென்று வற்புறுத்தியும் பத்திரிகைகளில் அறிக்கை விடுத்தார்.

அப்போது காங்கிரஸ் கட்சியை ஆதரித்துவந்த தி. க. தலைவர் ஈ. வே. ரா அவர்கள்,

"ஜனநாயக சோஷலிசத்தைச் செயல்படுத்துவது தான் இப்போதைய அவசரத் தேவை; பயிற்சி மொழியை மாற்றுவது அல்ல. தோழர் ம. பொ. சி. தாம் நடத்துவதாக உத்தேசித்துள்ள கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தைக் கைவிடுவது நலம்."

என்று 'விடுதலை'யில் எழுதினார்.

6—9—64 "கல்கி" இதழில் 'என்ன சேதி?' என்ற பகுதியில் எழுதப்பட்டது வருமாறு:

"தமிழ் மொழியிடம் நமக்குள்ள பற்றையும் பக்தியையும் வார்த்தைகளில் வெளியிட வேண்டிய அவசியம் இல்லை. துரதிர்ஷ்டவசமாக, முன்பு "தாய் மொழிப் போதனை" என்று கிளர்ச்சி செய்தவர்கள் இப்போது மீண்டும் தீவிரமடைந்திருக்கிறார்கள்."

## அரசின் பணிவு

தமிழரசுக் கழகச் செயற்குழுவின் முடிவுக்கு உடனடியாகச் சிறிது பலன் கிடைத்தது. கல்வியமைச்சர் திரு. பக்தவத்சலனார் செய்தி நிருபர்களைக் கூட்டி வைத்துக் கீழ் வருமாறு அறிக்கை தந்தார்:

"ஆங்கிலம் பயிற்சி மொழியாக இருப்பது அகன்றால், அந்த இடத்திற்குத் தமிழ்தான் வரும்.

"தமிழ் போதனா மொழித் திட்டப்படி படிக்க முன் வருவோருக்கு ஏற்கெனவே தந்து இடையில் நிறுத்தப்பட்ட சலுகை திருப்பவும் தரப்படும்.

"தமிழைப் போதனா மொழியாக ஏற்றுப் படித்துப் பட்டம் பெறுவோருக்கு உத்தியோகம் அளிப்பதில் அரசு சலுகை காட்டும்."

இந்த அறிவிப்புக்குப் பின் நான் கல்வியமைச்சரைச் சந்தித்துப் பேசி, அனைத்துக் கல்லூரிகளிலும் பட்டப் படிப்புக்குத் தமிழைப் பயிற்று மொழியாக்குவதென்ற அரசின் பழைய முடிவு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதே யொழிய, அடியோடு கைவிடப்படவில்லையென்று அரசு அறிவிக்குமானால் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்ட முடிவைக் கழகம் கைவிடக் கூடுமென்று கூறினேன். எனது யோசனையைக் கல்வியமைச்சர் ஏற்கவில்லை. அதனால், கழகம் தனது முடிவை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது.

தமிழ் நாட்டின் பிரதான நகரங்களில் ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு மாநாடுகளை மீண்டும் நடத்துமாறும், அம் மாநாடு

களில் அனைத்துத் துறைகளிலும் ஆங்கில ஆதிக்கத்தை அகற்றுமாறு கோரும் தீர்மானத்தை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் தமிழரசுக் கழகக் கிளை களுக்குத் தலைமைக் கழகம் சுற்றறிக்கை அனுப்பியது.

*சாக்ளாவின் கூற்று*

கழகச் செயற்குழுவின் முடிவுக்கு வட மாநிலத்திலும் எதிரொலி இருந்தது. அப்போது மத்தியில் கல்வியமைச்சராக இருந்த திரு சாக்ளா த அ. க. வின் போராட்ட முடிவை நினைவில் வைத்துக் கூறியதாவது:

"மாநில மொழிகளை பல்கலைக் கழகக் கல்விக் கட்டத்தில் பயிற்சிமொழி யாக்குவது குறித்து எச்சரிக்கை தேவை. பயிற்சி மொழி மாற்றத் திட்டத்தில் தேசத்தின் ஐக்கியத்தையும் நலனையும் பிரதானமாகக் கருத வேண்டும்.

"இத்துறையில் அவசரப்பட்டு நடவடிக்கை எடுப்பது தேசத்தின் ஐக்கியத்திற்குப் பாதகத்தை ஏற்படுத்தும். பயிற்சி மொழி மாற்றம் படிப்படியாக இருக்க வேண்டும். அதிக அவசரப்பட்டு மாற்றம் செய்ய லாகாது.

"விஞ்ஞான உலகில் மாறுதல்கள் மிகமிகத் துரித மாக நேருகின்றன. மிக உயர்ந்த கட்டத்தில் விஞ்ஞானப் பாடங்களுக்கு மாநில மொழிகளைப் பயன் படுத்துவது சாத்தியமாகாது.

"இந்தியாவுக்குள் இணைப்பு மொழியாக இந்தி இருக்கும். வெளி உலகுடன் தொடர்பு மொழியாக ஆங்கிலம் இருந்துவரும்.

"பல்கலைக் கழகக் கட்டத்தில் ஆங்கிலம் பயிற்சி மொழியாக இருந்து கொண்டிருக்கும் வரையில் பள்ளி களில் ஆங்கிலத்தின் தரம் உயர வேண்டும்."

[புது டில்லியில் நாடாளு மன்ற உறுப்பினர் அடங்கிய கூட்டம் ஒன்றில் திரு. சாக்ளா பேசி, 12-8-64 "தினமணி" யில் வெளியானது.]

*பிரசார நூல்*

கழகச் செயற்குழு போர்க் கொடியை உயர்த்திய பின் ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு வாரம் நூற்றுக்கணக்கான ஊர்களில் கொண்டாடப் பெற்றது. அதன் பின்னரும் மாநாடுகளும், பொதுக் கூட்டங்களும் தமிழ் நாடு முழுவதிலும் தொடர்ந்து நடத்தப் பெற்றன. சென்னை, மதுரை, குடந்தை, திருச்சி ஆகிய நகரங்களில் நடந்த மாநாடுகளின் நடவடிக்கைகள் நாளேடுகளில் சிறப்பாகப் பிரசுரிக்கப் பட்டன.

8—8—64ல் குடந்தையில் நடந்த மாநாட்டில் யான் எழுதிய "ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு வரலாறு" என்னும் நூல் தமிழரசுக் கழகத்தின் சார்பில் வெளியிடப் பெற்றது. இந்நூலில், தமிழ் நாட்டில் ஆங்கிலம் கல்லூரிகளில் பயிற்று மொழியாகவும், அரசாங்க அலுவலகங்களில் ஆட்சி மொழியாகவும் புகுத்தப்பட்ட நாளிலிருந்தே அதற்கு ஏற்பட்ட எதிர்ப்புகள் தொகுத்துத் தரப்பட்டன. மாயூரம் வேதநாயகம் பிள்ளை, டாக்டர் அனிபெசன்ட், திரு வி. க., டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர், மகாகவி பாரதியார், காந்தியடிகள், பாவேந்தர் பாரதிதாசன், கவிஞர் ரவீந்திர நாத் தாகூர் ஆகிய சான்றோர்கள் ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து வெளியிட்ட கருத்துக்கள் இந்நூலில் சுருக்கமாகத் தரப்பட்டன. இதன் பிரதிகள் பல்லாயிரக் கணக்கில் விற்பனையாயின.

*ராஜாஜியின் எதிர்ப்பு*

இந்தக் கட்டத்தில், மூதறிஞர் ராஜாஜி அவர்கள் தமிழரசுக் கழகத்தின் ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் பிரசாரத்திற்கு நேரடியாகவே எதிர்ப்புக் காட்ட முன் வந்தார்.

சென்னை சட்டக் கல்லூரியில் தி.மு.க. தலைவர் அண்ணாத் துரை அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கூட்டத்திலே,

> "ம. பொ. சி. என்னுடைய அருமை நண்பர்; நல்ல வீரரும் கூட. இந்தித் திணிப்பை அவர் ஆதரிக்கவில்லை. ஆனால், இந்தியை எதிர்ப்பதற்கு நம்மோடு சேர்ந்து செயல்பட அவர் மறுக்கிறார். ஆங்கிலம் நீடித்தால் தமிழ் அழிந்து விடும் என்று நண்பர் ம.பொ. சி. அஞ்சுகிறார். அவர் கட்டபொம்மன் ஸ்பிரிட்டில் செயல் படுகிறார்."

என்று பேசினார்.

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பேசுகையில், "அரைகுறையாகப் படித்தவர்கள், அதுவும் படிக்காதவர்களைச் சேர்த்து வைத்துக் கொண்டு, ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு என்ற பெயரில் கிளர்ச்சி நடத்துகிறார்கள்" என்றும் ராஜாஜி பேசியதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியானது

இந்தச் சுடு சொல்லுக்குப் பதிலளித்து எனது 'செங்கோலி'ல் எழுதினேன். அதன்பின், பச்சையப்பன் கல்லூரியில் தாம் பேசியது பத்திரிகைகளில் தவறாக வெளி வந்தது என்றும், என்னைத் தரக் குறைவாகக் குறிப்பிடுமளவுக்கு என்னிடம் தமக்குள்ள அன்பு பலவீனமானதல்லவென்றும் ராஜாஜி எனக்குக் கடிதம் எழுதினார்.

## மூதறிஞரின் அன்புரை

இது நிகழ்ந்த ஒரு மாதத்திற்குப் பிறகு—அதாவது, 4—10—64ல் சென்னை கோகலே மன்றத்தில் நான் எழுதிய "வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" என்னும் நூலின் மலிவுப் பதிப்பு வெளியீட்டு விழா நடைபெற்றது. அதிலே தாமே வலுவில் வந்து கலந்து கொண்டு என்னைப்பற்றி ராஜாஜி பேசியதை—'செங்கோல்' 14-10-64 இதழில் வெளியானதை—இங்கு தருகிறேன்:

"நம்முடைய தலைவர் சிவஞான கிராமணியார் அவர்கள் எனக்கு 30 அல்லது 32 வருஷங்களாகப் பழக்கம். ஆரம்பத்தில் எனக்கும் அவருக்கும் கொள்கைகளில் எந்தவிதமான பேதமும் கிடையாது. இன்று அனேக விஷயங்களில் கொள்கை மாறுபாடு ஏற்பட்டிருக்கிறது. கொள்கைகளில் ஒருமைப்பாடு இருந்திருக்குமானால் அப்போது எங்களிடையேயுள்ள அன்புக்கு விசேஷம் ஒன்றுமில்லை. கொள்கை வேறுபாடு இருக்கும்போதும் நாங்கள் மிகுந்த அன்பு கொண்டிருக்கிறோமே, அதுதான் விசேஷம்.

"சில இளைஞர்களுக்குச் சந்தேகம் ஏற்படலாம். தமிழரசுக் கழகம் வேறு; ராஜாஜி வேறு. அப்படியிருக்க, அவர் எதற்கு இங்கு வந்திருக்கிறார்? ஏதோ தாட்சண்யத்திற்கு வந்திருக்கிறார் என்று எண்ணலாம். உங்களுக்குச் சொல்லுகிறேன்; அன்பு விலை கொடுத்து வாங்கும் பொருள் அல்ல. அது தானாக உள்ளத்தில் தோன்ற வேண்டும் மாறாமலும் இருக்கவேண்டும். எங்களிடையே அப்படிப்பட்ட அன்பு இருக்கிறது. அதற்காக நான் அவருக்கு நன்றி செலுத்தலாம். அவரும் எனக்கு நன்றி செலுத்தலாம்.

"ம. பொ. சி. க்கும் எனக்கும் கொள்கை வேறுபாடு இருப்பதாகச் சொன்னேன். அதெல்லாம் உணர்ச்சியைப் பொறுத்தவை. உண்மையில் அவருக்கும் எனக்கும் வேறுபாடே கிடையாது. வேறுபாடு பாஷையில்தான். என்ன காரணத்தாலோ ஆங்கிலத்தின் பேரில் அவர்கள் (ம.பொ.சி) வெறுப்பு கொண்டிருக்கிறார்கள். இது, வள்ளலார் கொள்கைக்கே விரோதம் என்று சொல்லுவேன். எல்லா பாஷையும் ஒன்று போலத்தான். நான் இப்போது அவருக்கு உபதேசம் பண்ணவில்லை. என்னுடைய குறைகளுக்கு உங்களிடம் நான் சமாதானம் சொல்லிக் கொள்கிறேன்.

"ம. பொ. சி. யின் நூலைக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தார்கள். அதைப் படித்துப் பார்த்தேன். அதில் என்னைப் பற்றி ம. பொ. சி. சொல்லியிருக்கிறார்கள். என்

பெயர் இல்லை. என் வகையறுவைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மெக்காலே கல்வித் திட்டத்தைப் பற்றிச் சொல்லிவிட்டு,'ஆங்கிலம் படித்ததனால் நம்முடைய மக்கள் இரண்டுங்கெட்டான்களாகி விடுகிறார்களே, ஆங்கிலமும் சரியாக வருவதில்லை; தமிழும் சரியாகத் தெரிவதில்லையே' என்று சொல்லியிருக்கிறார்கள்.

"அந்த இரண்டுங் கெட்டான்களைக் கொண்ட பெரிய குடும்பத்தில் நானும் ஒருவன். என்னைப் போன்றவர்கள் இன்று வெளியிடுகின்ற அரிய ஆராய்ச்சி நூல் போன்ற ஒன்றை எழுத முடியாது என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

"ம. பொ. சி. யின்பாலுள்ள அன்பு காரணமாகவே இங்கு நான் வந்தேன். அவரை நான் வாழ்த்துகிறேன்."

## வேறுபட்டது ஏன்?

மூதறிஞர் ராஜாஜிக்கும் எனக்கும் ஆங்கில மொழி விஷயத்தில் ஆழமான கருத்து வேற்றுமை ஏற்பட்டது பிற்காலத்தில்தான். அந்த வேற்றுமையையும் அவர்தான் ஏற்படுத்தினார். அவர், பொது வாழ்வில் புகுந்த நாள் தொட்டு ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிராகவே செயல்பட்டு வந்தார். அந்த வகையில் நூல்களையும் கட்டுரைகளையும் ஏராளமாக எழுதியிருக்கிறார். அவர் முதலமைச்சராக இருந்தபோதுதான் உயர்நிலைப்பள்ளிகளில் ஆங்கிலத்திற்குப் பதில் தமிழ் போதனைமொழி யாக்கப்பட்டது என்பதும், "அடுத்து, கல்லூரிகளிலும் தமிழே போதனை மொழியாக்கப்படும்" என்று பிரகடனப்படுத்தப்பட்டது என்பதும் இங்கு மீண்டும் நினைவில் கொள்ளத் தக்கவையாகும்.

இவ்வளவிருந்தும், தமது மொழிக் கொள்கையில் ராஜாஜி ஏற்படுத்திக் கொண்ட மாறுதல் காரணமாக, அந்த மகானும் நானும் வெவ்வேறு திசைகளில் செல்ல வேண்டியவர்களானோம்.

## மொரார்ஜியின் ஆதரவு

அப்போது, "காமராசர் திட்ட"ப்படி மத்திய நிதியமைச்சர் பதவியைத் துறந்து காங்கிரசை வலுப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த திரு. மொரார்ஜி தேசாய், ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக் கிளர்ச்சி வலுப்பெற்றிருந்த நேரத்தில் தமிழகத்திற்கு வருகை தந்தார்.

அவர், 6—10—64ல் மதுரை மாவட்டத்திலுள்ள காந்தி கிராமத்தில் பேசுகையில், ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக் கிளர்ச்சிக்கு ஆதரவாக அபிப்பிராயம் கூறினர். அது வருமாறு:

"இந்தியைக் காட்டிலும் பழமையான மொழி தமிழ். ஆங்கில ஆட்சி தமிழின் முன்னேற்றத்தைத் தடுத்துவிட்டது.

"சுதந்திரம் பெற்று 17 ஆண்டுகள் கழித்தும் தமிழ் நாட்டில் தமிழ் மொழியே அரசாங்க அலுவலகங்களில் முழு அளவில் இன்னமும் பயன்படுத்தப்படவில்லை. இது குறித்து நான் வருந்துகிறேன்.

"மக்களில் 85 சதவிகிதத்தினர் ஆங்கிலந் தெரியாதவர்கள். அவர்களுக்குத் தெரியாத மொழியில் அரசாங்க நிர்வாகம் நடக்குமானல், அது எப்படி மக்கள் ஆட்சியாக இருக்க முடியும்?

"ராஜ்ய நிர்வாகம் அந்த ராஜ்ய மொழியிலேயே நடைபெற வேண்டும்; ராஜ்ய மொழிகளிலேயே கல்வி போதிக்கப்பட வேண்டும். அப்போதுதான் முன்னேற்றம் ஏற்படும்; ஒருமைப்பாடும் ஏற்படும்.

"ஆங்கிலம் தெரிந்தவர்கள்தான் படித்தவர்கள் என்று நினைப்பது தவறு. மந்திரியாக வேண்டுமென்றால், ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இதை காமராசர் புலப்படுத்திவிட்டார்."

[8—10—64 'தினமணி' மதுரைப் பதிப்பு]

தமிழக அரசு தனது முடிவை — அதாவது, அனைத்துக் கல்லூரிகளிலும் பி. ஏ. வகுப்பில் தமிழை மட்டுமே பயிற்சி மொழியாக்கும் திட்டத்தை எத்தகைய நிபந்தனையுமின்றி அமல் நடத்த மறுத்துவிட்டதால், முதலமைச்சருக்கு எதிரே கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் நடத்துவது என்ற முடிவை அமுல்படுத்தத் தமிழரசுக் கழகம் முனைந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தை 1964 ஆகஸ்டு தொடங்கி நான்கு மாத காலம் தொடர்ந்து மாநிலந் தழுவிய முறையில் கழகம் நடத்தியது.

கழகத் தோழர்களில் சுமார் 1000க்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் சிலர் மீது வழக்குகள் போடப்பட்டன. சிலர் தண்டனைக்காளானதும் உண்டு. இந்தப் போரிலே சென்னை, தஞ்சை, மதுரை, சேலம் ஆகிய நான்கு மாவட்டங்களும் முதலிடத்தைப் பிடிக்கப் போட்டி யிட்டன. மற்ற மாவட்டங்களிலும் போராட்டம் நடை பெற்றது.

தமிழரசுக் கழகம் நடத்திய போராட்டத்திற்குக் கொள்கையளவில் தி. மு. கழகம், கம்யூனிஸ்டு, சோஷலிஸ்டு ஆகிய கட்சிகள் தார்மீக ரீதியில் ஆதரவு அளித்தன.

அனைத்துக் கட்சிகளும் இந்தப் போராட்டத்தில் நேரடியாகவே கலந்துகொள்ளும் சூழ்நிலையை உருவாக்கும் பொருட்டு தி. மு. க. பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா, கம்யூனிஸ்டுத் தலைவர் திரு. எம். கல்யாணசுந்தரம் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தினேன். அவர்களும் என் கருத்துக்கு இசைவு தெரிவித்தனர்.

இந்நிலையிலே, 1965 சனவரி 26–ல் இந்திய அரசியல் அமைப்புச் சட்ட விதிகளின்படி இந்தி மட்டுமே மத்திய அரசின் பிரதான ஆட்சி மொழியாக அமலுக்கு வருகிறது என்ற பிரகடனம் டில்லியிலிருந்து வெளியானது.

இதனால், தமிழ்நாட்டில் பயங்கரமான அளவில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் வெடித்தது.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட அரசு எடுத்த நடவடிக்கைகள் காரணமாக மாநிலத்தின் பல பகுதிகளில் பலர் உயிரிழக்க நேர்ந்தது. இதனால், தமிழகத்தில் தொடர்ந்து சில நாட்கள் அராஜகம் தலைவிரித்தாடியது.

இறுதியில் அப்போதைய பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி கொடுத்த உறுதிமொழி காரணமாகவும், மத்திய அமைச்சர்கள் திரு. சி சுப்பிரமணியம், திரு ஓ. வி. அளகேசன் ஆகியோர் தாங்கள் வகித்த பதவிகளிலிருந்து விலகியதன் விளைவாகவும் தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போர் ஓய்வு பெற்றது.

எதிர்பாராத வகையில் மூண்டெழுந்த இந்தி எதிர்ப்புக் காரணமாக தமிழ்பயிற்சி மொழிப்போராட்டத்தை நிறுத்தியாக வேண்டிய கட்டாயம் தமிழரசுக் கழகத்திற்கு ஏற்பட்டது.

# பாரதி வைர விழா

தமிழ்நாடு அரசு திருவள்ளுவர், சி. சுப்பிரமணிய பாரதியார் ஆகிய கவிஞர்களுக்குச் சிறப்பு செய்வதிலே கவனஞ் செலுத்தியது காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே!

## *பேரவையில் திருவள்ளுவர்!*

தமிழக சட்டப் பேரவை கூடும் மண்டபத்திலே திருவள்ளுவர் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, அவரது அறிவுரைகளை யொட்டி சட்டப் பேரவை உறுப்பினர்கள் நடந்துகொள்ள அரசு வழி வகுத்தது. இது, 8—1—64 அன்று நிகழ்ந்தது. இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் திருவள்ளுவர் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, "அவர் இந்தியாவுக்கும் உலகம் முழுவதற்குமே சொந்தமானவர்" என்று கூறினார். இது நிகழ்ந்த நாளிலே திரு. எம். பக்தவத்சலனார் தமிழக முதல்வராக இருந்தாரென்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இன்றும் தமிழக சட்டப் பேரவை மண்டபத்தில் திருவள்ளுவரின் அழகிய பெரிய திருவுருவப்படம் இருந்து வரக் காண்கின்றோம். இன்றென்ன, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் நடத்தப்படும் சட்டமன்ற அரசியல் நடைமுறையில் இருக்கும்வரை தமிழக சட்டமன்ற மண்டபத்திலே திருவள்ளுவர் திருவுருவப்படம் இருந்து வருமென்று நம்பலாம். உலகெங்கும் ஜனநாயகமானது அஸ்தமித்துப் போனாலும், இந்தியாவில்—குறிப்பாக, தமிழ்நாட்டில் சட்டமன்றத்தோடு கூடிய ஜனநாயக அரசு நின்று நிலவுவது உறுதி.

தேசியக்கவி சி. சுப்பிரமணிய பாரதியாரின் புகழ் பரப்பவும் தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி நிலவிய காலத்

திலே அரசின் சார்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

## பாரதி கவிதைக்குத் தடை

பிரிட்டிஷாருக்கு பாரதப் பெருநாடு முழுவதும் அடிமைப்பட்டிருந்த காலத்திலே பாரதியாரின் பாடல்கள் அரசால் தடை செய்யப்பட்டிருந்தன. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பாரதியார் விழாவைக் கொண்டாடவும், பாரதியார் பாடல்களை மாணவர்கள் பாடி மகிழவும் முடியாத நிலை இருந்தது. 1937ல் அப்போதைய பெரிய சென்னை மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி தோன்றி, 1939 இறுதிவரை நடைபெற்றது. மூதறிஞர் ராஜாஜி பிரதமராக இருந்தார். ஆம்; அப்போது இந்தியா முழுவதற்கும் பிரதமர் இல்லாததால் 1935வது ஆண்டு அரசியல் சட்டப்படி மாநில முதல்வர்களிலே ஒவ்வொருவரும் தத்தம் மாநிலத்தின் 'பிரதமர்' என்று அழைக்கப்பட்டனர்.

சென்னை மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி தோன்றியதுமே பாரதியார் பாடல்கள் மீதிருந்த தடை அகற்றப்பட்டது. ஆனல் 1939ல் காங்கிரஸ் ஆட்சி அகன்ற பின்னர், திரும்பவும் பாரதியாரின் தமிழ் தடைக்குள்ளானது. தேசபக்தி வளர் வதைத் தடுப்பது பிரிட்டிஷாரின் குறிக்கோளாதலால் தேசியக் கவிதைகள் மீண்டும் அவர்களால் தடை செய்யப் பட்டன.

## தடை தகர்க்கப்பட்டது!

திரும்பவும் 1946ல் சென்னை மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி தோன்றி, அதையடுத்து 1947 ஆகஸ்டு 15ல் பாரதப் பெருநாடு முழுவதும் சுதந்தரம் பெற்று விட்டதால், பாரதி யாரின் பாடல்கள் மீதிருந்த தடை நிரந்தரமாக அகன்றது. அரசாலும், தனியாராலும் நடத்தப்படும் கல்வி நிலையங்

களிலே பாரதியார் விழாவைக் கொண்டாடவும், அவருடைய தேசியக் கவிதைகளை மாணவர்கள் பாடவும் வாய்ப்பு வழங்க ஆணை பிறந்தது. ஆம்; நாட்டின் விடுதலையோடு சேர்த்து பாரதியாரின் கவிதைக்கும் விடுதலை கிடைத்தது.

## *பாரதியாருக்கு வைர விழா*

1962 டிசம்பரில் தமிழகத்தில் திரு. கு. காமராசரை முதல்வராகக் கொண்டு இயங்கிய காங்கிரஸ் ஆட்சியானது பாரதியாரின் 81 ஆவது பிறந்த நாளை சென்னை நகரிலே மிகவும் சிறப்பாகக் கொண்டாடியது. தமிழ்க் கவிஞரொருவருக்கு அரசு அதிகார பூர்வமாக விழா எடுத்த அற்புதம் மூவேந்தராட்சிக் காலத்தில்கூட நிகழவில்லை. சரித்திரங் காணாத அந்தச் சாதனையை காங்கிரஸ் ஆட்சி புரிந்தது.

இந்த விழாவுக்கெனக் கல்வி அமைச்சர் திரு. எம். பக்தவத்சலனாரைத் தலைவராகவும், பிரபல நாவலாசிரியர் திரு. அகிலனைச் செயலாளராகவும் கொண்ட தனிக் குழு ஒன்றும் அமைக்கப்பெற்றது. அதிலே, தமிழகத்தின் புகழ் மிக்க அரசியல் தலைவர்கள், பத்திரிகாசிரியர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர் இடம் பெற்றனர்.

## *சீனப் படையெடுப்பு*

1962 அக்டோபரில் தீபாவளித் திருநாளன்று சீனப் பெருநாடு இமயப் பெருமலைமீது உரிமை கொண்டாடி, "எல்லைத் தகராறு" என்று சொல்லிக் கொண்டு இந்தியாவின் மீது படையெடுத்தது. அந்த நேரத்தில், இந்திய சமுதாயம் முழுவதுமே நாட்டைக் காக்க வீறிட்டெழுந்தது. வடகோடியிலுள்ள இமயத்தின் மீது உரிமை கொண்டாடித்தான் சீனம் படையெடுத்ததென்றாலும், தமது தாயகத்தின் வடக்கெல்லை இமயமலைதான் என்றெண்ணும் தேசபக்தத் தமிழர் சீனப் படையெடுப்பை முறியடிக்கச் சினங்கொண்டெழுந்தனர்.

அந்தச் சோதனைமிக்க நேரத்தில் பாரதியாரின் தேசியப் பாடல்கள் பயன்பட்டன. இமயத்தின் மீது உரிமை

கொண்டாட என்றேனும் ஒருநாள் சீனர் படையெடுக்கக் கூடும் என்று அனுமானித்து எழுதியதுபோல, 'இமயமலை எமதே' என்னும் உரிமை முழக்கங்களையும் தம்முடைய பாடல்களிலே கலந்து வைத்துள்ளார் பாரதியார்.

## போர்க் கோஷங்கள்

இதன் காரணமாக, சீனப் படையெடுப்பின்போது பாரதியாருக்குத் தனி மதிப்பேற்பட்டது தமிழர் மத்தியிலே! பாரதியாரின் கவிதைநடைப் போர்க் கோஷங்கள் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள் தமிழில் தமிழக அரசால் தயாரிக்கப்பட்டு தமிழ் நாடெங்கும் பரப்பப்பட்டன.

தமிழ் மொழியானது தான் தோன்றிய காலந் தொட்டு வாழையடி வாழையெனக் கவிஞர்களைத் தந்து வந்ததென்றாலும், அன்னியர் ஆக்கிரமிப்பை எதிர்க்கத் தேசபக்தியைத் தூண்டிவிட்டுப் பாடிய கவிஞன் பாரதி ஒருவன்தானே! அதனால், வேறெந்தக் கவிஞனுக்குமில்லாத வகையில் சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து மக்கள் போராடிக் கொண்டிருந்த நேரத்திலே பாரதியாருக்கு விழாக் கொண்டாடியது தமிழக அரசு.

டிசம்பர் 11, பாரதியார் பிறந்த நாள். அரசு அமைத்த விழாக்குழு, டிசம்பர் 9, 10, 11 ஆகிய மூன்று நாட்களிலும் விழாக் கொண்டாடத் திட்டமிட்டது. முதல் நாளன்று காலையிலே சென்னை அரசாங்கத் தோட்டத்திலுள்ள ராஜாஜி மண்டபத்தில் விழா தொடங்கியது.

## தமிழ்த் தீபம்!

அன்றுமாலை அதே மண்டபத்திலிருந்து மாபெரும் ஊர் வலம் பாரதியாருடைய மிகப் பெரிய உருவப்படத்துடன் புறப்பட்டுத் திருவல்லிக்கேணி கடற்கரையை அடைந்தது. அங்கு மாபெரும் பொதுக்கூட்டம் நடந்தது. அன்று கார்த்திகை தீபத் திருநாள். தமிழ் மறுமலர்ச்சிக்கும் அன்று

தான் தீபம் ஏற்றப்பட்டது. ஒரு தமிழ்க் கவிஞனுக்கு சென்னைக் கடற்கரையிலே அரசு விழா நடத்திய புதுமையை சென்னை மாநகரம் முதன் முதலாக அன்றுதான் கண்டது. அதற்குப் பின், 1968 ஜனவரி முதல் நாளிலே உலகத் தமிழ் மாநாட்டை யொட்டி பாரதியுள்ளிட்ட கவிஞர் பலருக்கு உருவச்சிலை திறக்கும் பெருவிழா அண்ணாவை முதல்வராகக் கொண்ட தி. மு. க. அரசால் சென்னைக் கடற்கரையில் நடத்தப்பட்டது.

பாரதியார் விழாவிலே முதல் நாள் காலை நிகழ்ச்சியில் டாக்டர் சி. பி. இராமசாமி ஐயர் தலைமை தாங்கினார். கர்நாடக முதலமைச்சர் நிஜலிங்கப்பா தொடங்கி வைத்தார். அன்று மாலை கடற்கரையில் நடந்த கூட்டத்திலே தமிழக முதல்வர் திரு கு. காமராசர் தலைமை வகிக்க, ஆந்திர முதல்வர் திரு என். சஞ்சீவி ரெட்டியார் சிறப்புரை யாற்றினார். டாக்டர் மு வரதராசனார், டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், வித்வான் கி. வா. ஜெகன்னாதன், அ. சீனிவாச ராகவன், அ ச ஞானசம்பந்தம் ஆகிய புலவர் களும், திரு. ப ஜீவானந்தம் உள்ளிட்ட அரசியல்தலைவர்களும் உரையாற்றினர்.

முதல் நாளில் கடற்கரையில் நடந்த பொதுக்கூட்டத் திலும், மூன்றும் நாளில் ராஜாஜி மண்டபத்தில் நடந்த கூட்டத்திலும் நானும் பேசினேன்.

ஔவை டி. கே. சண்முகம், திரைப்படப் பின்னணிப் பாடகர் டி. எம். சௌந்தரராசன், கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு, சங்கு. சுப்பிரமணியம், டி. கே. எஸ். கலைவாணன், பாரதியாரின் பேத்தியரிருவர் ஆகியோர் விழாவின் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாரதியார் பாடல்களை உணர்ச்சிப் பெருக்குடன் பாடினர்.

பாரதியார் விழா, மூன்றுவது நாளின் இறுதி நிகழ்ச்சி யாக "பாரதியாரின் போர்க்குரல்' என்று யான் நிகழ்த்திய சொற்பொழிவோடு வெற்றிகரமாக இனிது முடிவுற்றது.

தமிழ்ப் புலவன் பாரதியாரின் தேசியப் பாடல்கள் முன் எப்போதோ புகுந்துவிட்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை வெளியேற்றப் பயன்பட்டதோடு, பின்னால் புகுந்த சீனப் படைகளை வெளியேற்றுவதற்கும் பயன்பட்டதென்றால் அது தமிழ் மொழிக்கு பாரதியார் தேடிவைத்த பெருமையல்லவா!

## பொது உடைமை!

பாரதியாரின் கவிதை இலக்கியம் அவரது குடும்பத்தாரில் ஒன்றிருவருக்கே உரிமையாக இருந்தது. அதனால், நாடகங்களிலும், திரைப்படங்களிலும், இசைத் தட்டுகளிலும், பள்ளிகளுக்கான பாட நூல்களிலும் அந்தப் பாடல்களைத் தாராளமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலை இருந்து வந்தது.

ஏ வி எம். ஸ்டூடியோ உரிமையாளர் திரு. ஏ. வி. மெய்யப்ப செட்டியாரவர்கள் பாரதியார் பாடல்களைத் திரைப்படங்களிலும் இசைத் தட்டுகளிலும் பயன்படுத்துவதற்கான மொத்த உரிமையைப் பெற்றிருந்தார் இதற்காக, பாரதியாரின் குடும்பத்தாருக்கு ஓரளவு பொருள் கொடுத்தார்.

## 'பில்கணன்' மீது வழக்கு!

டி. கே. எஸ். நாடகக் குழுவினர் தங்களுடைய "பில்கணன்" திரைப்படத்தில் பாரதயாரின் பாடல் ஒன்றை திரு. ஏ. வி. எம். செட்டியாரிடம் முன் அனுமதி பெறாமலே பயன் படுத்தியிருந்தனர். அதனால், திரு. செட்டியார், டி. கே. எஸ். சகோதரர் குழுவினர் மீது உரிமைச் சட்டப்படி நடவடிக்கை எடுத்திருந்தார்.

இதனை ஒரு வாய்ப்பாகக் கொண்டு பாரதியார் பாடல்களைத் தேசவுடைமை யாக்குவதற்கு டி. கே. எஸ். சகோதரர்களில் ஒருவரான ஔவை டி. கே. சண்முகம் அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டார். தாம மேற்கொண்ட முயற்சி பற்றி அவரே கூறுகிறார், கேட்போம்:

"பில்கணன்" நாடகத்தில் "தூண்டிற் புழுவினைப்போல்" என்னும் மகாகவி பாரதியின் பாடலை நாங்கள் நாட்டியப் பாடலாக அமைத்திருந்தோம். அப்பாடல் பில்கணன் படத்திலும் பதிவு செய்யப்பட்டது.

"பாரதியின் பாடல்களை இசைத் தட்டுகளிலும் திரைப் படத்திலும் பதிவு செய்யும் உரிமை சட்டப்படி தம்மைச் சேர்ந்ததென்றும், ஆகவே, 'பில்கணன்' படத்திலிருந்து அப் பாடலை நீக்கிவிட வேண்டுமென்றும், அப்பாடலுடன் பில்கணன் படம் திரையிடப்படுமானால் தாம் நஷ்டஈடு கோரி நடவடிக்கை எடுத்துக் கொள்ள நேருமென்றும் நோட்டீசில் குறிப்பிட்டிருந்தது. வக்கீலின் யோசனைப்படி, பாரதி பாடல்கள் தமிழ் நாட்டின் பொதுச் சொத்தென்றும், அதற்குத் தனி மனிதர் உரிமை கொண்டாடுவதை ஒப்புக் கொள்ள முடியாதென்றும் நாங்கள் பதில் நோட்டீஸ் கொடுத்தோம்.

"சென்னையில் பாரதி பாடலை நாட்டின் பொதுச் சொத்தாக்குவது சம்பந்தமாகப் பேராசிரியர் வ. ரா., பரலி. சு. நெல்லையப்பர், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் ஆகியோரை நானும் என் ஆத்மசகோதரர் நாரண. துரைக்கண்ணனும் சந்தித்துப் பேசினோம். எங்கள் முயற்சிகள் வெற்றிபெற அப் பெரியார்கள் மூவரும் நல்லாசி கூறினார்கள்.

"வல்லிக்கண்ணன், நாரண. துரைக்கண்ணன் ஆகியோ ருடன் பாரதி பாடல் விடுதலைக்காகத் திருநெல்வேலிக்கு யாத்திரை புறப்பட்டேன்.

"பாரதியின் துணைவியார் திருமதி. செல்லம்மா பாரதி அவர்களையும், அவரது மூத்த மகள் திருமதி. தங்கம்மா பாரதி அவர்களையும் அவர்கள் இல்லத்திற்குச் சென்று சந்தித்தோம். பாரதி பாடல்களைத் தேசத்தின் சொத்தாக்குவதில் தமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை யென்று திருமதி. செல்லம்மா பாரதி எழுதிக் கொடுத்தார். திருமதி. தங்கம்மா பாரதியும் அதில் கையெழுத்திட்டார்.

"தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் அவர்களைக் கண்டேன். பாரதி பாடல் விடுதலை சம்பந்தமாக பாரதியின் துணைவியாரைச் சந்தித்த விபரங்களை அவரிடம் கூறினேன். சென்னை ராஜ்ய முதலமைச்சர் விரைவில் அது பற்றி நடவடிக்கை எடுத்துக் கொள்வாரென தலைவர் காமராஜ் அவர்கள் உறுதி கூறினார்."

['எனது நாடக வாழ்க்கை'; பக்கம். 505, 507-8.]

*காமராசர் உறுதிமொழி*

தலைவர் காமராசர் கூறிய உறுதி மொழிப்படி அப்போது சென்னை மாநில முதலமைச்சராக இருந்த திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் பாரதியாரின் கவிதை இலக்கியங்களைத் தேசவுடைமையாக்க முயற்சி மேற்கொண்டார். இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி அரசிடம் நஷ்ட ஈடு கோராமல், பாரதியார் பாடல்கள் மீது தாம் பெற்றிருந்த உரிமையைத் திரு. ஏ. வி. எம். செட்டியாரவர்கள் விட்டுக் கொடுத்து அவற்றைத் தேசவுடைமை யாக்குவதை எளிதாக்கினார். பாரதியாரின் சகோதரருக்கு அரசு நஷ்டஈடாகச் சிறிது தொகை வழங்கியதாக நினைவிருக்கிறது.

பொதுவாக, காங்கிரஸ் ஆட்சி தமிழ் மொழியின் வளர்ச்சிக்குச் செய்த தொண்டுகளிலே பாரதியார் பாடல்களைத் தேசவுடைமை யாக்கியது மிகச் சிறந்த தொண்டாகும்.

பாரதியாரின் பாடல்களை நாட்டுடைமை யாக்கிய ஓமந்தூர் ரெட்டியாரையும், அதற்கு உறுதுணையாக நின்ற திரு.ஏ. வி. எம். அவர்களையும் பாராட்டி 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இராயப்பேட்டை 'உட்லண்ட்ஸ் ஓட்டலி'ல் தேநீர் விருந்து நடத்தினார். அதிலே நானும் கலந்து கொண்டு அவர்களைப் பாராட்டிப் பேசினேன்.

உண்மையில் பாரதியார் பாடல்களைப் பொதுவுடைமை யாக்குவதற்கு எவ்வித கைம்மாறும் கருதாமல் ஒத்துழைத்த

அந்த மகாகவியின் மனைவியாருக்கு தமிழ் ஆர்வலர்கள் நன்றி யறிதலுடன் அஞ்சலி செலுத்த வேண்டும். ஒரு மகாகவிக்கு வாழ்க்கைப்பட்ட பாவத்திற்காக அவ்வம்மையார் எவ்வளவோ தியாகங்களைச் செய்துள்ளார். இதுவும் அத்தகைய தியாகங்களில் ஒன்ருகும்.

## சுத்தப் பதிப்பு

பாரதியாரின் கவிதை இலக்கியத்திற்கு விடுதலை தேடியதோடன்றி, அதனைச் சிறந்த முறையில் பதிப்பித்து வெளியிடவும் தமிழக அரசு பொறுப்பேற்றது. அதுவரை சுத்தப் பதிப்பு எதுவும் வெளிவந்திருக்கவில்லை. அந்தக் குறையைப் போக்குவதாக இருந்தது அரசு வெளியிட்ட பதிப்பு. அந்தப் பதிப்பு இப்போது கிடைப்பதில்லை. அரசு ஒருமுறை வெளியிட்டதோடு ஓய்ந்து விட்டது! பாரதியார் கவிதைகள் தேசவுடைமை யாக்கப்பட்டுவிட்ட பின்னர், தனியார் பதிப்பகங்கள் போட்டி போட்டுக் கொண்டு சிறந்த பதிப்புக்களை வெளியிட்டன. இதனுலும், அரசு ஒதுங்கிக் கொண்டிருக்கலாம்.

பாரதியாரின் உரைநடை இலக்கியங்களையும் பொருள் வாரி முறைப்படுத்தித் தொகுத்து வெளியிடும் எண்ணம் அரசுக்கு இருப்பதாகத் திரு. சி. சுப்பிரமணியம்—கல்வி யமைச்சராக இருந்தபோது—சட்டப்பேரவையில் அறிவித் திருந்தார். ஆனல், அது நடைபெறவில்லை.

தனிப்பட்ட அமைப்புகளும் தனி நபர்களும் தேசியக் கவி பாரதியாருக்குச் சிறப்பு செய்ய முன்வந்த போதெல்லாம் அதற்குத் தன்னிடம் எதிர்பார்க்கப்பட்ட உதவிகளை யெல்லாம் காங்கிரசின் செல்வாக்கிலிருந்த தமிழக அரசு செய்து கொடுத்ததென்பதனை இங்கு நினைவூட்ட வேண்டும்

1959ல் எட்டயபுரத்தில் நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன் பாரதியாரின் நினைவுநாளை தொடர்ந்து மூன்று நாட்களுக்குக் கொண்டாட முன்வந்தபோது அதற்கு

அப்போது திரு.காமராசர் தலைமையிலிருந்த காங்கிரஸ் அரசு எல்லா வகையிலும் உதவி புரிந்தது.

'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 1944ல் எட்டய புரத்தில் பாரதியார் நினைவு மண்டபம் நிறுவியபோதும், திரு. ஓமந்தூர் ரெட்டியார் தலைமையில் தமிழகத்தில் இயங்கிய காங்கிரஸ் அரசு பலவகையிலும் உதவி புரிந்தது.

திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோயில் தெருவில் பாரதியார் வாழ்ந்த வீட்டை வாங்கி, அதனை, பாரதியாரின் நினைவாலயமாக மாற்றுவதற்குத் தமிழக அரசின் மேற்பார்வையில் இயங்கிவரும் சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு முன் வந்தது. அதற்கென ரூ.2 லட்சமும் ஒதுக்கப்பட்டது. ஆனால், அந்த வீட்டில் குடியிருப்போர் ஒத்துழைக்காததால் அம்முயற்சி கைவிடப்பட்டது. சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் தலைவனாக நான் இருந்த போதுதான் என்னால் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

1957ல் விடுதலைப் புரட்சியின் நூற்றாண்டு விழா நாடெங் கணும் மத்திய—மாநில அரசுகளே பொறுப்பேற்றுக் கொண் டாடியபோது, எட்டயபுரத்தில் பாரதியார் வாழ்ந்த வீட்டை விலைக்கு வாங்கி, அதனை அவரது நினைவாலய மாக்கத் தமிழக அரசு முயற்சி மேற்கொண்டது.

# கலைச்சொல் அகராதி

தமிழக அரசு தமிழைப் பயிற்சி மொழியாக்குவதற்கான திட்டத்தையும், அரசாங்க அலுவலகங்களில் ஆட்சி மொழியாக்குவதற்கான சட்டத்தையும் நடைமுறைக்குக் கொண்டு வந்ததனை ஏற்கனவே அறிந்தோம். ஆனால், இவ்விரண்டையும் வெற்றிகரமாகச் செய்து முடிப்பதற்குத் தமிழிலே கலைச் சொற்கள் போதுமான அளவு இல்லாதது பெருந்தடையாக இருந்தது. அந்தத் தடையை அகற்றுவதற்கும் அரசே பொறுப்பேற்க வேண்டியதாயிற்று.

*படித்தவர் நிலை*

சென்னைப் பல்கலைக் கழகம் விரும்பியிருந்தால் தமிழில் கலைச் சொற்களைத் தயாரிக்கும் பணியைப் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே மேற்கொண்டிருக்க முடியும். ஆனால், தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழுக்கே முதலிடம் அளிக்க வேண்டும் என்ற கொள்கைக்குத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாததால், அது இத்துறையில் கருத்து செலுத்தவில்லை.

விஞ்ஞானக் கலைகளைத் தமிழில் பயிற்றுவிக்க முடியுமா?, அரசாங்க அலுவல்களைத் தமிழிலேயே நடத்துவது சாத்தியமா?'—என்ற வினாக்களை எழுப்பிக் கொண்டு, தமிழ் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதையே தலைமுறை தலைமுறையாகத் தங்கள் கடமையாகக் கொண்டனர் ஆங்கிலம் படித்த அறிவாளிகள். அதனால், அவர்களுடைய செல்வாக்கிலிருந்த பல்கலைக் கழகம் தமிழில் கலைச்சொல் தயாரிக்கும் பணியில் ஈடுபடாதது குறித்து வியப்படைவதற்கில்லை.

## மெஞ்ஞானத் தமிழ்!

ஒரு காலத்தில், 'மெஞ்ஞான சாத்திரங்களைத் தமிழில் சொல்ல முடியுமா?' என்று வினா எழுப்பி, 'முடியாது' என்ற முடிவுக்கும் வந்தனர் வடமொழிப் பண்டிதர்கள். ஆனால், காலப் போக்கில் மெஞ்ஞான சாத்திரங்களைத் தமிழில் போதிக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அதற்கான கலைச் சொற்களும் தமிழில் படைக்கப்பட்டன.

மெஞ்ஞானத் துறையில் தமிழுக்கு வெற்றி தேடித் தந்தவர்கள் மெஞ்ஞானிகளாவர். அவர்களுக்கு இருந்த துணிவு இந்நாளில் ஆங்கிலம் படித்தவர்களான விஞ்ஞானப் பேராசிரியர்களில் பெரும்பாலோருக்கு இருக்கவில்லை. அதனால், 'தமிழில்முடியுமா?' என்று வினா எழுப்புகின்றனர்.'முடியாது'' என்றும் தாங்களாகவே ஒருதலைப்பட்சமாக முடிவு கட்டி விடுகின்றனர். இந்த முடிவுக்கு முடிவுகட்ட முதன் முதலில் முனைந்தார் தேசியவாதியான சி. சுப்பிரமணிய பாரதியார்.

## பாரதியாரின் ஆணை!

'தமிழின் மூலம் விஞ்ஞானக் கலைகளைப் பயிற்றுவிக்க முடியாது; அதற்கான சொற்கள் தமிழ் மொழியில் இல்லை' என்று ஒரு ஆங்கிலேயர் கூறியபோது, அவரைப் ''பேதை'' என்று கூறிப் பழித்தார் பாரதியார். ''சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்றும் தமிழருக்கு ஆணையிட்டார்.

''தமிழில் சாஸ்த்ர பரிபாஷை'' என்னும் தலைப்பிட்டுத் தாம் எழுதிய கட்டுரை ஒன்றில் பாரதியார் கூறுவது வருமாறு:

> ''பஞ்ச பூதங்களின் இயற்கையைப் பற்றின ஆராய்ச்சிகளிலே, நம்மைக் காட்டிலும் ஐரோப்பியர் முன்னேறி நிற்பது தெரிந்த விஷயம். ஆதலால் ஐரோப்பாவில் வழங்கும் லௌகிக சாஸ்திரங்களைத் தமிழில் எழுதவேண்டுமென்று பல பண்டிதர் மிகவும் ஆவலோடு

இருக்கிறார்கள். ஏற்கெனவே, சில பகுதிகளின் ஆரம்பம் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறது. இந்த முயற்சி மேன்மேல் வளரும்; வளர்ந்து தீரவேண்டும். அந்த சாஸ்த்ரங்களையெல்லாம் ஏக காலத்திலே தமிழில் எழுதி முடிப்பதற்காக ஒரு பண்டித சங்கம் ஏற்படக்கூடும். நமது ராஜாக்களுக்கும், ஜெமீன்தார்களுக்கும், செட்டிகளுக்கும் நல்ல புத்தி உண்டாகித் தமிழில் நவீன சாஸ்த்ரம் சேர்ப்பதாகிய காரியத்தை அவர்கள் தக்க பண்டிதர்களின் உதவிகொண்டு, விரைவில் நிறைவேற்றி மேன்மை பெறக் கூடும்.''

[பாரதி கட்டுரைகள்—கலைகள்]

## சேலம் தொடங்கியது!

தமிழில் கலைச் சொற்களைத் தயாரிப்பது பண்டிதர்களைக் கொண்ட ஒரு சங்கத்தினால்தான் சாத்தியப்படும் என்பதை பாரதியார் உணர்ந்திருந்தார். அந்தச் சங்கத்தைத் தோற்றுவிக்கக் கூடிய கடமை ராஜாக்களுக்கும், ஜமீன்தார்களுக்கும், தன வணிகர்களுக்கும் உண்டு என்பதையும் அவர் அறிவுறுத்தினார். இந்தப் பணியில் அரசாங்கம் ஈடுபடவேண்டுமென்று அவர் கூறவில்லை. காரணம், அன்று நாட்டில் அன்னிய அரசாங்கம் நடந்ததுதான் ஆனால், பாரதியார் எதிர்பார்த்தபடி பண்டிதர் சங்கம் அமைக்கத் தமிழ் நாட்டுப் பணக்காரர்களில் எவரும் முன் வரவில்லை. தனிப்பட்ட அறிஞர் சிலர் சேர்ந்து சேலம் நகரில் கலைச் சொல் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டனர். அதுபற்றியும் பாரதியார் தமது கட்டுரையில் தகவல் தருகிறார்.

''...இங்ஙனம் பரிபாஷையை நிச்சயப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் வக்கீல் ஸ்ரீ. சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியரும், ஸ்ரீ வெங்கடசுப்பையரும் சேர்ந்து ஒரு மாதப் பத்திரிகையைத் தொடங்கியிருக்கிறார்கள். இந்தப் பத்திரிகையின் பெயர் 'தமிழ் சாஸ்திர பரிபாஷைச் சங்கத்தாரின் பத்திரிகை.

"மேற்கண்ட பெயருடன் ஒரு சங்கம் சேலத்தில் ஏற்பட்டிருக்கிறது. அந்த சங்கத்தின் காரியஸ்தர் அந்த ஊர்க் காலேஜில் ப்ரகிருதிசாஸ்த்ர பண்டிதராகிய, ஸ்ரீ ராமநாதய்யர்."

[பாரதி கட்டுரைகள்—"கலைகள்"]

## சென்னை மாகாண தமிழ்ச் சங்கம்

கலைச்சொல் தயாரிக்க முயல்பவர்கள் தங்கள் பணியை எப்படித் தொடங்க வேண்டும் என்பதையும் பாரதியார் தெளிவுபடக் கூறி வைத்துள்ளார். அது வருவாறு:

"முன்னதாகவே பண்டிதர்கள் செய்து வைக்கவேண்டியகாரியம் ஒன்றுண்டு. கூடியவரை சாஸ்த்ர பரிபாஷையை நிச்சயப்படுத்தி வைத்தால், பிறகு மொழிபெயர்ப்பு தொடங்குவோருக்கு அதிக சிரமமிராது; ஸங்கடமிராது பரிபாஷை, ஸங்கேதம், குழூவுக்குறி என்ற மூன்று சொல்லும் ஒரே பொருளைப் பல வகையிலே குறிப்பன."

பாரதியார் தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ள தமிழ் சாஸ்த்ர பரிபாஷைச் சங்கமும், அதனுல் நடத்தப்பட்ட பத்திரிகையும் நெடுங்காலம் நீடிக்கவில்லை. கால வெள்ளத்தில் மூழ்கி மறைந்துபோயின.

நாடு சுதந்திரம் பெற்றபின்னர்—தமிழ் மொழி வழங்கும் நிலப் பரப்பு தனியரசு மாநிலமாவதற்கு முன்னர்—சென்னை மாகாண தமிழ்ச் சங்கம் தமிழில் கலைச் சொற்களைத் தயாரிக்கும் பணியில் ஆர்வம் காட்டியது. தமிழில் கலைச் சொல் பட்டியல் ஒன்றையும் தயாரித்து மாநில அரசிடம் தந்தது. ஆனல், அந்தப் பட்டியல் முழுமை பெற்றதல்ல.

## கலைச்சொல் அகராதி

"தமிழில் விஞ்ஞானக் கலைகளைப் பயிற்றுவிக்க முடியுமா?' என்று வினு எழுப்புவோருக்கு 'முடியும்' என்று விடையளிக்

கும் வகையிலே அறிஞர் ராஜாஜி ஒரு நூல் எழுதி வெளியிட்டார். ''தமிழில் முடியுமா?'' என்னும் பெயரில் வெளியான அந்நூல் தூய தமிழில் கலைச் சொற்களைத் தயாரிக்க முடியும் என்பதற்குச் சிறந்த சான்றாக அமைந்தது.

தமிழகத்திற்கெனத் தனியரசு அமைந்த பின்னர் தமிழில் கலைச் சொற்களைத் தயாரிக்கும் பணியை அரசே மேற்கொண்டு தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தினை அந்தப் பணியில் ஈடுபடுத்தியது. அம்மன்றத்தால் திரு ஜி. ஆர். தாமோதரம் அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்ட கல்லூரி தமிழ்க் குழுவினர் விஞ்ஞானக் கலைகள் அனைத்துக்குமாக தமிழில் கலைச்சொல் அகராதி படைத்தனர். ஆம்; அரசியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், உயிரியல், புள்ளியியல், வாணிகவியல், வேதியல், உளவியல், பௌதிகம் ஆகியவற்றிற்காகக் கலைச் சொல் அகராதி படைக்கப்பட்டது.

## ஆட்சிச் சொல் அகராதி

அரசாங்க நிர்வாகத்திற்குத் தேவைப்படும் கலைச் சொற்களைக் கொண்ட ஆட்சிச் சொல் அகராதியும் வெளியிடப் பெற்றது.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தொடங்கப்பட்ட இந்த அரும்பணிகள் அந்த ஆட்சி மறைந்து தி. மு. க. ஆட்சி தோன்றுவதற்கு முன்பே பெருமளவுக்கு முடித்து வைக்கப்பட்டன என்று சொல்லலாம்.

பெரும்பாலான கலைச்சொற்கள் தூய தமிழிலேயே படைக்கப் பெற்றன என்பது தமிழ்ப் பற்றுடைய நெஞ்சங்களுக்கு மகிழ்ச்சி தருவதாகும்.

ஏற்கெனவே ஆங்கிலத்திலுள்ள அரசாங்க சட்டங்களைத் தமிழிலே மொழி பெயர்த்துத் தருவதற்கெனவும் தனியாக ஒரு குழு அமைக்கப்பெற்றது. அரசாங்க அலுவலகங்களுக்கேயன்றி, நீதி மன்றங்களிலே தமிழை நிர்வாகமொழியாக்குவதற்குத் தேவைப்படும் கலைச்சொற்களும் படைக்கப்பட்டன.

அச்சு இயந்திரம் தோன்றிய ஆரம்ப காலத்திலே அதனைப் பயன்படுத்தித் தமிழில் நூல்களையும் பிரசுரங்களையும் வெளியிடும் தொழிலில் இந்தியர் ஈடுபடுவதற்கு ஆங்கில அரசாங்கம் தடை விதித்திருந்தது. இந்தியர்பால் நல்லெண்ணம் படைத்த ஆங்கில உயர் அதிகாரிகள் சிலர் எடுத்துக் கொண்ட பெரு முயற்சி காரணமாக, காலப் போக்கில் அந்தத் தடை அகன்றது.

## நூல் விவர அட்டவணை

1867 தொடங்கி தமிழில் புது நூல்களும், பழைய ஓலைச் சுவடிகளின் பதிப்புக்களும் வெளிவரலாயின. ஆனால், அச்சுப் பதிப்பாக வெளிவந்த நூல்கள் என்னென்ன? அவற்றை வெளியிட்டோர் யார் யார்?—என்பனபோன்ற விவரங்கள் நீண்ட காலமாகத் தொகுக்கப்படாமல் இருந்தன. தமிழ் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிக்கு இத்தகைய தொகுப்பு இன்றியமையாது தேவைப்படுகிறது. சுதந்திர நாடுகளிலே இந்தக் குறைபாடு இல்லை. இந்தியா அடிமைப்பட்டிருந்ததால் தமிழ் நூல் விவர அட்டவணை தயாரிக்கும் பணியில் அன்னிய அரசு அக்கறை காட்டவில்லை.

நாடு சுதந்திரம் பெற்று, தமிழகம் தனியரசு மாநிலமான பின்னர் "தமிழ் நூல் விவர அட்டவணை" தயாரிக்கும் பணியினைத் தமிழ்நாடு அரசினரின் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் மேற்கொண்டது. 1867 தொடங்கி 1900ம் ஆண்டு வரை வெளியாகியுள்ள தமிழ் நூல்களின் விவர அட்டவணையின் முதல் தொகுதி—முதல் பகுதி 1961ல் சுமார் 400 பக்கங்கள் கொண்டதாக வெளிவந்தது.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தமிழ் வளர்ச்சிக்குச் செய்யப்பட்ட அரிய பணிகள் பலவற்றில் இதுவும் ஒன்றாகும்.

## மொழி வைதிகம்!

கலைச் சொல்லாக்கத்தில் ஈடுபடும்போது அரசு மிகப் பெரிய ஒரு பிரச்சினையைச் சந்திக்கவேண்டியிருந்தது.

கலைச்சொற்கள் அனைத்தும் தூய தமிழாகவே இருக்கவேண்டுமென்று ஒரு சாராரும், தமிழ்—ஆங்கிலம்—சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளும் கலந்தவையாக இருக்கவேண்டுமென்று மற்றொரு சாராரும் வழக்காடினர். மொழித் துறையில் இந்த வழக்கு நீண்ட காலமாகவே தமிழகத்தில் இருந்து வருகிறது. தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு இதுவும் ஒரு தடைக்கல்லாக இருந்து வருகிறது என்பதனை மறுப்பதற்கில்லை. இதுபற்றியும் பாரதியார் வழிகாட்டிச் சென்றுள்ளார். அது வருமாறு:

> "பௌதீக சாஸ்திரங்கள் கற்றுக் கொடுப்பதில் மிகவும் தெளிவான எளிய தமிழ் நடையில் பிள்ளைக்கு மிகவும் ஸுலபமாக விளங்கும்படி சொல்லிக் கொடுக்க வேண்டும். இயன்ற இடத்திலெல்லாம் பதார்த்தங்களுக்குத் தமிழ்ப் பெயர்களையே உபயோகப்படுத்த வேண்டும் திருஷ்டாந்தமாக, "ஆக்ஸிஜன்", "ஹைட்ரஜன்" முதலிய பதார்த்தங்களுக்கு ஏற்கெனவே தமிழ் நாட்டில் வழங்கப்பட்டிருக்கும் பிராணவாயு, ஜலவாயு என்ற நாமங்களையே வழங்கவேண்டும். தமிழ்ச் சொற்கள் அகப்படாவிட்டால் ஸம்ஸ்கிருத பதங்களை வழங்கலாம். பதார்த்தங்களுக்கு மட்டுமேயன்றிக்கிரியைகளுக்கும் அவஸ்தைகளுக்கும் (நிலைமைகளுக்கும்) சமஸ்கிருத மொழிகளையே வழங்குதல் பொருந்தும். இந்த இரண்டு பாஷைகளிலும் பெயர்கள் அகப்படாத இடத்தில் இங்கிலீஷ் பதங்களையே உபயோகப்படுத்தலாம். ஆனால் குணங்கள், செயல்கள், நிலைமைகள் இவற்றுக்கு இங்கிலீஷ் பதங்களை ஒருபோதும் வழங்கக் கூடாது. பதார்த்தங்களின் பெயர்களை மாத்திரமே இங்கிலீஷில் சொல்லலாம். வேறு வகையில் உணர்த்த இயலாவிடின்'
>
> ["பாரதி நூல்கள்—கட்டுரைகள்; பக். 516–17]

## பாரதி வழியில் ..

தமிழ்க் கலைக் களஞ்சியப் பணி ஏறக்குறைய முடியும் தருவாயிலிருந்த நேரத்திலே கலைச்சொல் ஆக்கப் பணியை

தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் மேற்கொண்டது. அதனால் தனது பணிக்குக் கலைக் களஞ்சியத்திலுள்ள கலைச் சொற்களையும் அது பயன்படுத்திக் கொள்ள முடிந்தது.

மகிழ்ச்சிக்குரிய செய்தி என்னவென்றால், கலைச்சொல் ஆக்கப்பணிக்குத் தேவைப்படும் அறிஞர்களுக்கு பஞ்சமேற் படவில்லை என்பதாகும். "தமிழில் முடியுமா?" என்று கேட்போருக்கு "முடியும்" என்று விடையளிப்போரும், "தமிழால் முடியுமா?" என்ற வினாவுக்கு "முடியும்" என்று விடையளிக்கத் தயங்கும் காலம் ஒன்று இருந்தது. நல்ல வேளையாக, தமிழக அரசு கலைச்சொல் ஆக்கப்பணியை மேற் கொண்டபோது அந்தநிலை இல்லை. ஆங்கிலத்திலும்தமிழிலும் போதிய புலமை பெற்ற விஞ்ஞானப் பேராசிரியர்கள் ஏராள மாகக் கிடைத்தனர். அவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு இப் பணியில் ஈடுபட்டு அரசுக்கு வெற்றி தேடித் தந்தனர்.

## விஞ்ஞானத் தமிழ்!

1956ல் நிறுவப்பெற்ற தமிழ் நூல் வெளியீட்டுக் கழகத் தின் சார்பில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டுள்ள கல்லூரிகளுக்குத் தேவைப்படும் தமிழ்ப் பாட நூல்கள் நூற்றுக்கணக்கில் வெளியிடப் பெற்றன.

இந்நூல்களை வெளியிடுவதற்கு சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், பாரிநிலையம், "கலைக் கதிர்" வெளியீட்டகம், பழனியப்பா சகோதரர் பதிப்பகம் ஆகிய தனியார் பதிப் பகங்களையும் அரசு பயன்படுத்திக் கொண்டது. தமிழை இயற்றமிழ்—இசைத்தமிழ்—நாடகத் தமிழ் என மூன்றாகப் பகுத்துக் கூறும் வழக்கம் இருந்து வருகிறது. இம் மூன்றுடன் நான்காவதாக விஞ்ஞானத் தமிழ் ஒன்றையும் படைத்தது தமிழக அரசு. இவ்வளவும் நாடு விடுதலை பெற்று, தமிழகத் தில் தமிழரசு தோன்றியதன் விளைவாகும்.

தமிழகத்தில் எங்கும் எதிலும் தமிழே மணக்க வேண்டு மென்பது தமிழ் மக்களின் பேரவா. அந்த அவாவினை நிறை

வேற்றவும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## *'ஸ்ரீ' 'திரு'வாக மாறியது!*

ஒரு ஆண் மகனின் பெயருக்கு முன்னே 'ஸ்ரீ' என்றும், ஒரு பெண்மணியின் பெயருக்கு முன் 'ஸ்ரீமதி' என்றும் போடுவதற்குப் பதிலாக, முறையே 'திரு' என்றும், 'திருமதி' என்றும் போடப்பட வேண்டுமென்று தமிழ் ஆர்வலர்கள் நீண்ட காலமாகவே கோரி வந்தனர். இந்தக் கோரிக்கை பன்மொழி ராஜ்யத்திலே தமிழகம் இருந்தபோது ஏற்கப்படவில்லை. அது நாம் புரிந்துகொள்ளக் கூடியதுதான். தமிழகம் தனியரசு மாநிலமான பின்னர் இந்தக் கோரிக்கையை அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்தது. அரசுத் துறைகளின் பெயர்களும் தூய தமிழிலே வழங்கும் வழக்கமும் தொடங்கி வைக்கப்பட்டது. சான்றாக, பொது மராமத்துத் துறையானது தூய தமிழில் 'பொதுப்பணித் துறை' எனப் பெயர் மாற்றம் பெற்றதைச் சொல்லலாம்.

# சென்னை மாநகராட்சியில் தமிழ்

சென்னை மாநகராட்சியானது நெடுங்காலமாகத் தமிழகம் ஆந்திரம் கன்னடம் மலபார் (கேரளம்) ஆகிய நான்கு மொழிப் பிரதேசங்களுக்கும் உரியதாக இருந்து வந்தது. சென்னையை நிர்வகிக்கும் "தனி ஆட்சி" என்ற அந்தஸ்து அதற்கு உண்டு. அது, தனக்கெனத் தனியாக ஒரு சட்டத்தையும் பெற்றிருக்கிறது.

## ஆந்திரர் ஆதிக்கம்

சென்னை நகரம் நான்கு மொழிப் பிரதேசங்களின் தலைநகராயினும், நில அமைப்பில் தமிழகத்தின் உட்பிரதேசம் தான் என்பது அனைவரும் அறிந்ததாகும். இருந்தும், பன்மொழியினர் கலந்து வாழும் மாநிலத்தின் தலைநகராக இருந்ததால், சென்னை மாநகராட்சியிலே தமிழரல்லாதார் குறிப்பாக, தெலுங்கை வீட்டு மொழியாகக் கொண்டோர் தொடர்ந்து செல்வாக்கு பெற்றுவந்தனர்.

சென்னை ராஜ்யமானது 1920 முதல் 1936 வரை தொடர்ந்து 17 ஆண்டுக் காலம் ஜஸ்டிஸ் கட்சியால் ஆளப் பட்டு வந்தது. அந்தக் கட்சி தமிழகத்திற்கும் உரியதுதான் என்றாலும், ஆந்திரர்களே—அவர்களிலும், பெரிய ஜமீன் தாரர்களே அதில் செல்வாக்கு செலுத்தி வந்தனர். இந்தக் காரணத்தால் சென்னை மாநகராட்சி ஆணையர், செயலாளர் பதவிகளுக்கு அடுத்தடுத்து ஆந்திரர்களே நியமிக்கப்படுவது வழக்கமாக இருந்து வந்தது.

## தெ. பொ. மீ. ஒருவரே!

சென்னை மாநகராட்சி உறுப்பினர்களிலும் தமிழரல்லாதார் ஒரு கணிசமான அளவில் இருந்து வருவது ஒரு மரபாகவே ஆகியிருந்தது. ஆங்கிலேயர்களும் இடம் பெற்று வந்தனர். இதன் காரணமாக, ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் மாநகராட்சி மேயர்களிலும் தமிழரல்லாதார் தங்கள் சதவிகிதத்தினும் அதிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். மாநகராட்சி மேயர் தேர்தலிலே தமிழருக்கும் தமிழரல்லாதாருக்குமிடையே போட்டி ஏற்படும்போதெல்லாம் பெரும்பாலும் தமிழரல்லாதாரே வெற்றி பெற்று வந்தனர். இதற்குத் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட உறுப்பினர் சிலரும் உதவி புரிந்து வந்தனர். என்பதை இங்கு சொல்லியாக வேண்டும். இத்தனைக் காரணங்களாலும் சென்னை மாநகராட்சியின் நிர்வாகத்திலே தமிழ் மொழி சிறிதளவுகூட இடம் பெற முடியாத நிலை 1953 ஆம் ஆண்டு வரை நீடித்து வந்தது. இந்தக் கால கட்டத்திலே 85 உறுப்பினர்களைக் கொண்ட சென்னை மாநகராட்சிக் கவுன்சிலிலே நானறிந்து தமிழிலே புலமை பெற்றவர் ஒருவர்தான் இடம் பெற்றார். அவர், பன்மொழிப் புலவர் தெ பொ. மீனாட்சிசுந்தரனார் ஆவர்.

1936 வரை சென்னை மாநகராட்சியின் கவுன்சில் கூட்டத்தில் உறுப்பினர்கள் ஆங்கிலத்தில் பேசுவதே வழக்கமாக இருந்து வந்தது. அதற்கு, உயர்தரக் கல்வி கற்றவர்களே அதன் உறுப்பினர்களாக இருந்து வந்ததும் ஒரு காரணமாகும்.

1936ல் நடந்த மாநகராட்சித் தேர்தலின்போதுதான் முதன் முதலாக உயர்தரக்கல்வி பயிலாத சாமான்யர் சிலரும் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்காலும், தங்கள் தொண்டு காரணமாகவும் கவுன்சில் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அது முதல் கவுன்சில் நடவடிக்கைகளில் தமிழும் ஓரளவு இடம் பெறத்தக்க கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டது.

### கவிஞருக்கு வரவேற்பு

இந்தச் சூழ்நிலையிலே நான் எடுத்துக் கொண்ட பெரு முயற்சி காரணமாக, 10—8—45ல் தமிழ்க் கவிஞர் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளைக்கு வரவேற்பு அளித்துச் சிறப்பு செய்தது சென்னை மாநகராட்சி. இதன் மூலம்தான் தனது வரலாற்றிலேயே முதன் முதலாகத் தமிழுக்குப் பெருமை யளிக்கும் திருப்பணியிலே பங்கு கொள்ள சென்னை மாநகராட்சி முன் வந்தது எனலாம். தமிழ் மக்களின் சார் பாகத் தமக்குப் பொற்கிழியளிக்கும் விழாவில் கலந்து கொள் வதற்காக நாமக்கல் கவிஞர் சென்னை நகருக்கு வருகை தந்த போதுதான் அவருக்கு வரவேற்பு அளித்தது சென்னை மாநகராட்சி.

இது நிகழ்ந்த இரண்டரை ஆண்டுகள் கழித்து —1948 நவம்பரில் நான் சென்னை மாநகராட்சியின் ஆல்டர்மேனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இரண்டாவது முறையாக, 1952 நவம்பரில் திரும்பவும் ஆல்டர்மேனாகத் தேர்ந்தெடுக்கப்பட் டேன். 1953ல் சென்னை மாநகராட்சிக் கல்விக் குழுவின் தலைவனாகவும் அதன் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் பெற்றேன்.

### ஆங்கில மோகம்

சென்னை மாநகராட்சியைத் தமிழ் வழிப்படுத்தும் முயற்சிகளில் நான் முழு மூச்சுடன் ஈடுபட்டேன். இதற் காகவே நான் மாநகராட்சி ஆல்டர்மென் ஆக விரும்பினேன். எனது முயற்சி வெற்றி பெறுவது அவ்வளவு எளிதானதாக இருக்கவில்லை. காரணம், மாநகராட்சியின் உயர் அதிகாரிகளிலே பலர் தமிழரல்லாதாராக இருந்ததாகும். சுத்தத் தமிழர்களாக இருந்தவர்களுக்கும் ஆங்கில மோகம் இருந்தது. மாநகராட்சித் தமிழ் உறுப்பினர்களில் பெரும் பாலோர் நிலையும் இதுதான். ஆயினும், நான் எடுத்த முயற்சிகளில் பெரும்பாலானவற்றில் வெற்றிபெற என்னால் முடிந்தது.

சென்னை மாநகராட்சியின் கல்வித்துறைக்கெனத் தனி யாக வரவு—செலவுத் திட்டம் அமைவது, மாநகராட்சியின் சட்டப்படி நிகழ்ந்து வருகிறது. அந்தப் பட்ஜெட்டைக் கவுன் சில்முன் வைக்கும்போது கல்விக் குழுவின் தலைவர் ஒரு சொற் பொழிவு நிகழ்த்துவது வழக்கம். கல்வி பட்ஜெட் மீது மாநகராட்சிக் கூட்டத்தில் பொது விவாதம் நிகழும். விவாதத்திற்குப் பின் வெட்டுப் பிரேரணைகள் தரப்பட்டு, அவற்றின் மீது குட்டி விவாதம் ஒன்றும் நடைபெறும். இந்தப் பட்ஜெட்டும் அதன் மீது நிகழ்த்தப்படும் சொற் பொழிவும் மாநகராட்சி தோன்றிய காலந்தொட்டு ஆங்கிலத் திலேயே அமைவது வழக்கமாக இருந்து வந்தது.

## அதிகாரிகள் எதிர்ப்பு

1953—54க்குரிய கல்வி பட்ஜெட்டை ஆங்கிலத்தில் சமர்ப்பிக்க நான் மறுப்பு தெரிவித்தேன். பட்ஜெட்டும் அதன் மீதான சொற்பொழிவும் தமிழிலேயே இருக்கவேண்டும் என்ற எனது விருப்பத்தை மாநகராட்சி ஆணையருக்கும் செயலருக்கும் தெரிவித்தேன். அவர்கள், மாநகராட்சியின் நிர் வாக மொழி சட்டப்படி ஆங்கிலமாகவே இருந்து வருவதால் அந்தச் சட்டத்தை சென்னை மாநில சட்ட மன்றம் திருத் தினாலொழிய, மொழி விஷயத்தில் மாறுதல் காண முடியாது என்று எனக்கு அறிவித்ததோடு, கல்வி பட்ஜெட்டை ஆங்கிலத்திலேயே தயாரித்து என்னிடம் கொடுத்தனர். நான் எனது நிலையிலிருந்து பின் வாங்கவில்லை. ஆங்கிலத்தில் தரப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தைத் தமிழில் மொழி பெயர்த்து மாநகராட்சி உறுப்பினர்களுக்கு வழங்குவதற் காகத் தேவைப்படும் பிரதிகளை எனது சொந்தப் பொறுப்பி லேயே "சைக்ளோஸ்டைல்" செய்தேன். பட்ஜெட் மீது நான் நிகழ்த்த வேண்டிய சொற்பொழிவையும் தமிழில் மட்டுமே எழுதி, அதிலும் பிரதிகள் எடுத்து வைத்துக் கொண்டேன். கல்வி பட்ஜெட்டைக் கவுன்சில் முன் வைக்க வேண்டிய நாளன்று பிற்பகல் 3 மணிக்கு மாநகராட்சி ஆணை

யருக்கும் செயலருக்கும் பட்ஜெட்டின்—அதன் மீதான எனது சொற்பொழிவின் தமிழ்ப் பிரதிகளை மட்டும் அனுப்பினேன்.

## மேயரின் யோசனை

அவர்கள் இருவருமே தமிழ் அறியாத ஆந்திரர்கள். மாநகராட்சியின் சட்ட விதிகளைக் காட்டி, மொழியில் மாறுதல் காணும் எனது முயற்சி சட்ட விரோதமானதாதலால், அதனை அனுமதிப்பதற்கில்லை யென்று குறிப்பு எழுதி' அப்பொழுது மேயராக இருந்த திரு. த. செங்கல்வராயன் அவர்களுக்கு அனுப்பினர். திரு. த. செங்கல்வராயன் தம் அளவில் எனது முயற்சிக்கு ஆதரவளிக்கக் கூடியவர் என்றாலும், மாநகராட்சியின் சட்ட விதிகளுக்கு எதிராகச் செயல்படுவதில் அவருக்குச் சங்கடமிருந்தது. வழக்கறிஞர் அல்லவா! அதனால், என்னை அழைத்துப் பேசி, எனது முயற்சியைக் கைவிடுமாறு தூண்டினார். நான் பிடிவாதமாக மறுத்தேன். அதன்பின் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட பட்ஜெட்டையும் சொற்பொழிவையும் படிக்க என்னை அனுமதிப்பதாகவும் — ஆனால், கவுன்சில் முன்பு அதிகார பூர்வமாக வைக்கப்படும் பட்ஜெட்டும் சொற்பொழிவும் ஆங்கில மொழியில் இருக்கலாம் என்றும் ஒரு சமரச ஆலோசனையைக் கூறினார்.

ஆனால் யான் கடைப்பிடித்து வரும் மொழிக் கொள்கை காரணமாக மேயரின் ஆலோசனைக்கு இணங்க மறுத்தேன். கடைசியில் கவுன்சில் கூட்டத்தில் பட்ஜெட்டின் தமிழ்ப் பிரதியையே சமர்ப்பித்து, தமிழில் தயாரிக்கப்பட்ட பேச்சையே படித்தேன். மொழி பெயர்ப்பு என்ற நிலையில் ஆங்கிலத்திலும் பட்ஜெட் கவுன்சில் முன்பு வைக்கப்பட்டன

## தெலுங்கர் எதிர்ப்பு

இந்த நிகழ்ச்சியின் மூலம்தான் சென்னை கார்ப்பரேஷன் நிர்வாக மொழியில்—கல்வித்துறை சம்பந்தப்பட்ட வரையில்—

மாற்றம் ஏற்பட்டது. ஆனால், இது சட்ட பூர்வமானதல்ல வென்று திரு. ஜி. ராசமன்னார் என்ற தெலுங்கு உறுப்பினர் கவுன்சில் கூட்டத்தில் ஆட்சேபனை எழுப்பினார். அவரது ஆட்சேபனைக் குரலைக் கேட்டும் கேட்காதவர் போல எனது சொற்பொழிவைத் தமிழில் படிக்க மேயர் அனுமதித்தார். ஆட்சேபனை எழுப்பிய உறுப்பினரும் மேயர் தீர்ப்பு வழங்கித்தானாக வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கவில்லை.

## மேயர் பாராட்டு

பட்ஜெட் சொற்பொழிவை நான் படித்து முடிந்ததும் மாநகராட்சியின் நிர்வாகத் துறையிலே தமிழுக்கும் இடம் தேடிய எனது முயற்சியை மேயர் வெகுவாகப் பாராட்டினார். ஆம்; மாநகராட்சிக் கூட்டத்திலேயே!

மாநகராட்சியிலிருந்த அசல் ஆந்திர உறுப்பினர்கள், கல்வி பட்ஜெட் தமிழில் சமர்ப்பிக்கப்பட்டது சட்ட விரோதமானது என்றும், அந்த நடவடிக்கையை ரத்து செய்யுமாறு அரசுக்கு விண்ணப்பம் அனுப்பப் போவதாகவும் பயமுறுத்தினர். ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை.

அடுத்த ஆண்டில் திரு. எம். ராதாகிருஷ்ணப் பிள்ளை அவர்கள் தலைமையில் இயங்கிய நிதி நிரந்தரக் குழுவும் மாநகராட்சியின் பொதுப் பட்ஜெட்டைத் தமிழ்—ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் தயாரித்து கவுன்சில் முன்பு வைத்தது. திரு. பிள்ளை அவர்கள் பட்ஜெட் சொற்பொழிவைத் தமிழிலேயே நிகழ்த்தியதாக நினைவிருக்கிறது. இதன் பின்னர்தான் அப்போது புதிதாக அமைந்த தமிழ் மாநில அரசின் 1957–58ம் ஆண்டு வரவு—செலவுத் திட்டம் முதன் முதலாகத் தமிழில் தயாரித்து சட்ட மன்றத்தில் வைக்கப் பட்டது. நிதியமைச்சரால் நிதிநிலை அறிக்கை தமிழிலேயே படிக்கப்பட்டது. இதுபற்றி விவரமாக ஏற்கெனவே கூறியிருக்கிறேன்.

## தமிழில் பெயர்ப் பலகைகள்

சென்னை மாநகராட்சிக் கல்விக் குழு மொழி விஷயத்தில் மற்றொரு மாறுதலையும் செய்தது. அப்போது சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் நிர்வாகத்திலிருந்த பள்ளிகள் விளையாடும் இடங்கள் ஆகியவற்றின் பெயர்ப் பலகைகள் ஆங்கிலத்தில் மட்டுமே எழுதப்பட்டிருந்தன. கல்வித்துறை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கான அழைப்பிதழ்களும், பிற பிரசுரங்களும் ஆங்கிலத்தில் மட்டுமே தயாரிக்கப்பட்டு வந்தன. எனது தலைமையில் கூடிய மாநகராட்சியின் கல்விக் குழுக் கூட்டமொன்றிலே, கல்வித் துறை சம்பந்தப் பட்ட இடங்களின் பெயர்ப்பலகைகளில் தமிழும் இடம் பெற வேண்டும் என்றும், ஆங்கிலத்தில் எழுதப்படுவதைவிட பெரிய அளவில் தமிழில் எழுதப்பட வேண்டுமென்றும் தீர் மானிக்கப் பட்டது. அதற்குத் தேவைப்படும் செலவுக்கான நிதியையும் அக்குழு ஒதுக்கித்தந்தது. இதற்கும் மாநகராட்சி அதிகாரவர்க்கத்திடமிருந்து சிறிதளவு எதிர்ப்பு இருந்தது. ஆயினும், கல்விக் குழுவின் செயல்முறை அமுலுக்கு வந்தது.

ஆந்திரத்தைத் தனியரசு மாநிலம் ஆக்கவேண்டுமென்று கோரிய ஆந்திரத் தலைவர்கள், அந்தப் புதிய மாநிலத்திற்குச் சென்னையையே தலைநகராக்க வேண்டுமென்று கோரினர். அது சாத்தியமில்லையேல், சென்னையை வடக்கு—தெற்காகப் பிரித்து, வடக்கை ஆந்திரத்திற்கும், தெற்கைத் தமிழகத் திற்கும் வழங்க வேண்டுமென்று வற்புறுத்தினர்.

## காரணங்கள்

சென்னை நகர் மீது ஆந்திரர் உரிமை கொண்டாடு வதற்குப் பல காரணங்கள் இருந்தன. கிழக்கிந்தியக் கம்பெனியார் தமிழகம் வந்தபோது, சென்னையை ஆந்திர மன்னனான சென்னப்ப நாயக்கனிடமிருந்துதான் பெற்றனர் அதனாற்றான், அந்தப் பிரதேசம் 'சென்னைப் பட்டினம்' என்று பெயர் பெற்றது. அதுவே, நாளடைவில் 'சென்னை' என்று குறுகியது.

சென்னை நகர மக்கள் தொகையில் தமிழ் பேசுவோரே மிகுதியானவர்கள் என்றாலும், அவர்களுக்கு அடுத்தபடியாக ஒரு கணிசமான அளவில் தெலுங்கரும் வாழ்கின்றனர். பெத்துநாய்க்கன் பேட்டை, முத்தியாலுப் பேட்டை என சென்னை நகரிலுள்ள பல பேட்டைகள் ஆந்திரர் பெயரைப் பெற்றுள்ளன. இவையன்றி, தோட்டியர், சக்கிலியர், உப்புரவர், தேவாங்கர் போன்ற தெலுங்கு பேசும் உழைப்பாளர் குவியல் குவியலாக வாழும் குடியிருப்புகளும் சென்னையில் உள்ளன.

விடுதலைப் போராட்ட காலத்திலே சென்னை நகரில் உப்பு சத்தியாக்கிரகம் போன்ற பல போராட்டங்களை 'ஆந்திர கேசரி' டி. பிரகாசம், 'தேசோத்தாரகர்' கே. நாகேசுவரராவ் பந்துலு போன்ற ஆந்திரத் தலைவர்களே முன்நின்று நடத்தத் தமிழ் நாடு காங்கிரஸ் அனுமதித்து விட்டது. அதனால், சென்னை நகருக்கெனத் தனியாக—தமிழர் காங்கிரசுக்குப் போட்டியாக—ஒரு காங்கிரஸ் கமிட்டியை ஆந்திரர் அமைத்துக் கொண்டனர். "ஆந்திர பத்திரிகா" என்ற செல்வாக்கு மிக்க தெலுங்கு நாளேடும் சென்னையிலிருந்து தான் வெளிவந்து கொண்டிருந்தது.

சென்னை மாநில சட்டமன்றம் சம்பந்தப்பட்ட சென்னைத் தொகுதிகளிலே தமிழரை விடவும் தெலுங்கரே அதிகமாகத் தேர்ந்தெடுக்கப்படத் தமிழ்நாடு காங்கிரஸ் தொடர்ந்து அனுமதித்து வந்தது. இதனால், டி. பிரகாசம், கே. நாகேஸ்வர ராவ் போன்ற ஆந்திரப் பெருந் தலைவர்கள் சென்னை நகரிலேயே நிரந்தரமாகக் குடியமர்ந்தனர்.

இத்தனை காரணங்களாலும் சென்னை நகர் மீது ஆந்திரர் உரிமை கொண்டாட முடிந்தது. 1953ல் ஆந்திர மாநிலம் தனியரசு மாநிலமாக அமைய இருந்தது. அந்த நேரத்தில் சென்னை நகர் பற்றிய பிரச்னை சூடேறியது.

### வாஞ்சு கமிஷன்

சென்னை பற்றி விசாரணை நடத்திப் பரிந்துரை தர வாஞ்சு என்ற நீதிபதி ஒரு நபர் கமிஷனாக மத்திய அரசால்

நியமிக்கப்பட்டார். அவர், சென்னை நகரில் ஆந்திரம்—தமிழகம் ஆகிய இரு மாநிலங்களுமே தன்தன் தலைநகரை வைத்துக் கொள்ள அனுமதிக்கலாம் என்று பரிந்துரை தந்து விட்டார். இதனை ஏற்கக் கூடாதென்று தமிழரசுக் கழகம் தீவிரமாகக் கிளர்ச்சி நடத்தியது. அதன் மாநில மாநாடு சென்னையில் கூடி, வாஞ்சுவின் பரிந்துரையை ஏற்க வேண்டா மென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டது. சென்னை நகரின் பல பகுதிகளிலும் பொதுக் கூட்டங்கள் நடத்தி, சென்னையைப் பாதுகாக்க எழுமாறு நகர மக்களுக்கு கழகம் அழைப்பு விடுத்தது.

## அதிர்ச்சி தரும் செய்தி

இந்த நிலையில், ஒருநாள் சென்னை ''மெயில்'' பத்திரிகையில் மத்திய அமைச்சரவை கூடி நீதிபதி வாஞ்சுவின் பரிந்துரைப்படி ஆந்திரத்துக்கும் சென்னையைத் தலைநகராக்க முடிவெடுத்து விட்டதாகச் செய்தி வெளியானது. இதனையறிந்ததும், அப்போது சென்னை ராஜ்ய முதல்வராக இருந்த ராஜாஜி டில்லிக்கு விரைந்து சென்றார். பிரதமர் நேருவிடம் பேசிவிட்டு சென்னை திரும்பினார். டில்லியில் செய்தி நிருபர்களுக்குப் பேட்டியளித்து, "சென்னையை ஆந்திர அரசுக்கும் உரிய தலைநகராக்கினால், சென்னை ராஜ்ய முதல்மந்திரி பதவிக்கு வேறு நபரைத் தேடிக் கொள்ளுங்கள் என்று நான் பிரதமர் நேருஜியிடம் கூறிவிட்டேன்'' என்று கூறினார்.

சென்னை திரும்பியதும் என்னைத் தமது இல்லத்திற்கு அழைத்து, "நேருஜி என்னிடம் மனம்விட்டுப் பேசவில்லை. சென்னையை ஆந்திர அரசுக்கும் தலைநகராக்கிட மத்திய அமைச்சரவை முடிவெடுத்து விட்டதாகத்தான் தெரிகிறது. இனி என்ன செய்வீர்களோ, சென்னையைக் காப்பது உங்கள் கையில்தான் இருக்கிறது'' என்றார் ராஜாஜி.

''மெயில்'' பத்திரிகையில் வெளியான செய்தியும், ராஜாஜி கூறிய தகவலும் எனக்கு அதிர்ச்சியைத் தந்தன.

என்னுடைய பிதிரார்ஜித சொத்தே பறிபோவது போன்ற ஒரு உணர்ச்சி என் மனத்தில் ஏற்பட்டு, நான் வேதனை யடைந்தேன்.

சென்னை நகர மக்களின் ஒருமித்த கருத்தை மத்திய அரசுக்கு உணர்த்தினால் அதன் முடிவை மாற்ற முடியும் என்றும் நம்பினேன். அதற்கான ஒரே வழி சென்னை நகர மக்களின் சரியான பிரதிநிதித்துவ அமைப்பான சென்னை மாநகராட்சியில் சென்னையை ஆந்திர மாநிலத் திற்கும் தலைநகராக்குவதை எதிர்த்துத் தீர்மானம் நிறை வேற்றி மத்திய அரசுக்கு அனுப்புவதுதான் என்று கருதினேன்.

## மாநகராட்சியின் தீர்மானம்

அப்போது நான் சென்னை மாநகராட்சியில் ஆல்டர் மேனாக இருந்தேன். காங்கிரஸ் கட்சிக்கு சென்னை மாநக ராட்சிக் கவுன்சிலில் பெரும்பான்மை இருந்தது. மாநக ராட்சிக் காங்கிரஸ் கட்சியில் யான் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தேன். மாநில முதல்வரான ராஜாஜியின் ஆதரவும் எனக்கு இருந்ததால், மாநகராட்சியை என் விருப்பப்படிப் பயன்படுத்தக்கூடிய நிலையில் நான் இருந்தேன்.

சென்னை நகர் பிரச்சினை பற்றி ஆலோசித்து முடிவு செய்ய மாநகராட்சியின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டுமாறு 12 உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்று மேயருக்கு வேண்டு கோள் அனுப்பினேன். அந்த சிறப்புக் கூட்டத்தில் விவாதிப் பதற்கான தீர்மானத்தையும் மேயருக்கு அனுப்பினேன்.

அந்தத் தீர்மானத்திலே, "சென்னை நகரை ஆந்திரத் திற்கு வழங்குவதோ, ஆந்திரத்திற்கும் தமிழகத்திற்குமாகப் பங்கு போடுவதோ, மத்திய அரசின் நிர்வாகப் பிரதேச மாக்குவதோ, ஆந்திர அரசு தற்காலிகமாக நடைபெற அனு மதிப்பதோ கூடாது; சென்னை நகரம் தமிழ் நாட்டின் உட் பிரதேசமாக இருப்பதாலும், அதிலே வாழும் மக்களில் தமிழ்

பேசுவோரே 67 சதவிகிதத்தினராக இருப்பதாலும் தமிழகத்திற்கே உரிய தலைநகராக நீடிக்க அனுமதிக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டிருந்தேன்.

எனது விண்ணப்பத்தை ஏற்று, மாநகராட்சிக் கவுன்சில் 3—1—53ல் கூடுமென்று மேயர் அறிவித்தார். கவுன்சில் கூட இருந்த நாளன்று காலை முதல்வர் ராஜாஜி என்னையும் மேயரையும் தம் வீட்டிற்கழைத்து, மாநகராட்சியில் பிரேரே பிக்க விருக்கும் தீர்மானத்தில் "ஆந்திர அரசு தற்காலிமாக சென்னையில் நடைபெறவும் அனுமதிக்கக் கூடாது'' என்ற வாசகத்தை அகற்றிவிடுமாறு ஆலோசனை கூறினார். அதனை மேயர் எளிதில் ஏற்றுக் கொண்டார். நான் ஏற்க மறுத்தேன். அதனால், சிறிதுநேரம் நானும் ராஜாஜியும் விவாதிக்க வேண்டி ஏற்பட்டது. அதன் பின்னும் நான் எனது நிலையி லிருந்து தளரவில்லை.

## 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்'

3—1—53ல் சென்னை மாநகராட்சிக் கூட்டம் மேயர் திரு. த. செங்கல்வராயன் தலைமையில் கூடியது. உறுப்பினர்களில் பெரும்பாலோர் வந்திருந்தனர். தெலுங்கை வீட்டு மொழி யாகக் கொண்டவர்களிலே ஆந்திர மனப்பான்மை யுடைய வர்கள் தமிழரைப் பகைத்துக் கொள்ள அஞ்சி கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை—ஏன்? தமிழரிலேயும் உறுதியற்ற சிலர் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கிவிட்டனர். மாநகராட்சி கவுன்சில் மண்டபத்தில் அதற்கு முன் எப்போதும் கண்டிராத வகையில் பார்வையாளர் திரண்டிருந் தனர். அவர்களில் தமிழரசுக் கழகத்தார் மிகுதியாக இருந் தனர். ரிப்பன் கட்டிடத்திற்கு வெளியேயும் கவுன்சில் கூட்டத்தின் முடிவை அறிந்து கொள்ளும் ஆர்வத்துடன் மக்கள் திரண்டிருந்தனர்.

மாநகராட்சிக் கவுன்சில் கூட்டத்திலே எனது தீர் மானத்தை மாறுதல் எதுவுமின்றி முன் மொழிந்து சரியாக

ஒரு மணி நேரம் பேசினேன். உறுப்பினர்களிலே இருமொழி யாளராக இருந்தவர்களும் எனது தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்கும் வகையில் பேசினேன். எனது பேச்சின் முடிவில் "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம். இது உறுதி" என்று கூறினேன்.

## தீர்மானம் நிறைவேறியது

தெலுங்கை வீட்டு மொழியாகக் கொண்ட திரு. கே. வேங்கடசாமி நாயுடு, கன்னடத்தை வீட்டு மொழியாகக் கொண்ட டாக்டர் யூ.கிருஷ்ணராவ் உள்படப் பலர் என் தீர் மானத்தை ஆதரித்துப் பேசினர். குண்டூர் நரசிம்மராவ் என் பவர் உள்பட ஆந்திரர் சிலர், தீர்மானத்தை எதிர்த்துப் பேசினர். முடிவில் தீர்மானத்தின் மீது வாக்கெடுக்கப்பட்டு, அது நிறைவேறியதாக மேயரால் அறிவிக்கப் பட்டது. ஆந்திர உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர்.

சென்னை மாநகராட்சியில் நான் முன்மொழிந்த தீர் மானம் நிறைவேற்றப்பட்டதும், அதன் பிரதிகள் சென்னை மேயர் பெயரால் அப்போதைய ஜனதிபதி டாக்டர் ராசேந்திர பிரசாத்துக்கும், பிரதமர் நேருவுக்கும், சென்னை மாகாண முதல்வர் ராஜாஜிக்கும் உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டன.

எனது தீர்மானமும், நான் நிகழ்த்திய சொற்பொழிவு உட்பட மாநகராட்சியின் நடவடிக்கை முழுவதும் தமிழ் ஆங்கில நாளேடுகளிலே பக்கம் பக்கமாகப் பிரசுரிக்கப் பட்டன.

## நேருவின் மனமாற்றம்

"தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்று நான் எழுப்பிய கோஷம் செய்தி இதழ்களில் பெரிய தலைப்புகளில் பிரசுரிக்கப்பட்டது. இதனால் தமிழ் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்; ஆந்திரர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

மாநகராட்சியின் தீர்மானத்தால் பிரதமர் நேரு மன மாற்றம் அடைந்தார். "சென்னை நகரைப் பற்றிய பிரச்சினையிலே அந்நகர மக்களின் பிரதிநிதித்துவ அமைப்பாகிய மாநகராட்சியின் முடிவுதான் என் மனத்தை மாற்றியது" என்று பிரதமர் நேரு தம்மிடம் கூறியதாகத் தலைவர் காமராசர் என்னிடம் சொன்னார்.

மாநகராட்சியின் முடிவை உடனடியாகத் தொலைபேசியின் மூலம் நான் முதல்வர் ராஜாஜிக்கு அறிவித்தேன். அவர் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்.

"பெல்லாரி" சம்பந்தமாக ஆந்திரருக்கும் கன்னடருக்கு மிடையேயும், "பெல்காம்" சம்பந்தமாக கன்னட— மகாராஷ்டிர மக்களுக்கிடையேயும் வன்முறையில் கலகங்கள் நடந்து கொண்டிருந்த நேரம் அது. அத்தகைய கலகம் எதுவும் இல்லாமல் ஜனநாயக ரீதியில் சென்னை மாநகராட்சியின் மூலம் சென்னை மாநகரத்தைத் தமிழகத்திற்கே உரியதாகச் செய்ய முடிந்ததை இப்போது நினைத்தாலும் எனது மனம் மகிழ்ச்சியில் திளைக்கிறது.

சென்னை மாநகராட்சிக்கெனத் தனியாக ஒரு சட்டம் இருப்பது போல, தனியாக ஒரு கொடியும் உண்டு. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலே அந்தக் கொடியானது கடலொடு கப்பலையும், மூன்று சிங்கங்களையும், இரட்டை மீன்களையும் கொண்டதாக இருந்தது. மூன்று சிங்கங்கள் பிரிட்டிஷ் அரசாங்கச் சின்னமாகும். கடலொடு கப்பலும் மீன்களும் சென்னையானது கடற்கரைப் பட்டினம் என்பதைக் காட்டுவனவாகும்.

'கொடியை மாற்றுக!'

நாடு சுதந்திரம் பெற்றபின், மாநகராட்சியின் கொடிச் சின்னம் மாற்றப்பட வேண்டுமென்று தமிழக அரசு ஆணை அனுப்பியது. அதுபற்றி ஆலோசித்துப் பரிந்துரை தர மாநகராட்சியின் நிரந்தரக் குழுக்களின் தலைவர்கள், பிரதம

எஞ்ஜினியர், மாநகராட்சியிலுள்ள கட்சிகளின் தலைவர்கள் ஆகியோர் கொண்ட தனிக் குழு ஒன்று அமைக்கப் பெற்றது. அதிலே, கல்வி நிரந்தரக் குழுவின் தலைவன் என்ற முறையில் நானும் இடம் பெற்றேன்.

அந்தத் தனிக்குழுவின் முதல் கூட்டத்திலே "பழைய கொடியில் இரண்டு மீன்கள் இருப்பதால், புலியையும் வில்லை யும் சேர்த்து, மாநகராட்சிக் கொடியைத் தமிழர் கொடி ஆக்கிவிடலாம்" என்று ஆலோசனை கூறினேன். எனது யோசனையை குழு உறுப்பினரிலே சிலர் எதிர்த்தனர். பலர் ஆதரித்தனர். மாநகராட்சி பிரதம எஞ்ஜியனிர் திரு. மீரான் சாயபு, திரு. கே. விஞயகம் ஆகியோர் என் பிரே ரணையை ஆதரித்தவர்களில் முக்கியமானவர்களாவர். இது பற்றிக் குழுவில் கடுமையாக விவாதிக்கப்பட்டது. இறுதி யில் ஒருமனதுடன் ஏற்கப்பட்டது.

*தமிழர் கொடி!*

அப்போது, ஆந்திரத்தின் தலைநகரம் கர்நூலாகத்தான் இருந்து வந்தது. ராஜ்யப் புனரமைப்புக்குப் பின்னர் தான் ஆந்திரத்திற்கு ஐதராபாத் தலைநகராக அமைந்தது. அதுவரை ஆந்திரத் தலைவர்கள் சென்னைமீது உரிமை கொண் டாடிக் கொண்டுதான் இருந்தனர். அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்பதற்காகவே நான் சென்னை மாநகராட் சிக் கொடியில் ஏற்கனவே இருந்து வந்த மீன் சின்னத்தோடு வில், புலி சின்னங்களையும் சேர்த்து அதனைத் தமிழர் கொடி யாக மாற்றிவிட முயன்றேன்.

கொடி பற்றிய தனிக்குழுவின் பரிந்துரை சென்னை மாநில அரசின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டது. அப்போது ராஜாஜி மாநில முதல்வராக இருந்து வந்தார். திரு. எஸ். எஸ் ராமசாமிப் படையாச்சி உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தார்.

## ராஜாஜியின் ஆதரவு

மாநகராட்சித் தனிக் குழுவின் பரிந்துரையை அரசு ஏற்காது என்று பலரும் நம்பினர். எனக்கும் அதுபற்றி ஐயம் இருந்தது. ஆயினும், இது விஷயத்தில் ராஜாஜி ஆட்சியின் மீது எனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்த நான் முயல வில்லை. அரசு தானாக முடிவுக்கு வரட்டுமென்று விட்டு விட்டேன். ஆயினும், உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. படையாச்சியார் தனிக்குழுவின் பரிந்துரையை ஏற்றுக் கொண்டு விட்டார். பின், முதல்வரின் அங்கீகாரத்திற்கு கோப்பு அனுப்பப்பட்டது. எதிர்பாராத வகையில் ஒருநாள் முதல்வரை அவருடைய இல்லத்தில் நான் சந்தித்தபோது, அப்போதுதான் கொடி பற்றிய கோப்பைப் பார்த்துக் கொண்டிருந்தார். அதனால், என்னைப் பார்த்து, "உங்கள் கழகக் கொடியைக் கார்ப்பரேஷன் கொடியாக்கிவிடுகிறீர் களா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

நான், "என் கொடியில் ஒரு மீன்தான் இருக்கிறது மாநகராட்சிக் கொடியில் இரண்டு மீன்கள் இருக்கின்றன. அத்துடன், படகு வேறு இருக்கின்றதே!" என்றேன்.

அவர் சிரித்துக்கொண்டே, "நான் அங்கீகாரம் தந்து விட்டேன். உங்களுக்கு மகிழ்ச்சிதானே!" என்றார். நான், "மகிழ்ச்சியோடு தங்களுக்கு நன்றியும் தெரிவித்துக்கொள்ளு கிறேன்" என்றேன்.

இதன்பின், மாநில அரசின் அங்கீகாரத்துடன் கொடி பற்றிய தனிக் குழுவின் முடிவு மாநகராட்சிக் கவுன்சில் கூட்டத்தில் வைக்கப்பட்டது. ஏற்கெனவே அரசு அங்கீ கரித்து விட்டதால், சம்பிரதாயப்படி கவுன்சில் அதனை நிராகரிப்பதற்கில்லை. அதுவும் அங்கீகரித்து விட்டது. ஆயினும், தமிழரல்லாத சுயேச்சை உறுப்பினர் ஒருவர், "கிராமணியார் அவருடைய கட்சிக் கொடியை கார்ப்ப ரேஷன் கொடியாக்கி விட்டார்" என்று கூறி, அங்கலாய்த்துக் கொண்டார்.

## காலம் கைகொடுத்தது!

ராஜாஜி ஆட்சி போய் திரு. காமராசர் ஆட்சி வந்த பின் இந்தக் கொடி மாற்றப் பிரச்னை எடுத்துக் கொள்ளப் பட்டிருந்தால், முடிவு வேறுவிதமாக இருந்திருக்கலாம். ராஜாஜிக்கும் எனக்கும் இருந்த ஆழ்ந்த நட்பின் காரணமாக தமிழ் நாட்டிற்கு ஏற்பட்ட நற்பயன்களில் இதுவும் ஒன்றாகும்.

சென்னை மாநகராட்சியின் கொடி மாற்றம் குறித்து, "ஆந்திர பத்திரிகா'' பத்திரிகையில் எதிர்ப்பு காட்டப் பட்டது. ஆனால், அது தமிழக அரசால் புறக்கணிக்கப் பட்டது.

1966 ஜூன் 26ல் எனது 60ஆவது பிறந்த நாளையொட்டி சென்னை மாநகராட்சி எனக்கு வரவேற்பளித்து என்னைச் சிறப்பித்தது. அந்த வரவேற்பிதழிலே, சென்னை நகரைத் தமிழகத்திற்கே உரியதாக்கவும் மாநகராட்சிக் கொடிச் சின்னங்களை மாற்ற நான் எடுத்துக் கொண்ட முயற்சி பாராட்டப்பட்டிருந்தது. வரவேற்பிதழில் அந்தப் பாராட்டு சம்பந்தப்பட்ட வாசகம் வருமாறு:

"முன்னை நாள், மொழிவழி மாகாண அமைப்பு காரண மாக, சென்னை மாநகர் ஆந்திர நாட்டிற்கா, தமிழகத் திற்கா?—என்ற நிலை ஏற்பட்டபோது, சென்னை மாநகர் மன்றத்திலே தாங்கள் எழுப்பிய உரிமைக் குரல்—நற்றமிழ் நாட்டின் தலைநகராகச் சென்னை மாநகர் திகழ்தல் வேண்டும் என்று தமிழகத்தின் எல்லையை வரலாற்றுச் சான்றுகள் கொண்டு வரைந்து காட்டி, தீர்மானம் கொண்டு வந்து எழுப்பிய வீர முழக்கம் இன்றும் எங்கள் செவிகளில் ஒலிக் கின்றது; எங்கள் இதயங்களில் எதிரொலிக்கின்றது.

"சென்னை மாநகராட்சிக்கு வெள்ளையர் கொடுத்துச் சென்ற ஆட்சிச் சின்னம் முழுவதையும் மாற்றி மன்னுயிர் காத்த மாநிலப் பெருமன்னர்களாம் சேர சோழ பாண்டியர்

களது ஆட்சிச் சின்னங்களாம் வில்—புலி—மீன் சின்னங்களைப் பொறிக்க இன்றைய சென்னை மாநகர் முன்னொருகால் மீனவர் பட்டினமாக இருந்ததைக் குறிக்க, கடலொடு கப்பலும் சேர்க்க வழிவகுத்த பெருமை தங்களைச் சாரும்.''

மாநகராட்சி எனக்கு வரவேற்பளித்த நாளிலே அதிலே திமுக செல்வாக்குப் பெற்றிருந்தது திரு. சி. சிட்டிபாபு மேயராக இருந்தார். பின்னாளில் தமிழக முதல்வராக வந்த கலைஞர் மு. கருணாநிதியும் அதில் கலந்து கொண்டார்.

## ஆந்திரர் முணுமுணுப்பு

கொடியில் மாறுதல் செய்யப்பட்ட பின்னர் ஆந்திர முதல்வர் திரு. நீலம் சஞ்சீவி ரெட்டியாருக்கு மாநகராட்சி வரவேற்பளித்தபோது,

''என்னுடைய நண்பர் திரு. சிவஞான கிராமணியார் சென்னை நகரம் தமிழருக்கே உரியதென்பதை நிலைநாட்டச் சூழ்ச்சி செய்தே மாநகராட்சியின் கொடியில் மாறுதல் செய்திருக்கிறார். அதனாலேயே சென்னைமீது ஆந்திரருக்குள்ள உரிமையை அழித்து விடலாம் என்று கனவு காண வேண்டாம்.'' என்று திரு. ரெட்டியார் பேசினார்.

நாடு விடுதலை பெற்ற பின்னர்—1947 முதற் கொண்டு 1956வரை—சென்னை மாநகராட்சியின் மூலம் தமிழ் நாட்டிற்கும் தமிழ் இனத்திற்கும் ஏற்பட்ட சிறப்புகள் பலவாகும். அவற்றுள் முக்கியமானவற்றை மட்டும் இந்நூலில் தொகுத்துக் கொடுத்திருக்கிறேன். இந்தச் சாதனைகளுக்கு நான் தான் பொறுப்பேற்றேன் என்றாலும், சென்னை ராஜ்ய காங்கிரஸ் ஆட்சியையும் சென்னை மாநகராட்சியில் செல்வாக்கு பெற்றிருந்த காங்கிரஸ் கட்சியையும் பயன்படுத்தித்தான் இவற்றை என்னால் சாதிக்க முடிந்தது என்பதனை இங்கு நன்றியுணர்வோடு கூறிக் கொள்கிறேன்.

# சங்கீத நாடக சங்கம்

தமிழகம் தனியரசு மாநிலம் ஆகாத காலத்திலே—அதாவது, ஆந்திரம், தமிழகம், தென்கன்னடம், மலபார் (கேரளம்) கொண்ட சென்னை ராஜ்யத்திலே நாடு சுதந்திரம் பெற்றதைப் பயன்படுத்தி இயற்றமிழ் வளர்ச்சிக்காக மட்டுமே அரசு பாடுபட்டு வந்தது. 1953 அக்டோபர் 1ல் ஆந்திரம் பிரிந்துபோனபின், "எஞ்சிய சென்னை ராஜ்யம்" அநேகமாக தமிழ் ராஜ்யமாகவே இருந்தது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இசைக் கலையையும் நாடகக் கலையையும் வளர்க்கவும் அரசு முயற்சி மேற்கொண்டது. அதற்கென 1954ல் "சங்கீத நாடக சங்கம்" என்னும் பெயரில் தனியாக ஒரு நிறுவனத்தைப் படைத்தது. வேறு எந்த மாநில அரசும் இத்தகைய முயற்சியில் ஈடுபடாத நேரத்திலே தமிழக அரசுதான் முதன் முதலில் ஈடுபட்டது என்பதனை இங்கு நினைவூட்ட வேண்டும். திரு. கு. காமராசர் முதல்வராகவும், திரு. சி. சுப்பிரமணியம் கல்வியமைச்சராகவும் இருந்த காலத்தில்தான் தமிழ்க் கலைகளை வளர்க்கக் காங்கிரஸ் அரசு திட்டமிட்டது.

## நாடக மன்றங்கள்

இன்னிசை, நாடகம், நாட்டியம், கிராமியக் கலைகள் ஆகியவற்றை வளர்க்கவும், இந்தக் கலைகள் சம்பந்தப்பட்ட நூல்களை வெளியிடவும் சங்கீத நாடக சங்கம் மாநில அரசிடமிருந்து ஆணை பெற்றது. சங்கத்தை நிறுவியது அரசுதான் என்றாலும், அது சுதந்திரமாக இயங்க அனுமதிக்கப்பட்டது.

சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களில் சிலரை அரசு நியமனம் செய்ய வேண்டுமென்றும், மற்றவர்கள் பதிவு செய்யப்பட்ட—தொடர்ந்து பத்தாண்டு காலம் செயல்பட்டு

வருகின்ற—நாடகக் கலை மன்றங்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் விதி வகுக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவராகத் திரு. எஸ். வெங்கடேசுவரன் ஐ. சி. எஸ். அவர்களும், செயலாளராக சிறை சென்ற தேச பக்தரும் வழக்கறிஞரும் சிறந்த நாட்டியப் பேராசிரியருமான திரு. ச. கிருஷ்ணய்யர் அவர்களும் முதன் முதலாக நியமிக்கப் பெற்றனர்.

சங்கத்திற்குத் தேவைப்படும் நிதியை ஆண்டுதோறும் தமிழக அரசே வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. பிற மாநிலங்களி லிருந்தும் அயல் நாடுகளி லிருந்தும் தமிழகம் வரும் கலைக் குழுக்களின் நிகழ்ச்சிகளுக்காகும் செலவுகளையும், அரிய கலை நூல்களைத் தமிழில் கூட்டாக வெளியிடுவதற்கு ஆகும் செலவுகளையும் அவ்வப்போது ஏற்றுக் கொள்ள மத்திய அரசு இசைவு தெரிவித்தது. இதனால், கலை—கலாசாரத்துறைகளில் எஞ்சிய இந்தியாவுடனும், உலக நாடுகளுடனும் தொடர்பு கொள்வதற்கான நல்வாய்ப்பு தமிழகத்திற்கு ஏற்பட்டது.

## முதலில் கௌரவிக்கப்பட்டவர்கள்

இசை—நடனம்—நாடகம்—கிராமியக் கலைகள் சம்பந்தப்பட்ட கலைஞர்களில் தலைசிறந்தவர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்கி, அவர்களைக் கௌரவிக்கவும் சங்கம் தீர்மானித்தது. அதன்படி, முதன் முதலாக 1959ஆம் ஆண்டுக்கென ஔவை டி. கே. சண்முகம், திரு. வி. கி. கோபாலரத்தினம், திரு டி. எஸ். பாலையா, திருமதி. டி. ஆர். ராசகுமாரி, டைரக்டர் கே. சுப்பிரமணியம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டு விருதுகள் வழங்கப் பெற்றனர்.

ஆரம்பத்தில் சங்கத்தின் சின்னம் பொறிக்கப் பெற்ற தங்க மெடலுடன்கூடிய இரண்டு பவுன் மதிப்புடைய தங்கச் செயின் வழங்கப் பெற்றது. தமிழக ஆளுநர், முதல்வர்,

கல்வியமைச்சர் ஆகியோர் இந்த விருதளிப்பு விழாவில் கலந்து கொள்வது வழக்கமாக இருந்து வருகிறது.

தமிழகத்தில் திமுக ஆட்சி தோன்றிய பின்னர் இயற்றமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடவும் சங்கீத சங்கம் பொறுப்பேற்றது. அதனால், இயல் இசை நாடக மன்றம் என்ற தூய தமிழில் பெயர் மாற்றம் பெற்றது. இந்த மாறுதலுக்குப் பின் ஆண்டுதோறும் இசைக் கலைஞர்களுக்கும், நாடகக் கலைஞர்களுக்கும் விருது அளிக்கும் போது இயற்றமிழ்ப் புலவர் ஒருவருக்கும் சிறப்பு செய்யப்பட்டு வருகிறது. அந்த வகையில் முதன் முதலாக நான்தான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். விருது பெறும் ஒவ்வொருவருக்கும் "கலைமாமணி'' என்னும் பட்டம் வழங்கவும், ஏற்பாடு ஆனது.

வறுமையால் வருந்தும் கலைஞர் சிலருக்கு ஆண்டுதோறும் தலைக்கு ஆயிரம் ரூபாய் பொற்கிழி வழங்கும் திட்டமும் நடைமுறைக்கு வந்தது. இந்த மாறுதல்களுக்கு அப்போதைய முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் காரணமாவார்.

இயல் இசை நாடக மன்றம் இதுவரை 200க்கும் மேற்பட்டவர்களை கௌரவித்து வந்திருக்கிறது. இதன் நடவடிக்கைகள் கலையுலகத்தாரால் பெரிதும் பாராட்டப்படுகின்றன.

# காந்தி நூல் வெளியீட்டுக் கழகம்

தமிழ் நாடு அரசின் தார்மிக ஆதரவோடு காந்தியடிகளின் எழுத்துக்களையும் பேச்சுக்களையும் திரட்டித் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட "காந்தி நூல் வெளியீட்டுக் கழகம்" என்ற பெயரில் ஒரு அமைப்பு தேசபக்த தமிழர் சிலரால் நிறுவப்பட்டது.

காந்தியடிகள் மறைந்த பின்னர், அவரது நினைவாக நாடு முழுவதிலும் நிதி திரட்டப்பட்டு, அதனை நிர்வகிக்க "காந்தி நினைவு டிரஸ்ட்" ஒன்று அனைத்திந்தியாவுக்குமாக நிறுவப்பட்டது. பின், மாநிலந்தோறும் தனித்தனிக் குழுக்கள் நிறுவப் பெற்றன.

1955ல் தமிழ் நாட்டளவில். நா. ம. ரா. சுப்பராமன் அவர்களைத் தலைவராகவும்; ஓ. பி. இராமசாமி ரெட்டியார், ரா. விநாயகம், நா. ராமசாமி, டாக்டர் சௌந்தரம்மாள் ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட "காந்தி நினைவு நிதிக்குழு" தமிழ் நாட்டில் நிறுவப் பெற்றது.

1955 மே 5 ஆம் தேதி கூடிய அக்குழுவின் கூட்டத்தில் காந்தியடிகளின் எழுத்துக்களைத் தொகுத்து வெளியிடுவதற்காக "காந்தி நூல் வெளியீட்டுக் கழகம்" என்ற உட்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதற்கு, திரு. தி. சு. அவினாசிலிங்கம் அவர்கள் தலைவராகவும், திருவாளர்கள் நா. ம. ரா. சுப்பராமன், அ. வேதரத்தினம், கு. காமராசர், கி. சுப்பிரமணியம், எம். பக்தவத்சலம், ம. ப. பெரியசாமித்தூரன், மு அருணாசலம், ரா. விநாயகம், லா. நா. கோபாலசாமி, நா. இராமசாமி ஆகியோர் உறுப்பினராகவும்,

திரு. கோ. வெங்கடாசலபதி செயலாளராகவும் நியமிக்கப் பெற்றனர்.

இதன் அலுவலகத்தை மவுண்ட் ரோட்டிலுள்ள அரசாங்க மாளிகையின் ஒரு பகுதியில் இலவசமாக வைத்துக் கொள்ளத் தமிழக அரசு அனுமதித்தது. இத்துடன் கழகம் வெளியிடும் காந்தி நூல்களை உயர்நிலைப் பள்ளிகளுக்கும் ஊராட்சி மன்ற நூலகங்களுக்கும் தனது பொறுப்பில் வாங்கி வழங்கவும் அரசு இசைவு தெரிவித்தது.

"மகாத்மா காந்தி நூல்கள் தொகுப்பு" என்ற பெயரில் இதுவரை 17 தொகுப்புகள் வெளிவந்துள்ளன. ஒவ்வொரு தொகுப்பும் சுமார் 800 பக்கங்கள் கொண்டவையாகும். 17ஆவது தொகுப்பானது முதல் 16 தொகுப்புகளுக்கான பொருளடக்கம், பொருட் குறிப்பு அகர வரிசையுடன் இறுதித் தொகுப்பாக வெளியிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுப்பும் அடக்க விலையாக ரூ. 7–50க்கு விற்கப்படுகிறது.

காந்தி நூல்கள் முதல் தொகுப்பு 1957 லும், 17 ஆவது தொகுப்பு 1969 லும் வெளியாயின. 12 ஆண்டு காலம் இந்த முயற்சியில் காந்தி நூல் வெளியீட்டுக் கழகம் ஈடுபட்டது.

இப்படி ஒரு தொகுப்பு நூல் தமிழில் வெளிவந்தது. தமிழர் செய்த தவம் என்றே சொல்லவேண்டும். "காந்தியம்" என்ற ஒரு புதிய தத்துவத்தின் கர்த்தாவைப்பற்றி முழுமையாக அறிந்து கொள்ள இந்தத் தொகுப்பு பெரிதும் பயன் படக் கூடியதாகும். எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருப்பதால், தமிழில் ஓரளவே எழுதப் படிக்கத் தெரிந்து வைத்துள்ளோரும் படித்துப் புரிந்து கொள்ள முடிகிறது.

## தொகுப்புகளின் பெயர்கள்

ஒவ்வொரு தொகுப்பும் தனித்தனித் தலைப்பைப் பெற்றுள்ளது. 17 தொகுப்புகளின் தலைப்புகள் வருமாறு:

தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகம்

அகிம்சா தருமம்
சுய சரிதை
ஆரோக்கிய வாழ்வு
கதரும் கைத்தொழிலும்
பொருளாதார உறவு
சமூக சீர்திருத்தம்
சத்தியாக்கிரகம்
சமூக ஒற்றுமை
கடவுளும் சமயமும்
பகவத் கீதை
கல்வி
அரசாங்கத்துக்குக் காந்திஜியின் கடிதங்கள்
தலைவர்களுக்குக் காந்திஜியின் கடிதங்கள்
கிராம சுயராஜ்யம்
காந்திஜியின் கடிதங்கள்
காந்திஜியின் வாழ்க்கைக் குறிப்புகள்

''இவ்வளவு சிறப்பாக நம் நாட்டில் மகாத்மா காந்தி நூல்கள் முதன் முதனாக வந்திருப்பது தமிழில்தான் என்பது பெருமைக்குரியது'' என்று காந்தி நூல் வெளியீட்டுக் கழகத்தின் தலைவர் திரு. தி. சு. அவிநாசிலிங்கனார் மகிழ்ச்சிப் பெருமிதத்தோடு கூறுகிறார். ஆரம்ப முதல் பிரபல பத்திரிகாசிரியரும் சிறந்த தேசபக்தருமான திரு. ரா. வேங்கடராசுலு அவர்கள் இந்நூல்களை வெளியிடும் ஆசிரியராக இருந்து வந்தார். இவர் மறைந்த பின், திரு. செயமணி சுப்பிரமணியம் என்பார் 1965ல் ஆசிரியரானார்.

''சத்திய சோதனை'' என்று பெயர் பெற்றுள்ள காந்தியடிகளின் சுயசரிதமானது மலிவுப் பதிப்பாக ஒரு லட்சம் பிரதிகள் வெளியிடப் பெற்றன.

## தமிழர் வளர...

தமிழ் வளர்வது வேறு; தமிழர் வளர்வது வேறு. தமிழ் வளரப் புதுப்புது இலக்கியங்கள் தேவைப்படு

கின்றன. தமிழர் வளர பிறமொழிகளிலுள்ள அறிவு நூல்கள் தமிழ் மொழியில் பெயர்க்கப்பட்டு வெளிவர வேண்டியது அவசியமாகின்றது. இவற்றுள் இரண்டாவது வகையைச் சார்ந்தது மகாத்மா காந்தி நூல்கள் தொகுப்பு. ஆங்கிலத்தில் புலமை பெறாத தமிழர் தங்கள் தாய்மொழியான தமிழின் மூலமே காந்தியடிகளை அறிந்துகொள்ள காந்தி நூல் தொகுப்புகள் பெரிதும் பயன்படுமென்பதில் ஐயமில்லை காந்தி நூல் வெளியீட்டுக் கழகத்தாரின் பணி அறிவுத் துறையில் தமிழ் வளரவும் உதவி புரிகிறது.

# "தமிழ் நாடு" பெயர் கோரிக்கை

"சென்னை ராஜ்யம்"—அதாவது "மெட்ராஸ் ஸ்டேட்" என்னும் பெயர் பெற்றிருந்த நான்கு மொழிப் பிரதேசங்கள் கொண்ட கதம்ப மொழி ராஜ்யத்திலிருந்து ஆந்திரம் பிரிந்து போன பின்னரும், கன்னட மொழி வழங்கும் தென் கன்னட மாவட்டமும், மலையாள மொழி வழங்கும் மலபார் மாவட்டமும் 'எஞ்சிய சென்னை ராஜ்யத்'தில் மூன்றாண்டு காலம் நீடித்து இருந்தன. அதனால், "மெட்ராஸ் ஸ்டேட்" என்பதனைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் "தமிழ் நாடு" என்று மாற்ற வேண்டுமெனத் தமிழரசுக் கழகம் விடுத்த கோரிக்கையை மாநில அரசு ஏற்கவில்லை. கழகமும் காலம் வரும்போது கோரிக்கை நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்தது.

## அரசின் பிடிவாதம்

1956ல் இந்திய மாநிலங்கள் புனரமைப்பு பெற்ற போது, தென்கன்னட மாவட்டமானது புதிதாகப் பூத்த ஐக்கிய கர்நாடகத்துடனும், மலபார் மாவட்டமானது அப்போதுதான் மலர்ந்த கேரளத்துடனும் இணைக்கப் பட்டன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி "மெட்ராஸ் ஸ்டேட்" என்பதனைத் "தமிழ் நாடு" என மாற்றுமாறு தமிழரசுக் கழகம் மீண்டும் கோரியது.

ராஜ்யப் புனரமைப்பு மசோதா எஞ்சிய சென்னை ராஜ்ய சட்டப் பேரவையில் விவாதிக்கப்பட்டபோது, தமிழரசுக் கழகத்தவரான திரு. கே. விநாயகம் அவர்கள்

பெயர் மாற்றம் கோரும் திருத்தம் ஒன்றைக் கொடுத்தார். ஆனால், அரசு அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. பெயர் மாற்றம் செய்யப் பிடிவாதமாக மறுத்தது காமராசர் தலைமையில் இயங்கிய காங்கிரஸ் அரசு.

அரசியல் கட்சிச் சார்பற்ற நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் பெயர் மாற்றக் கோரிக்கையை ஏற்கு மாறு அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

''தமிழ்நாடு'' பெயர் கோரிக்கைக்கு காங்கிரசல்லாத கட்சிகள் அனைத்தும் ஒருமனதாக ஆதரவு தெரிவித்தன. தட்சிணப் பிரதேசத் திட்டத்தை எதிர்ப்பதற்காக 20—2—56ல் தமிழ் நாடு முழுவதிலும் நடைபெற்ற கடை யடைப்பும் வேலை நிறுத்தமும் பெயர் மாற்றக் கோரிக்கை யையும் ஒரு காரணமாகப் பெற்றிருந்தன. ராஜ்யம் தழுவிய முறையில் வெற்றிகரமாக நடந்த அந்த ஆர்ப்பாட்டத் திற்கும் அரசு பணியவில்லை.

## மாநகராட்சியின் ஆதரவு

பெயர் மாற்றக் கோரிக்கையை ஆதரித்து தமிழரசுக் கழக வழக்கறிஞர் திரு. பட்சி ராசகோபாலன் சென்னை மாநகராட்சிக் கவுன்சில் கூட்டத்தில் முன்மொழிந்த தீர்மானம் ஒரு மனதுடன் நிறைவேற்றி வைக்கப்பட்டது. எண்ணற்ற நகராட்சி மன்றங்களும், ஊராட்சி மன்றங்களும் பெயர் மாற்றக் கோரிக்கையை ஆதரித்தன. நாளிதழ்கள், வார இதழ்கள் பலவும் ஆதரவு தெரிவித்தன. டாக்டர் லோகியாவின் தலைமையில் இயங்கிய அகில இந்திய சோசலிஸ்ட் கட்சி அதிகார பூர்வமாகவே பெயர் மாற்றக் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்தது. நாடாளுமன்றத்திலே அப்போதைய பிளவுபடாத கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒரு மசோதாகூட பிரேரேபிக்கப்பட்டது. இதெல்லாம் தமிழக அரசின் மனதை மாற்றப் பயன்படவில்லை.

1961 ஜனவரி 30ல் சட்ட மன்றத்தைத் தன்ன கத்தே கொண்டுள்ள தமிழக அரசு தலைமை அலுவலகத்தின்

பிரதான நுழை வாயில் முன்பு சத்தியாக்கிரகம் தொடங்கப் பெற்றது. சட்டமன்றத்திற்குச் சென்ற முதல்வர், அமைச்சர் கள், எம். எல். ஏக்கள் ஆகியோர் அம் மன்றத்தை பகிஷ்கரிக் குமாறு சாத்வீக முறையில் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

சத்தியாக்கிரகம் தொடங்கிய ஒரு வாரத்திற்குள் சட்டப் பேரவைக் கூட்டம் முடிவுற்றதால், சென்னை மாவட்ட ஆட்சியாளர் (கலெக்டர்) அலுவலகத்திற்கு முன்பு சத்தியாக்கிரகம் மாற்றப்பட்டது. அங்கு சில நாட்கள் நடைபெற்ற பின், சென்னை எழும்பூர் பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டது.

## தலைவர்களும் கலந்தனர்

பிரபல நாடகப் பேராசிரியர் முத்தமிழ்க் கலா வித்துவ ரத்தினம் ஔவை தி. க. சண்முகம் மதுரை நாடக நடிகர் உடையப்பா, திரைப்படத் தயாரிப்பாளர்கள் திருவருட் செல்வர் ஏ. பி. நாகராசன், கலைக்காவலர் எம். ஏ. வேணு, திரு. சின்ன அண்ணாமலை ஆகியோர் தடையை மீறி சத்தியாக் கிரகப் போரில் ஈடுபட்டுக் கைதியாயினர். பட்சி ராசகோபாலன், இ. வெ. மணி, காரைக்குடி மா. முத்தையா மதுரை மு. மாரியப்பன், மதுரை சா. கலியாணசுந்தரம் உள்ளிட்ட வழக்கறிஞர் பலரும்; திரு. ம. சீ. கிருஷ்ணமூர்த்தி, கோ. கலிவரதன், புலவர் கீரன் போன்ற பட்டதாரிகளும்; திருமதி. சரோஜினி நாராயணசாமி, மதுரை திருமதி வீரலட்சுமி உடையப்பா, 'அருட்பா அரசி' குருவாயூர் பொன்னம்மாள் உட்பட ஏராளமான பெண்களும் சிறைப் பட்டனர். திரைப்படக் கவிஞர்கள் கா. மு. ஷெரீப், கு. சா. கிருஷ்ணமூர்த்தி, கு. மா. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர்.

மாவட்டத் தலைநகரந்தோறும் இந்த அறப்போர் நடை பெற்றது. கழகத் தோழர்களில் 1700க்கு மேற்பட்டவர்கள் சிறைப்பட்டனர். இவர்களில் பெரும்பாலோர் காலையில்

கைது செய்யப்பட்டு முன்னிரவு நேரத்தில் விடுதலை செய்யப்பட்டனர்.

சத்தியாக்கிரகப் போராட்டம் தமிழகத்தின் தலைநகரான சென்னையம்பதியில்தான் தீவிரமாக நடைபெற்றது என்றாலும், எல்லா மாவட்டங்களிலும் தலைமைக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதான நகரங்களில் எல்லாம் தலைவன் என்ற முறையில் என்னிடம் அங்கீகாரம் பெற்றவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுக் கைதாயினர்.

தொடர்ந்து 18 நாட்கள் அறப்போர் நடந்த பின்னர் அரசு மனமாற்றம் அடைந்தது. அப்போதைய நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கடித மூலம் எனக்கு அழைப்பு விடுத்து, என்னுடன் உரையாடி, தமிழ் மொழி அளவில் "தமிழ் நாடு" என்ற பெயர் ஏற்கப்படும் என்று உறுதி கூறினர். உரிய காலத்தில் ஆங்கிலத்திலும் அமுலுக்கு வரும் என்றும், அரசியல் சட்டத்திலும் இடம் பெறும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். இதன் பேரில் 16—2—61ல் அறப்போர் நிறுத்தப் பெற்றது. 24-2-61ல் நடந்த சட்டப் பேரவைக் கூட்டத்தில் என்னுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் வெளியிட்டார்.

அப்போது அவர் கூறியதன் சுருக்கம் வருமாறு:

"தமிழ்நாடு" என்று பெயர் வைப்பதில் எங்களுக்கு வெட்கமோ, அவமானமோ இல்லை. 'தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி' என்று முன்பே பெயர் வைத்தோம். அதை மாற்றவேயில்லை. தமிழின் வளர்ச்சி, தமிழ் நாட்டுப் பற்று ஆகிய விஷயத்தில்காங்கிரஸ்காரர்களுக்கு அக்கறைக்குறைவு எதுவுமில்லை.

"பல்வேறு விஷயங்களைச் சிந்தித்துப் பார்த்து, இது விஷயத்தில் அரசினர் ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

"மெட்ராஸ் ஸ்டேட்' என்பதற்கு சென்னை ராஜ்யம் என்று தமிழில் எழுதப்படுகிறது. இனி, தமிழில் எழுதும் போது சென்னை ராஜ்யம் என்று எழுதுவதற்குப் பதிலாக 'தமிழ் நாடு' என்று எழுத வேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

'அரசாங்க நிர்வாக கடிதப் போக்குவரத்தில் இனி 'தமிழ் நாடு' என்றுதான் எழுதப்படும்.

"நமது அரசியலமைப்புச் சட்டத்தில் நமது ராஜ்யத்தின் பெயர் "மெட்ராஸ்" என்றுதான் இருக்கிறது. அதை இப் போது மாற்றவேண்டிய அவசியமில்லை. பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

'ராஜ்யத்திற்கு வெளியேயுள்ளவர்களுக்கு எழுதும்போது மட்டுமே 'மெட்ராஸ்' என்ற பெயர் உபயோகப்படுத்தப் படும். அரசினரின் இந்த முடிவை அசெம்பிளியும் ஏற்றுக் கொள்ளும், தமிழ்நாட்டு மக்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறோம். இது சம்பந்தமாகக் கிளர்ச்சி நடத்தி வருவோரும் அதற்கு முற்றுப்புள்ளி வைத்து நாடு செழிக்க எல்லோரும் பாடுபடுவார்கள் என்று நம்புகிறேன். நாளை இந்த அசெம்பிளியில் 1961–62ஆம் ஆண்டுக்குரிய பட்ஜெட் வரவிருக்கிறது. "தமிழ் நாடு அரசின் பட்ஜெட்" என்ற பெயராலேயே அது இங்கு பிரேரேபிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்."

தமிழ் மொழி அளவில் இந்தப் பெயர் மாற்றம் உடனடி யாக அமுலுக்கு வந்தது. அரசு அலுவலகங்களில் பெயர்ப் பலகைகளில் எல்லாம் 'மெட்ராஸ்' அகற்றப்பட்டு, 'தமிழ் நாடு' பொறிக்கப்பட்டது. அரசின் சார்பில் வெளிவரும் வெளியீடுகள் அனைத்திலும் இந்தப் பெயர் மாற்றம் ஏற்பட்டது.

உதகையிலுள்ள அரசு மாளிகைக்குத் "தமிழகம்" என்று பெயரிடப்பட்டது.

பெயர் மாற்றம் கோரிக் கிளர்ச்சி நடந்தபோது, கோரிக்கையின் நியாயத்தை ஒப்புக்கொண்டு, இதிலே மாநில அரசு காட்டி வரும் பிடிவாதத்தைத் தம்மால் புரிந்து கொள்ள இயலவில்லை என்று கூறி, அரசியல் சட்டப்படி இதிலே தலையிடுவதற்கு மத்திய அரசுக்கு வாய்ப்பில்லை யென்பதைத் தெரிவித்துப் பிரதமர் நேரு எனக்கு நீண்ட கடிதம் ஒன்று எழுதினார்.

அறிஞர் அண்ணா, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் காரைக்குடி ராய. சொக்கலிங்கனார், 'கம்பன் அடிப்பொடி' சா. கணேசன் ஆகியோரும் ஆதரித்தனர். மூதறிஞர் ராஜாஜியும் பெயர் மாற்றக் கோரிக்கையை ஆதரித்து 'கல்கி' யில் குறிப்பு எழுதினார்.

தமிழ் மொழி அளவில் சென்னை ராஜ்யம் மறைந்து தமிழ்நாடு பிறந்ததானது, தமிழ் மொழிக்குக் கிடைத்த ஒரு பெரிய கௌரவமாகவே தாய்மொழிப் பற்றாளர்களால் கருதப்பட்டது. பிற்காலத்தில் அரசியல் சட்டத்திலேயும் "மெட்ராஸ்" எடுபட்டு, "தமிழ் நாடு" இடம் பெற்றதற்கு இது ஒரு முன்னோடி நிகழ்ச்சியாக அமைந்தது. தமிழரசுக் கழகம் அடைந்த வெற்றிகள் பலவற்றிலே இதுவும் ஒன்றாகும். ஆனால், இதற்காக அது ஆரவாரமாக விழாக் கொண்டாடவில்லை. தமிழ் மொழிக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதி, அமைதியைக் கடைப்பிடித்தது.

## பொது ஜனக் கிளர்ச்சி

இங்கு பெயர்மாற்றக் கிளர்ச்சியானது தமிழரசுக் கழகத்தால் தொடங்கப்பட்டதென்றாலும் நாளடைவில் வெகு ஜன இயக்கமாகவே விரிவடைந்தது என்பதனை சொல்லியாக வேண்டும்.

"தமிழ் நாடு" பெயர் கோரிக்கை வாரம் 1960 டிசம்பர் 18 முதல் 25ஆம் தேதிவரை தமிழ் நாடு முழுவதிலும் தமிழரசுக் கழகத்தால் கொண்டாடப்பட்டது. அதன் பின்னர்

அரசுக்குப் போதிய அறிவிப்பு கொடுத்து 1961 ஜனவரி 30ஆம் நாளில்—அதாவது, காந்தியடிகள் மறைந்த சர்வோதய நாளில் பெயர் மாற்றம் கோரி "சத்தியாக்கிரகப் போர்" தொடங்கியது தமிழரசுக் கழகம்.

கழகம் போராட்டம் தொடங்கியதும் சட்டப் பேரவையில் தி. மு. கழகம், ஜனநாயக காங்கிரஸ், கம்யூனிஸ்டு ஆகிய எதிர்க்கட்சிகள் தமிழ்நாடு என்னும் பெயரை ஏற்பதற்கு அரசு பிடிவாதமாக மறுப்பதைக் கண்டிக்கும் வகையில் வெளிநடப்பு செய்தன. தொடர்ந்து மூன்று நாட்கள் எதிர்க்கட்சிகள் இல்லாமல் சட்ட மன்றம் நடந்தது.

விருதுநகரில் சங்கரலிங்க நாடார் என்பவர் 20க்கு மேற்பட்ட கோரிக்கைகளை அரசின் முன்பு வைத்து, அதனை ஏற்க வேண்டுமென்று நிர்ப்பந்திக்கும் வகையில் உண்ணாநோன்பு தொடங்கினார். அவற்றுள் ஒன்று 'தமிழ் நாடு' பெயர் கோரிக்கை. சுமார் 60 நாட்களுக்கு மேல் உண்ணாவிரதம் இருந்த பின் 70 வயதுடைய அப்பெரியார் உயிர்நீத்தார்.

பெயர் மாற்றக் கோரிக்கையை ஆரம்பத்திலேயே காங்கிரஸ் அரசு ஏற்று, அதற்கென ஒரு போராட்டம் நடைபெறுவதைத் தவிர்த்திருக்க வேண்டும். ஆனால், அப்படி நடைபெறவில்லை. தமிழ்மொழி விஷயத்தில் காங்கிரஸ் அரசு இழைத்த தவறுகளில் இதுவும் ஒன்றாகும்.

# நூலக இயக்கம்

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு நூலக இயக்கம் ஒன்று இன்றியமையாது தேவைப்படுவதனைக் காங்கிரஸ் அரசு உணர்ந்து 1948ல் "சென்னை மாகாண நூலகச் சட்டம்" ஒன்றை சட்ட மன்றத்திலே நிறைவேற்றி வைத்தது. அப் போது கல்வி யமைச்சராக இருந்த திரு. தி. சு. அவினாசி லிங்கம் செட்டியார் அவர்களே இதற்காக முயற்சி மேற் கொண்டார்.

*தமிழகம் வழிகாட்டியது!*

இந்தியாவிலேயே இத்தகைய ஒரு சட்டம் முதன் முதலாக சென்னை ராஜ்யத்தில்தான் கொண்டு வரப்பட்டது என்பதனை இங்கு நினைவூட்ட வேண்டும். இதனை முன்மாதிரி யாகக் கொண்டுதான் மற்ற மாநிலங்களிலேயும் நூலகச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநில மட்டத்தில் கல்வி யமைச்சர் தலைமையில் ஒரு நூலகக் குழுவும், மாவட்டந்தோறும் நூலக ஆணைக் குழுவும் ஏற்படுவதற்கு சென்னை மாகாண நூலகச் சட்டம் வழி வகுத்தது. இந்தச் சட்டத்தின்படி ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலேயும் மத்திய நூலகம் நிறுவப் பெற்றது.

நூலகச் சட்டப்படி, சென்னையில் மாநகராட்சியும் வெளி மாவட்டங்களில் நகர மன்றங்களும் ஊராட்சி மன்றங்களும் வசூலிக்கும் சொத்து வரியிலே ஒரு ரூபாய்க்கு மூன்று காசு என்ற அளவில் நூலக வரியையும் இணைத்து வசூலிக்கப்படுவ தற்கு வழி செய்யப்பட்டது.

இத்துடன், கிளை நூலகங்களுக்கு நூல்கள் வாங்குவதற் காக மட்டும் மத்திய அரசும் தமிழக அரசும் ஓரளவு நிதி

உதவி புரியவும் நூலகச் சட்டத்தில் விதி வகுக்கப் பட்டது.

1953ஆம் ஆண்டில் சென்னை மாவட்ட நூலகக் குழுவில் சென்னை மாநகராட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப் பினன் ஆனேன். அதனையடுத்து அக்குழுவின் தலைவனாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டேன். தொடர்ந்து மூன்றாண்டுக்காலம் அந்தப் பொறுப்பை நிர்வகித்தபோது, சென்னை நகரில் மத்திய நூலகம் ஒன்றை வாடகைக் கட்டிடத்தில் நிறுவினேன்.

அதுவரை சென்னை மாநகராட்சி 70க்கு மேற்பட்ட படிப்பகங்களையும் நூலகங்களையும் நகரின் பல்வேறு வட்டங் களில் நிறுவி நிர்வகித்து வந்தது. இதற்கென மாநகராட்சி யின் பொது நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் ஆண்டு தோறும் செலவழிக்கப்பட்டு வந்தது.

*சென்னை நகரில்...*

நான் அப்போது சென்னை மாநகராட்சியின் கல்விக் குழு வின் தலைவனாகவும் இருந்ததால், மாநகராட்சி நிர்வகித்து வந்த நூலகங்களை எனது தலைமையிலேயே இயங்கி வந்த சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவிடம் ஒப்படைக்க மாநில அரசின் ஒத்துழைப்பைப் பெற்று ஏற்பாடு செய் தேன். அந்தக் கிளை நூலகங்களைச் சிறந்த முறையில் விரிவு படுத்தவும், சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவுக்கென சென்னை நகரின் மத்திய பகுதியில் சொந்தமாக ஒரு கட்டிடம் அமைக்கவும் நிதி ஒதுக்கினேன்.

பின்னர், சென்னை அண்ணாசாலையில் பிரதான இடத்தில் சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழு சுமார் 10 லட்சம் ரூபாய் செலவில் தனக்கெனப் பெரிய கட்டிடம் ஒன்றைப் புதிதாக நிர்மாணித்துக் கொண்டது. இந்த நிர்மாணத்தின் போது சென்னை மாநகராட்சியின் ஒய்வு பெற்ற ஆணையர்

திரு. சுப்பராயன் அவர்கள் சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவின் தலைவராக இருந்தார்.

சென்னை மாநகராட்சியைப் பின்பற்றி வெளி மாவட்டங்களிலும் நகர மன்றங்களால் நிர்வகிக்கப்பட்டு வந்த நூலகங்கள் எல்லாம் அவை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆணைக் குழுக்களின் பொறுப்புக்கு மாற்றப்பட்டன.

தமிழ் நாட்டில் நூலக இயக்கத்தைத் தொடங்கி வைத்து, அது நாளொரு மேனியாக வளர்வதற்கான சட்ட திட்டங்களை வகுத்ததானது, தமிழில் நூல்கள் பெருகுவதற்கு உதவிகரமாக அமைந்ததெனலாம். தமிழ் வளர்ச்சியில் நூலக இயக்கத்திற்குள்ள பிரதான பங்கை யாரும் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை.

# உலகத் தமிழ் மாநாடு

நாடு சுதந்திரம் பெற்றபின்—தமிழகம் தனியரசு மாநிலம் ஆனபிறகு—தமிழ் மொழிக்கு நடந்த சிறப்புக்களிலே தலையாயது 'உலகத் தமிழ் மாநாடு' நடத்தப்பட்டதாகும்.

தமிழ் மொழிக்கு இயற்கையாகவே உலகப் புகழ் உண்டு. உலக நாடுகளில் குடியேறி வாழும் இந்திய மக்களிலே தமிழர்களே பெரும்பாலோராவர். இலங்கையின் பூர்வகுடி மக்களிலே நான்கில் ஒரு பங்கினர் தமிழர். அவர்கள் தாங்கள் வாழும் பிரதேசங்களைத் தனியரசு நாடாக்கக் கோருமளவுக்கு தனித் தேசிய இனமாக வாழ்கின்றனர்.

மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் அந்த நாடுகளின் மக்கள் தொகையில் 10 சத விதத்தினர் தமிழராவர். இந்த இரு நாடுகளிலும் மலாய், சீனம் ஆகிய மொழிகளோடு சம அந்தஸ்தில் தமிழும் ஆட்சிமொழி யாக்கப்பட்டிருக்கிறது.

பிரிட்டன், அமெரிக்கா, ருஷ்யா, மலேசியா, சிங்கப்பூர் இலங்கை ஆகிய நாடுகளின் வானொலி நிலையங்களிலே தமிழுக்கெனத் தனியாக ஒரு துறை நிறுவப்பட்டு, அது வெற்றிகரமாக இயங்கி வருகிறது.

தமிழிலுள்ள திருக்குறள் உலக மொழிகளில் எல்லாம் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. மற்றும், உலகிலுள்ள பல்கலைக் கழகங்கள் பலவற்றிலே தமிழ்த் துறையும் இருந்து வருகின்றது.

இந்தச் சிறப்புகளையெல்லாம் பின்பலமாகக் கொண்டு, "உலகத் தமிழ் மாநாடு" நடத்த 1966ல் முயற்சி எடுக்கப்பட்டது. பிரெஞ்சுக்காரரான பேராசிரியர் ஜீன் பிலியோஸா அவர்களைத் தலைவராகவும், இலங்கை வாசியான தவத்திரு.

தனிநாயகம் அடிகளாரையும், செக்கோஸ்லோவேகியா குடி மகனான பேராசிரியர் கமில் சுவலபில் அவர்களையும் செய லாளராகக் கொண்டிருந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் இந்த மாநாட்டை நடத்தப் பொறுப்பேற்றது.

முதல் மாநாட்டை நடத்துவதற்கு மலேசியாவின் தலை நகரான கோலாலம்பூரிலுள்ள பல்கலைக் கழகம் அழைப்பு விடுத்தது. மலேசிய சமஷ்டி அரசில் தமிழினத்தின் சார்பில் அமைச்சர் பதவியைப் பெற்றிருந்த திரு. வி. தி. சம்பந்தம் அவர்கள் தலைமையில் வரவேற்புக் குழு ஒன்றும் நிறுவப் பெற்றது. மற்றொரு தமிழ் அமைச்சரான திரு. மாணிக்க வாசகமும் இந்தக் குழுவில் இடம் பெற்றார். மலேசியப் பிரதமர் துங்கு அப்துர் ரகுமான் இந்தக் குழுவின் காப்பாள ராக இருக்க இசைந்தார்.

இந்த மாநாடு வெற்றிகரமாக நடைபெறுவதற்கு நமது தமிழக அரசின் உதவி தேவைப்பட்டது. அப்போது திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் தமிழக முதல்வராக இருந்து வந்தார். தவத்திரு. தனிநாயகம் அடிகளும் நானும் சென்று தமிழக முதல்வரைச் சந்தித்து, மாநாட்டின் வெற்றிக்கு அவருடைய உதவியை வேண்டினோம். அவரும் உதவி புரிவ தாகத் தயக்கமின்றி இசைவு தெரிவித்தார். தமிழக அரசின் செலவிலேயே கோலாலம்பூர் மாநாட்டிற்குச் செல்வதற்காக 48 பேர் அரசால் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

அவர்களில் திருவாளர்கள் பி. டி. ராசன், தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், நெ. து. சுந்தரவடிவேலு, டாக்டர் மு. வரதராசனார், நாவலர் இரா. நெடுஞ்செழியன், சா. கணேசன், வித்வான் கி. வா. ஜகந்நாதன், வி. கார்த்தி கேயன், ஐ. மகாதேவன் டாக்டர் இரா. நாகசாமி, ஔவை தி. க. சண்முகம், பாரதியாரின் பேத்தி, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த லெ. கரு. இராமநாதன் செட்டியார், நான் ஆகியோரும் இருந்தோம். மற்றும் 25 நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

ஏப்ரல் 3வது வாரத்தில் கோலாலம்பூரில் முதலாவது உலகத் தமிழ் மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது. இந்த மாநாடு, இந்திய மொழிகளின் வரலாற்றிலே ஒரு புதிய ஏட்டைத் தொடங்கி வைத்தது எனலாம். ஆம்; உலகத் தமிழ் மாநாடு நடத்தத் தொடங்கிய பின்னர், சம்ஸ்கிருதம்—இந்தி—தெலுங்கு—மலையாளம் முதலிய இந்திய மொழிகளின் பெயராலும் உலக மாநாடு தனித்தனியே நடைபெற்று வரக் காண்கிறோம்.

கோலாலம்பூர் மாநாட்டிற்குத் தமிழக அரசு குழுவின் தலைவராக வந்திருந்த முதலமைச்சர் எம். பக்தவத்சலனார், இரண்டாவது மாநாட்டைத் தமிழகத்தின் தலைநகரான சென்னையம்பதியில் நடத்துவதற்கு தமது ஆட்சியின் சார்பில் அழைப்பு விடுத்தார். அதனை, உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் ஏற்றுக் கொண்டது. 1968ல் இம்மாநாட்டை நடத்துவதற்கான ஆரம்ப ஏற்பாடுகளைச் செய்திருந்த நிலையில் தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி முடிந்து தி. மு. க. ஆட்சி தோன்றியது. அந்த ஆட்சி பாரதம் தழுவிய ஒரு தேசிய விழாவாகவே உலகத் தமிழ் மாநாட்டை நடத்திய தனை மக்கள் மறந்திருக்க முடியாது. அதுபற்றி உரிய இடத்தில் விவரிக்கப்படும்.

தமிழ் நாட்டில் நீண்ட காலமாகப் பிரிவினை இயக்கம் வலுவாக இருந்து வந்திருக்கிறது. தமிழ் மொழி வழங்கும் மாநிலம் தனியரசு நாடாக—அதாவது, சுதந்திர நாடாக இருக்க வேண்டுமென்ற கிளர்ச்சி கால் நூற்றாண்டு காலம் நடந்து வந்தது. அதனால், தேசியவாதிகள் தாய்மொழிப் பற்றுக்கே பிரிவினை உணர்ச்சி என்று பெயர் வைத்து, அதனை வெறுத்து வந்தனர்.

இந்த நிலையில், தமிழ் மொழியின் பெயரால் தமிழ்நாட்டு அறிஞர்கள் அயல்நாடுகளோடு நேரடியாகத் தொடர்பு கொள்வதை மத்திய அரசு சந்தேகிப்பதற்குச் சந்தர்ப்பம் இருந்தது. எனினும், அரசியல் தொடர்பு சிறிதேனுமில்லாத

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் பொறுப்பேற்று உலகத் தமிழ் மாநாட்டை மலாசிய நாட்டில் நடத்த முன் வந்ததாலும், அந்த நாட்டிலும் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை மாநாட்டிற்கான ஏற்பாடுகளைச் செய்ததாலும், காங்கிரஸ் ஆட்சியின் முதலமைச்சர் திரு எம். பக்தவத்சலனார் கோலா லம்பூர் மாநாட்டிற்குச் செல்லும் இந்தியக் குழுவுக்குத் தலைமை வகித்ததாலும் மத்திய அரசு அந்த மாநாட்டிற்குச் செல்லும் இந்தியப் பிரதிநிதிகளுக்குப் பாஸ்போர்ட், அந்நியச் செலாவணி முதலிய வசதிகளைத் தாமதமின்றி வழங்கியது.

கோலாலம்பூரில் மாநாடு நடந்த நாளிலே, அங்குள்ள இந்தியத் தூதுவர், மாநாட்டுப் பிரதிநிதிகள் அனைவருக்கும் தேநீர் விருந்தளித்து உபசரித்தார்.

இதெல்லாம் தமிழ் மொழிக்கு மத்திய அரசு செய்த சிறப்புகளாகும். தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்ற காலத்தில் தொடங்கப்பட்ட இந்த நடைமுறை—அதாவது, அயல் நாட்டிலே உலகத் தமிழ் மாநாடு நடத்தும் வழக்கம் தி. மு. க. ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்ததனை உலகம் அறியும். வேறு மாநில மொழி எதன் பெயராலும் இந்தியாவுக்கு வெளியே அயல் நாடு ஒன்றில் உலகந்தழுவிய முறையில் இதுவரை மாநாடு நடைபெற்றதில்லை. தமிழ் மொழிக்கு அடுத்தபடியாக இந்தியாவின் பொது மொழியாக இந்திய அரசியல் சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள இந்தி மொழியின் பெயரால்தான் மொரீஷியஸ் நாட்டில் 1974ல் உலக இந்தி மாநாடு நடத்தப் பெற்றது. அதிலே, அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி கலந்து கொண்டார்.

1956க்கும் 1966க்கும் இடைப்பட்ட பத்தாண்டுக் காலத்தில் தமிழக அரசானது தமிழ்ப் புலவர்களுக்கும் தமிழினத் தலைவர்களுக்கும் நினைவுச் சின்னங்கள் அமைக்கவும், தமிழ்க் கலாச்சாரத்தை வளர்க்கவும், பல திட்டங்களைச் செயல்படுத்தியது.

# நினைவுச் சின்னங்கள்

திருக்குறள் தந்த திருவள்ளுவர் பெயரால் ஆண்டிலே ஒரு நாளை அரசு விடுமுறை நாளாகச் செய்து, அந்த நாளிலே வள்ளுவர் புகழை மக்கள் கொண்டாடுவதற்கு வழி வகுக்க வேண்டுமென்று நீண்ட காலமாகவே தமிழ்ப் புலவர்கள் கோரி வந்தனர்.

## *திருவள்ளுவர் திருநாள்*

தமிழக சட்டமன்றப் பேரவையில் தி.மு. கழகம் எதிர்க் கட்சியாக இருந்தபோது, அதைச் சார்ந்திருந்த புலவர் கோவிந்தன் அவர்களும் ஒரு தீர்மானம் கொடுத்தார். அதன் பேரில் திருவள்ளுவர் முத்தி அடைந்ததாகப் புலவர்களால் கருதப்படும் நட்சத்திர நாளை "திருவள்ளுவர் நாள்" ஆகக் கருதி, ஆண்டுதோறும் அந்நாளில் விடுமுறை அளிக்கப்படும் என்று தமிழக அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டது.

முதன் முதலாக 1966 ஜூன் 2-ல் இது நடைமுறைக்கு வந்தது. சரித்திர நாயகனுன ஒரு புலவன் முத்திபெற்ற நாளை அரசு விடுமுறை நாளாகச் செய்யும் வழக்கம் இதன் மூலம்தான் முதன் முதலில் தொடங்கியது. பின், தி. மு. கழகம் ஆட்சியிலிருந்தபோது, திருவள்ளுவர் முத்தியடைந்த நாளுக்குப் பதிலாக ஆண்டுதோறும் தைப் பொங் கலுக்கு அடுத்த நாளான சனவரி 15ல் விடுமுறை விடும் மாற்று ஏற்பாடு நடைமுறைக்கு வந்தது.

## *திருவள்ளுவர் சிலைத் திறப்பு*

2—6—1966ல் சென்னை மாநகராட்சி தமிழக அரசின் அனுமதியோடு மயிலை சம்ஸ்கிருதக் கல்லூரிக்கு அருகில் ஒரு

பொதுவிடத்தில் திருவள்ளுவர் உருவச் சிலையை நிறுவியது. குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் இந்தச் சிலையைத் திறந்து வைத்தார். திறப்பு விழாவிலே முதலமைச்சர் எம். பக்தவத்சலனார் தலைமை வகித்தார். அப்போது சென்னை மாநகராட்சி தி மு. கழகத்தின் செல்வாக்கில் இருந்தது. திரு. மைனர் மோசஸ் மேயராக இருந்தார்.

## விடுதலை வீரர்களுக்குச் சிலைகள் எடுத்தல்

1957 ஆகஸ்டு 15 தொடங்கி ஒரு வார காலம் சுதந்திரப் புரட்சியின் நூற்றாண்டு விழா நாடெங்கும் கொண்டாடப் பட்டபோது, மறைந்துவிட்ட விடுதலை வீரர்களுக்கு நினைவுச் சின்னங்கள் ஏற்படுத்தப் பட்டன. அப்போது, நெல்லை மாவட்டத்தில் பாபநாசம் அருகே கலியாண தீர்த்தக்கரையில் மகரிஷி வ.வே.சு. அய்யர் பெயரால் ஒரு நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டது.

திருப்பூர் ரயில்வே நிலையத்தின் அருகில் விடுதலைப் போரில் போலீசாரிடம் அடிபட்டு உயிர் நீத்த வீரன் திருப்பூர் குமரன் நினைவாக ஒரு உருவச் சிலை நிறுத்தப்பட்டது.

சென்னை செம்பியம் காலனியில் திரு.வி.க. முகவுருவச் சிலை நிறுத்தப்பட்டது.

ஒட்டப்பிடாரத்தில் கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார் வாழ்ந்த வீட்டை அவருடைய நினைவுச் சின்னமாகச் செய்யும் பொருட்டு, அரசு விலைக்கு வாங்கியது. பின்னர் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே அங்கு புதிதாகக் கட்டிடம் எழுப்பப்பட்டு, அதில் வ.உ.சியின் நினைவாக நூலகம் நிறுவப்பட்டது.

## கயத்தாற்றில் கட்டபொம்மன் தூண்

விடுதலைப் புரட்சியின் நூற்றாண்டு விழாவின்போது வீர பாண்டியக் கட்டபொம்மனுக்கும் நினைவுச்சின்னம் ஏற்படுத்த

வேண்டுமென்று தமிழரசுக் கழகம் தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடுத்தது. ஆனால், 1857ல் வடக்கே நடைபெற்ற சிப்பாய்ப் புரட்சியிலிருந்து கணக்கெடுத்துத்தான் சுதந்திரப் புரட்சியின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறதென்றும் அதற்கு முற்பட்ட காலத்தில் கட்ட பொம்மன் வாழ்ந்தவராதலால், அவருக்கு நினைவுச் சின்னம் எழுப்புவதற்கு அரசு திட்டமிடவில்லை யென்றும் சமாதானம் சொல்லப்பட்டது.

5—7—1957 அன்று சட்டமன்றப் பேரவையிலே திரு. என்.கே. பழனிச்சாமி என்ற கம்யூனிஸ்டு உறுப்பினர்,

> "தமிழரசுக் கழகத் தலைவரிடமிருந்து கட்டபொம்மனுக்கு நினைவுச் சின்னம் அமைப்பது குறித்த கோரிக்கை ஏதேனும் அரசுக்குக் கிடைத்ததா?"

என்று வினா எழுப்பினர். அதற்கு நிதியமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அளித்த விடை வருமாறு:

"1957 ஜூலைத் திங்களில் தமிழரசுக் கழகத் தலைவரிடமிருந்து சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை நுழை வாயில் அருகே கட்டபொம்மன் சிலையை நிறுவ வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்தது. மேலும், இதற்கு அரசின் உதவியை எந்த அளவிலும், தன்மையிலும் எதிர்பார்க்கலாம் என்றும் விளக்கம் கோரப்பட்டுள்ளது. கட்ட பொம்மன் பிறந்த ஊரிலாவது அவர் நெருங்கிய சம்பந்தப்பட்ட இடத்திலாவது, அவர் உயிர்நீத்த தலத்திலாவது நினைவுச்சின்னம் அமைக்கப்படும் என்று தமிழரசுக் கழகத் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் அளித்த இந்த பதிலைப் பத்திரிகைகளில் பார்த்து, 17—7—1957ல் நேரில் அவரைச் சந்தித்து, மேலும் விவரம் அறிய முயன்றேன்.

அப்போது கட்டபொம்மனுக்கு நினைவுச் சின்னம் அமைக்க தனிப்பட்ட நபரோ, அமைப்போ முன் வந்தால் வேண்டிய உதவிகளை அரசு செய்யும் என்று அவர் கூறினார்.

இதன்பின், எனது தூண்டுதல் பேரில் பத்மினி பிக்சர்ஸ் உரிமையாளர் திரு. பி.ஆர். பந்துலு அவர்கள் கயத்தாறில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடத்தில் ஒரு நினைவுத் தூண் எழுப்ப முன் வந்தார். அந்த இடத்தில் ஒரு குறிப் பிட்ட அளவு நிலத்தையும் அவர் விலை கொடுத்து வாங்கினர்.

பின்னர், அதே இடத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் கட்டபொம்மன் நினைவுத் தூணை நிறு வினர். பல காரணங்களால் திறப்பு விழா உடனடியாக நிகழாமல் பல ஆண்டுகள் தடைப்பட்டு. 1970 ஜூலைத் திங்களில் நடைபெற்றது. அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. கு. காமராசர் அவர்கள் திறந்து வைத்தார்.

## விடுதலை வீரர்கள் சிலை

பாளையங்கோட்டை நகரில் ஒரு பொது இடத்தில் நகராட்சியால் வீரபாண்டியக் கட்டபொம்மன், கப்ப லோட்டிய தமிழன் ஆகியோரின் முழு உருவச் சிலைகள் நிறுத்தப்பட்டன. இந்த நகர மன்றம் அப்போது காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கில் இருந்தது.

திரு. ஏ. ஜி. சுப்பராமன் அவர்கள் காங்கிரஸ் சார்பில் மதுரை நகர மன்றத் தலைவராக இருந்தபோது அதன் சார்பில் ஒரு பொது இடத்தில் கட்டபொம்மன் முழு உருவச் சிலை நிறுத்தப்பட்டது.

## வ. உ. சி. கப்பல்

வ உ. சிதம்பரம் பிள்ளை அவர்களால் தூத்துக்குடியில் சுதேசிக் கப்பல் கம்பெனி தொடங்கப்பட்டதும், பிரிட்டிஷ் ஆட்சியின் அடக்குமுறை காரணமாக அந்தக் கம்பெனி வீழ்ச்சியுற்றதும் சரித்திர நிகழ்ச்சிகளாகும்.

நாடு சுதந்திரம் பெற்றபின் வ.உ.சி.யின் நினைவாக "எஸ். எஸ். சிதம்பரம்" என்ற கப்பலை தூத்துக்குடிக்கும்

கொழும்புக்கும் இடையே போக்குவரத்துக்கு விடுவதற்கு தூத்துக்குடி தேசபக்தர்களான திரு. எம். சி. வீரபாகு, திரு. ஏ. பி. கி. வீரபாகு ஆகியோர் முயற்சி மேற்கொண்டனர். தமிழக அரசும் மத்திய அரசும் அதற்குப் பல வழிகளில் உதவிகள் செய்தன. சுதந்திர இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரலான ராஜாஜி அவர்களைக் கொண்டு அந்தக் கப்பல் தூத்துக்குடிக் கடலிலே மிதக்க விடப்பட்டது.

## *ஏர்முனைத் திருநாள்*

தைத் திங்கள் முதல் நாளில் வரும் பொங்கல் திருநாளை ஆண்டுதோறும் 'ஏர்முனைத் திருநாளாக'க் கொண்டாட வேண்டும் என்று தமிழக அரசுக்கு 1964ல் நான் ஒரு வேண்டுகோள் விடுத்தேன். அப்போது முதலமைச்சராக இருந்த திரு. எம். பக்தவத்சலனார் அவர்கள், என் வேண்டுகோளை அமைச்சரவையில் வைத்து ஆலோசித்து அதன் அங்கீகாரத்தைப் பெற்று, 14—1—1966ல் கிராமந்தோறும் 'ஏர்முனைத் திருநாளை'க் கொண்டாட ஒரு திட்டம் தயாரித்து அதனை நாடறிய அறிவித்திருந்தார். அது வருமாறு:

"பொங்கல் திருவிழாவை ஏர்முனைத் திருவிழாவாகக் கொண்டாட அரசாங்கம் முடிவு செய்துள்ளது. தமிழரசுக் கழகத் தலைவர் கூறிய யோசனையைப் பரிசீலிக்கலாம் என்று நான் அரசுக்கு யோசனை கூறினேன். இதுபற்றி அரசாங்கமும் ஏற்கெனவே பரிசீலித்து வந்தது. இப்போது பொங்கல் விழாவை ஏர்முனைத் திருவிழாவாகக் கொண்டாட அரசாங்கம் முடிவு செய்துள்ளது. உற்பத்தியைப் பெருக்கும் வகைகளை விளக்க இந்த விழா பயன்படும்.

"தை முதல் தேதி (ஜனவரி 14ஆம் தேதி) மாலை ஏர்முனைத் திருவிழா ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்திலும் நடக்கும். விவசாய உற்பத்திப் பண்டங்கள், கருவிகள் ஆகியவை கொண்ட கண்காட்சி வைக்கப்படும். ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடக்கும்.

"உழவுத் தொழிலின் பெருமையை விளக்கும் நாடகங்கள், பாடல்கள் ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடக்கும்."

["நவமணி"யில் 4—1—1965 இதழில் வெளியானபடி.]

துரதிர்ஷ்டவசமாக, பொங்கலுக்கு ஒன்றிரு நாட்களுக்கு முன்பு பாரதப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி இயற்கையெய்தியதால் அந்த ஆண்டில் விழா தடைப்பட்டு விட்டது. அடுத்த ஆண்டு முதல் ஒன்றிரண்டு ஆண்டுகள் விளம்பரமற்ற முறையில் அந்த விழா நடைபெற்றது.

## கோபுரச் சின்னம்

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் ஒவ்வொரு மாநிலமும். தன் தனக்கெனத் தனியாக அரசுச் சின்னம் ஒன்றை அமைத்துக் கொள்ளலாம் என்று மத்திய அரசு அறிவித்தது. அதனைப் பயன்படுத்தித் தமிழக அரசு தனக்கென திருக்கோயில் கோபுரத்தைச் சின்னமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டது.

இன்று சமயங்கள் பலவாகி விட்டனவாதலால் கோபுரம் இந்து சமயத்தின் சின்னமாகக் கருதப்படுகிறது. ஆனால், பாரதத்தில் ஒரே சமயம் நிலவிய காலத்திலே தமிழகத்தில் வானளாவும் கோபுரங்களையுடைய திருக்கோயில்கள் எழுப்பப்பட்டன. அதனால், கோபுரம் தமிழகத்தின் பூர்விகச் சின்னமாகவும் கட்டிடக் கலையில் பண்டைத் தமிழர் பெற்றிருந்த கைத்திறனுக்குச் சான்றாகவும் விளங்கி வருகிறது. இதனைத் தேர்ந்தெடுத்துத் தமிழினத்தின் கலாசாரத்திற்கு பெருமை தேடியது தமிழக அரசு.

# தொல்பொருள் துறை

பிரிட்டிஷார் இந்தியாவில் ஆதிக்கஞ் செலுத்திய காலத்திலே "தொல்பொருள் துறை" என்பதாக ஒன்று மத்திய அரசில் இருந்து வந்தது. அந்தத் துறை இந்திய மக்களின் பெருமையை உயர்த்தும் வகையில் செயல்படவில்லை என்ற புகார் இருந்து வந்தது. நாடு விடுதலை பெற்ற பின்னர், அத்துறையின் போக்கில் மாறுதல் ஏற்பட்டது. காக்கப்பட வேண்டிய புராதனச் சின்னங்களையெல்லாம் பேணிக் காப்பதற்குத் தொல்பொருள் துறை திட்டமிட்டுச் செயல்பட்டது. அத்துடன், அகழாய்வுப் பணிகளையும் மேற்கொண்டது.

தமிழருடைய பண்டைப் பெருமைகளைத் துலக்கும் அகழ்வாராய்வுகளும் நடைபெற்றன—குறிப்பாக, சிலப்பதிகாரத்தில் "வேலை அகழால் அமைந்த அவனிக்கு, புகழால் அமைந்த புகார்" என்று இளங்கோ புகழும் சிறப்பைப் பெற்றிருந்து, பின்னர், கடலால் கொள்ளப்பட்டு மறைந்த பூம்புகார் நகரம் பற்றிய உண்மைகளை அறிய மத்திய தொல்பொருள் துறை அகழாராய்வுப் பணியில் ஈடுபட்டது.

தொல் பொருள் ஆய்வுப்பணியை விரிவாகவும் திறம்படவும் நடத்த வழி செய்யும் பொருட்டு, ஒவ்வொரு மாநிலமும் தன் தனக்கெனத் தனியாகத் தொல்பொருள் துறையை அமைத்துக் கொள்ளலாமென்று மத்திய அரசு ஆலோசனை கூறியது. இது, கலாசாரத் துறையில் மாநிலங்களுக்கு மத்திய அரசு வழங்கிய சுயாட்சியாகும்.

*இயக்குநர் திரு. நாகசாமி*

இதன்படி, 1961ல் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை ஒன்றைத் தனியாக நிறுவிப் பத்து ஐந்தாண்டுகள்

கழித்து 1966ல் தமிழக சட்ட மன்றம், "தமிழ்நாடு தொல் பொருள் வரலாற்றுச் சின்ன பாதுகாப்பு மசோதா"வைச் சட்டமாக்கியது.

இந்தச் சட்டத்தின் கீழ் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள், தமிழக தொல்பொருள்துறையின் முதல் இயக்குன ராக நியமிக்கப்பட்டார். அந்த ஆண்டிலேயே பூம்புகார் அகழ்வராய்ச்சிப் பணியைத் தமிழக அரசின் துறைக்கு மாற்றித் தந்தது மத்திய அரசு. அது முதல், இயக்குநர் டாக்டர் நாகசாமியின் உற்சாகத்தாலும் உழைப்பாலும் அகழாய்வுப் பணி விரிவடைந்து வருகிறது.

1961முதல் 1966வரை பூம்புகார் அகழாய்வுப் பணியை மத்திய அரசின் தொல் பொருள் துறையே நடத்தி வந்த தென்பதனை இங்கு நினைவூட்ட வேண்டும்.

மாவட்டங்களில் ஊர்தோறும் சென்று, அங்குள்ள கல்வெட்டுகளை ஆய்ந்து, படி எடுத்து, அவற்றை அச்சிட்டு வருவதும் இத்துறையின் பணியாக அமைந்தது.

வீர மரணமடையும் பழங்காலத் தமிழ் மறவர்களுக்கு நிறுவப்பட்ட நடு கற்களை இத்துறை கண்டு பிடித்து வருகிறது.

தமிழ் நாட்டிலுள்ள வரலாற்றுச் சின்னங்களில் மத்திய அரசாங்கத்தால் பாதுகாத்து வரப்படுபவை போக மற்ற வற்றை மாநில தொல்பொருள் துறை பொறுப்பேற்றுப் பழுது பார்த்துப் பாதுகாத்து வருகிறது. இவற்றில் கோயில் களே முக்கியமானவையாகும்.

## கட்டபொம்மன் கோட்டை

இந்திய விடுதலைப் போரைத் தொடங்கி வைத்ததற்காக ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டு மாண்ட வீரபாண்டியக் கட்டபொம்மன் அரசாண்ட பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் தகர்த்து தரைமட்டமாக்கப்

பட்டது. அதன் அடித்தளம் மட்டுமே விட்டுவைக்கப் பட்டது.

1950ல் "வி. ஓ. சிதம்பரம்" கப்பலை மிதக்கவிட கவர்னர் ஜெனரல் ராஜாஜி தூத்துக்குடிக்கு வருகை தந்தபோது அவர் பயணஞ் செய்த விமானம் பாஞ்சாலங்குறிச்சியில் இறங்குவதற்கு விசேஷமாக ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது, பாஞ்சாலங்குறிச்சியில் ஆங்கிலேயரால் தரைமட்டமாக்கப்பட்ட கோட்டைப் பிரதேசத்தை ராஜாஜி பார்வையிட்டு, அதனை, மத்திய தொல்பொருள் துறையின் பொறுப்பில் எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்தார்.

பின்னர், தமிழக அரசுக்கெனத் தொல்பொருள் துறை அமைந்த பின், பாஞ்சாலங்குறிச்சி கோட்டைப் பகுதியை அகழாய்வு நடத்தும் பணி அதன் பொறுப்பில் விடப்பட்டது. அது, கட்டபொம்மன் அரண்மனையை அகழ்ந்தாய்ந்து கல்யாண மண்டபத்தையும், அந்தப்புறப் பகுதிகளையும் வெளிக் கொணர்ந்ததோடு, அவற்றைப் பழுதுபார்த்து, பாது காத்தும் வருகிறது.

டாக்டர் நாகசாமி, தமிழினத்தின் புதைந்து போன பழம் புகழ்களை அகழ்ந்தெடுத்து உலகிற்கு அறிவிப்பதற்கென்றே அவதரித்தவர்போல, அப்பணியில் முழுமூச்சுடன் ஈடுபட்டு வருவது பாராட்டத் தக்கதாகும்.

# மத்திய அரசின் தமிழ்ப் பணி

இதுவரை, தமிழக அரசின், அதனால் நிறுவப்பெற்ற பல்வேறு அமைப்புகளின் மூலம் தமிழ் வளர்க்கவும், தமிழர் புகழ் பெருக்கவும் ஆற்றப்பட்டு வந்துள்ள பணிகளை அறிந்தோம். இனி, இந்தியப் பேரரசு ஆற்றியுள்ள பணிகளையும் அறிய முயல்வோம்.

பெரும்பாலும் தமிழரல்லாதார் செல்வாக்கிலுள்ள இந்தியப் பேரரசு, தமிழ் வளர்ச்சிக்கும் தமிழர் நலனுக்கும் பாடுபட்டு வந்திருக்கிறதென்றால், அதனைத் தமிழரிலே சிலர் நம்ப மாட்டார்கள். தமிழ் வளர்ச்சியும் தமிழர் வாழ்வும் தமிழர் கையில்தான் இருக்கிறதென்றாலும், பிற மொழியினரும் பிற இனத்தினரும் கூட, காலந்தோறும் பாடுபட்டு வந்திருக்கின்றனர் என்பதை நாம் மறந்து விடுகிறோம், நினையூட்டுவாரின்மையால்!

*கடல் கடந்த தமிழர்*

தமிழ் நாட்டிலே கழகங்களும் கட்சிகளும் தோன்றுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் இனமும் தமிழ்மொழியும் தோன்றிவிட்டன. ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஒவ்வொரு தலைமுறையிலும், தமிழை வளர்க்கவும், தமிழரை வாழ்விக்கவும் தமிழரல்லாத ஆன்றோரும், சான்றோரும் பணியாற்றி வந்துள்ளனர்.

இருபதாம் நூற்றாண்டின் முதல் இருபதாண்டுப் பருவத்திலே தென்னாப்பிரிக்கத் தமிழர்களின் துயர் துடைக்க அண்ணல் காந்தி ஆற்றியுள்ள பணிகளை அறியாதார் யார்?

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலேயும் இலங்கையில் வாழும் இந்தியத் தமிழர்கள் இன்னலுற்றதுண்டு. அந்தக் காலத்திலே, இந்திய தேசியத் தலைவர்களில் தலைசிறந்தவரான பண்டித ஜவகர்லால் நேரு, இலங்கைத் தமிழர்களின் துயர் துடைக்க இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையால் கொழும்பு நகருக்கு அனுப்பப்பட்டார். அங்கு அவர், "இலங்கை இந்தியர் காங்கிரஸ்" என்னும் பெயரில் ஒரு அமைப்பினைத் தொடங்கிவைத்து, அதிலே தமிழர் உள்ளிட்ட இலங்கைவாழ் இந்தியர் அனைவரும் திரண்டு நின்று தங்கள் உரிமைக்காகப் போராடச் செய்தார்.

பர்மா ஒரு காலத்தில் இந்தியாவின் ஒரு மாநிலமாக இருந்தது. அந்தக் காலத்திலும், அதற்கு முன்பும் இந்தியத் தமிழர்களில் லட்சக்கணக்கானவர்கள் அங்கு குடியேறினர். அவர்கள் அந்த நாட்டையே தாயகமாகக் கொண்டனர். ஆனால், இந்தியாவானது சுதந்திரத்தை நெருங்கிக்கொண்டிருந்த நேரத்திலே அந்த நாட்டை இந்தியாவிலிருந்து பிரித்துவிட பிரிட்டிஷார் சூழ்ச்சி செய்தனர். பர்மாவாழ் இந்தியரில் தமிழரே பெரும்பான்மையினர். பர்மா பிரிக்கப்பட்டு விட்டால், அங்கு வாழும் தமிழர் உள்ளிட்ட இந்தியரின் நலன்கள் பாதிக்கப்படலாம் என்று இந்திய தேசிய காங்கிரஸ் அஞ்சியது. அதனால், பர்மா பிரிவினையை எதிர்த்துப் போராடியது. ஆனால், ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த இந்திய சமுதாயத்தின் எதிர்ப்பு பலனளிக்கவில்லை. பர்மா பிரிக்கப்பட்டு விட்டது. அதன் தீய விளைவுதான் இன்று பர்மா தமிழர்படும் அல்லல்!

இரண்டாவது உலகப் பெரும் போரின்போது, பிரிட்டிஷார் பர்மாவிலிருந்து ஓட்டம் பிடித்தனர். ஜப்பானியப் படைகள் பர்மாவில் புகுந்து இந்தியர் உள்ளிட்ட பர்மியர்களைத் துன்புறுத்தியது. அந்த நேரத்திலே விடுதலை ஆர்வத்தால் பர்மாவிற்குச் சென்ற தேசத் தலைவர் நேதாஜி, பர்மா வாழ் இந்தியர்களை ஓரணியில் திரட்டி, "இந்திய தேசிய ராணுவத்"தைப் படைத்தார். அவர் அதைச் செய்தில்லை

யானல், பர்மாவாழ் தமிழர் நிலை அதோகதியாக ஆகியிருக்கும்.

கடல்கடந்த தமிழர்களுக்காக இன்று தமிழகத்திலுள்ள கழகங்களும் கட்சிகளும் கவலைப்படக் காண்கிறோம். இவை தோன்றாத காலத்திலே அந்தத் தமிழர்களின் துயர் துடைக்கப் பாடுபட்ட ஒரே அமைப்பு இந்திய தேசிய காங்கிரஸ்தான்.

காந்தியடிகள், நேருஜி, நேதாஜி போன்ற தலைவர்கள் தேசாபிமானத்தின் காரணமாக அன்று ஆற்றிய பணிகள் இன அபிமானம் உள்ள தமிழர்களாலும் போற்றப்பட வேண்டியவையாகும்.

## மத்திய கல்வி அமைச்சகம்

இந்தியா, மொழி வேறுபாடு உடைய பல பிரதேசங்களைக் கொண்ட ஒரு பெரு நாடாதலால், பிரதேச மொழிகளை வளர்க்க மாநில அரசுகளேயன்றி, மத்திய அரசும் கடமைப்பட்டிருக்கிறது. ஆயினும், பாரதம் அடிமைப்பட்டிருந்த காலத்திலே அந்தக் கடமையைச் செய்ய அன்னிய அரசு தவறி விட்டது. வேண்டுமென்றே அது தனது கடமையைப் புறக்கணித்தது என்றுஞ் சொல்லலாம்.

1946ல் ஜவகர்லால் நேரு தலைமையில் மத்தியில் "இடைக்கால அமைச்சரவை" ஏற்பட்டது. அதனையடுத்து, 1947 ஆகஸ்டு 15ல் நாடு முழு அளவில் சுதந்திரம் பெற்றது. அது முதல் 1977 மார்ச்சு வரை தொடர்ந்து 30 ஆண்டு காலம் மத்தியில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றது. இந்தக் காலத்தில் தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிகளை வளர்ப்பதிலே இந்திய அரசும் கருத்துச் செலுத்தியது.

சுதந்திர இந்தியாவுக்கெனத் தயாரிக்கப்பட்ட அரசியல் சட்டத்திலேயே இந்திய மொழிகளை வளர்ப்பதற்கென 17ஆவது பகுதி படைக்கப்பட்டது. ஆம்; அரசியல் சட்டத்

திலே 343 முதல் 351 வரையுள்ள விதிகள், இந்தியை இந்திய அரசின் ஆட்சிமொழியாகவும், மத்திய—மாநில அரசு களிடையிலும், ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற் கிடையிலும் தொடர்பு மொழியாகவும், மற்றுள்ள பிரதேச மொழிகளை அதனதன் பிரதேசத்தில் ஆட்சி மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும் செய்வதற்கு வகுக்கப்பட்டவை யாகும்.

இத்துடன் அரசியல் சட்டத்தின் 8ஆவது ஷெட்யூலில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், மராத்தி, இந்தி, வங்காளி, ஒரியா, அஸ்ஸாமி, காஷ்மீரி, பஞ்சாபி, சிந்தி, குஜராத்தி, உருது, சம்ஸ்கிருதம் ஆகிய 15 மொழிகள் சம தன்மையுடைய இந்திய மொழிகளாக அங்கீகரிக்கப் பட்டுள்ளன.

இதனால், ஒவ்வொரு மாநிலமும் அதனதன் மொழி, கலை, கலாசாரம் ஆகியவற்றை தான்தானே வளர்த்துக் கொள்ள அரசியல் சட்டப்படிப் பூரண சுதந்திரம் பெற்றுள்ளன என்று சொல்லலாம்.

## புதிய தமிழகம்

நாடு சுதந்திரம் பெற்ற பின்னுள்ள முதல் பத்தாண்டு காலத்தில் மாநிலங்கள் மொழிவழி திருத்தியமைக்கப் படாதது பிரதேச மொழிகளின் வளர்ச்சிக்கு ஒரு பெருந் தடையாக இருந்து வந்தது. அத்தடையை அகற்றும் வகை யில் 1956 நவம்பர் முதல் தேதியன்று இந்திய ராஜ்யங்கள் மொழி வழி திருத்தியமைக்கப்பட்டன. அதே நாளில் தமிழ் வழங்கும் நிலப்பரப்பு தனியரசு மாநிலமாக அமைந்தது.

மாநிலங்களின் எல்லைப் பிரதேசங்களிலே வாழ்கின்ற மக்கள் தத்தம் தாய் மொழியில் கல்வி கற்கவும், அந்த மொழியை வாழ்க்கை மொழியாகக் கொண்டு வாழவும் வசதி பெறவும் ராஜ்யங்களின் எல்லைகள் மொழி அடிப்

படையில் மத்திய அரசால் திருத்தியமைக்கப்பட்டன. அதன்படி, மலையாள மொழி வழங்கும் கேரள ராஜ்யத்தி லிருந்து தோவாளை, அகத்தீசுவரம், கல்குளம், விளவங்கோடு, செங்கோட்டை ஆகிய தமிழ்த் தாலுக்காக்கள் ஐந்தும் பிரித்தெடுக்கப்பட்டு, தமிழ் ராஜ்யத்துடன் இணைக்கப் பட்டன. அப்படியே, ஆந்திர ராஜ்யத்திலிருந்து திருத்தணி தாலுக்காவும் இன்னும் சில கிராமங்களும் பிரித்தெடுக்கப் பட்டு, தமிழ் நாட்டுடன் இணைக்கப்பட்டன. இவ்வளவும் மத்தியில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்ற காலத்தில் தமிழ் உள்ளிட்ட பிரதேச மொழிகளின் வளர்ச்சி கருதி செய்யப் பட்ட மாறுதல்களாகும்.

பிரதேச மொழிகளையும் அதன் வழிப்பட்ட கலைகளையும் கலாசாரத்தையும் வளர்த்துக்கொள்ள பிரதேச அரசுகளுக் குச் சுதந்திரம் வழங்கப்பட்ட தென்றாலும், அந்தப் பணியில் மத்திய அரசும் பங்குபெறும் வகையில் பல்வேறு அமைப்பு கள் அகில இந்திய ரீதியில் அமைக்கப்பட்டன. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக தொடர்ந்து 18 ஆண்டு காலம் பதவி வகித்த ஜவகர்லால் நேரு அவர்கள் இத்துறை யில் மிகுந்த அக்கரை காட்டினர்.

*சாகித்ய அகடமி*

இந்திய மொழிகளின் வளர்ச்சிக்குப் பணியாற்ற "சாகித்ய அகடமி" என்ற பெயரில் ஒரு அமைப்பு 12—3—54ல் மத்தியில் நிறுவப்பட்டது. இந்த அகடமியின் சார்பில் 1955 முதற்கொண்டு ஆண்டுதோறும் பிரதேச மொழி ஒவ்வொன்றிலும் வெளியாகும் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. பரிசுத்தொகை ரூ. 5000 ஆகும். அந்த வகையில் 1975 வரை தமிழ் எழுத்தாளர் 17 பேர் தத்தம் நூல்களுக்காக சாகித்ய அகடமியிடம் பரிசு பெற்றுள்ளனர். இந்தப் பரிசுக்காக முதன் முதலில் தேர்ந் தெடுக்கப்பட்ட நூல் பேராசிரியர் ரா. பி சேதுப்பிள்ளை அவர்களின் 'தமிழ் இன்பம்' ஆகும்.

மற்றும், பிரதேச மொழிகளில் வெளியிடப்படும் சிறந்த நூல்களை வேறு இந்திய மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிடும் பணியையும் சாகித்ய அகடமி மேற்கொண்டுள்ளது. அவ்வகையில் இதுவரை பல தமிழ் நூல்கள் ஆங்கிலம்—இந்தி—வங்காளம் ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு, சாகித்ய அகடமியால் வெளியிடப் பட்டுள்ளன.

பாரதத்தின் முன்னாள் கவர்னர் ஜெனரல் மூதறிஞர் ராஜாஜி அவர்களின் "சக்கரவர்த்தித் திருமகன்" என்ற நூலும் 1958ஆம் ஆண்டுக்குரிய நூலாகத் தேர்ந்தெடுக்கப் பட்டு, பரிசளிக்கப் பெற்றது. "வள்ளலார் கண்ட ஒருமைப் பாடு" என்ற எனது நூலும் 1966ஆம் ஆண்டுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசளிக்கப்பெற்றது.

## சங்கீத நாடக சங்கம்

சங்கீத, நாடகக் கலைகளை வளர்க்கும் பணிக்காக 1961-ல் "சங்கீத நாடக சங்கம்" ஒன்று அனைத்திந்தியாவுக்குமாக மத்திய அரசால் நிறுவப்பட்டது.

சிற்பம், சித்திரம் ஆகிய நுண்கலைகளை வளர்ப்பதற்காகப் பணி புரிவதற்கென 'லளித்கலா அகடமி (அகடமி ஆப் ஆர்ட்) என்ற பெயரில் மத்திய அரசால் 1954ல் ஒரு அமைப்பு நிறுவப்பட்டது.

## சான்றோருக்குச் சிறப்பு

இந்தியாவிலுள்ள தமிழினம் உள்ளிட்ட மொழிவழித் தேசிய இனங்களின் வரலாற்றுச் சிறப்புக்களைப் போற்று வதிலேயும் மத்திய அரசு கருத்து செலுத்தி வருகிறது. சிலப்பதிகாரக் காப்பியத்தின் தலைவியான கண்ணகியின் உருவச் சிலை தஞ்சை மாவட்டத்திலுள்ள பூம்புகாரில் தமிழக அரசின் ஒத்துழைப்போடு மத்திய அரசால் நிறுத்தப்பட்டதை முன்பே அறிந்தோம்.

தமிழகத்தின் நாதசுர—மிருதங்க—வீணை வித்வான்கள், நடன நங்கையர், நாட்டியப் பேராசிரியர்கள், நாடக — திரைப்பட நடிகர்கள் ஆகியோரில் சிறந்தவர்களுக்கு ஆண்டு தோறும் பத்மஸ்ரீ, பதுமபூஷண் ஆகிய விருதுகள் வழங்கி மத்திய அரசு கௌரவித்து வந்துள்ளது.

இந்தியாவில் தோன்றிய மகாகவிகள், மாபெரும் தலைவர்கள் ஆகியோரைச் சிறப்பிக்க அவர்களுடைய உருவங்கள் அடங்கிய அஞ்சல் தலைகளை அவ்வப்போது வெளியிடுவதிலும் மத்திய அரசு ஆர்வங் காட்டி வருகின்றது. அவ்வகையில் 1961 முதல் திருவள்ளுவர், பாரதியார், வ.உ. சிதம்பரனார், காமராசர், அண்ணாத்துரை ஆகியோரின் உருவங்கள் அடங்கிய அஞ்சல் தலைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

1968ல் சென்னை நகரில் உலகத் தமிழ் மாநாடு நடந்த போது அதனைச் சிறப்பிக்கும் பொருட்டுத் தனியாக ஒரு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

*இராணுவ உதவி*

1959ல் வீரபாண்டியக் கட்டபொம்மன் திரைப் படத்தைத் தயாரித்த பத்மினி பிக்சர்சார், அதிலே வரும் நன்கு பயிற்சி பெற்ற பிரிட்டிஷ் படைவீரர்களாக நடிப் பதற்கு இந்தியராணுவ வீரர்களைத் தந்து உதவுமாறு மத்திய பாதுகாபபுத் துறை அமைச்சகத்திற்குக் கோரிக்கை விடுத் தனர். அதனை ஏற்று ஜெயப்பூரிலுள்ள ராணுவயூனிட்டுகளைத் தந்து மத்திய அரசு உதவியது. இதனால், அப்படத்தின் சண்டைக் காட்சிகள் தத்ரூபமாகத் தயாரிக்கப்பட முடிந்தது/ இதன் மூலம் தமிழினத்தில் தோன்றிய இந்திய விடுதலை வீரர் ஒருவரின் வரலாறு பரவுவதிலே மத்திய அரசும் பங்கு பெற்றதெனலாம்.

தமிழில் நிறைபுலமை பெற்ற கப்பலோட்டிய தமிழர் நினைவாக "சிதம்பரம்" என்னும் பெயரால் சென்னைக்கும் சிங்கப்பூருக்குமிடையே போக்குவரத்துச் செய்யும் பிர

யாணிகள் கப்பலொன்றை கடலில் மிதக்கவிட்டு, அம்மா வீரரை மத்திய அரசு கௌரவித்தது.

இதன் மதிப்பு ரூ.4 கோடியே 70 லட்சமாகும். இக்கப்பல் சென்னை, நாகப்பட்டினம், பினாங்கு, சிங்கப்பூர், ஆகியவற்றிற்கிடையே போக்குவரத்துச் செய்யக் கூடியதாகும். முழுவதும் குளிர்சாதனம் படைத்த 'சிதம்பரம்' 1678 பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடியதாகும் இதில் திரையரங்கம் உண்டு.

மத்திய அரசினர் பொறுப்பிலுள்ள சென்னைத் துறைமுகத்தில் "பாரதியார் டெக்" ஒன்றும் உள்ளது.

பண விடை (மணியார்டர்)த் தாள்கள் சிறிது காலம் தமிழிலும் வெளியிடப்பட்டது. ஆனால், அதற்கு மக்களிடம் போதிய ஆதரவு கிடைக்காததால் கைவிடப்பட்டது.

வரலாற்றுச் சிறப்புடைய தமிழக அரச மரபுகளின் பெயர்களுக்குப் பெருமை தேடும் வகையில் மத்திய அரசின் பொறுப்பிலுள்ள—தமிழக எல்லைக்குள் போக்குவரத்து செய்கின்ற—இரண்டு ரெயில்களுக்கு சோழன் எக்ஸ்பிரஸ், பாண்டியன் எக்ஸ்பிரஸ் என்று பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன.

சென்னைக்கும் டில்லிக்குமாகப் போக்குவரத்து செய்யும் ஒரு ரெயிலுக்குத் 'தமிழ் நாடு எக்ஸ்பிரஸ்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதற்கெனத் தனியாக விழா நடத்தப்பட்டு, அன்று முதன்முதலாகச் சென்னையிலிருந்து டில்லிவரை அப்போதைய ரெயில்வே மந்திரி கமலபதி திரிபாதி அவர்கள் அந்த ரயிலில் பயணஞ் செய்தார்.

தமிழ்நாட்டு ரயில்வே நிலையங்களின் பெயர்ப் பலகைகள் பலவற்றில் ஊர்ப் பெயர்கள் பிழையாக எழுதப்பட்டிருந்தன, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலே! அவையனைத்தும் திருந்திய தமிழில் எழுதப்பட்டன. — குறிப்பாக, "ட்ரிச்சி" என்பதனைத் "திருச்சிராப்பள்ளி எனவும், "மெஜுரா" என்பதனை "மதுரை" எனவும், "டேஞ்சூர்' என்பதனைத் தஞ்

சாலூர்" எனவும், "மாயவரம்" என்பதனை "மாயூரம்" என்றும் மாற்றியது மத்திய அரசின் ரெயில்வே துறை.

பல ரயில் நிலையங்களின் பெயரை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கவும் செய்தது. சான்றாக, சென்னையில் "பார்க்டவுன்" என்பதனைப் "பூங்காநகர்" என்று மாற்றியதனைச் சொல்லலாம்.

1966ல் கோலாலம்பூர் (மலேசியா) நகரிலும், 1970ல் பாரிஸ் (பிரான்ஸ்) நகரிலும் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடுகளுக்குத் தமிழக அரசின் பிரதிநிதிகள் செல்வதற்கு மத்திய அரசு எல்லா வகையிலும் உதவிகரமாக இருந்ததை மீண்டும் இங்கு நினைவூட்ட வேண்டும்.

ஆங்கிலத்திலுள்ள நூல்களைப் பிரதேச மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிடுவதற்காக மத்திய அரசு மாநில அரசு ஒவ்வொன்றுக்கும் பொருளுதவி புரிந்தது, அவ்வகையில், தமிழ் மொழிக்கும் ஒரு கோடி ரூபாய் கொடுத்து உதவியது.

*இராச ராசன்*

1956ல் தமிழக சட்டமன்றத்தில் ஒருமனதுடன் நிறைவேற்றப்பட்ட தமிழ் ஆட்சி மொழி மசோதாவுக்கு அரசியல் சட்டவிதிப்படி ராஷ்டிரபதி ராசன் பாபு மகிழ்ச்சியுடன் அங்கீகாரம் வழங்கினார் என்பதனை மீண்டும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

இந்திய குடியரசுத் தலைவர் பயணஞ் செய்வதற்கென வாங்கப்பட்ட இந்தியன் ஏர்லைன்ஸ் விமானமொன்றுக்குத் தமிழக வரலாற்றில் புகழுடன் விளங்கிவரும் இராசராச சோழ மன்னன் நினைவாக, "ராச ராசா" என்று பெயர் வைத்தது மத்திய அரசு.

அரசியல் சட்டத்தில் "மெட்ராஸ் ஸ்டேட்" என்றிருப்பதனைத் "தமிழ்நாடு" என மாற்றுமாறு தி.மு.க.வின் செல்

வாக்கிலிருந்த சட்டமன்றம் 1967ல் கோரியபோது, தயக்க மின்றி அதனை ஏற்று, அதற்கென அரசியல் சட்டத் திருத்த மசோதாவொன்றையும் நாடாளுமன்றத்தில் பிரரேபித்து அதனைச் சட்டமாக்கி வைத்தது மத்திய அரசு என்பதனை முன்பே அறிந்தோம்.

## *வானொலி நிலையங்கள்*

இந்தியாவில் வானொலி நிலையங்கள் நிறுவப்பட்ட பின்னர் இந்திய மொழிகள் வளர்ச்சி யடைவதற்கு நல்ல வாய்ப்பு கிடைத்து வருகின்றது வானொலித் துறையானது பிரிட்டிஷ் ஆட்சியிலும் சரி; சுதந்திர நாட்டிலும் சரி; மத்திய அரசின் பொறுப்பில்தான் இருந்து வருகிறது. மாநில சுயாட்சி கோருவோர் கூட, இதை ஆட்சேபிக்கவில்லை. செய்திப் போக்குவரத்து மத்திய அரசின் கையிலேயே இருக்கவே வேண்டும் என்பது அவர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட கொள்கையாகி விட்டது. உலகிலுள்ள எல்லாச் சமஷ்டி நாடுகளிலும் நிலைமை இதுதான்.

செய்திப் போக்குவரத்து என்னும் பெயரில் வானொலித் துறை மத்திய அரசின் பொறுப்பிலேயே இருந்து வந்தாலும் மாநில மொழிகளின் வளர்ச்சிக்கு வாய்ப்பளிப்பதிலே மத்திய அரசு இதுவரை வஞ்சனை புரியவில்லை. மொழிகளிடையே பாரபட்சம் காட்டவில்லை. மொழி அடிப்படையில் மாநிலந் தோறும் வானொலி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஒரே மாநிலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நிலையங்கள் நிறுவப் பட்டுள்ளன. அவற்றுள் ஒவ்வொன்றும் தனித்தனி இயக்குநரைப் பெற்றுள்ளன.

தமிழகத்திலே சென்னையிலும் திருச்சியிலும் சகல வசதிகளுடனும் தனித்தனி வானொலி நிலையங்கள் இயங்கி வருகின்றன. மத்திய அரசின் நிர்வாகப் பொறுப்பிலுள்ள பாண்டிச்சேரியிலும் தனியாக ஒரு வானொலி நிலையம் தமிழுக்கென இருந்து வருவது தமிழர் அனைவரும் அறிந்த

தாகும் இந்த வானொலி நிலையங்கள் வாயிலாக இயல், இசை, நாடகம் எனப்படும் முத்தமிழும் நாள்தோறும் நன்கு வளர்ந்துவரக் காண்கிறோம்.

டில்லியிலுள்ள மத்திய வானொலி நிலையத்திலும் மொழி வாரிப் பகுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் தமிழ் மொழிக்கெனவும் ஒரு பகுதி அங்கு அமைந்துள்ளது. நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் மத்திய—மாநில வானொலி நிலையங்களிலே நவீன சாதனங்கள் பொருத்தப்பட்டு மொழி வளர்ச்சிக்கும் கலை வளர்ச்சிக்குமான வாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

## குறைபாடு

இவ்வாறு இருப்பினும், அவ்வப்போது சில குறைபாடுகளும் ஏற்பட்டு விடுகின்றன. இந்தியப் பிரதமர், குடியரசுத் தலைவர் ஆகியவர்களின் சொற்பொழிவுகள் டில்லி வானொலி நிலையங்களில் அவ்வப்போது ஆங்கிலத்திலும் இந்தியிலும் அடுத்தடுத்து ஒலிபரப்பப்படுகின்றன. அதுபோல, தமிழ் உள்ளிட்ட பிரதேச மொழிகளிலும் உடனடியாக ஒலிபரப்பப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை. இதனால் சாதாரண மக்களும் அக்கறை காட்டக்கூடிய அவசர முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளை டில்லி வானொலி நிலையம் மூலமாக பிரதமர் அறிவிக்கும்போது இந்தி மொழி வழங்காத தமிழகத்திலே ஆங்கிலம் படிக்காதவர்களும் அதனை அறிந்துகொள்ள முடிவதில்லை. வடபுலத்து மாநிலங்களில் வாழும் சாதாரண மக்களுக்கு இந்தக் குறைபாடு இல்லை. அவர்கள் இந்தி மொழியின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. ஆதலால், இது ஒரு பாரபட்சமான நடைமுறையாகவும் அமைந்து விடுகின்றது. இதனைப் போக்குவதற்கு ஒரு முறை நான் முயற்சி எடுத்தேன்.

1965 செப்டம்பர் 4 ஆம் தேதியன்று அகில இந்திய வானொலி நிலையத்தின் இயக்குநர் திரு. வி. கே. நாராயண

மேனனுக்கு ஒரு கடிதம் எழுதினேன், தமிழரசுக் கழகத்தின் சார்பாக! அதில், குடியரசுத் தலைவர், பிரதம மந்திரி ஆகியோருடைய சொற்பொழிவுகள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் ஒலிபரப்பப்படுவதை யடுத்து, தமிழிலும் உடனடியாக ஒலிபரப்பப்படவேண்டும் என்று கோரியிருந்தேன். அதற்கு, 11—9—65 அன்று அகில இந்திய வானொலி நிலையத்தின் இயக்குநர் எனக்கு அனுப்பிய பதில் வருமாறு:

"பிரதமர் அவர்களே தம்முடைய பேச்சுக்களை ஆங்கிலத்திலும், இந்தியிலும் நிகழ்த்துவதால் நாங்களும் அப்படியே அந்தப் பேச்சுக்களை ஒலி பரப்புகிறோம். மறைந்த பிரதமரும் (திரு. நேரு) இப்படித்தான் செய்து வந்தார். பிரதமரின் மற்ற பேச்சுக்களை (வானொலியில் நேரடியாகப் பேசாதவற்றை)ப் பதிவு செய்து, அவற்றைப் பிரதேச மொழிகளில் மொழி பெயர்த்து, விரைவாக ஒலிபரப்ப வேண்டும் என்று வானொலி நிலையங்களுக்கு இப்போது உத்தரவிட்டிருக்கிறேன்.

"சங்கடம் என்னவென்றால், பிரதமர் ரேடியோவில் பேசுகின்ற அதே சமயத்தில்தான் அந்தப் பேச்சின் பிரதி எங்கள் கைக்குக் கிடைக்கிறது. இந்தப் பேச்சுக்கள் பத்தில் ஒன்பதைப் பொறுத்த வரை, அன்றாட நடப்புக்களை ஒட்டியவையாக அமைகின்றன. ஆகவே கடைசிவரை இந்தப் பேச்சுக்கள் முழுமை பெறாமல் இருக்கின்றன. அதனால்தான் பிரதமரின் பேச்சுக்கள் ஏனைய ஒலிபரப்பு நடவடிக்கைகளிலிருந்து மாறுபடுகின்றன.

"இதற்கு மாறாக, குடியரசுத் தலைவரின் பேச்சுக்களின் பிரதிகள் முன்னதாகவே எங்களுக்குக் கிடைத்துவிடுகின்றன. இதனால், அவற்றை உரிய வானொலி நிலையங்களுக்கு முன்னதாக அனுப்பி, ஆங்கில மொழியில் ஒலிபரப்பி ஆனவுடன் மொழி பெயர்ப்புகளையும் உடனேயே ஒலிபரப்ப எங்களால் முடிகிறது."

எனது கடிதத்திற்கு இயக்குநர் அளித்த பதிலுக்குப் பின்னர் நிலைமையில் சிறிது மாறுதல் ஏற்பட்டது பிரதமரும் குடியரசுத் தலைவரும் நிகழ்த்தும் சொற்பொழிவுகள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் ஒலிபரப்பப்படுவதை யடுத்து தமிழிலும் ஒலிபரப்பப்படும் வழக்கம் ஏற்பட்டது. தமிழுக்குக் கிடைத்த இந்த வசதி மற்றுள்ள பிரதேச மொழி களுக்கும் வழங்கப்பட்டது என்பதனை இங்கு நினைவூட்டு கிறேன்.

*''பிராந்தியம்!''*

சென்னை, திருச்சி வானொலி நிலையங்களிலே காலையில் தமிழகச் செய்திகள் ஒலிபரப்பப்படுவது அனைவரும் அறிந்த தாகும். ஆனால், 'பிராந்தியச் செய்திகள்' என்னும் தலைப்பிட்டு, அது வழங்கப்படுகிறது. இந்த பிராந்தியம் என்ற சொல் தமிழல்ல; சுவையாகவும் இல்லை. இதனை ஆட்சேபித்து 'தமிழகச் செய்திகள்' என்று ஒலிபரப்பப்பட வேண்டுமென்று மத்திய செயற்குழுவிலும் பல்வேறு மாநாடு களிலும் தீர்மானம் நிறைவேற்றி வானொலி நிலையங்களின் இயக்குநர்களுக்கு அனுப்பிவைத்தது தமிழரசுக் கழகம். இந்தக் கோரிக்கை பற்றிக் கவனிப்பதாகத் தகவல் தந்ததோடு சென்னை, திருச்சி வானொலி நிலையங்கள் அமைதி கொண்டு விட்டன.

தி. மு. க. ஆட்சிக் காலத்திலே முதல்வர் மு. கருணாநிதி அவர்களும் 'பிராந்தியச் செய்திகள்' என்று சொல்லப்படு வதை ஆட்சேபித்தார். அதன்பின் 'பிராந்தியம்' என்பதற்குப் பதிலாக 'மாநிலம்' என்ற சொல் வழங்கப்பட்டு வருகிறது.

பிற மாநிலங்களின் வானொலி நிலையங்களை விடவும் சென்னை வானொலி நிலையத்திலே முன்பெல்லாம் தமிழ் அல்லாத வேற்று மொழி நிகழ்ச்சிகளுக்கு—குறிப்பாக, தெலுங்கு மொழி நிகழ்ச்சிகளுக்கு வரம்பு மீறி வாய்ப் பளிக்கப்பட்டு வந்தது. இதுபற்றித் தமிழ்ப் பற்றுடைய

வர்கள் அவ்வப்போது வெளிப்படுத்தி வந்த கண்டனத்தின் விளைவாகத் தமிழ் அல்லாத பிறமொழிகளுக்கு அளிக்கப்படும் வாய்ப்புகள் குறைக்கப்பட்டு வந்தன

புதிதாகத் தோன்றியுள்ள டெலிவிஷன் எனப்படும் தொலைக் காட்சியிலேயும் தமிழ் அல்லாத ஆங்கிலம்—தெலுங்கு—கன்னடம்—சம்ஸ்கிருதம்—இந்தி ஆகிய பிற மொழிகளின் ஆதிக்கம் அளவுக்கு மீறி இருந்து வருகிறது. இந்தக் குறைபாடு காலப் போக்கில் நீங்கும் என்று நம்புவோமாக!

## *சர்விஸ் கமிஷன் தேர்வு*

உத்தியோகத் துறையிலேயும் பிரதேச மொழிகளுக்கு இடம் தரும் நடவடிக்கைகளை அடிக்கடி மத்திய அரசு எடுத்து வந்திருக்கிறது. யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் தேர்விலே கலந்து கொள்வோர் தத்தம் தாய் மொழியிலும் தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும் என்று ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது

மத்திய பப்ளிக் சர்விஸ் கமிஷன் தேர்விலே கலந்து கொள்ளும் தமிழர்—அவர்கள் விரும்பினால்—தமிழிலே எழுத அனுமதிக்க வேண்டும் என்று 1965ல் தமிழ்நாடு காங்கிரஸ் செயற்குழு ஒரு தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது. இந்தக் கோரிக்கை இன்னமும் முழு அளவில் நடைமுறைக்கு வரவில்லையென்று தோன்றினாலும், ஒரு பகுதி மட்டும் தமிழிலே எழுத அனுமதிக்கப்படுகிறது.

தமிழக பப்ளிக் சர்விஸ் கமிஷன் தேர்விலேயும் நான்கு மொழிப் பிரதேசமாக அமைந்திருந்த பழைய சென்னை ராஜ்யத்திலே ஆங்கிலத்திலேதான் எழுதவேண்டியிருந்தது. தமிழகம் தனி மாநிலமான பின்னர் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டோர் தமிழிலேயே எழுத அனுமதிக்கப்படுகின்றனர். வேற்று மொழியை வீட்டு மொழியாகக் கொண்

டோரும் தமிழிலே ஒரு தாள் எழுத வேண்டும் என்ற ஆணை அமுலிலிருந்து வருகிறது.

இதெல்லாம் நாடு சுதந்திரம் பெற்றதன்—தமிழகம் தனியரசு மாநிலமாக அமைந்ததன்—காரணமாக ஏற்பட்ட நல்ல விளைவுகள் என்பதை இன்னொரு முறையும் இங்கு நினைப்பூட்ட வேண்டும்.

## தேசியக் கல்வி

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலே இந்தியர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த கல்வியானது இந்தியாவின் தேசிய நலனை ஒட்டியதாக அமைந்திருக்க வில்லையென்று தேசத் தலைவர்கள் குறைகூறி வந்தனர். ஆண்டுதோறும் கூடி வந்த இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையிலேயும் கல்வி முறையிலே போதனா மொழியும், போதிக்கும் வழியும் மாற்றப்பட வேண்டும் என்று தீர்மானம்மூலம் இடையறாது கோரப்பட்டு வந்தது. ஆனால், அப்போதைய அன்னிய ஆட்சி அதற்குச் செவிசாய்க்கவில்லை அதனால், அந்தக் கோரிக்கைக்கு வெற்றி தேடுவதற்காக மக்கள் கிளர்ச்சி செய்து வந்தனர். தாங்கள் கோரும் கல்வி முறைக்கு தேசியக் கல்வி என்றும் பெயர் தந்தனர். இந்தக் கல்வி முறைக்கு பொது மக்களிடமிருந்து ஆதரவு திரட்டுவதும் விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது. தேசியக் கல்வியானது முற்றிலும் மாணவர்களின் தாய் மொழியில்தான் அமைய வேண்டும் என்பதும் தெளிவாக்கப்பட்டு வந்தது. தேசியக் கல்வித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கென நாட்டின் பல பகுதிகளிலே தேசியப் பல்கலைக் கழகங்கள் தேசத் தலைவர்களால் அமைக்கப் பெற்றன. சர்தார் படேலின் பெருமுயற்சியால் ஆமதாபாத்திலேயும், டாக்டர் ராசேந்திர பிரசாத்தின் அரிய முயற்சியால் பாட்னா நகரிலேயும், டாக்டர் ஜாகிர் உசேன் அவர்கள் முயற்சியால் டில்லிக்கு அருகிலேயும் தேசியப் பல்கலைக் கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

சிறிய அளவிலும் தேசியக்கல்விக் கூடங்கள் நாட்டின் பல பகுதிகளிலே தேசியவாதிகளால் நிறுவப் பெற்றன. அந்த வகையில் வீர விளக்கு வ.வே.சு. ஐயரால் நெல்லை மாவட்டத்திலுள்ள சேரமாதேவியில் "தேசிய குருகுலம்" ஒன்று நிறுவப் பெற்றது.

## நடுத்தர, உயர்தர கல்விக் குழுக்கள்

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், விடுதலைப் போராட்ட காலத்தில் தான் வற்புறுத்தி வந்த தாய் மொழி மூலம் தரப் படுவதான தேசியக் கல்வித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர மத்தியிலுள்ள காங்கிரஸ் ஆட்சி முயற்சி மேற் கொண்டது. செகண்டரி கல்விமுறை பற்றி நன்கு பரிசீலனை செய்து அரசுக்குப்பரிந்துரை தருவதற்கென 1952ல் டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியார் தலைமையில் "உயர்தரக் கல்விக் கமிஷன்" ஒன்று மத்திய அரசால் அமைக்கப்பட்டது.

இக்குழு 1954ல் தனது பரிந்துரையை அரசுக்கு அளித்தது. அதிலே, உயர்நிலைப் பள்ளியில் பொதுக் கல்வி யோடு பலதிறப்பட்ட தொழிற்கல்விப் பிரிவுகள் சேர்க்கப் படவேண்டுமென்றும், பாடங்கள் யாவும் பிரதேச மொழி யிலேயே—அதாவது, மாணவர்களின் தாய் மொழியிலேயே கற்பிக்கப்பட வேண்டுமென்றும், நடுத்தரப் பள்ளியில் தேசிய மொழியான இந்தியும், அதனோடு வேறொரு அன்னிய மொழி யும் கற்பிக்கப்பட வேண்டுமென்றும் பரிந்துரைத்தது,

பல்கலைக் கழகத்தோடு தொடர்புடைய உயர்தரக் கல்வியை தாய்மொழி மயமாக்குவதற்கான திட்டம் ஒன்றை ஆய்ந்து தருவதற்கென 1948ல் டாக்டர் எஸ் ராதா கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் கல்வி நிபுணர்கள் கொண்ட குழு ஒன்றை மத்திய அரசு நியமித்தது.

இக்குழு 1949ல் தனது அறிக்கையை அரசுக்கு வழங் கியது. அதிலே, பாடம் கற்பிக்கும் மொழி மாணவர்களின்

தாய் மொழியாகத்தான் இருக்க வேண்டுமென்று கமிஷன் ஒருமனதாக அறிவித்திருந்தது. இக்குழுவில் அப்போதைய சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் லட்சுமண சாமி முதலியார் அவர்களும் இருந்தார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் உயர்தரக் கல்விக் குழுவின் பரிந்துரைகளில், கல்வி போதனை ஆங்கிலத்தி லிருந்து பிரதேச மொழிகளுக்கு மாறுவது பற்றிய பகுதி மாநில அரசுகளால் சரிவர நிறைவேற்றப்படவில்லை. தமிழ் மாநிலத்தில் போதனு மொழி மாற்றத்திற்குக் கடுமையான எதிர்ப்பு இருந்தது.

இந்த நிலையில் டாக்டர் கொத்தாரி அவர்கள் தலைமையில் கல்விநிபுணர்கள் கொண்ட மற்றொரு குழு அமைக்கப்பட்டது. இதில் அயல் நாடுகள் சிலவற்றின் கல்வி நிபுணர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இக்குழு கல்வியின் உயர் மட்டத்திலும் தாய் மொழியே போதனுமொழியாக இருக்க வேண்டுமென்று பரிந்துரைத்தது.

## சுயாட்சியிலுள்ள பெருங்குறை

1967ஜூலை 18ல் கூடிய மத்திய அமைச்சரவையிலே, அடுத் துள்ள ஐந்தாண்டுகளில் கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் பிரதேச மொழியே போதனு மொழியாக்கப்பட வேண்டு மென்று தீர்மானிக்கப்பட்டது. இந்த முடிவு கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் தாய் மொழியே போதனு மொழி யாக இருக்கவேண்டுமென்ற கோரிக்கை பிறந்த நூற்றாண்டு நிறைவு நாளிலே எடுக்கப்பட்டது குறிப்பிடத் தக்கதாகும்.

இப்படி, பிரதேச மொழிகளிலே ஒன்று என்ற வகையில் தமிழகத்துக் கல்லூரிகளில் தமிழையே பயிற்று மொழியாக்கு வதற்கு மத்திய கல்வி அமைச்சகம் அதிக ஆர்வங்காட்டி வந்தது. ஆயினும், கல்விப் பொறுப்பு முழுவதும் மாநில அரசுக்கே உரியதாதலால், அதிலே இறுதி நடவடிக்கை

எடுப்பது மத்திய அரசால் சாத்தியமில்லாமற் போய் விட்டது. தமிழ் மாநில அரசு—அது, எந்தக் கட்சியைச் சார்ந்ததாயினும்—தமிழைப் போதன மொழியாக்குவதிலே முழு அளவில் ஆர்வங்காட்ட வில்லை யென்பது மாநில சுயாட்சியில் ஏற்பட்டுள்ள ஒரு பெருங் குறையாகும்.

நாடு விடுதலை பெற்று, இந்திய மக்கள் தங்களுக்கெனத் தனியான ஒரு அரசியல் சட்டத்தினைத் தாங்களே தயாரித்துக் கொண்ட பின்னர், ஒவ்வொரு மாநிலமும் தன் தனக்கெனத் தனியாக ஒரு சின்னத்தைப் படைத்துக் கொள்வதற்கு மத்திய அரசு அனுமதித்தது. அதன்படி, சென்னை மாநில அரசு திருக்கோயில் கோபுரத்தையும் 'சத்ய மேவ ஜெயதே, என்ற வாசகத்தையும் தன் சின்னமாக அமைத்துக் கொண்டது. இதிலுள்ள வாசகம் சமஸ்கிருதமாக இருந்தது.

1967ல் தமிழகத்தில் தி.மு.க. அரசு ஏற்பட்ட பின்னர் "சத்யமேவ ஜெயதே" என்ற சம்ஸ்கிருத வாசகத்தை "வாய்மையே வெல்லும்" என்று தமிழில் மாற்றிக் கொள்ள மத்திய அரசு அனுமதித்தது.

அப்படியே, அரசு சம்பந்தப்பட்டவரை பெயருக்கு முன்பு 'ஸ்ரீ' போட்டு வந்ததற்குப் பதிலாகத் 'திரு' போட்டுக் கொள்ளவும் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே மத்திய அரசிடம் அனுமதி பெற்று. அமுலுக்குக் கொண்டு வரப் பட்டது.

இப்படி, எத்தனையோ வகையில் தமிழ் மொழிக்கு உரிமையும் பெருமையும் தேடத் தமிழக அரசு அனுமதி கோரிய போதெல்லாம் மத்திய அரசு தயக்கமின்றி இசைவு தெரிவித்தது.

# பல்கலைக் கழகங்களின் தமிழ்ப் பணி

தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகத் தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள் ஆற்றவேண்டிய பணி மகத்தானதாகும். மொழிவார் மாநிலம் ஒவ்வொன்றிலும் இதுதான் நிலைமை. இந்தியப் பெருநாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த காலத்திலேதான் இங்கு பல்கலைக் கழகங்கள் தோன்றின. 1857ம் ஆண்டிலே பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய நகரங்களில் பலகலைக் கழகங்கள் அமைந்தன.

ஆரம்ப காலத்தில் ஆங்கிலேயரே வேந்தர்(சான்சலர்) களாகவும், துணைவேந்தர் (வைஸ் சான்சலர்)களாகவும் வந்தனர். பல்கலைக் கழகப் பேராசிரியர்களிலும் பலர் ஆங்கிலேயர்களாகவே இருந்தனர்.

## மெக்காலே கல்வி முறை

பிரிட்டிஷ் கல்வி மந்திரியான லார்டு மெக்காலே என்பவர் அன்னிய ஆட்சிக்குச் சேவகம் செய்யும் சிப்பந்திகளைத் தயாரிக்கும் குறிக்கோளுடன் படைத்த கல்வித் திட்டமே பல்கலைக் கழகங்களின் மூலம் இந்திய மக்கள்மீது திணிக்கப்பட்டது. இதனால், கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் ஆங்கிலம் ஒன்றே போதனு மொழியாக அமுல்படுத்தப்பட்டது,

சென்னைப் பல்கலைக் கழகம், அது தோன்றிய காலத்தில் நிலவிய—நான்குமொழிப் பிரதேசங்களைக் கொண்ட—சென்னை ராஜ்யம் முழுவதற்குமாக இயங்கி வந்தது.

அதனாலும், பிரதேச மொழிகளைப் புறக்கணித்து ஆங்கில மொழி ஒன்றே அதிலே ஆதிக்கம் பெற முடிந்தது.

இந்நிலையில் தெலுங்கு மொழி வழங்கும் ஆந்திரப் பிரதேசத்தின் மக்கள் செய்த கிளர்ச்சி காரணமாக, அந்தப் பிரதேசத்திற்கெனத் தனியாக ஒரு பல்கலைக் கழகம் 1926ல் மத்திய அரசின் அனுமதியோடு அமைந்தது. அப்போதிருந்த ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி அதனைச் சாதித்தது. ஆயினும் ஆந்திரப் பல்கலைக் கழகத்திலும் சென்னைப் பல்கலைக் கழகத்தைப்போல ஆங்கில மொழியே ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

தமிழ்நாட்டிற்கெனத் தனியாக ஒரு பல்கலைக் கழகம் தேவையென்ற கோரிக்கையும் பிறந்தது. அதுபற்றி ஆலோசித்துப் பரிந்துரை தர திரு. பி. டி. ராசன் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது சென்னை மாநில அரசு. அந்தக் குழுவின் பரிந்துரை காரணமாக, 1929ல் ராசா சர். அண்ணாமலை செட்டியார் அவர்கள்,சிதம்பரத்திற்கு அருகில் ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவ முன் வந்தார். அவர் பெயராலேயே அந்தப் பல்கலைக் கழகம் தோன்றியது. அந்தக் கழகம் அமைந்துள்ள பிரதேசமும் ''அண்ணாமலை நகர்'' எனப் பெயர் பெற்றது.

இதிலும், சென்னை—ஆந்திரா பல்கலைக் கழகங்களைப் போல ஆங்கிலமே ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அதாவது, அனைத்துப் பாடங்களுக்கும் இங்கு ஆங்கிலம்தான் போதனா மொழி. இப்போது நிலைமை கொஞ்சம் மாறிவருகிறது.

## தமிழ்த் துறை

இந்தியாவில் அமைந்த ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் நாளடைவில் பிரதேச மொழிக்கென ஒரு துறை அமைவதற்கும் வழி பிறந்தது. முதலில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறை அமைந்தது. அதுபோல, சம்ஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளுக்கெனவும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தனித்தனியே பல

துறைகள் தோன்றின. பிரதேச மொழிகளைத் தனியே எடுத்துத் தனித்தமிழ்க் கல்லூரிகளில் பயில்வோருக்கு "வித்துவான்"—"பண்டிட்" பட்டங்கள் தரவும் சென்னைப் பல்கலைக்கழகம் "தயவு" செய்தது.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே வடபுலத்திலுள்ள பல்கலைக் கழகங்கள் தென்னிந்தியாவிலுள்ள பல்கலைக் கழகங்களை விடவும் கொஞ்சம் கூடுதலாக இடம் அளித்து வந்தது. கல்கத்தா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பதவியை பேராசிரியர் அஷ்டோஷ் குமார் முகர்ஜி என்பவர் ஏற்ற பின்னர், அதிலே வங்க மொழிக்குச் சிறப்பிடம் தர அவர் முயற்சி எடுத்தார். அதிலே, ஓரளவு முன்னேற்றம் கண்டார்.

தேச விடுதலைக் கிளர்ச்சியின் எதிரொலியாகத் தோன்றிய குஜராத் வித்யாபீடம் போன்ற தேசியப் பல்கலைக் கழகங்களிலே பிரதேச மொழிகளே தலைமை பெற்றன. ஐதராபாத் நகரில் நிஜாம் ஆட்சியால் 1918ல் தோற்றுவிக்கப் பெற்ற உஸ்மானியா பல்கலைக் கழகத்திலே உருது மொழிக்கு முதன்மை தரப்பட்டது. அனைத்துப் பாடங்களும் உருது மொழி மூலமே போதிக்கப்படும் திட்டம் அமுலுக்கு வந்தது. இதெல்லாம் நாடு விடுதலை பெறுவதற்கு முன்பு உருவாகியிருந்த சூழ்நிலை.

நாடு விடுதலை பெற்ற பின்னர் பல்கலைக் கழகக் கல்வியில் மகத்தான மாறுதலைக் காண மத்திய அரசு பொறுப்பேற்றது. பல்கலைக் கழகங்களில் பிரதேச மொழிகளுக்குச் செல்வாக்கு ஏற்படவும் மத்திய கல்வியமைச்சகம் முயற்சி எடுத்தது. நாடு விடுதலை பெற்றதைத் தொடர்ந்து பல ஆண்டுகாலம் மௌலானா அபுல்கலாம் ஆசாத் கல்வியமைச்சராக இருந்தார். அவர் பல்கலைக் கழகங்களிலே பிரதேச மொழிகள் செல்வாக்கு பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இப்படி, மத்திய கல்வி அமைச்சகம் பல வழிகளில்

பல்கலைக் கழகங்களிலிருந்து ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை அகற்ற அடுத்தடுத்து பல நடவடிக்கைகளை எடுத்தது.

## மகளிர் பல்கலைக் கழகம்

புனாவில் டாக்டர் கார்வே அவர்கள் முயற்சியால் பெண்களுக்கெனத் தனியாக ஒரு பல்கலைக் கழகம் 1920ல் தோற்றுவிக்கப்பட்டது. அதிலே, எல்லாப் பாடங்களுக்கும் தாய் மொழியே போதனாமொழி யாக்கப்பட்டது. மத்திய அரசால் அமைக்கப் பெற்றுள்ள பல்கலைக் கழக மானியக் குழுவும் நாடு முழுவதிலும் உள்ள பல்கலைக் கழகங்களிலே ஆங்கில மொழியின் ஆதிக்கத்தைக் குறைக்கவும், பிரதேச மொழிகளின் செல்வாக்கை வளர்க்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஆனால் விடுதலைப் போராட்ட காலத்தில் தேசத் தலைவர்கள்-குறிப்பாக, காந்தியடிகள் எதிர்பார்த்த அளவுக்கு இதுவரை ஆங்கில மொழியின் ஆதிக்கம் தேய்பிறையாக வில்லை; பிரதேச மொழியின் செல்வாக்கு வளர்பிறையாகவும் இல்லை. சுதந்திர ஆட்சியிலே பிரதேச மொழிகளுக்குச் சிறப்பிடம் அளிக்கும் முயற்சி ஆமை வேகத்தில் முன்னேறி வருகிறது எனலாம்.

1966ல் தமிழகத்தின் தலைநகரான மதுரையம்பதியிலே மதுரை, இராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்காக ஒரு பல்கலைக்கழகம் நிறுவப் பெற்றது. அப்பொழுதிருந்த காங்கிரஸ் ஆட்சியால்! தமிழ்–ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் நிறை புலமை பெற்றவரும், சிறந்த தேசபக்தரும், விடுதலைப் போரில் சிறைசென்ற தியாகியுமான டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் மதுரைப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராக நியமிக்கப் பெற்றார். இந்த நியமனத்தின் மூலம்தான் தமிழ் மொழியில் நிறை புலமை பெற்ற ஒரு தமிழறிஞர் துணை வேந்தர் பதவிக்குவரும் வழக்கம் தொடங்கியது எனலாம்.

இவருக்குப் பின், டாக்டர் மு. வரதராசனர் தி. மு. க. ஆட்சிக் காலத்தில் மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். அவருக்குப் பின் இந்த வழக்கம் தொடரவில்லை. சென்னைப் பல்கலைக் கழகம் இந்த வழக்கத்தைத் தொடவே இல்லை. தமிழ்ப் புலமைக் காகப் பட்டம்பெற்ற எவரும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இதுவரை நியமிக்கப் பெற்றதேயில்லை.

## தமிழுக்குத் தீண்டாமை

வடபுலத்திலே இந்தியிலோ, வேறு பிரதேச மொழியிலோ புலமை பெற்றவர்கள் பட்டமளிப்புவிழாவில் பேருரை நிகழ்த்த அழைக்கப்படுவது வழக்கமாக இருந்து வருகிறது. ஆங்கிலத்திலே போதிய அளவு புலமை பெறாத—தாய் மொழியில் மட்டுமே புலமைபெற்ற—அறிஞர்களும் வடபுலத்தில் பட்டமளிப்பு விழாவில் பேருரை நிகழ்த்த அழைக்கப்படுகின்றனர். சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்கள் இதைப் பற்றிச் சிந்தித்ததாகவே தெரியவில்லை.

தமிழகத்திலே மதுரைப் பல்கலைக் கழகத்தில் பட்டமளிப்பு விழாவில் பேருரை நிகழ்த்த கல்வியமைச்சராக இருந்த காரணத்தால் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஒருமுறை அழைக்கப்பட்டார். முதலமைச்சராக இருந்த காரணத்தால் கலைஞர் மு. கருணாநிதி அவர்களும் ஒரு முறை அழைக்கப்பட்டார்.

சென்னைப் பல்கலைக் கழகத்திலும் இந்தப் புதுமை ஒரு முறை நிகழ்ந்தது. 1975 ஆம் ஆண்டில் பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்த அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞர் கருணாநிதி அழைக்கப்பட்டார். பதவி காரணமாக வன்றி, தமிழிலே புலமை பெற்ற காரணத்திற்காக அறிஞர் எவரும் பட்டமளிப்பு விழாவில் பேருரை நிகழ்த்த சென்னை–மதுரைப் பல்கலைக் கழகங்களால் இதுவரை அழைக்கப்பட்டதில்லை. சென்னைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா

நிகழ்ச்சியிலே தமிழில் பேருரை நிகழ்த்திய "புரட்சி" கலைஞர் கருணாநிதி மூலம்தான் முதன் முதலாக 1975ல் நிகழ்ந்தது.

சென்னைப் பல்கலைக் கழகத்திடம் கௌரவ "டாக்டர்" பட்டம் பெறும்பேறு தமிழில் மட்டுமேபுலமைபெற்ற எவருக்கும் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. இந்தப் "புரட்சியை" நிகழ்த்த சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு இன்னும் எத்தனை ஆண்டு அவகாசம் தேவைப்படுமோ? தமிழகத்திற்கு வெளியேயுள்ள பல்கலைக்கழகங்களிலே திரைப் பட நடிகர், இசைப்பாடகர், நாடக நடிகர், நாவலாசிரியர் போன்றவர்களுக்கும் கௌரவ டாக்டர் பட்டம் அளிக்கப் படுகிறது.

## ஆட்சிக் குழுவில் சாமான்யன்!

சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு(சிண்டிகேட்) உறுப்பினராக 1970ம் ஆண்டில்—தமிழக ஆளுநரால்—நான் நியமிக்கப் பெற்றேன். அப்போதைய திமுக அரசு இதற்குத் தூண்டுதலாக இருந்தது. பல்கலைக் கழகத்திடம் பட்டமோ, மொழிப் புலமைக்கான பட்டயமோ பெறாத ஒருவர் இந்தியாவிலே மூன்று பெரிய பல்கலைக்கழகங்களில் ஒன்றான சென்னை பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிலே இடம் பெற முடிந்தது அதனால் தாங்கிக் கொள்ளமுடியாத ஒரு பெரும் புரட்சியாகும் இந்தப் புரட்சி அதன்மீது திமுக அரசால் திணிக்கப்பட்டது. இந்த மாறுதலை அப்போதைய துணைவேந்தர் எளிதில் ஏற்கவில்லை சென்னைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்திலேயும் தமிழிலே புலமை பெற்றவர்களுக்கு இடமிருக்க வேண்டுமென்ற எண்ணத்திலேயே நான் ஆட்சிக் குழுவில் இடம் பெறத் திமுக அரசு துணை புரிந்தது.

1957-க்குப் பின்னர், தமிழ் நாட்டுப் பல்கலைக்கழகங்களிலே தமிழுக்குச் சிறப்பிடம் அளிக்கும் செயல் திட்டங்கள் படிப்படியாக நடைமுறைக்கு வரலாயின. கல்லூரிகளிலே புகுமுக வகுப்பிலும், பட்டப் படிப்பிலும் தமிழைப் பயிற்று

மொழியாக்கும் திட்டத்திற்கு சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்கள் ஆதரவளித்தன. விரும்புகின்ற மாணவர்களுக்குத் தான் தமிழ் பயிற்றுமொழியாக்கப்பட்ட தென்றாலும், இதனால், தமிழ்மொழி வளர்ச்சி பெறுவதற்கு வாய்ப்புக் கிடைத்ததனை மறப்பதற்கில்லை. இதுபற்றி முன்னரே நான் விரிவாகக் கூறிவிட்டேன். தற்போது தமிழ் நாடு முழுவதிலும் சுமார் 20 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் புகுமுக வகுப்புகளிலும் பட்டப் படிப்புக்கான வகுப்புகளிலும் தமிழைப் பயிற்றுமொழியாக ஏற்றுப் படித்து வருகிறார்கள். அப்படிப் படிப்பதற்கு மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு சில சலுகைகளையும் தமிழக அரசு வழங்கி வருகிறது.

## டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா

டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரான பின்னர், மேல் பட்டப் படிப்பிலும் விரும்புகின்ற மாணவர்கள் தமிழைப் பயிற்று மொழியாக ஏற்றுப் படிக்க அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். துணைவேந்தர் டாக்டர் மால்கம் அவர்களின் முயற்சியே இதற்கு முக்கிய காரணமாகும். அவர் துணை வேந்தராக வருவதற்கு முன், பட்டப்படிப்பில் தமிழைப் பயிற்று மொழியாக ஏற்றுப் படித்துத் தேர்வு பெறுவோர் மேல்மட்டப் படிப்புக்குப் போவதற்கு வாய்ப்பில்லாத அவல நிலை இருந்து வந்தது. அவரால் அந்தத் தடை அகற்றப் பட்டு விட்டது.

தமிழைப் படித்துத் தேர்வு பெறுவோருக்கு "வித்துவான்" பட்டயம் பல்கலைக் கழகங்களால் அளிக்கப்பட்டு வந்தது. இது, தனித்தமிழ் ஆர்வலர்கள் இடையறாது விடுத்து வந்த கோரிக்கையால் "புலவர்" பட்டயமாக மாற்றப் பட்டது. "வித்துவான்" என்பது வடமொழி; "புலவர்" என்பது தமிழ்மொழி.

## பி. லிட். பட்டம்

புலவர் படிப்பு பி. ஏ. படிப்புக்கு நிகரானதாக இருந்தும், முன்னது பட்டயத்திற்குரியதாகவும், பின்னது பட்டத்திற்குரியதாகவும் இருந்து வந்தது. இதற்கு மாறாக, புலவர் பட்டயத்தை பி. ஏ. பட்டமாக மாற்றவேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாகவே இருந்து வந்தது. ஆயினும், பல்கலைக் கழகத்தால் அது ஏற்கப்படவில்லை. பின்னர் ஆங்கிலத்தையும் ஒரு பாடமாகச் சேர்த்து, 'புலவர்' என்ற பட்டயத்திற்குப் பதிலாக 'பி. லிட்' என்னும் பட்டத்தை அளிக்கலாம் என்ற மாற்று ஆலோசனை பிறந்தது. தனித் தமிழ்ப் படிப்பிலே ஆங்கிலத்தையும் கட்டாய பாடமாகத் திணிப்பதை நான் சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவில் கடுமையாக எதிர்த்தேன். கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் ஆங்கிலத்தை ஒரு பாட மொழியாக மட்டுமே எடுத்துப் பயிலுவதை நான் விரும்பி வரவேற்கிறேன். தமிழ்ப் புலமைப் படிப்பிலே ஆங்கிலம் ஒரு கட்டாய பாடமாகச் சேர்க்கப்படுவதைத்தான் நான் வெறுக்கிறேன். தாய்மொழியைப் பயின்று பட்டம் பெறுவதற்கு அன்னிய மொழியான ஆங்கிலமும் கட்டாய பாடமாக இருந்தாக வேண்டும் என்பது தமிழுக்குச் செய்யும் அவமானமாக நான் கருதுகின்றேன். சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவிலே நான் தொடர்ந்து எதிர்ப்பு காட்டி வந்ததன் விளைவாக, பி. லிட். பட்டம் வழங்கும் திட்டம் நடைமுறைக்கு வருவது இரண்டாண்டுக் காலம் தாமதப்பட்டது. கடைசியாக, ஆங்கிலப் பாடம் இல்லாமலே பி. லிட். பட்டம் வழங்கலாமென்று சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவினை முடிவு ஏற்பட்டது. அது, கடந்த இரண்டாண்டு காலமாக நடைமுறையிலும் இருந்து வருகிறது. ஏற்கெனவே வித்துவான் அல்லது புலவர் பட்டயம் பெற்றவர்களும் பி. லிட், பட்டம் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். இது, சென்னைப் பல்கலைக் கழகத்தின் போக்கில் ஏற்பட்ட புரட்சிகரமான மாறுதல் ஆகும்.

நான் ஆட்சிக் குழுவில் இருந்தபோது பி. லிட். பட்டத்தை பி. ஏ. வாக மாற்றுவதற்கும் முயன்று வந்தேன். ஒரு கட்டத்தில் துணைவேந்தர் டாக்டர் மால்கம் ஆதி சேஷய்யா அவர்களும் எனது கருத்துக்கு ஆதரவு தெரிவித்தார். ஆனால், இன்னமும் அது நடைமுறைக்கு வந்ததாகத் தெரியவில்லை. விரைவில் வருமென்று நம்பிக் கொண்டிருக்கிறேன்.

## தமிழில் பெயர்ப் பலகை

பல்கலைக் கழகங்களில் கல்வி முறையில் மட்டுமல்லாமல் நிர்வாகத் துறையிலும் தமிழ் மொழிக்கு முதலிடம் இருக்க வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களின் அலுவலகங்களிலே அநேகமாகத் தமிழறிந்த தமிழர்தான் அலுவல் புரிந்து வருகின்றனர். அப்படியிருந்தும், அங்கெல்லாம் ஆங்கிலம் ஒன்றே நிர்வாக மொழியாக இருந்து வருகிறது.

சென்னைப் பல்கலைக் கழகம் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்களைத் துணைவேந்தராகப் பெற்றிருந்த காலத்திலே தனது நிர்வாகத்தில் ஆங்கிலத்திற்கு அடுத்தபடியாக தமிழுக்கும் இடம் அளிக்க முன்வந்தது. பேரவை (செனட்), கல்விக்குழு(அகடமிக் கவுன்சில்) ஆகியவற்றின் கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலைத் தமிழிலும் தயாரித்தளித்தது. பல்கலைக் கழக ஆண்டறிக்கையின் முக்கிய பகுதியையும் தமிழிலே தயாரித்து வழங்கும் வழக்கத்தைத் தொடங்கி வைத்தது.

டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் துணை வேந்தராக வந்த பின்னர் எனது வேண்டுகோளுக்கிணங்கி "சென்னைப் பல்கலைக் கழகம்" என்று தமிழிலான பெயர்ப் பலகை பல்கலைக் கழகக் கட்டிடத்தின் முகப்பிலே பொருத்தப்பட்டது. ஆம்; சென்னைப் பல்கலைக்கழகம் தான் தோன்றி நூற்றாண்டுக்குப் பின்னர்தான் தமிழிலே பெயர்ப்

பலகையைப் பெற்றது. டாக்டர் மால்கம் அவர்கள் ஆட்சிக்குழுக் கூட்டத்திலே வைக்கப்படும் தமது திட்டங்களை யெல்லாம் தமிழிலேயும் தயாரித்துக் கொடுக்க வழி வகுத்தார்.

சென்னைப் பல்கலை கழக ஆட்சிக் குழுவிலே தொடர்ந்து நான்காண்டு காலம் உறுப்பினராக இருந்தேன். அந்தக் காலத்தில் ஆட்சிக் குழுவில் வைக்கப்படும் நிகழ்ச்சி நிரல் பற்றிய விவாதத்திலே தமிழுக்கும் ஓரளவு இடங் கிடைத்தது. ஆம்; நான் இருந்த காரணத்தால்! அதற்கு முன் உறுப்பினரில் எவருமே தமிழில் உரையாடியதில்லையாம். வெளியிலே தமிழ் பயிற்றுமொழித் திட்டத்திற்கு ஆதரவளிப்போர் கூட ஆட்சிக் குழுக் கூட்டத்தில் ஆங்கிலத்தில் பேசுவதையே வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். படித்த தமிழர்களிடம் காணப்படும் இந்தக் குறைபாடு என்றுதான் அகலுமோ?

## மதுரைப் பல்கலைக்கழகம்

மதுரைப் பல்கலைக் கழகம் நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் காங்கிரஸ் ஆட்சியால் 1966ல் தோற்றுவிக்கப்பட்டதாகும். அது தோன்றிய காலந்தொட்டு 1972 வரை தமிழில் ஆழ்ந்த புலமையும், தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழே முதலிடம் பெறவேண்டுமென்பதிலே உறுதியுமுடைய அறிஞர் பெருமக்கள் அடுத்தடுத்து துணைவேந்தர்களாக நியமிக்கப் பெற்று வந்துள்ளனர். அதனால், அந்தப் பல்கலைக் கழகத்தில் ஆரம்பத்திலேயே தமிழ்மொழி ஓரளவேனும் செல்வாக்குப் பெறுவது சாத்தியமானது.

மதுரைப் பல்கலைக் கழகக் சட்டிடத்தைச் சுற்றிப் பார்த்தால், ஒவ்வொரு துறையிலும்—ஏன்? ஒவ்வொரு அறையிலும் பெயர்ப் பலகைகள் தமிழிலும் இருக்கப் பார்க்கிறோம். சிண்டிகேட், செனட், அகடமிக் கவுன்சில் ஆகியவற்றின்

நடவடிக்கைகளில் தமிழ் மொழியும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாக்குவதிலும் மதுரைப் பல்கலைக் கழகம் தீவிரங்காட்டி வருகின்றது. இக் கழகத்தில் இணைக்கப்பட்டுள்ள பாண்டி மண்டலக் கல்லூரி கள் அனைத்தும் தமிழர் செல்வாக்கிலிருப்பவையாகும். இதனாலும், உயர் கல்வியில் ஆங்கிலத்தின் ஆதிக்கத்தைச் சிறிதளவேனும் குறைப்பது மதுரைப் பல்கலைக் கழகத்திற்குச் சாத்தியமாகிறது.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் நிலை வேறு. இது, சற்றேறக் குறைய 120 ஆண்டு காலம் ஆங்கில ஆதிக்கத்திலே ஊறிக் கிடந்து வந்திருக்கிறது. 'முதல் கோணல் முற்றுங் கோணல்' என்ற பழமொழிபோல, கோணலாகவே பிறந்து கோணலாகவே வளர்ந்து வந்தது. அதனால், ஆங்கில ஆதிக்கத்திலிருந்து அதனைப் பிரித்தெடுப்பது எளிதான காரியமாக இல்லை. அதற்கேற்பட்டுள்ள கோணல்களை நிமிர்த்துவதற்கு அரும்பாடு படவேண்டியிருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள கல்லூரிகளில் பல வேற்று மொழியினரின் செல்வாக்கி லுள்ளன. அங்கெல்லாம் ஆங்கிலத்தின் ஆதிக்கத்தை அகற்றுவதோ, தமிழ்மொழிக்குச் செல்வாக்குத் தேடுவதோ சென்னைப் பல்கலைக் கழக சிண்டிகேட்டுக்கு சுலபமான காரியமாக இல்லை. அந்தக் கல்லூரிகள் சிறுபான்மை வகுப் பினரால் நடத்தப்பட்டு வருவதும் ஒரு காரணமாகும்.

## பதவி காரணமாக...

1968ல் நான் மதுரைப் பல்கலைக் கழக செனட் சபைக்குத் தமிழ்நாடு சட்டப் பேரவையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட போது, நான் கலந்துகொண்ட முதல் செனட் சபைக் கூட்டத்திலேயே, "அடுத்துள்ள ஐந்தாண்டுக் காலத்துக்குள் உயர்கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் தமிழையே பயிற்று

மொழியாக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தைப் பிரேரேபித்தேன், செனட் உறுப்பினர் திரு. மு. மாரியப்பன் எனது தீர்மானத்தை வழிமொழிந்தார். செனட் உறுப்பினர்களில் சிலர் முணுமுணுத்தன ரென்றாலும், எனது தீர்மானம் ஒருமனதுடன் நிறைவேற்றப்பட்டது. அப்போது டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் துணைவேந்தராக இருந்தார்.

மதுரைப் பல்கலைக் கழகத்தின் முதல் மூன்று பட்டமளிப்பு விழாக்களுக்கு அறிஞர் அண்ணா, நாவலர் இரா. நெடுஞ்செழியன், கலைஞர் மு. கருணாநிதி ஆகியோர் ஆட்சியாளர் என்ற முறையில் அழைக்கப்பட்டனர். இந்த மூவருமே பல்கலைக் கழகத்திலிருந்து ஆங்கிலத்தின் ஆதிக்கத்தை அகற்ற வேண்டுமென்று தாங்கள் நிகழ்த்திய பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவுகளிலே அறிவுரை வழங்கினர். ஆனால், ஆங்கில ஆதிக்கத்தை அகற்றுவதில் தீவிரம் காட்டப்படவில்லை.

## அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் அதிக அளவில் அக்கரை செலுத்தி வருகிறது. கம்ப ராமாயணம் போன்ற பழைய காப்பியங்களையும், திருவாசகம் போன்ற பக்தி இலக்கியங்களையும் தக்காரைக் கொண்டு எளிய நடையில் உரை இயற்றச் செய்து வெளியிட்டு வருகின்றது. வடமொழியிலுள்ள அர்த்த சாஸ்திரம் போன்ற நூல்களை தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டு வருகின்றது. விஞ்ஞான நூல்களைத் தமிழில் கொண்டு வரவும் முயன்று வருகின்றது.

இத்துடனன்றி, இசை—நாடகப் பகுதி ஒன்றையும் அமைத்து, கலை வளர்ச்சியிலும் கவனம் செலுத்தி வருகின்றது. இத்தகைய பணிகளில் முன்பு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மட்டுமே ஈடுபட்டு வந்தது. இப்போது,

சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்களும் அதனுடன் போட்டியிட்டு வருகின்றன.

தமிழருக்கென்றே தோற்றுவிக்கப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகம்கூட ஆங்கில ஆதிக்கத்திலிருந்து விடுபட வில்லை. ஏனைய பல்கலைக் கழகங்களைப் போலவே அதிலும் ஆங்கில ஆதிக்கம் நீடித்து வருகிறது. இதைப்பற்றி 2-11-47 "அரிசன்" இதழில் எழுதுகையில், "அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் அதற்குரிய மதிப்புடன் திகழ்வதாக யாரே னும் சொல்ல முடியுமா?" என்று காந்தியடிகள் கேட்டிருக் கிறார். அத்துடன்,

> "தத்தம் மாகாண மொழிகள் மூலம் கல்வி போதிக் கும் பள்ளிகளும் கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களின் ஊற்றுக் கால்களாக இருக்க வேண்டும். அப்போது தான் அதற்கு உகந்த சூழ்நிலை உருவாகும். பல்கலைக் கழகம் கல்வியின் சிகரமாக இருக்கிறது. உறுதியான அஸ்திவாரம் இருந்தால்தான் கம்பீரமான சிகரம் நிலைத்து நிற்க முடியும்."
>
> [காந்திநூல் தொகுப்பு—12; பக். 696]

என்றும் அடிகள் அறிவுரை கூறியிருக்கிறார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் முன்பெல்லாம் தமிழ் இலக்கிய ஆராய்ச்சிக்கான 'பி. எச்டி.' தேர்வுத் தாள்களை ஆங்கிலத்தில்தான் தயாரித்துத் தரவேண்டியிருந்தது. ஆம்; தமிழ் ஆராய்ச்சிக்கு ஆங்கிலம் கருவி மொழியாக இருந்தது. இதற்கு ஒரு காரணம் பல்கலைக் கழகத்திற்கு இருந்த ஆங்கில மோகம். மற்றொரு காரணம் 'பி. எச்டி. க்கு எழுதப் படும் ஆராய்ச்சித் தாள்களை பரிசீலனை செய்வோர் தமிழர் அல்லாதாராக இருந்ததாகும். தமிழ் ஆராய்ச்சியை ஆங்கி லத்தில் எழுதுவதே தேவையற்ற அடிமைத்தனம்! அதைவிட வும் கொடுமை என்னவென்றால், அதனை ஆராய்ந்து அங்கீகரிக்க லண்டனிலுள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத் திலுள்ள பேராசிரியருக்கு அனுப்பியதாகும். அந்தப்

பேராசிரியர் தமிழ் படித்தவர்தான் என்றாலும், தமிழ் இலக்கியம் படித்துப் பட்டம் பெற்ற தமிழரை விடவும் தமிழரல்லாத ஐரோப்பியர் ஒருவர் திறமானவர் என்று கருதுவது அறியாமையாகும்.

உண்மை என்னவென்றால், சென்னைப் பல்கலைக் கழக சட்டத்திலே 'பி.எச்டி'க்கான ஆராய்ச்சித் தாள்களை ஆங்கிலத்தில்தான் எழுதிக் கொடுக்க வேண்டுமென்ற விதி இல்லாததாகும். அப்படியிருந்தும், 'எழுதாத சட்டம்' ஒன்று நடைமுறையில் இருந்து வந்தது. நான் சிண்டிகேட் உறுப்பினரான பின் ஆங்கிலத்தில் 'பி. எச்டி' தேர்வு எழுதுவதும், அதனை ஆங்கிலேயருக்கு அனுப்புவதுமான நடைமுறைகளை மாற்றுவதற்கு முயன்றேன்.

## தமிழில் ஆராய்ச்சி

நல்ல வேளையாக, சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரும், சிண்டிகேட் உறுப்பினர்களும் எனது கருத்துக்கு இசைவு தெரிவித்தனர். அதன்பின் சமீப நான்கு ஆண்டுகளாகத் தமிழிலே 'பி.எச்டி'க்கு எழுத அனுமதிக்கப்பட்டு வருகிறது. இது, தமிழ் மொழிக்குக் கிடைத்த உரிமை என்றே சொல்ல வேண்டும். வடபுலத்திலுள்ள பல்கலைக் கழகங்களில் மொழி பற்றிய ஆராய்ச்சியை அந்த மொழியிலேயே எழுத நீண்ட காலமாகவே அனுமதிக்கப் பட்டு வருகிறது. உலக மொழிகளில் மூத்த மொழி எனப் படும் தமிழ் மொழிக்கு அந்த உரிமை கிடைக்க ஒரு நூற்றாண்டு காலம் பிடித்தது.

ஆங்கில மொழியின் ஆதிக்கத்தைத் தேய்பிறையாக்குவதிலே சென்னைப் பல்கலைக் கழகம் போதிய தீவிரம் காட்டவில்லையென்ற குறைபாடு ஒருபுறம் இருப்பினும், தாய் மொழிப் பற்றுடைய தமிழர்கள் ஓரளவு மனநிறைவு கொள்ளும் வகையில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தொண்

டாற்றி வந்துள்ளது. தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழே முதலிடம் பெறவேண்டும் என்பதைத் தங்கள் கொள்கையாகக் கொண்டு வாழ்ந்த பெரியார்களான டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளையும், டாக்டர் மு. வரதராசனாரும் அடுத்தடுத்து தமிழ்த் துறையின் தலைவர்களாக இருந்திருக்கின்றனர். அவர்கள் தங்களால் இயன்ற அளவில் தமிழ்த்துறையைப் பயன்படுத்தி தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றினர். அவர்கள் காலத்தில் சென்னைப் பல்கலைக் கழகம் பெற்றிருந்த சூழ்நிலை ஆங்கிலச் சார்புடையதாக இருந்தும், அந்தப் பெரியார்கள் தங்களால் இயன்ற வரையில் தமிழ்த் தொண்டு புரிந்தனர்.

திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் துணைவேந்தர் பொறுப்பை ஏற்ற காலத்திலே, தமிழ் வளர்ச்சியில் தீவிரம் காட்டக் கூடியவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தனர். இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி, துணைவேந்தரின் ஆதரவையும் பெற்று, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையானது தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டது.

தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் முன்னிருந்த பேராசிரியர்களை விஞ்சும் வகையில் தமிழ் வளர்ச்சிக்குப் பணிபுரிவதில் ஆர்வம் காட்டினார்.

புதிய முறையில் தமிழ் இலக்கியத் தொண்டைத் தொடங்கி ஆண்டுதோறும் அதை நடத்தி வந்தார். 1972 ஜனவரியில் "பொதுநிலைப் பத்து நாள் கருத்தரங்கு" என்னும் பெயரில் தொடர்ந்து பத்து நாட்கள் ஒரு கருத்தரங்கை நடத்தினார். அதிலே, தமிழகத்திலுள்ள தமிழ் அறிஞர்களெல்லாம் கலந்துகொள்ளச் செய்து, பல்வேறு விஷயங்களைப் பற்றிய நுணுக்கமான ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படிக்க வைத்தார். பொது வாழ்வில் செல்வாக்கு பெற்றுள்ள தமிழறிஞர்களும் இதில் கலந்துகொள்வதற்கு வாய்ப்பளித்தார். பொதுநிலைப் பத்து நாள் கருத்தரங்கினை இரண்டாவது முறையாக 1973 லும், மூன்றாவது முறையாக 1974லும் சென்னைப்

பல்கலைக் கழகத் தமிழ்த்துறை நடத்தியது ஒவ்வொரு கருத்தரங்கிலும் படிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தனித்தனியே தொகுத்து, ''பல்கலைப் பழந்தமிழ்,'' ''தெய்வத் தமிழ்,'' ''பெருந்தமிழ்'' என்னும் பெயர்களில் மூன்று நூல்களைப் பொதுப் பதிப்பாசிரியர் டாக்டர் ந சஞ்சீவி அவர்கள் தமிழ்த் துறையின் சார்பில் வெளியிட்டார்.

1972 மே திங்களில் முதலாவது அகில இந்திய திருக்குறள் கருத்தரங்கு ஒன்றும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையால் நடத்தப்பட்டது மொழி வேறுபாடுடைய பல் வேறு மாநிலங்களின் மொழிப் பேராசிரியர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டு திருக்குறள் பற்றி ஆங்கிலத்தில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் படித்தனர். இந்தக் கட்டுரைகளெல்லாம் தொகுக்கப்பட்டுத் தனி நூலாக வெளியிடப் பெற்றுள்ளது.

மொழிப் பற்றும் நாட்டுப் பற்றும் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்தெடுக்க முடியாதபடி பிணைந்து வாழ வேண்டும்—வளர வேண்டும் என்னும் கொள்கையைத் தமிழரசுக் கழகத்திடமிருந்து பெற்றவர் டாக்டர் ந. சஞ்சீவி. அதன் காரணமாக, இந்திய விடுதலை வெள்ளி விழாவின்போது —1973 ஆகஸ்டுத் திங்களில்—''இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்'' என்ற கருத்தரங்கு ஒன்றை சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் சார்பில் பேராசிரியர் ந. சஞ்சீவி மிகவும் சிறப்பாக நடத்தினார். அதனைத் தொடங்கி வைத்து உரையாற்றும் பேற்றினையும் எனக்கு வழங்கினார். இதிலே தமிழ்ப் பேரறிஞர் பலர், இந்திய விடுதலைப் போரையும், விடுதலைக்குப் பிற்காலத்திய உரிமை வாழ்வையும் சம்பந்தப்படுத்தித் தயாரித்த ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படித்தனர். இவற்றின் தொகுப்பாக ''இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்'' என்னும் பெயரில் அரிய நூல் ஒன்று சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் சார்பில் வெளியிடப்பட்டுள்ளது. இது, தமிழ் இலக்கியக் களஞ்சியத்திற்குப் புதிய வரவு என்று சொல்லலாம்.

# சென்னையில்
# உலகத் தமிழ் மாநாடு

நாடு சுதந்திரம் பெற்ற ஆண்டான 1947 தொடங்கி தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி முடிவுக்கு வந்த 1966 வரையுள்ள சுமார் 20 ஆண்டு காலத்தில் தமிழ் மொழியை வளர்க்கவும், ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை அகற்றவுமான சட்டங்களையும் திட்டங்களையும் நடைமுறைக்குக் கொண்டு வந்ததனை ஏற்கனவே அறிந்தோம். அவற்றை இங்கு தொகுத்துப் பார்ப்போம்: (1) ராஜ்யப் புனரமைப்பு (தமிழ் மாநில அமைப்பு)ச் சட்டம், (2) தமிழ் ஆட்சிமொழிச் சட்டம், (3) பொது நூலகச் சட்டம், (4) தமிழக—ஆந்திர எல்லைப் பிரதேச மாறுதல் சட்டம் ஆகியவை மாநில மத்திய காங்கிரஸ் அரசுகள் அமுல் படுத்திய சட்டங்களில் முக்கியமானவையாகும்.

இதுபோல, (1) சாகித்ய அகடமி, (2) லலித கலா அகடமி, (3) சங்கீத—நாடக சங்கம், (4) தமிழ் நூல் வெளியீட்டுக் கழகம், (5) தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம், (6) பொது நூலகங்கள், (7) தொல் பொருள் துறை ஆகியவை தமிழ் வளர்ச்சி கருதி மாநில மத்திய அரசுகள் தோற்றுவித்த அமைப்புகள் பலவற்றுள் முக்கியமானவையாகும்.

இவையன்றி, ஆட்சி மொழிக் கமிஷன், கல்லூரி தமிழ்க் குழு ஆகியவை மாநில அரசு நியமித்த பணிக்குழுக்கள் பலவற்றுள் தலைசிறந்தவையாகும்.

(1) தமிழ்க் கலைக் களஞ்சியத் தொகுதிகள், (2) குழந்தைகள் கலைக் களஞ்சியத் தொகுதிகள், (3) தமிழ் நூல் விவர அட்டவணைத் தொகுதிகள், (4) கலைச் சொல்

அகராதி (விஷயவாரி) நூற்கள் ஆகியவை மத்திய அரசின் பொருளுதவியோடு தமிழக அரசு தயாரித்த தொகுப்பு நூல்களில் தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படக் கூடிய புத்தம் புதிய படைப்புகளாகும். மற்றும், தமிழக அரசுக் கல்வித் துறை ஆங்கில ஆதிக்கத்தை அகற்ற அமுல்படுத்திய திட்டங்கள் பலவற்றில் தமிழ் பயிற்று மொழித் திட்டம் தலைசிறந்ததாகும்.

## ஆட்சி மாறியது!

இந்நிலையில், 1967 ல் நடந்த பொதுத் தேர்தலில் தமிழகத்தில் ஆளுங் கட்சி மாறியது. ஆம்; ஆட்சி பீடத்திலிருந்து காங்கிரஸ் கட்சியை இறக்கி, அதற்குப் பதிலாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஏற்றினர் தமிழக வாக்காளர்கள். தி. மு. க. தலைவர் அண்ணு அவர்கள் முதலமைச்சரானர். நாவலர் இரா. நெடுஞ்செழியன் கல்வியமைச்சரானர்.

தி. மு. கழகமானது காங்கிரசைப்போல் அகில இந்திய கட்சியாக அல்லாமல், தமிழக அளவில்—தமிழரால் நடத்தப்படும்—மாநிலக் கட்சியாக இருத்தலால், அதன் ஆட்சிக் காலம் தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் பொற்காலமாக இருக்குமென்ற நம்பிக்கை தமிழ் மொழியிடத்துப் பற்றுடையவர்களுக்கு ஏற்பட்டது ''எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்'' எனும் தமிழரசுக் கழகத்தின் கொள்கை வேகமாக அமுல் நடத்தப்படும் என்று உறுதி கூறி அண்ணு அவர்கள் தமிழரசுக் கழகத்தைத் தி.மு.க கூட்டணியில் இணைத்துக் கொண்டார்; இழுத்துக் கொண்டார் என்றும் சொல்லலாம்.

தமிழ் மொழியின் வளர்ச்சியைப் பொறுத்த வரையில் தி. மு. க. அரசு புதிதாகத் தொடங்க வேண்டிய பணி எதுவுமே இருக்கவில்லை. காங்கிரஸ் கட்சி தொடங்கி வைத்து விட்டுப்போன பணிகளை முழுமைப்படுத்தி முடித்து வைக்க வேண்டிய கடமை ஒன்றே அதன்முன் இருந்தது. அதைச் செய்வதிலே அண்ணுவின் ஆட்சி ஆர்வங்காட்டியது

1968 ஜனவரி 1 முதல் ஒரு வார காலம் சென்னை நகரில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு தமிழக அரசால் நடத்தப்பட்டது. குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் சென்னை கடற்கரையில் 5 லட்சம் பேர் திரண்டிருந்த கூட்டத்தில் தமிழ் விழாவைத் தொடங்கிவைத்துப் பேசினார்.

இவ்விழாவை யொட்டி சென்னையின் மத்திய பகுதியிலே மாபெரும் ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. அது சிறப்புற அமைய ''ஆனந்தவிகடன்'' ஆசிரியர் திரு. எஸ்.எஸ். வாசன் தலைமையில் அமைக்கப்பட்ட தனிக்குழு நன்கு பணிபுரிந்தது. தமிழகக் கலைஞர்கள் அனைவரும் ஒத்துழைப்புத் தந்தனர்.

இவ்விழா தொடங்குவதற்கு முதல் நாளிலே சென்னைக் கடற்கரைச் சாலையிலே தெற்கே செயின்தோம் தொடங்கி வடக்கே துறைமுக வாயில்வரை தமிழ்ச் சான்றோர் பலருடைய உருவச் சிலைகள் திறந்து வைக்கப்பட்டன. இந்தத் திறப்பு விழாக் கூட்டம் 1967 ஜனவரி 1ல் சென்னைக் கடற்கரைச் சாலையில் காந்தி சிலையருகில் நடைபெற்றது. திறக்கப்பட்ட சிலைகளுக்குரிய சான்றோர்களின் பெயர்கள் வருமாறு:

வ.உ. சிதம்பரனார், கால்டுவெல், ஜி.யூ. போப், வீரமாமுனிவர் (பெஸ்கி), கம்பர், கண்ணகி, திருவள்ளுவர், பாரதியார், ஔவையார், பாரதி தாசன்.

உலகத் தமிழ் மாநாட்டிற்காகத் திரட்டப்பட்ட நிதியிலிருந்து சென்னை, மதுரை, அண்ணாமலை ஆகிய மூன்று பல்கலைக் கழகங்களுக்கு—ஒவ்வொன்றுக்கும் 3 லட்ச ரூபாய் விதம்—9 லட்ச ரூபாய் வழங்கப்பட்டது, திருக்குறளை ஆராய்ந்து நூல்கள் வெளியிடுவதற்காக!

### இருமொழித் தீர்மானம்

1968 ஜனவரியில் டில்லி நாடாளு மன்றத்திலே ஆட்சி மொழிச் சட்டத் திருத்த மசோதா, சட்டமாக்கப்பட்டது.

இதனால், இந்தி மொழியுடன் ஆங்கிலமும் ஆட்சிமொழியாகக் காலவரம்பின்றி நீடிக்க வழி செய்யப்பட்டது. அதே நேரத்தில் இந்திமட்டுமே பயின்றோர் மத்திய அரசு அலுவலர்களாக வருவதற்கு வழி செய்யும் உத்தியோகப் பற்றற்ற தீர்மானம் ஒன்றும் நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப் பட்டது. இதனால், தமிழ்நாட்டில் மாணவர்கள் இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

இதனால், சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட்டு, தோன்றி பத்துத் திங்களே ஆகியிருந்த தி.மு.க அரசுக்கு ஒரு கடும் சோதனையாக அமைந்தது. இந்தி எதிர்ப்பாளர்கள் ரெயிலைக் கொளுத்துதல் போன்ற நாச வேலைகளிலும் ஈடு பட்டனர். மாணவர்களைச் சமாதானப்படுத்த வேண்டி அரசு 23—1—68ல் சட்டப் பேரவையின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி, அதிலே மொழித் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தது. அப்போது, தமிழ்நாட்டுப் பள்ளிகளில் மும்மொழித் திட்டம் அமுலிலிருந்தது. அதாவது, இந்தி மொழி பாடமாக இருந்தது.

தி.மு.க. அரசின் தீர்மானம், தமிழ் நாட்டுப் பள்ளிகளில் இந்தி பாட மொழியாக இருப்பது அகற்றப்படு மென்றும், தமிழ்—ஆங்கிலம் ஆகிய இருமொழிகள் மட்டுமே பாட மொழிகளாக இருக்குமென்றும் அறிவித்தது. இந்தத் தீர் மானத்திற்கு நான் ஒரு திருத்தம் கொடுத்தேன். அது வருமாறு:

"அடுத்து வரும் ஐந்தாண்டு காலத்திற்குள் அனைத்துக் கல்லூரிகளிலும், அனைத்துப் பாடங்களுக்கும் தமிழ் மொழியே பயிற்று மொழியாக்கப்பட வேண்டுமென்றும், அரசு அலுவலகங்கள் அனைத்திலும் தமிழே நிர்வாக மொழி யாக்கப்பட வேண்டுமென்றும் இப்பேரவை அரசுக்கு ஆணை யிடுகிறது"

இந்தத் திருத்தம் முதல்வர் அண்ணாவால் ஏற்றுக் கொள்ளப்பட்டதால், அரசின் திருத்தப்பட்ட தீர்மானம்

சட்டப் பேரவையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது, சரித்திரச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும். அரசு கொண்டு வந்த மொழித் தீர்மானத்தால் இந்தி அகற்றப்பட்டதென்றால், அதற்கு யான் கொடுத்து அரசு ஏற்றுக் கொண்ட திருத்தத்தால் ஆங்கில மொழியின் ஆதிக்கம் அகற்றப்படுவதற்கும் காலவரம்பு ஏற்படுத்தப்பட்டது.

# ஆங்கில ஆதிக்கப் பாதுகாப்பு மாநாடு

தமிழ் நாட்டில் தி. மு. க. அரசு தோன்றியதும், அதிகார வர்க்கத்திடம் வியக்கத்தக்க வகையில் தமிழ் மொழிக்கு ஆதரவாக மாறுதல் ஏற்பட்டது. ஆட்சியாளர் தமிழ்ப் பற்றை வளர்க்க வெளிப்படையாகப் பிரச்சாரம் செய்ததால், அரசு உயர் அதிகாரிகள் தமிழில் பேசி தங்களுக்கும் தமிழ்ப்பற்று உண்டு என்பதைக் காட்டிக் கொள்ள முயன்றனர். அரசாங்க நிகழ்ச்சிகளில் ஆங்கிலத்தில் பேசும் வழக்கத்தை அதிகாரிகள் கைவிடத் தொடங்கினர். முதல்வர் அண்ணு உள்பட அமைச்சர்கள் அனைவருமே அதிகாரிகள் தமிழ் வளர்ச்சிக்கு ஆதரவாகச் செயல்படுவதையே விரும்பினர். அந்த விருப்பத்தை வெளிப்படையாகவும் காட்டிக் கொண்டனர்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தமிழ் வளர்ச்சிக்கு எவ்வளவோ செய்யப்பட்டனவென்றாலும், தமிழ்ப்பற்றை வளர்க்கும் பிரசாரத்தில் காங்கிரஸ்ஆட்சியோ, முதல்வர் உள்ளிட்ட அமைச்சர்களோ ஈடுபடவில்லை. தமிழ் வளர்ச்சிக்கான சட்டங்களையும் திட்டங்களையும் அமுல்படுத்தியபோதெல்லாம் அதனை யொட்டி விழா நடத்துவதிலே காங்கிரஸ் அரசு ஆர்வங்காட்டவில்லை. அரசுக்குப் புறம்பாக இயங்கிய தமிழ் வளர்ச்சிக் கழகம் ஆண்டுதோறும் தமிழ் விழா நடத்தியதும் 1952 ஆம் ஆண்டோடு நின்றுவிட்டது.

குறிப்பாக, தமிழ் மாகாணம் அமைந்த நாளிலோ, தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் அமுலுக்கு வந்த நாளிலோ, தமிழ் மொழியளவில் "மதராஸ்" என்பது "தமிழ் நாடு" என மாற்றப்பட்ட நாளிலோ பொது மக்களைத் திரட்டி வைத்துப்

பிரசார ரீதியில் ஆரவாரமாக விழாக்கொண்டாட காங்கிரஸ் அரசு முயலவில்லை. அதனால், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தமிழ் வளர்ச்சிக்காக எவ்வளவோ நடந்திருந்தும், அவற்றைப் பொது மக்கள் அறிந்து கொள்ள வாய்ப்பில்லாமல் போய் விட்டது.

இதற்கு, காங்கிரசானது அகில இந்திய கட்சியாக இருந்தது ஒரு காரணம். அத்துடன், தமிழ் நாட்டில் 1937 முதற்கொண்டே தமிழ் இயக்கத்திற்கு "அரசியல்" வண்ணம் பூசப்பட்டு, தேசியத்திற்கு எதிரான போக்கிலேயே அது நடத்தப்பட்டு வந்ததால், காங்கிரசானது தமிழ்ப்பற்றை வளர்க்கும் வகையில் பிரசாரத்தில் ஈடுபட அஞ்சி, அதனை அடியோடு கைவிட்டது. தி. மு. க. தமிழ் மாநில அளவில் இயங்கி வரும் அமைப்பானதால், ஆட்சி பீடத்தில் ஏறியதும், அதுவரை ஆட்சிக்கு வெளியே நடத்தி வந்த முறையிலேயே தமிழ்ப் பற்றை வளர்க்கும் பிரசாரத்தை ஆட்சியின் பலங் கொண்டும் செய்யலானது. சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டைமீது "தமிழக அரசு தலைமை அலுவலகம்" என்ற பெயர்ப் பலகை பொருத்தும் சிறிய நிகழ்ச்சியையும் ஒரு பெருவிழாவாகக் கொண்டாடியது தி. மு. க அரசு. "தமிழ் நாடு" என்னும் பெயர் "மெட்ராஸ்" என்னும் பெயருக்குப் பதிலாக அரசியல் சட்டத்தில் ஏறியபோதும் தி. மு. க தமிழ் நாடெங்கணும் விழாக் கொண்டாடியது.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே திட்டமிடப்பட்டிருந்த உலகத் தமிழ் மாநாட்டையும், தமிழரிடையே இனப்பற்றையும் மொழிப்பற்றையும் வளர்க்கக்கூடிய வகையில் தி. மு. க. சிறப்பாகக் கொண்டாடியது. இந்தப் பணியிலே காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு செயல்பட்டதென்றும் சொல்லவேண்டும். தி மு க. அரசு தோன்றிய முதலாண்டிலேயே தமிழ் மொழிக்குப் பொற்காலம் பிறந்துவிட்டது என்ற எண்ணம் தமிழ்ப் பற்றுடைய தமிழருக்கெல்லாம் ஏற்படலானது என்றால், அது மிகை யன்று.

இந்நிலையில், ஆங்கிலம் அகற்றப்பட்டு விடுமென்ற அச்சம் படித்த மக்களிலே ஒரு சாராருக்கு எப்படியோ ஏற்பட்டுவிட்டது. உண்மையில் அப்படி எதுவும் நடக்கவில்லை. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே ஆங்கிலம் மூன்றுவது வகுப்பிலிருந்தே போதிக்கப்பட்டு வந்தது. உயர்நிலைப் பள்ளிகளிலேயும் அனைத்து மாணவர்களுக்கும் ஆங்கிலம் கட்டாயப் பாடமாக இருந்து வந்தது. கல்லூரிகளில் புகுமுக வகுப்பிலும், பட்டப்படிப்பிலும்கூட ஆங்கிலம் கட்டாய பாடமாக இருந்து வந்தது.

உயர்நிலைப்பள்ளிகளில் மேல் வகுப்புகளில் ஆங்கிலத்தைப் போதனமொழியாகக் கொண்ட வகுப்புகளும் இங்கு மங்குமாக சில பள்ளிகளில் அனுமதிக்கப்பட்டன.

கல்லூரிகளில் விரும்புகின்ற மாணவர்களுக்கு மட்டுமே தமிழ் போதனமொழி வகுப்புகள் இருந்தவந்தன.

இந்த நிலையிலே தி. மு. க. அரசு மாறுதல் எதுவும் செய்யவில்லை. அப்படியிருந்தும், ஆங்கிலம் அடியோடு அகற்றப்பட்டு விடுமென்ற அச்சம் படித்தவர்களிடையில் எப்படியோ ஏற்பட்டுவிட்டது. அதனுல், இரட்டையர்களான சர். ஏ. ராமசாமி முதலியாரும், டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியாரும் "ஆங்கிலப் பாதுகாப்பு மாநாடு" ஒன்றைச் சென்னையில் நடத்த முயன்றனர். டாக்டர் ஏ. எல். முதலியார் சென்னைப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக இருந்த காலம் அது.

தமிழரிலே உயர் கல்வி கற்றோரும் கல்வி நிபுணர்களும் கூடிக் கொண்டு, "ஆங்கிலப் பாதுகாப்பு மாநாடு" நடத்துவது தமிழினத்தின் வரலாறு காணுத கொடிய நிகழ்ச்சியாகும். அதனுல், தமிழரசுக் கழகத்தின் சார்பில் மாநாட்டை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக அறிக்கை விடுத்தேன். இது, கழகத் தோழர்களுக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந்தது. 1967 நவம்பர் 4, 5 தேதிகளில் மாநாடு சென்னைப் பல்கலைக் கழக நூற்றுண்டு மண்டபத்தில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டிருந்தது. ராஜாஜி, அண்ணு

ஆகியோர் கலந்துகொள்வார்களென்றும் விளம்பரப்படுத்தப் பட்டது.

மாநாடு கூடுவதற்கு முதல் நாளன்று இரவு ஏ. ராமசாமி முதலியார் அவர்கள் என்னிடம் சமரசம் பேச விரும்பினார். நானும் இணங்கினேன். இருவரும் சந்தித்துப் பேசினோம். சென்னைப் பல்கலைக் கழகப் பொருளாதாரப் பேராசிரியர் திரு. சண்முகசுந்தரம் அவர்கள் இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்தார். எங்கள் சந்திப்பின்போது, மாநாட்டிற்கு எதிரான ஆர்ப்பாட்டத்தைக் கைவிடுமாறு சர். ஏ. ஆர். முதலியார் என்னைக் கேட்டுக் கொண்டார். நான், "தமிழகத்தில் ஆட்சி மொழியாகவும், பல்கலைக்கழகப் பயிற்றுமொழியாகவும், நீதி மன்ற நிர்வாக மொழியாகவும் தமிழ் வருவதற்கு எதிராக மாநாடு நடத்தப்படவில்லை" என்று உறுதி கூறி அறிக்கைவிடு மாறு அவரைக் கேட்டுக் கொண்டேன். அவர் சுற்றி வளைத்து ஏதேதோ சொல்லி, என்னைத் தன்வயப்படுத்த முயன்றதன்றி நான் கோரிய உறுதி மொழியைத்தர அவர் மறுத்துவிட்டார் என்று சொல்ல வேண்டும். அதன்பின் 9—11—67 அன்று காலை மாநாடு கூடவிருந்த சென்னைப் பல்கலைக் கழக மண்ட பத்தின் பிரதான நுழைவாயிலில் கழகத் தோழர்கள் சுமார் 300க்கு மேற்பட்டவர்கள் திரண்டு, மண்டபத்திற்கு உள்ளே செல்வோரை, செல்லவேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்து, மறியல் செய்தனர். மறியலில் ஈடுபட்டவர்களில் 30 பேர் பெண்கள். நான்தான் இந்த மறியல் போராட்டத் தில் தலைமை வகித்தேன். பல்லாயிரக் கணக்கில் மாணவர் களும் பொதுமக்களும் கூடி ஆரவாரம் செய்து ஆதரவு காட்டினர்.

காலை 8 மணிக்கு மயிலை சம்ஸ்கிருதக் கல்லூரி அருகி லுள்ள திருவள்ளுவர் சிலையிடமிருந்து, தமிழரசுக் கழகக் கொடிகளைக் கைகளில் ஏந்தி, ஊர்வலமாகப் புறப்பட்டுச் சென்று சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு மண்டபத்தை அடைந்து, அங்கு, தொண்டர்கள் மறியலில் ஈடுபட்டனர். மாநாடு நடைபெறும் மண்டபத்திற்குள் செல்லப் பலவழிகள்

உண்டாதலால், மாநாட்டிற்கு வந்த அறிவாளிகள் மறியல் நடந்த தலைவாயில் வழியாக உள்ளே செல்லாமல், வேறு வேறு வழிகளில் சென்றனர். மாநாட்டில் கலந்து கொள்ள இருந்த அறிஞர்களிலே சிலர், கடைசி நேரத்தில் மனமாற்றம் அடைந்து, வராமல் இருந்துவிட்டனர். அவர்களில் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் மு. வரதராசனார் ஒருவராவார். முதல்வர் அண்ணா அவர்களும் மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. ஆம்; தமிழரசுக் கழகம் நடத்திய மறியலுக்கு மதிப்பளித்துத்தான்!

மாநாடு நடைபெற்ற மண்டபத்தைச் சுற்றிப் பலமான போலீஸ் பாதுகாப்பு இருந்தது. ஆயுத போலீஸ் படையும் தருவிக்கப்பட்டிருந்தது. ஆயினும், வழக்கம்போல நானே போலீஸ்காரனாகவும் இருந்து வன்முறை நேராதபடி பார்த்துக் கொண்டேன்.

முதல்வர் அண்ணா அந்த மாநாட்டில் கலந்துகொள்ளவில்லையென்றாலும், தம் சார்பில் கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை அனுப்பினார். அவரும் தயாரித்துக் கொண்டுவந்த சொற்பொழிவைத்தான் மாநாட்டிலே படித்தார். அதிலே, ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாகவன்றி, அனைத்துப் பாடங்களுக்குமான போதனா மொழியாக நீடிப்பதற்கு அரசு அனுமதிக்காதென்று ஐயத்திற்கிடமற்றவகையில் அறிவித்தார். ஆனால், அது படிப்படியாகத்தான் அமுல் நடத்தப்படும் என்று கூறி மாநாட்டினருக்கு "அபயஸ்தம்" தந்தார்.

இது, எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. மாநாட்டில் பேசிய ராஜாஜியும், கல்லூரிகளில் தமிழ் பயிற்சி மொழியாவதற்குத் தாம் எதிரியல்லவென்றும், அதிலே அவசரம் காட்டுவதையே தாம் எதிர்ப்பதாகவும் கூறி, எனக்கு ஆறுதல் தர முயன்றார்.

பொதுவாக, ஆங்கிலப் பாதுகாப்பு மாநாடு, அதை நடத்தியவர்கள் எதிர்பார்த்த பயனைத்தரவில்லை, தமிழரசுக்

கழகம் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக! மாநாட்டை விடவும் தமிழரசுக் கழகம் நடத்திய மறியல் ஆர்ப்பாட்டம் அகில இந்திய ரீதியில் விளம்பரம் பெற்றது.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர்தான் சென்னையில் 2 வது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. அது நிகழ்ந்த சில திங்களுக்குள் தமிழக முதலவர் அண்ணா அவர்கள் நோய் வாய்ப்பட்டு, 3—2—69 அன்று காலமானார். அவரது மறைவு தமிழுக்கு ஏற்பட்ட பேரிழப்பு என்றே சொல்ல வேண்டும்.

அண்ணாவுக்கு அடுத்தபடியாக முதல்வர் பதவியை ஏற்ற கலைஞர் மு. கருணாநிதி, தி. மு. க. வின் கொள்கைக் கேற்ப தமிழ் வளர்ச்சிப் பணியில் தீவிரங்காட்டலானார். அண்ணா முதல்வராக இருந்த காலத்திலேயே தி. மு. க. அரசு ஆற்றிய தமிழ்ப்பணிகளிலே கலைஞருக்கு முக்கிய பங்கு உண்டு. அவர், அப்போது பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்து, திருவள்ளுவர் புகழ் பரப்பும் பணியில் ஈடுபட்டார். அரசுப் பேருந்து வண்டிகளிலே திருவள்ளுவர் படத்தை வைத்ததோடு, ஒன்றிரு குறட்பாக்களையும் பேருந்துதோறும் பொறித்து பயணிகளின் கண்களையும் கருத்தையும் திருக்குறளின்பால் ஈர்த்தார். அரசு அலுவலகங்களிலும் திருவள்ளுவர் உருவப் படங்களை வைத்தார்.

கல்லூரிகளிலே தமிழைப் பயிற்று மொழியாக்கும் பணியைப் பட்டப் படிப்பிலே காங்கிரஸ் அரசு தொடங்கி வைத்ததோடு, புகுமுக வகுப்பிலேயும் தொடங்கப்படு மென்று அறிவித்திருந்தது. அந்த அறிவிப்பை அமுல் நடத்தியது திமுக அரசு.

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளிலே முன் எப்போதையும்விட தி. மு. க. ஆட்சிக்காலத்திலே தமிழ், மொழி அதிக அளவில் பயன்படுத்தப்படலானது. திமுக அரசால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அலுவலகங்கள்,

குடியிருப்புகள், பாலங்கள் ஆகியனவெல்லாம் தமிழ்ப் பெயர்களை—தமிழ்த் தலைவர்கள் திருநாமங்களைப் பெற்றன. 'எழிலகம்', 'குறளகம்', 'மறைமலையடிகள் பாலம்', 'திரு. வி. க பாலம்', 'அண்ணா மேம்பாலம்', 'பட்டினப்பாக்கம்', 'அண்ணா நகர்', 'கலைஞர் கருணாநிதி நகர்' அகியவற்றைச் சான்றாகச் சொல்லலாம். காந்தியடிகளால் புகழப் பெற்ற தென்னாப்பிரிக்கத் தியாகியான வள்ளியம்மை பெயரும் தென்னாற்காடு மாவட்டத்தைச் சார்ந்த ஒரு ஊரில் அரசு புதிதாக அமைந்த குடியிருப்புக்கு வைக்கப் பெற்றது.

ஏற்கனவே வழக்கிலிருந்த ஆங்கிலப் பெயர்கள் சில தமிழ்ப் பெயர்களாகவும், தமிழ்த் தலைவர்கள் பெயர்களாகவும் மாற்றப்பெற்றன. அதற்கு கடற்கரைச்சாலை 'காமராசர் சாலை'யாகவும், மவுண்ட்ரோடு 'அண்ணாசாலை' யாகவும் போர்ஷோர் எஸ்டேட் 'பட்டினப்பாக்க' மாகவும், கெல்லிஸ் ரோடு 'கிள்ளியூராக'வும் மாற்றப்பட்டதைச் சான்றாகக் கொள்ளலாம் சென்னை நகருக்கு வெளியேயும் இப்படி மாற்றப்பெற்ற பெயர் ஏராளம்! ஏராளம்!!

சென்னை கிரீன்வேய்ஸ் சாலையிலுள்ள அமைச்சர்கள் வாழும் மாளிகைகளுக்கிருந்த ஆங்கிலப் பெயர்கள் தமிழ்ப் பெயர்களாக மாற்றப் பெற்றன.

சட்டமன்றப் பேரவையில் சபாநாயகர் அவைக்கு வருங்கால் ''ஹானரபில் ஸ்பீக்கர்'' என்று ஆங்கிலத்தில் சொல்லிக் கட்டியங் கூறுவதற்குப் பதிலாக ''மாண்புமிகு பேரவைத் தலைவர்'' என்று தமிழில் கூறும் வழக்கம் தோற்றுவிக்கப்பட்டது.

அரசு நடத்தும் குடியரசு விழா அணி வகுப்பு போன்ற பெருவிழாக்களிலே ஆங்கிலத்தோடு தமிழும் பயன்பட திமுக அரசு வழிவகுத்தது.

அமைச்சர்களின் பெயர்களுக்கு அடைமொழியாக 'கனம்' இருந்ததற்குப் பதிலாக, 'மாண்புமிகு' என்ற தமிழ்ச்

சொல் வழக்கத்திற்கு வந்தது. இப்படி, பல நூற்றுக்கணக்கான தூய தமிழ்ச் சொற்கள் பயன்படுத்தப்பட்டு, அவற்றிற்கு இணையான ஆங்கிலச் சொற்கள் வழக்கத்திலிருந்து மறைந்தன. இவையெல்லாம் சின்னஞ்சிறு மாறுதல்களே யென்றாலும், "எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்" என்ற கொள்கைக்கு வெற்றி தந்தன என்று சொன்னால், அது மிகையாது.

# மீண்டும் பயிற்சி மொழிப் பிரச்னை

காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே கோவை — திருச்சி மாவட்டங்களில் சில கல்லூரிகளில் மட்டுமே புதுமுக வகுப்பிலும் பி ஏ. வகுப்பிலும் வரலாறு — பூகோளம்—பொருளாதாரம் ஆகிய கலைப் பாடங்களுக்கு மட்டும் விரும்புவோருக்குத் தமிழ் பயிற்று மொழியாக்கப்பட்டது. இதனை, அனைத்துக் கல்லூரிகளுக்கும் அறிவியல் பாடங்கள் உள்பட அனைத்துப் பாடங்களுக்கும் விரிவுபடுத்தவேண்டிய பெரும் பொறுப்பு திமுக அரசுக்காகக் காத்திருந்தது எனலாம்.

இதற்கிடையில், டில்லி நாடாளு மன்றத்தில் ஒருதலைப் பட்சமாக நிறைவேற்றப்பட்ட இந்தி ஆட்சி மொழித் தீர்மானத்தை எதிர்த்தும், இந்தியைப் பள்ளிப் பாடத்திலிருந்து நீக்கியும் 23—1—68ல் தமிழக சட்ட மன்றத்தில் அரசு பிரேரேபித்த "மொழித் தீர்மானத்"தின் மீது முதல்வர் அண்ணா பேசியபோதும் தமிழைப் பயிற்சிமொழியாக்குவது பற்றி விரிவாகக் கூறினார். ஆம்; "அடுத்துள்ள ஐந்தாண்டு காலத்துக்குள் அனைத்துக் கல்லூரிகளிலும் அனைத்துப்பாடங்களுக்கும் தமிழை மட்டுமே பயிற்சிமொழியாக்க வேண்டும்" என்று யான் கொடுத்த திருத்தத்தை ஏற்றுக்கொண்டு அண்ணா பேசியதாவது:

> "ஐந்து ஆண்டுகளுக்குள் தமிழகத்தில் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழைப் பாடமொழியாகவும் பயிற்சி மொழியாகவும் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும். நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவது மட்டுமல்ல; அடுத்த ஆண்டிலேயே சர்க்கார் கல்லூரிகள் அத்தனையிலும் தமிழ் பாடமொழியாகும்."

இந்தப் பேச்சில் அண்ணா தந்த உறுதிமொழி 1968—69 ஆண்டில் நடைமுறைக்கு வரவில்லை. ''சட்ட மன்றத் தீர்மானத்தை அமுல்படுத்த ஓராண்டு கால அவகாசம் தேவை'' என்று கல்வித்துறையின் சார்பில் சமாதானம் சொல்லப்பட்டது.

தமிழக சட்டப் பேரவையில் சுதந்திராக் கட்சி உறுப்பினர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள், கல்லூரிகளில் தமிழோடு ஆங்கிலமும் பயிற்சி மொழியாக நீடிக்கவேண்டுமென்று கோரி 29—11—67 அன்று உத்தியோகப் பற்றற்ற தீர்மானம் ஒன்றைக் கொண்டு வ்ந்தார்.

சுதந்திரா கட்சி உறுப்பினர் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தை திமுக உறுப்பினர் திரு. வேழவேந்தன் வழிமொழிந்து பேசினார்.

கடுமையாக நோயுற்றதன் காரணமாக சென்னை பெரிய மருத்துவமனையில் தொடர்ந்து மூன்று வாரகாலம் படுக்கையிலிருந்த நிலையிலே டாக்டர் எச்.வி. ஹண்டேயின் தீர்மானத்தை எதிர்த்துப் பேசுவதற்கென்றே மிகுந்த சிரமத்துடன் பேரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டேன். தீர்மானத்தை எதிர்த்துப் பேசுவதற்கு நான் எழுந்து நின்றதும் பேரவைத் தலைவர் சி பா. ஆதித்தனார், எனது இருக்கையில் அமர்ந்தபடியே நான் பேசுவதற்கு என்னை அனுமதிப்பதாகக் கூறினார். ஆனால், இருக்கையில் அமர்ந்து பேசுவதற்கு ஒலி பெருக்கி வசதிகரமாக இல்லாததால் எழுந்து நின்றே ஆங்கிலமும் பயிற்சி மொழியாக நீடிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை எதிர்த்துப் பேசினேன். தமிழ் மட்டுமே பயிற்சி மொழியாக இருக்கவேண்டுமென்று வற்புறுத்தினேன்.

நான் மருத்துவ மனையில் இருந்து வந்து பேரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுவேன் என்று முதல்வர் அண்ணா அவர்கள் எதிர்பார்க்கவில்லை. முறைப்படி டாக்டர் ஹண்டேயின் தீர்மானத்தின் மீது அரசின் நிலைபற்றி விளக்கம் தருவது கல்வி அமைச்சர் நாவலரின் கடமையாக இருந்தது.

ஆயினும், தமிழ் உணர்ச்சி காரணமாக உடல்நலக் குறைவையும் கவனியாமல் மருத்துவ மனையில் இருந்து வந்து பேரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டு நான் பேசியது முதல்வர் அண்ணாவின் மனதை நெகிழச் செய்ததுபோலும். அதனால், நானே எதிர்பாராத வண்ணம் அண்ணா அவர்களே ஹண்டே தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு அரசின் நிலையை விளக்கிப் பேசினார். அவரது நீண்ட பேச்சின் ஒரு பகுதி வருமாறு:

''டாக்டர் ஹண்டே அவர்கள், மிக நீண்ட காலமாக ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்கப்போவது உறுதிப் படுத்தப்பட்டபிறகு அந்த ஆங்கிலத்தில் போதுமான புலமை பெற வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் செய்கிற தவறு எதிலிருக்கிறது என்றால், ஆங்கிலப் புலமை வேண்டுமென்பதில் அல்ல. போதனாமொழி ஆங்கிலமாக இருந்தால்தான் அந்தப் புலமை வரும் என்று சொல்வதில் தான்.

''இப்போது என்னிடத்திலோ அல்லது நான் சார்ந்திருக்கிற அரசினிடத்திலோ, 'ஆங்கிலத்தில் புலமை வேண்டுமா' என்று கேட்டால், 'ஆம்' என்று சொல்வோம். 'அந்தப் புலமை பெறத்தக்க அளவுக்கு வழிவகை செய்யப் போகிறீர்களா?' என்றால், 'செய்யப் போகிறோம்' என்று சொல்வோம். 'அந்தப் புலமையைப் பெறுவதற்காக ஆங்கிலம் போதனா மொழியாக இருக்கவேண்டாமா?' என்றால், 'இருக்க வேண்டியதில்லை' என்று சொல்வோம். ஏனென்றால், போதனா மொழியாக இல்லாமலேயே ஆங்கிலத்தில் புலமை பெற முடியும். போதனா மொழியாக ஆங்கிலத்தை வைத்துக் கொண்டே அம்மொழியில் புலமை பெறாதவர்களும் உண்டு. ஆகவே, ஆங்கிலத்தில் புலமை பெற அது போதனா மொழியாக இருக்கவேண்டுமென்பது முக்கியமல்ல ''

இப்படிப் பேசிய முதல்வர் அண்ணா அவர்கள், அன்று தான் பேசியது பற்றியும் குறிப்பிட்டார்கள். அது வருமாறு:

"இப்போது ஆங்கிலம் மட்டுமே போதனு மொழி என்று இருக்கிறது. அடுத்து, தமிழும் போதனு மொழியாக இருக்கலாம் என்ற கட்டத்துக்குச் சென்று, மூன்ருவதாக தமிழ் தான் போதனுமொழியாக இருக்கும் என்ற கட்டத்துக்கு நாம் செல்லவேண்டும். இடையிலுள்ள தமிழும் பாடமொழியாக இருக்கின்ற கட்டம் பூரணமான திருப்தியைக் கொடுப்பதல்ல. அதில் கிட்டத்தட்ட எனக்கும் ம.பொ.சி. அவர்களுக்கும் உணர்ச்சி ஒற்றுமை இருக்கிறது.

"ம.பொ.சி. அவர்கள் எடுத்துக் காட்டியபடி, "தமிழும் பாடமொழியாக இருக்கும்; ஆங்கிலமும் பாடமொழியாக இருக்கும்" என்ருல், நூற்றுக்கு அறுபது மாணவர்களுக்கு மேல் ஆங்கிலப் பாடமொழிக்குச் செல்வதற்குத்தான் தூண்டுதல் அளிக்கும். அதை அறிந்து நமது கல்வியமைச்சரவர்கள், இன்னெரு தூண்டுதல் காட்டி, "தமிழைப் பாடமொழியாக எடுத்துக் கொள்ளுங்கள்; உங்களுக்கு உத்தியோகங்களில் சலுகைகள் கிடைக்கும்" என்று சொல்லியிருக்கிருர்கள்.

தமிழ் பாடமொழியாக இருக்க வேண்டுமென்று நண்பர் ம.பொ.சி. அவர்கள் கேட்பது அதிலிருந்து நாம் பெரிய பயனைப் பெறவேண்டும் என்பதற்காகக்கூட அல்ல. அவர்கள் பேசிய வார்த்தைகளைக் கவனித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். "அது நம் உரிமை" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த உரிமையின் அடிப்படையில் தமிழ்தான் பாடமொழியாக இருக்கவேண்டும் என்பது இந்த அரசின் அழுத்தந்திருத்தமான நம்பிக்கை. ஆனுல், நம்பிக்கைக்கும் நடவடிக்கைக்கும் இடையிலே சில தடுமாற்றங்கள் ஏற்படலாம். அப்படிப்பட்ட தடுமாற்றங்களைத் தடுத்து நிறுத்துகிற முறையில்தான் ம பொ சி. அவர்களின் உரை இன்றைய தினம் அமைந்திருந்தது. ஆனுல், இதில் இந்த அரசுக்கு தடுமாற்றமில்லை. இப்போது ஆங்கிலத்தில் எல்லாப் பாடங்களையும் படித்து, போதனு மொழியாகக் கொண்டு படித்து வெளிவந்த அத்தனை பேரும் ஆங்கிலத்தில் புலமை பெற்று

விடவில்லை என்று நான் முன்னாலேயே எடுத்துச் சொன்னேன். அதைப் போலவே, ஆங்கிலமே படிக்காமல், தமிழ் மட்டும் தான் தெரியுமென்று சொல்லுகின்ற எல்லோருமே திரு. ம.பொ.சி. போல் தமிழில் பேச முடியவில்லை. "எனக்கு தெரிந்தது தமிழ்தான்" என்று சொல்லிடுவோர் பேசுவது தமிழ் மொழிக்கு ஊறு நேரிடத்தக்க வகையில் இருக்குமானால், அவர்கள் வேறு மொழி பயிலாததில் நஷ்டம் ஏதுமில்லை. பயின்ற ஒரு மொழியில் புலமை இருக்க வேண்டும். திரு.ம.பொ சி. அவர்கள் தமிழில் புலமை பெற்றிருக்கிறார். வடக்கே உள்ள சேட் கோவிந்ததாஸ்போல, வேறு தலைவர்கள்போல, ஆங்கிலம் அறவே கூடாதென்று அவர் சொல்லவில்லை, சொல்லவும் மாட்டார். ஏனென்றால், தன் மொழியிடத்தில் பற்றிருக்கும்போது, பிற மொழியைப் பழிக்கத் தேவையில்லை என்ற பெருங் கோட்பாடு அவருக்கு உண்டு என்பதை நான் அறிவேன்.

"சிலர் ம.பொ.சி. இந்திக்கு வாதாடுவதற்காக இங்கே தமிழைப் புகுத்தி ஆங்கிலத்தை அகற்ற வேண்டுமென்று கூறுகிறார் என்று தப்பாகச் சொன்னார்கள். அதற்கு ம.பொ.சி. தகுந்த விளக்கம் தந்திருக்கிறார்கள். இந்திதான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று அவர் வலியுறுத்தவில்லை.

"தமிழ் பாடமொழியாவதற்கு இன்னும் துரிதமான நடவடிக்கைகளை, இன்னும் தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்வதற்கு திரு ம.பொ.சி. அவர்களுடைய உரை பெரிதும் துணையாக இருக்குமென்று தெரிவித்து எங்களுடைய கருத்து எல்லாம் தமிழ்பாட மொழியாக வேண்டுமென்பதில் எந்தவிதமான தடையுமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

"நான் முன்னாலே குறிப்பிட்டபடி ஆங்கிலமே பாட மொழி என்று இருந்தது மாறி, தமிழும் பாடமொழி என்ற கட்டம் வந்து, பின்னர், தமிழே பாடமொழி என்ற இறுதிக் கட்டம் பிறக்கவேண்டும். அந்த இறுதிக் கட்டம் சில ஆண்டு

களிலே வருமானால், என்னைவிட மகிழக் கூடியவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது.

"டாக்டர் ஹண்டே அவர்களை நான் கேட்டுக் கொள்வேன். இந்தத் தீர்மானத்தை அவர்கள் வலியுறுத்தாமல் விவாதித்ததோடு திருப்தி அடைய வேண்டுமென்று."

முதல்வர் அண்ணா கேட்டுக் கொண்டபடி டாக்டர் எச்.வி. ஹண்டே தமது தீர்மானத்தின் மேல் வாக்கெடுக்கும்படி வற்புறுத்தாமல் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்.

ஐந்தாண்டுக் காலத்திற்குள் அனைத்துக் கல்லூரிகளிலும் அனைத்துப் பாடங்களுக்கும் பயிற்சி மொழியாகவும், அரசு அலுவலகங்களில் ஆட்சி மொழியாகவும் ஆங்கிலத்திற்குப் பதிலாக தமிழைக் கொண்டு வரவேண்டும் என்ற எனது திருத்தத்தையும சேர்த்து மொழித் தீர்மானம் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பின்னர், ஆங்கில ஆதரவாளர்கள் அதிர்ச்சியடைந்தனர். "ம. பொ. சி. யைத் திருப்தி செய்யவேண்டும் என்பதற்காக, அனுபவ சாத்திய மற்ற அவருடைய கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டு விட்டது" என்று தலைவர் ராஜாஜி "சுயராஜ்யா"விலும், "கல்கி"யிலும் எழுதினார். அப்போது தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் ராஜாஜியின் கருத்தையே எதிரொலிக்கும் வகையில் மொழித் தீர்மானத்தில் இருந்த ஆங்கிலத்தை அகற்றும் பகுதிக்கு எதிர்ப்பு காட்டி அறிக்கை விடுத்தார்.

என்னைத் திருப்திப்படுத்துவதற்காக ஐந்தாண்டு கால கெடுவை முதல்வர் அண்ணா ஏற்றுக் கொண்டார் என்பது எங்கள் இருவரிடையே நிலவிய புனிதமான நட்புணர்ச்சியைப் பெருமைப்படுத்தக் கூடியதுதான் என்றாலும், உண்மை அந்த அளவில் மட்டும் அடங்கி விடவில்லை.

"எங்கும் எதிலும் தமிழ்" என்ற தமிழரசுக் கழகத்தின் கொள்கை அண்ணாவின் தலைமையைப் பெற்றிருந்த தி. மு. க.

அரசுக்கும் உடன்பாடாயிருந்தது. "சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்" என்னும் பழமொழி போல, அண்ணா அரசின் கொள்கை செயல்படுவதற்கு நான் ஒரு தூண்டுகோலாக அமைந்தேன், அவ்வளவுதான்! எனது திருத்தத்தை மன நிறைவோடுதான்—அமுல் நடத்த வேண்டுமென்ற உறுதியோடுதான்—அண்ணா ஏற்றுக் கொண்டார் என்பதை நான் இங்கு சொல்லியாக வேண்டும். தம்முடைய உள்ளத்திலுள்ள தமிழ்ப் பற்றைத் தூண்டி விடுவதற்கு நான் ஒரு கருவியாகப் பயன்பட்டேன் என்பதனைச் சட்டப் பேரவையில் அண்ணா அவர்களே வெளிப்படுத்தினர்.

29-11-67ல் சட்டப் பேரவையில் திரு. எச். வி. ஹண்டே அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தின் மீது பேசுகையில் அண்ணா தெரிவித்த மற்றொரு கருத்து வருமாறு :

"ஆங்கிலம் இருக்கும் இடத்தில் தமிழைக் கொண்டு வந்து பாட மொழியாக ஆக்குவதில் இடையிலுள்ள சிக்கல்களை நாம் நீக்கியாக வேண்டும். இப்போது எடுத்துக் காட்டாகச் சொல்வதானல், இரண்டு மாதங்களுக்கு முன்னல் நான் வீட்டிலிருந்து புறப்படுங்கால் "இன்றைய தினம் முதற் கொண்டு சர்க்கார் உத்தரவுகளிலும் மற்றவைகளிலும் நாம் கையெழுத்துப்போடும் போது தமிழில்தான் போடவேண்டும்" என்ற உறுதியோடு வந்தேன். மிக வேகமாக நான்கு காகிதங்களில் தமிழில் கையெழுத்திட்டேன். ஐந்தாவது காகிதம் வருகிறபோது என்னையும் அறியாமலேயே ஆங்கிலத்தில் கையெழுத்துப் போட்டேன். வெட்கமாகக்கூட இருந்தது. அதற்குப் பிறகு மறுபடியும் தமிழில் போட ஆரம்பித்தேன்.

"ஒவ்வொரு நாளும் நான் எடுக்கிற அந்த உறுதியிலிருந்து அடிக்கடி தவறிப்போகிற நிலை வருவதற்குக் காரணம் ஆங்கில மொழியோடு நமக்கு ஏற்பட்டிருக்கின்ற தொடர்பு அந்த அளவுக்கு இருப்பதுதான்.

விரைவிலே அதிலிருந்து விடுபட முடியவில்லை என்பதை நான் வெட்கப்படாமல் ஒப்புக் கொள்கிறேன்."

ஆங்கில ஆதிக்கத்திலிருந்து நாட்டை விடுவிப்பதற்கு தமிழரசுக் கழகத்தின் தூண்டுதலும் தேவைப்படுகிறது என்பதை சட்டப் பேரவைக்கு எடுத்துக்காட்டத்தான் ஆங்கிலத்தை எளிதில் விடமுடியாத அளவுக்கு அதனோடு தமக்கு ஏற்பட்டுவிட்ட பிணைப்பை அறிஞர் அண்ணா அவர்கள் வெளிப்படையாகக் கூறினார்.

சட்டப் பேரவையிலே காங்கிரஸ் கட்சியின் கொறடா வாக விளங்கிய என் அருமை நண்பர் திரு. கே விநாயகம் அவர்கள், கேள்வி நேரத்தில் ஆங்கிலத்திலும் தமிழிலுமாக மாறி மாறி துணைக் கேள்விகள் போடுவார். அவர் ஆங்கிலத் தில் துணைக் கேள்வி போடும்போது அண்ணா அவர்களும் ஆங்கிலத்திலேயே பதிலளிப்பார். இது எனக்குப் பிடிக்க வில்லை. ஒருமுறை முதல்வர் அண்ணா அவர்களிடம் தனி யாகப் பேசிக் கொண்டிருந்தபோது,

> "திரு கே. விநாயகம் அவர்கள், ஆங்கில ஆதிக்கம் நீடிக்க வேண்டும் என்பதிலே விருப்பமுடையவர் என்பது தங்களுக்குத் தெரியும். அதனாற்றான், அவர் ஆங்கிலத்தில் அடிக்கடி கேள்வி போடுகிறார். ஆங்கிலத் தின் இடத்தைத் தமிழுக்கு அளிக்கவேண்டும் என்று விரும்பும் தாங்கள் திரு. கே. விநாயகத்தின் ஆங்கிலக் கேள்விக்குத் தமிழில் பதிலளிக்கலாமே"

என்று கூறினேன். அதற்கு அவர், "கொஞ்சம் சபலம்தான்! ஆங்கிலம் மறந்து போய்விடக் கூடாதே என்பதற்காக அது போன்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள மனம் விரும்புகின்றது" என்று சிரித்துக் கொண்டே பதிலளித்தார்.

அண்ணா அவர்கள் முதல்வர் பொறுப்பை ஏற்றதுமே தாம் பங்கு கொள்ளும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் அரசு உயர் அலுவலர்கள் தமிழிலேயே பேச வேண்டும்

என்று கேட்டுக் கொண்டார். 9—8—69ல் ராஜாஜி மண்டபத்தில் பொது நிர்வாகக் கருத்தரங்கு ஒன்றைத் துவக்கி வைத்துப் பேசுகையில் அதிகாரிகளுக்கு அவர் விடுத்த வேண்டுகோள் வருமாறு:

"இங்கே தலைமைச் செயலாளர் ஆங்கிலத்தில் பேசினார். அவரைத் தொடர்ந்து நான் தமிழில் பேசுகிறேன். ஏனென்றால், அரசின் நடவடிக்கைகள் அனைத்தும் தமிழிலேயே நடக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தத்தான் தமிழில் பேசுகிறேன்.

"பொது மக்கள், குறைகளை எடுத்துச் சொல்ல வரும் போது தமிழில்தான் பேசுவார்கள். அவர்களின் குறைகளை அறிந்து ஆராய அதிகாரிகள் தமிழையே பயன்படுத்த வேண்டும்.

"தமிழிலேயே பேசினால்தான் மக்களுக்கு மனத்திருப்தி ஏற்படும். குறைகளை நீங்கள் கேட்டறியும் பாங்கிலேதான் அவர்களின் மனக்குறையும் நீங்கும்.

"தமிழகத்தின் ஆட்சி மொழியாக தமிழையே ஏற்றிருக்கின்ற இந்த அருமையான நேரத்தில் விரைவாகத் தமிழையே எல்லாத் துறைகளுக்கும் பயன்படுத்தவேண்டும். உங்களுக்குச் சந்தேகம், 'நாம் பேசுவது நல்ல தமிழ்தானா?' என்று! தமிழை ஓரளவாவது அறிந்தவன் என்ற முறையில் சொல்லுகிறேன், நீங்கள் நல்ல தமிழில்தான்—அழகான தமிழில்தான் பேசுகிறீர்கள்!

"நாம் பேசும் தமிழ் நல்ல தமிழ்தானா என்று ஐயப்படுவது போல, நாம் பேசுவது நல்ல ஆங்கிலம்தானா என்று முன்பு தயக்கம் காட்டியிருந்தால், நம்மால் ஆங்கிலத்தில் இந்த அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்க முடியாது."

சட்டப்பேரவையில் மொழித் தீர்மானம் நிறைவேறிய பின்னர், மறுநாளே நான் முதல்வர் அண்ணா அவர்களை அவருடைய இல்லத்தில் சந்தித்துப் பேசினேன். கம்யூனிஸ்டுக்

கட்சித் தலைவர் திரு. பி. ராமமூர்த்தி அவர்களும் அவருடன் இருந்தார். ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மாறுவதற்கு ஐந்தாண்டுக் கால வரம்பு வைத்து நான் திருத்தத் தீர்மானம் கொடுத்ததற்காக நேரிலும் ஒருமுறை அண்ணா அப்போது என்னைப் பாராட்டினார். அதைக்கேட்டு திரு. பி. ராமமூர்த்தி "எனது கட்சியின் சார்பிலும் அப்படி ஒரு திருத்தம் கொடுக்கப்பட்டதே!" என்று கூறினார். அதற்கு, "விரைவில் ஆங்கிலத்திற்குப் பதிலாக எல்லாத் துறைகளிலும் தமிழை கொண்டு வரப்பட வேண்டும் என்பது எல்லாக் கட்சிகளுக்கும் கொள்கைதான் என்றாலும், அதற்கான சூழ்நிலையை உருவாக்க தம் வாழ்நாளை அர்ப்பணித்துப் பாடு பட்டு வரும் ம. பொ. சிக்கு நாம் பாராட்டு தெரிவிக்கத் தானே வேண்டும்" என்று அண்ணா அன்பு கனியக் கூறினார்.

சட்டப் பேரவையில் மொழித் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதை யடுத்து, தமிழ் நாட்டிலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களைக் கூட்டி வைத்து, ஐந்தாண்டு களுக்குள் கல்வித்துறையைத் தமிழ் மயமாக்குவது பற்றி முதல்வர் ஆலோசனை நடத்தினார். சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் அவர் களும் இதில் கலந்து கொண்டார். துணைவேந்தர்கள் மூவரும் சட்டப் பேரவையின் மொழித் தீர்மானத்தை செயல்படுத்து வதிலே அரசுக்கு முழு அளவில் ஒத்துழைப்புத் தருவதாக உறுதி கூறினர்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே—அதாவது, 1966-67ஆம் கல்வி ஆண்டிலே, சில கல்லூரிகளில் மட்டும் பி. ஏ. பட்டப் படிப்பில் விரும்புகின்ற மாணவர்களுக்கு மட்டும் தமிழ் பயிற்சி மொழியாக இருந்ததும், அந்த ஆண்டிலே புகுமுக வகுப்பிலும் கலைப் பாடங்களில் மட்டும்—விரும்புகின்றவர் களுக்கு தமிழ் பயிற்சிமொழியாக்கப்பட்டதும் ஏற்கெனவே எடுத்துக் கூறப்பட்டன.

அண்ணா முதல்வரான பின், 1967—68ஆம் ஆண்டில் பி. ஏ. பட்ட வகுப்பிலும், 1968-69ஆம் ஆண்டிலிருந்து

புகுமுக வகுப்பிலும் அறிவியல் பாடங்களுக்கும் தமிழ் பயிற்று மொழியாக்கப்பட்டது.

தி. மு. க. ஆட்சியிலே என் அருமை நண்பர் அண்ணு அவர்களின் மறைவுக்குப் பின் கலைஞர் மு. கருணுநிதி முதல்வர் பொறுப்பை ஏற்ற பின்னரும் கல்லூரிகளிலே தமிழைப் பயிற்சி மொழியாக்கும் பணி வளர்பிறை யாகி வந்தது. ஆம்; தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை பெருகி வந்தது. இந்த வளர்ச்சி அரசு கல்லூரிகள் அளவில்தான். தனியார் கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்கும் திட்டத் திற்குப் போதிய ஆதரவு கிடைக்கவில்லை. அதனுல், தனியார் கல்லூரிகளை நிர்ப்பந்திக்க அரசு முயன்றது. தமிழைப் பயிற்றுமொழியாக ஏற்றுப் படிப்போருக்குச் சில சலுகைகள் வழங்கப்பட்டன. உத்தியோகங்கள் வழங்குவதிலும் சலுகை காட்டப்படும் என்று சட்டமன்றப் பேரவையிலே முதல் வரும், கல்வியமைச்சரும் அறிவித்தனர்.

சட்டப் பேரவையில் ஒரு சந்தர்ப்பத்திலே, "தமிழை ஏற்றுப் படிக்காதவர்கள் தமிழகத்தில் வாழ முடியாத நிலை ஏற்படலாம்" என்று உணர்ச்சி வயப்பட்டுப் பேசும்போது முதலமைச்சர் மு. கருணுநிதி அவர்கள் கூறிவிட்டார். இதனை ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை ஆதரிக்கும் நாளேடுகள் பெரிதுபடுத்திப் பிரசுரித்தன.

பயிற்சி மொழி எதுவாக இருக்கும் என்பதை மாணவர் களின் விருப்பத்திற்கு விட்டுவிட வேண்டுமென்று ஒரு கிளர்ச்சி பிறந்தது. மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இதற்குத் தூண்டுதலாக இருந்தார். பழைய காங்கிரஸ் வட்டாரத் திலே, "தேசிய மாணவர் தமிழ் மன்றம்" என்னும் பெயரில் இயங்கி வந்த ஓர் அமைப்பு இந்தக் கிளர்ச்சிக்கு நேரடியாகப் பொறுப்பேற்றது.

வழக்கறிஞர் திரு வசந்தபாய் என்பவர், தமிழ் மொழி மட்டுமே கல்லூரிகளில் பயிற்சி மொழியாவதை எதிர்த்து

சட்டமன்ற மேலவையில் ஒரு தீர்மானம் கொடுத்தார். அது, 28—3—70 அன்று நடைபெற்ற மேலவைக் கூட்டத்திலே விவாதிக்கப்பட்டது.

தமிழரசுக் கழகப் பொதுச் செயலாளர் அவ்வை தி. க. சண்முகம் அவர்கள், திரு. வசந்தபாய் அவர்களின் தீர்மானத்தை எதிர்த்துப் பேசுகையில், "ஆயிரம் வசந்தபாய்கள் முயன்றாலும் ஆங்கில ஆதிக்கம் அழிவதையோ, தமிழ் மட்டுமே அனைத்துக் கல்லூரிகளிலும் பயிற்சி மொழியாவதையோ தடுக்க முடியாது" என உணர்ச்சிப் பெருக்கோடு கூறினார்.

முதல்வர் கலைஞர் அவர்களும் அரசின் சார்பில் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினார். நானும், வேறு பல பிரமுகர்களும் மேலவையின் பார்வையாளர் காலரியிலிருந்த வண்ணம் நடவடிக்கைகளைக் கவனித்தோம். திரு. வசந்தபாயின் தீர்மானம் ஓட்டுக்கு விடப்படாமல் விவாதித்த அளவோடு கைவிடப்பட்டது. ஆயினும், மேலவையில் நடந்த இந்த விவாதத்திற்கு நாளேடுகள் பெரிய அளவில் விளம்பரம் தந்தன.

1970 நவம்பர் 21, 22 தேதிகளில் மதுரை மாநகரில் பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாணவர்களின் மாநாடு மிகப் பெரிய அளவில் திட்டமிடப்பட்ட முறையில் நடத்தப் பெற்றது. தமிழை மட்டுமே கல்லூரிகளில் பயிற்சி மொழியாக்கும் திட்டத்திற் கெதிராகத்தான் இந்த மாநாடு நடத்தப் பெற்றது. இந்த மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட ஆங்கில ஆதிக்கத்தை ஆதரிக்கும் சொற்பொழிவுகள் நாளேடுகளில் விரிவாகப் பிரசுரிக்கப்பட்டன. இந்த மாநாடு அரசியல் கட்சி உணர்ச்சியுடன் நடத்தப் பெற்றது என்பதனை இங்கு நான் சொல்லியாக வேண்டும் திமுக அரசுக்கு எதிரான உணர்ச்சியுடையவர்கள் எல்லாம் "மாணவர்கள் மாநாடு" என்ற போர்வையிலே இம்மாநாட்டில் பங்கு பெற்றனர். இதன் விளைவு திமுக அரசுக்குக் கவலை தருவதாக இருந்தது. எனக்கும் கவலையைத் தந்தது.

30—11—70ல் தமிழ் பயிற்சி மொழித் திட்டத்தைத் துரிதப்படுத்த வேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை விடுக்கும் தீர்மானம் ஒன்றை சட்டப் பேரவையில் நான் பிரேரேபித்தேன். அது வருமாறு:—

"தமிழகத்தில் தமிழ் எல்லாக் கல்லூரிகளிலும், ஆட்சியின் மொழியே பயிற்சி மொழியாகவும், நிர்வாக மொழியாகவும் ஐந்தாண்டுக் காலவரையறைக்குள் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று நமது சட்டப் பேரவையில் 1968 ஜனவரி 23ஆம் நாளன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை செயல் முறைப்படுத்தும் வகையில் அரசாங்கம் தயங்காது விரைவிலேயே வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமெனவும், மாணவர்கள் தங்கள் தங்கள் விருப்பப்படி பயிற்சி மொழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவதற்கு ஒவ்வொரு கல்லூரியிலும் வகை செய்வது நமது மாநிலத்தில் உயர் கல்வி முறையில் குழப்பம் விளைவதற்கு வழிவகுக்குமாதலால், நம் தாய்மொழியான தமிழையே தனியார் அரசுக் கல்லூரிகள் அனைத்திலும் படிப்படியாகப் பயிற்சி மொழி ஆக்குவதற்குத் தக்க ஏற்பாடுகளை அரசாங்கம் விரைந்து மேற்கொள்ள வேண்டுமெனவும் இப்பேரவை பரிந்துரை செய்கிறது."

எனது தீர்மானம் அரசின் சார்பில் ஆதரிக்கப் பெற்றது. அப்போது தி மு. கழகத்துடன் தோழமை கொண்டிருந்த இந்திரா காங்கிரஸ் உள்ளிட்ட அரசியல் கட்சிகளும் ஆதரவு தந்தன. பார்வையாளர் காலரி நிரம்பி வழியும் வண்ணம் சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும், நாடாளுமன்ற தமிழக உறுப்பினர்களும், வேறு பல பிரமுகர்களும் குழுமியிருந்தனர். சட்ட மன்றப் பேரவையில் ஒரு நாளைய நடவடிக்கைக்கான நேரம் முழுவதும் இதற்காகவே ஒதுக்கப்பட்டது. அமைச்சர்களில் ஒருவர் தவறுமல் கூட்டத்தில் கலந்து கொண்டு, கடைசி வரை தத்தம் இருப்பிடங்களில் அமர்ந்த வண்ணம் இருந்தனர். ஏராளமான கல்லூரி

மாணவர்களும் பார்வையாளர் காலரியில் திரண்டிருந்தனர். பழைய காங்கிரஸ், சுதந்திராக் கட்சி ஆகியவற்றின் சார்பில் எனது தீர்மானத்தின் சாரத்தைக் கெடுக்கும் வகையில் திருத்தங்கள் தரப்பட்டன. விவாதத்தின் முடிவில் எனது தீர்மானம் கொள்கையளவில் சட்டமன்றப் பேரவையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது, மதுரையில் கூடிய தமிழ் பயிற்சி மொழித் திட்டத்தை வெறுக்கும் மாணவர் மாநாட்டுக்குச் சரியான பதிலாக அமைந்தது. ஆயினும், தமிழ் பயிற்சி மொழித் திட்டத்தை எதிர்ப்போர் ஓய்ந்து விடவில்லை.

டிசம்பர் 7, 8 தேதிகளில் "அனைத்துக் கல்லூரிகளின் மாணவர்களின் ஊர்வலம்" என்னும் பெயரில் ஆங்கிலமும் பயிற்சி மொழியாக நீடிக்க வேண்டும் என்று கோரும் மாணவர்கள் சென்னை நகரில் ஊர்வலம் நடத்தினார்கள்.

டிசம்பர் 12ஆம் தேதியன்று தமிழை மட்டுமே பயிற்சி மொழியாக்கும் திட்டத்தை எதிர்த்து சென்னை மாநகரில் கடையடைப்பு நடத்துமாறு மாணவர்கள் சார்பில் வேண்டுகோள் விடப்பட்டது. கல்லூரிகளில் தமிழ் மட்டுமே பயிற்சி மொழியாக்கப்படுமானால், தமிழகத்தில் தங்கி வாழும் வேற்று மொழியினர் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள் என்று பிரசாரம் செய்யப்பட்டது. அப்படிச் செய்தும் சென்னை நகரில் கடையடைப்பு வெற்றிகரமாக நடைபெறவில்லை. வடபுலத்தவர் வாழும் சௌகார்பேட்டையில்கூட அர்த்தால் நடக்கவில்லை. பிசுபிசுத்துப் போய்விட்டதென்றே சொல்ல வேண்டும்.

தமிழைப் பயிற்சி மொழியாக்கும் பிரச்னை கட்சிப் போராட்டத்திற்கான கருவியாக்கப்பட்டு விட்டதால், டிசம்பர் 7, 8 தேதிகளில் சென்னை நகரில் காங்கிரஸ் சார்புடைய மாணவர்கள் நடத்திய ஊர்வலத்திற்கு எதிராகத் திமுக.வும் அதன் தோழமைக் கட்சிகளும் சேர்ந்து போட்டி ஊர்வலம் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டது அதற்குத்

திட்டமிட சென்னை மாவட்ட மத்திய நூலகத்தில் கூட்டப் பட்ட கூட்டத்தில் திமுக. இந்திராகாங்கிரஸ், முஸ்லிம் லீக், பார்வர்டு பிளாக், பி. சோ., சோஷலிஸ்டு, தமிழரசுக் கழகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். தமிழ் மட்டுமே கல்லூரிகளில் பயிற்சி மொழியாக்கப்படுவதை ஆதரித்து ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும் நடத்தத் தீர்மானித்து, அதற்காகத் திட்டமும் வகுக்கப்பட்டது.

இந்நிலையில், அப்போது மத்தியில் திருமதி. இந்திரா காந்தி தலைமையில் இயங்கி வந்த காங்கிரஸ் அரசு, உரிய காலத்திற்கு ஓராண்டுக்கு முன்னதாகவே நாடாளு மன்றத் திற்கான தேர்தலை நடத்தப் போவதாக அறிவித்து, தேர்தல் தேதிகளையும் பிரகடனம் செய்தது.

இது, தமிழகத்தில் இயங்கிய திமுக அரசு முன்கூட்டி எதிர்பாராத திடீர்ப் பிரகடனம். மத்திய அரசு நாடாளு மன்றத்திற்கு மட்டுமே தேர்தல் நடத்த விரும்பியதென்று லும், திமுக அரசு, தமிழக சட்ட மன்றத்திற்கு ஓராண்டுக்கு முன்னதாகவே தேர்தல் நடத்தக் கோரி அதற்கு மத்திய அரசின் இசைவையும் பெற்றது.

தேர்தல் பிரகடனம் வெளியான பின், தமிழ் பயிற்சி மொழி பற்றிய பிரச்சினையில் தி.மு.க. கழகம் தனது போக் கில் மாறுதலை வெளிப்படுத்தியது. ஆம்; தமிழ் பயிற்சி மொழி பற்றிய பிரச்னையில் ஆய்வு நடத்தி அரசுக்குப் பரிந் துரை தர டாக்டர் ஏ. இலக்குமணசாமி முதலியார் தலைமை யில், சென்னை—மதுரை—அண்ணாமலை பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் கொண்ட தனிக்குழு ஒன்றை அமைத்திருப் பதாகத் "திடீர் அறிவிப்பு" ஒன்றை வெளியிட்டது. இது பற்றி என்னிடமோ, மற்ற தோழமைக் கட்சிகளைச் சார்ந்த வர்களிடமோ தி. மு. க. தலைமை முன்கூட்டி கலந்து ஆலோசிக்கவில்லை. அதற்காக என்னைத் தவிர வேறு கட்சி களின் தலைவர்களில் எவரும் கவலைப்படவுமில்லை.

டாக்டர் இலட்சுமணசாமி முதலியார், தமிழ் மட்டுமே பயிற்சி மொழியாழியாவதை விரும்பாதவர் என்பது உலகறிந்ததாகும். அப்படிப்பட்டவர் தலைமையில் குழு அமைத்து, அதன் பரிந்துரை எதுவாயினும் அது ஏற்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது, தமிழ் நாட்டுக் கல்லூரிகளில் தமிழ் மட்டுமே பயிற்சி மொழியாக்கப்படும் முயற்சிக்கு தற்காலிகமாக முற்றுப்புள்ளி வைத்தது போலத்தான்!

23—1—68ல் சட்டப் பேரவையில் ஐந்தாண்டு காலத்திற்குள் அனைத்துக் கல்லூரிகளிலும், அனைத்துப் பாடங்களுக்கும் தமிழை மட்டுமே பயிற்சிமொழியாக்குவதென்று நிறைவேற்றப்பட்ட மொழித்தீர்மானத்திற்கும், அந்தத் தீர்மானம் உறுதியாக அமுல் நடத்தப்படும் என்று முதல்வர் பொறுப்பிலிருந்த அண்ணா கொடுத்த உறுதி மொழிக்கும் தி.மு.க. அரசு தலைமுழுக்குப் போட்டுவிட்டதென்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது.

தி மு கழகம் ஆட்சிப் பொறுப்பிலிருந்த ஒன்பதாண்டு காலத்திலே, தமிழை வளர்க்கவும் தமிழர்களைப் பெருக்கவும் வேறு பல காரியங்களும் நடைபெற்றன. அவற்றைச் சுருக்கமாக வேறும் இங்கு அறிவிக்கவேண்டியது எனது கடமையாகிறது. அவை வருமாறு:

“நீராருங் கடலுடுத்த” என்று தொடங்கும் ‘மனோன்மணீயம்” சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் தமிழக அரசாங்கக் கீதமாக அங்கீகரிக்கப் பெற்றது.

பூம்புகாரில் அடுத்தடுத்து இரண்டாண்டுகள் இளங்கோவடிகளையும் அவர் படைத்த சிலப்பதிகாரத்தையும் சிறப்புச் செய்யும் வகையில் சித்திரா பௌர்ணமி நாளிலே “முழுநிலாத் திருநாள்” கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

காரைக்குடியிலே தமிழ்த் தாய்கோயில் நிறுவத் தமிழக அரசின் சார்பில் ரூ 5 லட்சம் காரைக்குடி கம்பன் கழகத்திற்கு நன்கொடை வழங்கப்பட்டது.

தமிழ் நாட்டுக் கோயில்களிலே விரும்புகின்ற பக்தர் களுக்குத் தமிழிலே அர்ச்சனை செய்யும் வழக்கம் தொடங்கி வைக்கப்பட்டது.

அர்ச்சகர் தொழிலுக்கு இந்துக்களிலே எல்லாச் சாதி யினரும் வருவதற்கும் சட்டம் செய்யப்பட்டது. அரசுப் பேருந்துப் போக்குவரத்து நிறுவனங்களுக்குப் பெரியார், பல்லவன், சோழன், கட்டபொம்மன் பெயர்கள் வைக்கப் பட்டன.

தமிழினத்துக்குப் பெருமை தரும் நினைவுச் சின்னங்களும் பெயர் மாற்றங்களும் செய்வதிலே ஆர்வங் காட்டிய தென் றாலும், ஆங்கில ஆதிக்கத்தை அகற்றித் தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழ்மொழிக்கே முதலிடம் தேடும் பணியில் தி.மு. க. அரசு வேகநடை போடவில்லை. இது எனக் கிருந்த மனக்குறை—குறிப்பாக, தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தை அமுல்படுத்துவதிலே தீவிரம் காட்டவில்லை.

## தமிழ் வளர்ந்ததா?

இதனை சட்டமன்ற மேலவையில் பலமுறை வெளிப்படை யாகக் கூறினேன். ஆம்; முதல்வரின் — கல்வியமைச்சரின்— சட்ட அமைச்சரின் காதுகள்கேட்கக் கூறினேன். 1973–74 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தை யொட்டிய அரசின் கல்விக் கொள்கை மீது 22–3–73ல் மேலவையில் பேசியபோது யான் கூறியதில் ஒரு பகுதி வருமாறு :

"தமிழை ஆட்சிமொழி யாக்கும் சட்டம் நிறைவேறி 16 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. இதனை, கொஞ்சம் பரிதா பத்துடன் நோக்கவேண்டி யிருக்கிறது.

"தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தினுடைய குறிக்கோள் என்னவென்றால், தமிழை ஆங்கிலத்திற்கு மாற்றாகக் கொண்டு வருவதுதான். ஆங்கிலத்தை அகற்றி அதன் இடத்திற்குத் தமிழைக் கொண்டு வருவதுதான்.

"ஆனால், 16 ஆண்டுகாலமாகிறது. தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தைக் கொண்டு வந்தவர்களே பத்து ஆண்டுகளைக் கடத்திவிட்டுப் போய்விட்டனர்.

"அந்தப் பத்தாண்டு காலத்திற்குப் பின்னே தமிழ்ப் பற்றும் தமிழ் வளர்ச்சியில் ஆர்வமும் உடைய இன்றைய ஆட்சி வந்த பிறகும், ஆங்கிலம் எத்தனை இலாகாக்களில் நீக்கப்பட்டு, அந்த இடங்களில் தமிழ் ஆட்சி மொழி ஆக்கப் பட்டிருக்கிறது? அதற்கான புள்ளி விவரம் இந்த அவைக்குத் தரப்படவில்லை.

"இந்த மன்றத்தில் கொடுக்கப்படுகிற அறிக்கைகளில் சில ஆங்கிலத்தோடு தமிழிலும் இருக்கின்றன. அவையும் ஆங்கி லத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப் பட்டவையாகத் தான் தோன்றுகின்றன.

"ஆங்கிலத்தில் மட்டுமே சில அறிக்கைகள் தரப்படு கின்றன. அதுபோல, தமிழில் மட்டுமே தரப்படுவது இல்லவே இல்லை. ஆங்கிலத்தில் இல்லாமல் தமிழில் மட்டுமே அறிக் கைகள் தரப்படுவதையும் என் கண்களால் பார்க்கவேண்டு மென்று விரும்புகிறேன்.

"ஆங்கிலம் கைவிடப்பட்டு, தமிழில் மட்டுமே அறிக்கை கள் தரப்படவேண்டும். அதுதான் தமிழ் ஆட்சிமொழி யான தற்குப் பொருள்.

"அறிக்கைகளை ஆங்கிலத்தோடு சேர்த்துத் தமிழிலும் கொடுக்கிற இந்த இரட்டை மொழி நிர்வாகம் நிறுத்தப்பட வேண்டும். அதனால், வெட்டிச் செலவு. எங்கெல்லாம் தமிழில் அரசாங்கப் பிரசுரங்கள் வருகின்றனவோ, அங்கெல்லாம் ஆங்கிலம் நிறுத்தப்பெற வேண்டும்.

"தமிழ் ஆட்சி மொழியாக்கப்படும்போது ஒரு இடைக் காலத்தில் இரண்டு மொழிகளும் இருக்க வேண்டும் என்று சொன்னால், அது எனக்குப் புரிகிறது. அந்த இடைக் காலம் எது? நாடு விடுதலை பெற்று கால் நூற்றாண்டு ஆகி

விட்டது. வெள்ளிவிழாவும் கொண்டாடுகிறோம். தமிழகத்தில் ஆட்சி மாறியது. அதற்குப் பிறகும் இன்னும் ஒரு இடைக்காலம் இருக்குமென்றால், அது இன்னும் எவ்வளவு காலம்? தயவுசெய்து தமிழ்ப் பற்றும் புலமையுமுடைய 'உலக மகாகவி' என்ற சிறப்புப் பெற்றுள்ள முதலமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு கால வரம்பு கட்ட வேண்டும்.

"இந்தப் பிரச்சினையில் முதலமைச்சர் அவர்களை நான் இழுத்து விடுவதில் அவருக்கு எவ்வளவோ சங்கடங்கள் இருக்கின்றன. முன்பே அவர்கள் அத்தகைய சங்கடங்களை அனுபவித்து இருக்கிறார்கள். அவருக்குச் சங்கடங்களைத் தேடித் தருகிற ஒரு தோழனாக இருக்க நான் விரும்பவில்லை. ஆனால், சங்கடத்தை வரவேற்க வேண்டிய விஷயங்களில் வரவேற்றுத்தான் ஆக வேண்டும் என்பது என்னுடைய தெளிவான முடிவு."

## தி. மு. க. வந்தது எதற்காக?

தி. மு. க ஆட்சி அகற்றப்படுவதற்கு 10 திங்களுக்கு முன்புகூட—அதாவது, 1975–76ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்டம்பற்றி சட்டமன்ற மேலவையில் நான் பேசியபோதும் ஆட்சிமொழி தமிழ் ஆவதில் தி. மு. க அரசு தீவிரம் காட்டவில்லை என்பதை அழுத்தந் திருத்தமாக எடுத்துக் காட்டினேன். அது வருமாறு:

"தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் நிறைவேறியது 1956ல். அப்பொழுதிருந்த கல்வியமைச்சர் சொன்னார், "பத்தாண்டுக் காலத்திற்குள் ஆங்கிலத்திற்குப் பதிலாக—அரசு தலைமை அலுவலகங்கள் உட்பட—தமிழை ஆட்சிமொழியாக்கும் பணி முடிவு பெற்றுவிடும்" என்று. 10 ஆண்டுகள் என்ன, 19 ஆண்டு ஆகிவிட்டது! இன்னும் ஒரு அங்குலம் கூட நகரவில்லை என்று நான் சொன்னால், அதை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் உண்மை நிலை எதுவென்று சொன்னால், நானும் ஏற்றுக் கொள்வேன்.

"சிலப்பதிகாரக் கலைக்கூடமும், கட்டபொம்மன் நினைவுச் சின்னமும் ஏற்பட்டிருக்கின்றன அமைச்சர்கள் இல்லங்கள் பெயர்கள் மாறுகின்றன; தெருப் பெயர்கள் மாறுகின்றன. ஊர்ப்பெயர்கள் மாறுகின்றன. ஆனால், தமிழின் தலையெழுத்து மாறவில்லை.

"தமிழ்த் தாய்க்கு முன்பு 3 கால பூஜை நடந்து வந்தது. இப்போது 6 கால பூஜை நடக்கிறது. அலங்கார, ஆராதனை எல்லாம் மிக அழகாக நடக்கின்றன. ஆனால் கை விலங்கு, கால்விலங்கு கழற்றப்படவேயில்லை.

"ஆங்கிலத்தின் ஆதிக்கம் எவ்வளவு குறைக்கப்படுகிறது என்பதை வைத்துத்தான் தமிழுக்கு ஏற்பட்ட வளர்ச்சி, வாழ்வு பற்றி முடிவு கட்டவேண்டும்.

"தெருப் பெயர்களும், ஊர்ப் பெயர்களும், பூங்கா பெயர்களும் தமிழாகி விடுவதனாலேயே தமிழ் வளர்ந்து விடாது.

"சுதந்திரம் வந்து 29 ஆண்டுகளுக்குப் பிறகும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த 9-வது ஆண்டு கொண்டாடப்படுகிற நிலையிலும் ஆங்கில ஆதிக்கத்தை முறியடித்து ஒரு அங்குலம் கூட தமிழ் முன்னேறவில்லையென்று சொன்னால், வேறு யார் முன்னேற்றிவிடப் போகிறார்கள்? அதனால் தான், நான் இங்கே முறையிட்டுக்கொள்கிறேன். இந்தக் குறைபாட்டை நான் இங்கே சொல்லாவிட்டால், என் மனச்சாட்சிப்படி நான் நடந்துகொள்வதாகாது. ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மாறுவதற்கு எதிர்ப்பு இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். சூழ்நிலை சரியாக இல்லை என்பதையும் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அந்தச் சூழ்நிலையை மாற்றி யமைக்கத்தானே நீங்கள் (தி. மு. க) வந்தது? அந்தச் சூழ் நிலையை மாற்றியமைப்பீர்கள் நீங்கள் என்று நம்பித்தானே உங்களை ஆதரிக்கிறது இந்த நாடு.

"இந்த நிலையில் சூழ்நிலையை மாற்றுவதற்கு உங்களால் முடிய வில்லை யெனில், அதற்கு வேறு என்ன திட்டம்

கொண்டு வரப் போகிறீர்கள்? மாற்றியமைப்பதற்கு என்ன வழி காணப் போகிறீர்கள்? அது உங்களால் முடியாதது என்று சொன்னால், ......நான் அதைப் பற்றி ஒன்றுமே சொல்வதற்கில்லை. முதலமைச்சர் அவர்கள் அப்படிச் சொல்ல மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.''

தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழுக்கே முதலிடம் தேடத் தி.மு.க. அரசுக்கு இருந்த ஒன்பதாண்டு காலம் போதுமானது தான். ஆனால், மத்தியில் என்றென்றும் ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடிக்கவேண்டுமென்று அது கொண்டுள்ள கொள்கையானது தமிழகத்தில் ஆங்கில ஆதிக்கத்தை அகற்றும் பணியில் அது தீவிரமாக ஈடுபடுவதற்குத் தடையாகிவிட்டது.

# உலக நாடுகளில் தமிழ்

இந்தியப் பெருநாடு விடுதலை பெற்றதன் விளைவாகத் தமிழகத்திலே தமிழ் மொழிக்குப் புதுவாழ்வளிக்கத் தமிழர் திட்டமிட்டுப் பணியாற்றத் தொடங்கியதனால், உலக நாடுகளிலும் தமிழ்மொழிக்குப் பெருமை ஏற்படலானது. குறிப்பாக, தமிழர் குடியேறி வாழும் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா ஆகிய நாடுகளிலேயும் தமிழுக்குத் தனி அந்தஸ்து கிடைத்தது.

இலங்கைத் தீவின் மக்கள் தொகையிலே சுமார் நான்கில் ஒரு பங்கினர் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்களாவர். அவர்களிலே ஒரு பகுதியினர், இலங்கையின் பூர்வ குடியினர்; மற்றொரு பகுதியினர், இலங்கையில் குடியேறிய இந்திய வம்சாவழியினர். இவர்கள் அனைவரும் இலங்கையையே தாய் நாடாகக் கொண்டவர்கள்.

*இலங்கை*

இலங்கையின் பூர்வகுடித் தமிழர்கள், அத்தீவின் வடக்கிலும் கிழக்கிலும் பெரும்பாலோராக வாழ்கின்றனர். அவை, தனியரசுப் பிரதேசமாக இயங்கக் கூடிய அளவுக்குத் தனித்தன்மை படைத்தவையாகும். இதனாற்றான், இலங்கையைத் தமிழ் மாநிலமும் சிங்கள மாநிலமும் கொண்ட சமஷ்டி அரசு நாடாகச் செய்ய வேண்டுமென்று 30 ஆண்டுகளுக்கு முன்பே ஈழத் தமிழர்கள் கோரிக்கை எழுப்பினர். சிங்களத்தோடு சம அந்தஸ்துடன் தமிழையும் ஆட்சி மொழியாக்க வேண்டும் என்றும் ஈழத் தமிழர்கள் கிளர்ச்சி தொடங்கினர். அதனை இன்றளவும் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். தமிழ் மாநிலக் கோரிக்கையானது ஈழத்திலே

சுதந்திரத் தமிழகம் படைக்கும் புரட்சியாகவும் இன்று மாறி யிருக்கக் காண்கிறோம். அந்த அரசியல் பிரச்சினை பற்றி இங்கு விவரிக்க நான் விரும்பவில்லை. அது ஈழத்தின் உள் நாட்டுப் பிரச்சினை. தமிழ்மொழி ஈழத்தின் சொந்த மொழி களில் ஒன்று என்பதை மட்டும் இங்கு உறுதியாகச் சொல்ல விழைகின்றேன்.

இலங்கைத்தீவு பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்னர், அங்கு ஆங்கில ஆதிக்கம் வேகமாக அகற்றப்பட்டு வருகிறது. ஆட்சி மொழியாகவும், நீதிமன்ற நிர்வாக மொழியாகவும், பல்கலைக் கழகப் பாடமொழியாகவும் சிங்களத்தையும் தமிழையும் ஆக்குவதற்கான முயற்சிகள் சமீப ஆண்டுகளிலே படிப்படியாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இலங்கையின் அனைத்துக் கல்லூரிகளிலும் அனைத்துப் பாடங்களுக்கும் சிங்களவருக்குச் சிங்களமும், தமிழருக்குத் தமிழும் போதனா மொழியாக இருந்து வருகின்றன.

ஆங்கில ஆதிக்கம் அகற்றப்படுவது வரவேற்கத் தக்கது தான். ஆனால், அதன் இடத்திலே சிங்களத்துடன் தமிழும் சம அந்தஸ்துடன் ஏற்கப்படாவிடில், இந்த மொழி மாற்றத் தால் தமிழருக்கு நன்மை விளையாது; தீமையே விளையும். இது காறும் ஈழத் தமிழர் மீது ஆங்கிலம் ஆதிக்கம் செலுத்தியது என்றால், இனி சிங்களம் ஆதிக்கம் செலுத்தும் என்றுதான் பொருளாகும்.

நல்லவேளையாக, சில மாதங்களுக்கு முன்புதான் இலங்கையில் புதிதாகத் தோன்றிய அதிபர் ஜெயவர்த்தனா வின் ஆட்சி இலங்கையின் மொழிப் பிரச்சினையைப் பற்றி புனராலோசனை செய்ய முற்பட்டிருப்பதாக அறிகிறேன்.

இலங்கையின் குடிமக்களிலே இதுகாறும் இருந்து வந்த 'பூர்விகக் குடிகள்'—'பதிவு செய்யப்பட்ட குடிகள்' என்ற வேற்றுமையை அகற்றி, இலங்கை மக்கள் எல்லோரையும் சம அந்தஸ்துள்ள குடிகளாக அங்கீகரிக்க அரசு திட்டம்

வருத்திருப்பதாக அறிகிறேன். சிங்களத்தோடு தமிழையும் சம அந்தஸ்துடைய ஆட்சி மொழியாக அதிபர் ஜெயவர்த்தனவின் அரசு செய்யும் என்ற செய்தியும் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. இது எப்படியாயினும் சரி; இன்றில்லாவிட்டாலும் எதிர் காலத்தில் சிங்களத்தோடு சம அந்தஸ்துள்ள ஆட்சி மொழியாக தமிழும் ஏற்கப்படுவது உறுதி அதுவரை ஈழத் தமிழர்கள் ஓயமாட்டார்கள்.

இந்தியப் பெருநாடு விடுதலை பெற்றதன் எதிரொலியாகத்தான் இலங்கைத் தீவு விடுதலை பெற்றது. இதன் விளைவாகத்தான் இலங்கையிலும் தமிழ்மொழி மெல்ல மெல்ல வேனும் புதுவாழ்வு பெற்று வருகிறது. இனி, இந்தியத் தமிழருக்கும் வழிகாட்டக் கூடிய வகையில் இலங்கைத் தமிழகத்தில் தமிழ் மொழி வளர்ச்சியடையும்.

*பர்மா*

பர்மாவிலும் பல லட்சக் கணக்கான தமிழர்கள் இரண்டாவது உலகப் பெரும் போருக்கு முன்னர் வாழ்ந்து கொண்டிருந்தனர். இவர்களிலே மிகப் பெரும்பாலோர் பர்மாவில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்ட பின்னர் அங்கு குடியேறியவர்களாவர். மற்றவர்கள், பிற்காலச் சோழர் காலத்தில் குடியேற்றப்பட்டு, அந்த நாட்டின் சுதேசிகளாகி விட்டனர். இவர்கள், மோல்மேன் போன்ற பகுதிகளில் வாழ்கின்றனர். இவர்கள் தமிழை மறக்கவில்லை.

இரண்டாவது உலகப் பெரும்போரின்போது பர்மாவுக்குள் ஜப்பானியப் படை புகுந்ததன் காரணமாக, லட்சக் கணக்கான தமிழர்கள் அங்கிருந்து வெளியேறி, தங்கள் பூர்விகத் தாயகமான இந்தியத் தமிழகத்தில் அடைக்கலம் புகுந்தனர். இதனால், பர்மாவில் தமிழர் தொகை குறைந்து விட்டது.

பர்மா சுதந்திரமடைந்த பின்னர் மிகச் சொற்ப காலந்தான் அந்நாட்டில் ஜனநாயகம் நிலவியது. பின்னர்,

இராணுவ ஆட்சி தோன்றியது. அது இன்றளவும் நீடிக்கிறது. இராணுவ ஆட்சியால் அமுல் நடத்தப்பட்ட பல சட்டங்கள் காரணமாக மீண்டும் மீண்டும் ஏராளமான தமிழர்கள் குடும்பம் குடும்பமாக பர்மாவிலிருந்து வெளியேறி அகதிகள்போல இந்தியத் தமிழகத்தில் அடைக்கலம் புகுந்தனர். இதனாலும், பர்மாவில் தமிழர் எண்ணிக்கை மேலும் குறையலானது. இந்த வெளியேற்றங்களுக்குப் பின்னும் இன்னமும் பல்லாயிரக் கணக்கான தமிழ்க் குடும்பங்கள் பர்மாவில் வாழ்கின்றன. அதனால், அந்த நாட்டில் தமிழ் மொழி நிலைபெற்று விட்டது. ஆனால், அங்கு ராணுவ ஆட்சி நடைபெறுவதால், ஆட்சி மொழிகளில் ஒன்றாக தமிழ் அங்கீகரிக்கப்படவில்லை. மீண்டும் ஜனநாயகம் மலரும்போது தமிழுக்கு அங்கும் ஆட்சிமொழி அந்தஸ்து கிடைக்கும் என்று நம்பலாம்.

## *சிங்கப்பூர்—மலேசியா*

தூர கிழக்கு நாடுகளில் ஒன்றான சிங்கப்பூரில் மக்கள் தொகையில் பத்தில் ஒரு சதவிகிதத்தினராகத் தமிழர் வாழ்கின்றனர். இவர்களிலே சிலர் சிங்கப்பூர் அரசியலிலே செல்வாக்கு பெற்றும் விளங்குகின்றனர். ஆம்; தமிழர் ஒருவர் அயல் துறை அமைச்சராக வருமளவுக்குத் தமிழினத்தாருக்கு அங்கு செல்வாக்கு இருக்கிறது சிங்கப்பூர் குடி மக்களில் சீனர்களே 80 சதவிகிதத்தினர். அதனால், சீன மொழியே பிரதான ஆட்சி மொழியாக இருந்து வருகிறது. ஆனால், 10 சத விகிதத்தினரால் பேசப்படும் மலாய் மொழியும், மற்றும் 10 சதவிகிதத்தினரால் பேசப்படும் தமிழ்மொழியும் சீன மொழியுடன் சம அந்தஸ்துள்ள ஆட்சி மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பூர்வவினை காரணமாக, ஆங்கிலமும் சிங்கப்பூரின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக இன்னமும் நீடிக்கிறது.

மலேசியாவின் மக்கள் தொகையில் தமிழர் எண்ணிக்கை 10 சதவிகிதமாகும். இந்த நாட்டிலும் தமிழானது ஆட்சி

மொழிகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மலேசிய சமஷ்டி ஆட்சியின் அமைச்சரவையிலே, அந்த நாடு சுதந்திரம் பெற்ற காலம் தொடங்கித் தமிழரும் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றனர்.

மலேசிய நாட்டிலுள்ள வானொலி நிலையம் ஒவ்வொன்றிலும் தமிழுக்கெனத் தனித்துறை இருந்து வருகிறது. இந்தியா சுதந்திரமடைந்ததை யடுத்து மலேசியா சுதந்திரம் பெற்றது. இதன் விளைவுதான் அந்த நாட்டில் தமிழுக்குக் கிடைத்துள்ள அரசியல் அந்தஸ்து.

## சோவியத் யூனியன்

சோவியத் யூனியனின் தலைநகரான மாஸ்கோவிலுள்ள வானொலி நிலையத்திலே தமிழுக்கெனத் தனியாக ஒரு துறை இருந்து வருகிறது. இந்தியத் தமிழரோடு மட்டுமின்றி, உலக நாடுகளிலுள்ள தமிழரோடெல்லாம் தொடர்பு கொள்ளவும் மாஸ்கோ வானொலி நிலையத்திலுள்ள தமிழ்த்துறை பயன் பட்டு வருகிறது.

ருஷ்யப் பெருநாடு சோஷலிச நாடாக மாறி 60 ஆண்டுகளுக்குமேல் ஆகிறது என்றாலும், இந்தியப் பெருநாடு விடுதலை பெற்ற பின்னர்தான் சோவியத் வானொலி நிலையத்திலே தமிழுக்குத் தனித்துறை கிடைத்திருக்கிறது. திரு. மணிவர்மன், திரு. சோமசுந்தரம் என்ற இரு தமிழர்கள் மாஸ்கோ வானொலி நிலையத் தமிழ்த் துறையில் பணியாற்றி வருகின்றனர்.

இந்தியா விடுதலை பெற்ற பின்னர்தான் அமெரிக்க வானொலியான "வாய்ஸ் ஆப் அமெரிக்கா"விலும் தமிழுக்குத் தனி இடம் தரப்பட்டது.

"இலண்டனிலுள்ள பிரிட்டிஷ் வானொலி (பி. பி. ஸி.) நிலையத்திலே மிகவும் சக்தி படைத்த அமைப்பாக தமிழ்த் துறை இயங்கி வருகிறது. திரு சங்கரமூர்த்தி என்ற தமிழர்

அத்துறையின் தலைமை நிர்வாகியாக இருந்து ஆர்வத்துடன் பணியாற்றி வருகிறார்.

## பத்திரிகைகள்

நாடு விடுதலை பெற்ற பின்னர் தமிழகத்திலிருந்து வெளி வரும் தமிழ் நாளேடுகளின் எண்ணிக்கை ஒன்றுக்கு நான்காகப் பெருகியிருக்கக் காண்கிறோம். வார, மாத இதழ் களின் எண்ணிக்கையும் கூடுதலாகி யுள்ளது.

## இலங்கை

இலங்கைத் தீவிலும் தமிழ் நாளேடுகளும், வார ஏடு களும் அந்தத் தீவு விடுதலை பெற்ற நேரத்திலும், அதற்குப் பின்னரும் வெளிவரலாயின. தமிழ் ஏடுகளின் எண்ணிக்கை வெகு வேகமாக வளர்ந்து வருகின்றன என்று சொல்ல முடியாவிட்டாலும், தமிழர் மத்தியில் மிகுந்த செல்வாக்கு பெற்றுள்ள ஏடுகள் நிலையான வாழ்வை அடைந்துள்ளன.

தமிழர் குடியேறி வாழும் சிங்கப்பூர், மலேசியா, பர்மா ஆகிய நாடுகளிலும் தமிழ் நாளேடுகள் தமிழரால் நடத்தப் படுகின்றன. ஒன்றிரு நாளேடுகள் கால் நூற்றாண்டுக் காலத்திற்கு மேலாக வெற்றிகரமாக வெளிவந்து கொண் டிருக்கின்றன. தமிழரின் குடியேற்றப் பகுதிகளில்லாத பிரிட்டன், சோவியத் ருஷ்யா போன்ற ஐரோப்பிய நாடு களிலும் தமிழ் ஏடுகள் வெளியிடப்படுகின்றன.

## இலண்டன்

இலண்டனில் குடியேறி வாழும் தமிழர் தங்கள் சொந்த முயற்சியால் கடந்த ஆறு ஆண்டுகளாக 'லண்டன் முரசு' என்ற பெயரில் தமிழ் மாத வெளியீடு ஒன்றை வெற்றிகர மாக நடத்தி வருகிறார்கள். திரு. ச. ம. சதானந்தம் பி. எஸ்சி. அவர்கள் ஆசிரியராகவும், திரு. ஞானசூரியன்

SB
7-43



எம். எஸ்சி., திரு. அரங்க முருகையன் ஆகியோர் சிறப்பாசிரியர்களாகவும் இருந்து நடத்தி வருகிறார்கள்.

## சோவியத் ஏடுகள்

சோவியத் ருஷ்யா "சோவியத் நாடு" என்னும் பெயரில் திரு. ஜி. ஏ. சியோமின் என்ற ருஷ்யரை ஆசிரியராகவும் திரு. த. விஜயபாஸ்கரன் அவர்களைக் கூட்டு ஆசிரியராகவும் கொண்டு அழகிய மாதமிருமுறை வெளியீடு ஒன்றைத் தொடர்ந்து 25 ஆண்டுகளாக நடத்தி வருகிறது. இது, சென்னையிலுள்ள சோவியத் தூதரகச் செய்தித் துறையின் பொறுப்பில் வெளி வருகின்றது.

"சோவியத் பலகணி" என்ற பெயரில் மற்றொரு மாத வெளியீடு ஒன்றும் கடந்த 26 ஆண்டுகளாக வெளி வந்து கொண்டிருக்கிறது.

## பொதுவுடைமை நூல்கள்

உலகிலுள்ள தமிழ் மக்களோடு அவர்களின் தாய் மொழியான தமிழின் மூலமே உறவு கொள்ளவேண்டுமென்ற நன்னோக்கோடுதான் இந்த இதழ்களை அந்த நாடு நடத்தி வருகின்றது. சோவியத் ருஷ்யாவின் வளர்ச்சியையும் அதன் பொதுவுடைமைச் சித்தாந்தத்தின் நற்பயனையும் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தும் வகையில் சிறிய பெரிய நூல்களையும் ருஷ்யா தொடர்ந்து வெளியிட்டு வருகின்றது. குவியல் குவியலாக வெளியிட்டு வருகின்றது. இவ்வளவு அதிகமான தமிழ் நூல்களை வேறு எந்த அயல் நாடும் வெளியிடவில்லை. இந்தியத் தமிழகத்தில் கூட, எந்த ஒரு அரசியல் சித்தாந்தத்தின் சார்பிலும் இவ்வளவு தமிழ் நூல்கள் வெளியிடப்படவில்லை.

## அமெரிக்கா

சோவியத் ருஷ்யாவுக்கு அடுத்தபடியாக அமெரிக்கக் குடியரசின் சார்பில் செய்திப் பிரசுரங்களும், சித்தாந்தப்

பிரசார நூல்களும் தமிழில் வெளியிடப்படுகின்றன. சோவியத், அமெரிக்க ஏடுகளும் நூல்களும் மிகவும் மலிவான விலையில் தமிழகத்தில் விற்கப்படுகின்றன.

## யுனெஸ்கோ வெளியீடு

ருஷ்யாவின் தேசிய மொழியான ருஷ்ய மொழியில் தமிழ் இலக்கியங்களில் சிறந்தவை மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. அந்த வகையில் சிலப்பதிகாரம், பாரதியாரின் தேசிய கீதங்கள், தொல்காப்பியம் ஆகிய தமிழ் இலக்கிய-இலக்கண நூல்கள் மாஸ்கோவில் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன. இந்த நூல்கள் ருஷ்யாவின் பிரதேச மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

## பிரான்ஸ்

பிரெஞ்சு நாட்டின் தலைநகரான பாரிஸில் உள்ள சர்வதேச ஸ்தாபனமான யுனெஸ்கோவின் சார்பில் "கூரியர்" என்னும் பெயரில் 15 மொழிகளில் மாத இதழ் வெளியிடப்பட்டு வருகின்றது.

டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் யுனெஸ் கோவின் துணை இயக்குநராக இருந்தபோது 'கூரியர்' தமிழ் மாத வெளியீட்டைக் கொண்டு வர ஏற்பாடு செய்தார் என்பது நன்றியுடன் நினைவிற் கொள்ளத்தக்கதாகும்.

இந்திய மொழிகளில் தமிழ், இந்தி ஆகிய இரு மொழி களில் மட்டுமே "கூரியர்" வெளியிடப்பட்டு வருகிறது. இவற்றுள்ளும் முதன் முதலில் வெளி வந்தது தமிழ் "கூரியர்"தான். பத்தாண்டுகள் கழித்தே இந்தியில் வெளி வந்தது.

இதன் ஆண்டுச் சந்தா ரூ 21. தனிப் பிரதி ரூ. 2. இதனை ஒரு விஞ்ஞான இதழ் என்றே கூறலாம்,

திரு. எம். முகமது முஸ்தபா என்னும் சிறந்த தமிழ் எழுத்தாளர் ஆசிரியராகவும், வெளியீட்டாளராகவும் இருந்து வருகிறார். இந்த இதழ் யுனெஸ்கோவுக்காக தென் மொழிகள் புத்தக டிரஸ்டினால் வெளியிடப்பட்டு வருகிறது.

## கண்டந்தோறும் தமிழ்

ஆசிய—ஆப்பிரிக்க—ஐரோப்பிய கண்டங்களிலுள்ள பல நாடுகளின் பல்கலைக் கழகங்களிலே தமிழ் மொழிக்கெனத் தனியிடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உயர் கல்வியில் தமிழும் ஒரு விருப்பப் பாடமாக போதிக்கப்பட்டு வருகிறது. உலகில் இந்திய மொழிகளிலேயே தமிழ் மொழிக்குத்தான் மிகுதியான மதிப்புத் தரப்படுகிறது என்பதனை இங்கு நான் சொல்லியாக வேண்டும்.

## செனகல் நாடு

ஆப்பிரிக்காவிலுள்ள செனகல் நாட்டின் தற்போதைய அதிபர் சிறந்த தமிழறிஞராக விளங்குகிறார். அவர் அண்மையில் சென்னை வந்தபோது நான் நேரில் சந்தித்தேன். அவரது ஆர்வம் காரணமாக, செனகல் நாட்டின் பல்கலைக் கழகத்திலே தமிழ் மொழிக்கும் ஆப்பிரிக்க மொழிகளுக்குமிடையேயுள்ள தொடர்பினை ஆராய்வதற்கென்று தனித் துறை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அத்துறைக்கு சென்னை வாசியான டாக்டர் அறவாணன் பேராசிரியராக நியமிக்கப்பட்டடிருக்கிறார்.

## பிரிட்டிஷ் நூலகம்

உலகிலுள்ள நூலகங்களிலெல்லாம் மிகவும் பெரியது லண்டன் பிரிட்டிஷ் மியூசியத்திலுள்ள நூலகம். அதிலே, தமிழ் நூல்கள்—குறிப்பாக, பழைய ஓலைச் சுவடிகள் நிறைய சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. இந்திய நூலகங்களில் தேடிக் கிடைக்காமல் போனவற்றை பிரிட்டிஷ்

மியூசியத்தில் தாம் பெற்றதாக டாக்டர் உ. வே. சா. கூறியுள்ளார். பாரிசிலுள்ள நூலகத்திலும் தமிழ் ஓலைச் சுவடிகளைக் காண முடிகின்றது.

இந்தியப் பெருநாடு விடுதலை பெற்ற பின்னர் அயல் நாடுகளில் தமிழறிஞர்கள் பெரிதும் கௌரவிக்கப்படுகின்றனர். இதிலே சோவியத் ருஷ்யா முன்னணியில் நிற்கிறதென்று சொல்லலாம்.

தமிழகத்திலிருந்து நாவலாசிரியர்களும் கவிஞர்களும் கலைஞர்களும் சோவியத் ருஷ்யாவுக்கு அழைக்கப்பட்டு, அங்கு கௌரவிக்கப்படுகின்றனர். அங்கு அவர்களில் சிலருக்கு 'லெனின் நினைவுப் பரிசு'களையும் அளித்து கௌரவிக்கிறது சோவியத் அரசு.

கொழும்பு பல்கலைக் கழகமானது பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களுக்கு 'டாக்டர்' பட்டமளித்து கௌரவிக்க அண்மையில் முடிவு செய்துள்ளது.

## எங்கெங்கும் தமிழ்ச் சங்கம்

நியூயார்க், லண்டன், பாரிஸ் போன்ற பெரு நகரங்களில் தொழில் காரணமாகக் குடியேறி வாழும் தமிழர்கள் தங்களுக்கெனத் தமிழ்ச் சங்கங்கள் அமைத்துக் கொண்டு தங்களிடையே தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முயன்று வருகின்றனர். நான் 1970ல் லண்டனுக்கும் பாரிசுக்கும் சென்றிருந்தபோது, அங்குள்ள தமிழ்ச்சங்கங்களால் வரவேற்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டேன்.

சர்வதேச ரீதியிலான தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அதன் தலைமை அலுவலகம் சென்னையில் இருந்து வரக் காண்கிறோம். தமிழக அரசும், மத்திய அரசும் இதைப் போஷித்து வருகின்றன. பாரிசிலுள்ள யுனெஸ்கோவின் ஆதரவும் இதற்குக்கிடைத்து

வருவதாக அறிகிறேன். டாக்டர் ச. வே. சுப்பிரமணியம் என்ற தமிழ்ப் பேராசிரியர் இதன் இயக்குனராக இருந்து வருகிறார்.

இந்திய மொழிகளிலே சர்வதேச ரீதியில் வளர்ச்சி பெறும் வாய்ப்பு தமிழுக்குத்தான் அதிகமாகக் கிடைத்து வருகிறது என்பதனை நினைந்து தமிழ் மக்கள் பெருமிதம் கொள்ளலாம்.

# வள்ளுவருக்கு ஒரு கோட்டம்!

# இளங்கோவுக்கு ஒரு கலைக்கோயில்!

இந்தியாவுடன் சேர்ந்து தமிழ்நாடு பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற பின்னர், உலகப் பயணிகள் கண்டு மகிழ்வதற்கான கலைக்கோயில்கள் தமிழகத்தில் நிறுவப் பெற்றன. ஆம்; தமிழக அரசால்! அவற்றுள் ஒன்று, தமிழினத்தாரின் பத்தினித் தெய்வமான கண்ணகி பிறந்த பூம்புகாரில் நிறுவப் பெற்றுள்ள சிலப்பதிகாரக் கலைக்கூடம். மற்றொன்று, தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையம்பதியிலே நிறுவப் பெற்றுள்ள வள்ளுவர் கோட்டம்!

தஞ்சை மாவட்டத்திலே சீர்காழி தாலுக்காவில் கடற்கரையோரத்திலே சிற்றூராக இன்று காட்சியளிக்கின்றது பூம்புகார். மணிமேகலைக் காப்பியத்திலே, எழுநிலை மாடங்களைக் கொண்ட—சர்வதேசப் புகழ்பெற்ற—அழகிய பூம்புகார் பட்டினத்தைக் கடல் விழுங்கிவிட்டதாகத் தண்டமிழ்ப் புலவர் சாத்தனார் கூறுகிறார். அதன் எஞ்சிய பகுதியாக—மீனவர்வாழ் பிரதேசமாக உள்ளது இன்றைய பூம்புகார்.

திரும்பவும் பழம் பெருமையை பூம்புகாருக்கு ஓரளவேனும் ஏற்படுத்த வேண்டுமென்ற நன்னோக்குடன் அந்தப் பிரதேசத்திலே சிலப்பதிகாரக் கலைக் கூடத்தை அமைக்க தி. மு. க. ஆட்சிக் காலத்திலே கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் முற்பட்டார். அறிஞர் அண்ணா அவர்களை முதலமைச்சராகக் கொண்டு தி. மு. க. அரசு இயங்கி வந்த

நேரத்திலேயே பூம்புகாரிலே சிலப்பதிகாரக் கலைக்கூடம் அமைக்கத் திட்டமிடப்பட்டது. அப்போதைய பொதுப் பணித்துறை அமைச்சரான கலைஞர் மு. கருணாநிதி அவர் களால் 23-5-68ல் அடிக்கல் நாட்டப்பட்டது. ஆயினும், 1970ல்தான் கலைக்கூடம் அமைக்கும் பணி தொடங்கியது. 1973 மே திங்கள் 27ஆம் நாளிலே அப்போது முதலமைச்ச ராகவிருந்த கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் கலைக்கூடம் திறந்து வைக்கப்பட்டது. இக்கலைக்கூடத்திற்காக ஏறக் குறைய 4 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இதிலே, சிலப்பதிகாரக் கதை முழுவதையும் விளக்கும் சிற்பக் காட்சியும் உள்ளது.

சென்னையிலுள்ள வள்ளுவர் கோட்டம், ஆசியாவிலேயே மிகப் பெரியதான மண்டபத்தைத் தன்னகத்தே கொண் டுள்ளது. இதிலே, உள்ள திருவள்ளுவர் கோயில் திருவாரூர் தேரின் வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. 5 ஏக்கர் பரப்புள்ள திறந்தவெளியில் வள்ளுவர் கோட்டம் அமைந் துள்ளது. கோட்டத்தின் நடுவேயுள்ள மண்டபம் 220 அடி நீளமும், 100 அடி அகலமும் கொண்டதாகும். ஒரே நேரத் தில் 4 ஆயிரம் பேர் அமரக்கூடிய வசதியுடன் மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மேல்தளத்திலுள்ள மாடப் பகுதிகளில் விதவிதமான வண்ணக் கற்களில் குறட்பாக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. உலகில் வேறு எந்தப் புலவரின் நினைவாகவும் இத்தகு சிறப்பு வாய்ந்த கோட்டம் அமைய வில்லை என்று சொல்லப்படுகிறது.

பாஞ்சாலங்குறிச்சியில் விடுதலை வீரன் வீரபாண்டியக் கட்டபொம்மன் நினைவாலயம் ஒன்று தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ளது. கட்டபொம்மன் புலவன் அல்ல னென்றாலும், புலவர்களைக் காத்துவந்த புரவலனைத் திகழ்ந் தவன். அவனது வீர வரலாறு காவியங்களாக புலவர் பலரால் படைக்கப்பட்டுள்ளது.

பூம்புகாரில் சிலப்பதிகாரக் கலைக்கூடமும், சென்னையம் பதியில் வள்ளுவர் கோட்டமும், பாஞ்சாலங்குறிச்சியில்

வீரபாண்டியக் கட்டபொம்மன் நினைவாலயமும் தி. மு. க. ஆட்சிக் காலத்தில்—அதன் முதல்வராக இருந்த கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் ஆர்வத்தால் அமைந்தவை யாகும்.

சென்னையம்பதியிலே மூதறிஞர் ராஜாஜியின் பெய ராலும், தலைவர் காமராசர் பெயராலும் அழகிய நினைவால யங்கள் தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ளன.

தஞ்சையிலே பிருகதீசுவரர் கோயில் அருகிலே பேரரசு கண்ட பெருவீரனை இராசராச சோழன் சிலை நிறுத்தப் பட்டுள்ளது.

தமிழ் மொழி வழங்கும் பாண்டிச்சேரி தனியரசு மாநில மாக இருந்து வருகின்றது. அது, 200 ஆண்டுகளுக்கு மேலாகப் பிரெஞ்சுப் பிடியிலிருந்து பாண்டிச்சேரி விடுதலை பெற்றது.

பிரெஞ்சு ஆட்சிக் காலத்திலே பாண்டிச்சேரியில் ஒரு கனகசுப்புரத்தினம் தோன்றினார், மகாகவியாக!

பிரிட்டிஷ் இந்தியத் தமிழகத்தில் தோன்றிய பாரதியார் கூட, சரியாகப் பன்னிரண்டு ஆண்டுக் காலம் பாண்டிச்சேரி யில் தங்கி வாழ்ந்தார். ஆம்; பிரிட்டிஷ் அடக்குமுறைக்குத் தப்பி! வங்க மொழிக் கவிஞரும் புரட்சி வீரருமான அரவிந்த கோஷ் அவர்களும் பாரதியாருக்கு முன்பே பாண்டிச்சேரியில் அடைக்கலம் புகுந்து, நாளடைவில் அரசியலை அடியோடு துறந்து, ஆன்மிகப் பணியில் ஈடுபட்டு, ஞானியானார்!

'புரட்சி வீரர்'—'மகரிஷி' என்றெல்லாம் போற்றப் பெற்ற வ. வே. சுப்பிரமணிய ஐயர் அவர்களும் பாண்டிச்சேரி ராஜ்யத்தின் தலைநகரான புதுவையில் சிறிது காலம் தங்கி வாழ்ந்தார். அப்போதுதான் அவர் திருக்குறள் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து முடித்தார்.

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நாடக உலகின் தந்தை யாக விளங்கிய தவத்திரு சங்கரதாச சுவாமிகள் புதுவையில் தான் அமரத்துவம் பெற்றார்.

புதுவையிலிருந்தபோதுதான் பாரதியார் பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு போன்ற குறுங்காப்பியங்களைப் படைத்தார்.

இந்தக் காலத்தில்தான் இவர் "ஷெல்லிதாசன்" என்னும் புனைபெயர் பூண்டார். பிரெஞ்சுக் கவிதையொன்றைத் தமிழில் மொழிபெயர்த்தார். ஆங்கிலத்தில் "பொன்வால் நரி" என்னும் சிறு கதையை எழுதினார்.

இப்படி, பிரிட்டிஷ் தமிழகம் விடுதலை பெறுவதற்கு முன்பே பிரெஞ்சுத் தமிழகமான பாண்டிச்சேரி இந்தியக் கவிஞர்களுக்கும் அடைக்கலம் தந்தது. அவர்களுடைய இலக்கியப் பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்ததெனலாம்.

பிரெஞ்சுப் பிடியிலிருந்து பாண்டிச்சேரி விடுதலை பெற்ற பின்னர் அங்கு சில ஆண்டுகள் காங்கிரஸ் கட்சி ஆட்சி செலுத்தியது. பின்னர், தி மு கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தது. இப்போது, அங்கு அனைத்திந்திய அண்ணா தி. மு. க. ஆட்சி செலுத்துகின்றது. மாறிமாறி நடந்துவந்த மூன்று கட்சிகளின் ஆட்சிகளிலே தமிழ்ப்பணி தொடர்ந்து நடைபெற்றது.

திரு. பரூக் மரைக்காயர் முதலமைச்சராக இருந்த காலத்திலே தமிழ் ஆட்சிமொழியாக்கப் பெற்றது. ஆம்; பிரெஞ்சு மொழி ஆட்சிப் பீடத்திலிருந்து அகற்றப்படும் பணி தொடங்கியது. பாண்டிச்சேரி ராஜ்யத்திலுள்ள வேற்று மொழிப் பிரதேசங்களான ஏனத்திலும் மாஹியிலும் முறையே தெலுங்கும் மலையாளமும் ஆட்சி மொழியாக்கப்பட்டன. இத்துடனன்றி, பாண்டிச்சேரி உயர்நீதி மன்றத்திலும் தமிழ் நிர்வாக மொழியாக்கப் பெற்றது. கல்வியிலும் பிரெஞ்சு மொழியின் ஆதிக்கத்தைத் தேய்பிறையாக்கவுமான திட்டம் நடைமுறைக்கு வந்தது.

மகாகவி பாரதியார் வாழ்ந்த வீட்டை வாங்கி, அதனை அவரது நினைவாலயமாக்கியது பாண்டிச்சேரி அரசு. ஆண்டு தோறும் பாரதியார் நினைவு நாளைக் கொண்டாடும்

பணியைத் தொடங்கி, அதனைத் தொடர்ந்து நடத்தி வருகின்றது.

1971ல் பாவேந்தரின் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடத் தொடங்கி, ஆண்டுதோறும் தொடர்ந்து நடத்தி வருகின்றது.

பாரதிதாசன் வாழ்ந்த வீட்டை அரசுடைமையாக்கி அங்கு அவரது நினைவாக நூலகமும், காட்சிக் கூடமும் அமைந்துள்ளது புதுவை அரசு.

1972 ஏப்ரல் 29ல்—பாவேந்தர் மறைந்த நாளில்-அவரது முழு உருவச் சிலை ஒன்று புதுவை அரசால் திறந்தப் பெற்றது.

பாரதிதாசன் 1964 ஏப்ரல் 29ல் மறைந்தார். அதன்பின்' அவருடைய நினைவு நிலைபெற புதுவை கடற்கரைப் பிரதேசத்திலுள்ள பாப்பம்மா இடுகாட்டில் மண்டபம் ஒன்று புதுவை நகராட்சியினரால் எழுப்பப்பட்டது.

மத்திய அரசும், புதுவைக் கவிஞரைப் பெருமைப்படுத்த நினைத்து, அவரது 'பிசிராந்தையார்' என்னும் நாடக நூலுக்கு சாகித்ய அகடமி மூலம் ரூ. 5000 பரிசளித்தது.

தமிழ் நாடகப் பேராசிரியரான தவத்திரு. சங்கரதாச சுவாமிகளின் நினைவுநாளை புதுவையில் ஆண்டுதோறும் தமிழகக் கலைஞர்கள் கொண்டாடி வருகின்றனர். அதற்கு, புதுவை அரசும் ஆதரவளிக்கிறது. புதுவையில் கம்பன் கழகம் தோன்றி, ஆண்டுதோறும் கம்பர் விழாவும் நடைபெற்று வருகிறது. அது சிறப்புடன் நடைபெறுவதற்கு மாறி மாறி வந்துள்ள புதுவை முதலமைச்சர்கள் ஒத்துழைப்புத் தந்து வந்துள்ளனர். பாரதிதாசனின் பாடல் ஒன்றை ராஜ்ய கீதமாக்கியுள்ளது புதுவை அரசு.

பிரிட்டிஷ் பிடியிலிருந்து விடுபட்ட தமிழ் மாநிலத்துடன் போட்டி போட்டுக்கொண்டு, பிரெஞ்சுப் பிடியிலிருந்து விடுபட்ட புதுவை மாநிலமும் தமிழ் மொழியை வளர்க்கவும், தமிழ்க் கவிஞர்கள் புகழைப் பெருக்கவும், அவர்கள் பெயரால் நினைவுச்சின்னங்கள் நிறுவவும் பாடுபட்டு வருகின்றது.

# முடிவுரை

1976 ஜனவரி 30ஆம் நாளிலே தி. மு. க. அரசு அகற்றப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி அமுலுக்கு வந்தது. அது ஒன்றரை ஆண்டுக் காலம் நீடித்தது. அந்தக் காலத்திலும் தமிழை வளர்க்கவும், தமிழினத்தின் புகழைப் பரப்பவும் பணிகள் பல நடைபெற்றன.

14—4—67லிருந்து தமிழக நீதிமன்றங்களில் தமிழிலே தீர்ப்பு எழுதவேண்டுமென்று தி. மு. க. அரசு ஆணை பிறப்பித்திருந்தது. ஆனால், அதற்கான சூழ்நிலை உருவாக்கப்படாத நிலையில் தி. மு. க. அரசு மறைந்தது. அதனால், அதன் ஆணையை அமுல் நடத்துவதைத் தேதி குறிப்பிடாமல் ஒத்திப் போடுவதாகத் தமிழக ஆளுநர் அறிக்கை விடுத்தார். இது எனக்கு மிகுந்த வேதனையைத் தந்தது. ஆளுநர் கே. கே. ஷா. அவர்களைப் பேட்டி கண்டு, தி. மு. க. அரசின் ஆணையை அது குறிப்பிட்ட தேதியில் அமுல் நடத்துவது சாத்தியமில்லையென்றால், வேறு தேதியை அறிவிக்குமாறு கோரினேன். தேதி குறிப்பிடாமல் ஒத்திப்போடுவது தமிழ் மக்களுக்குக் கொதிப்பை ஏற்படுத்தும் என்றும் கூறினேன்.

அதன் பின்னர், நேருவின் பிறந்த நாளான 14—11—76 முதல் குற்றவியல் நீதிமன்றங்களில் தமிழில் தீர்ப்பு எழுத வேண்டும் என்ற புதிய ஆணை பிறந்தது. அதற்கான நூல்களைத் தயாரிப்பதற்கான கமிஷன் திருத்தியமைக்கப்பட்டது. ஓய்வுபெற்ற நீதிபதி திரு எஸ் மகாராசன் தலைமையில் புதிய கமிஷன் அமைக்கப்பட்டது. 14—1 —76ல் தமிழகம் முழுவதிலும் குற்றவியல் நீதிமன்றங்களில் தமிழில் தீர்ப்பு எழுதும் பணி தொடங்கப்பட்டது. அதற்கென—1850-ஆம் ஆண்டு இந்தியத் தண்டனைச் சட்டம், 1973-ஆம் ஆண்டு குற்றவிசாரணை முறைச் சட்டம், 1872-ஆம் ஆண்டு இந்தியச் சாட்சியச் சட்டம் ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியீட்டு விழா சென்னை ராஜாஜி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. மத்திய நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அந்நூல்களை வெளியிட்டுப் பேசினார். ஆளுநர் கே. கே. ஷா. தலைமை வகித்தார். உண்மையில் நாடு சுதந்திரம் பெற்றபின் தமிழுக்குச்

கிடைத்த புதுவாழ்வு பலவற்றிலே இதுவே தலைசிறந்த தாகும்.

மற்றும், கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி. சிதம்பரனாரின் பிறந்த நாளையும், மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் மறைந்த நாளையும் அரசின் பொறுப்பிலேயே கொண்டாடக் குடியரசுத் தலைவர் அரசு முன்வந்தது ஆண்டுதோறும் இந்த விழாக்கள் அரசின் பொறுப்பில் கொண்டாடப்படும் என்றும் அறிவித்தது. இது, தமிழரசுக் கழகத்தின் நெடுநாளைய கோரிக்கையாகும்.

1977 ஜூன் 30-ஆம் தேதியன்று குடியரசுத் தலைவர் ஆட்சி அகன்று, அனைத்திந்திய அண்ணா தி. மு. க. அரசு தமிழகத்தில் ஏற்பட்டது. மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் புதிய அமைச்சரவை பிறந்தது. அ. இ. அ. தி. மு. க. அரசு தமிழ் மொழியை வளர்க்கவும், தமிழினத்தின் புகழைப் பெருக்கவும் பல புதிய திட்டங்களை அடுத்தடுத்து அமுல்படுத்தி வருகின்றது.

மதுரைப் பல்கலைக் கழகத்திலே கம்பர், வள்ளலார், உமறுப் புலவர் ஆகியோர் பெயரில் தனித்தனியே துறைகள் அமைக்கப் போவதாகவும் அ. இ. அ. தி. மு. க. அரசு அறிவித்துள்ளது.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தோற்றுவிக்கப்பட்டு, பின்னர், அதனாலேயே கைவிடப்பட்டுவிட்ட "அரசவைக் கவிஞர்" பதவியைத் திரும்பவும் அ. இ. அ. தி. மு. அரசு புதுப்பித்துள்ளது.

தமிழுக்குப் பாடுபடுவோரைச் சிறப்பிக்க வேண்டுமென்ற நன்னோக்கமுள்ள தமிழக முதல்வர் மாண்புமிகு எம் ஜி இராமச்சந்திரன் அவர்கள், தற்காலக் கவிஞர்களிலே தலைசிறந்தவரான கவிஞர் கண்ணதாசன் அவர்களை அவரது ஆயுட்காலம் வரை அரசவைக் கவிஞராக நியமித்துள்ளார்.

தமிழின் வளர்ச்சிக்கும் தமிழினத்தின் நலனுக்கும் பாடுபடுபவன் என்ற காரணத்திற்காகத்தான், என்னைத் தமிழக சட்டமன்ற மேலவைத் தலைவர் பதவியில் அமர்த்துவதற்கு

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 102568



அ இ அ தி மு க அரசு மூன் வந்தது என்பதனையும் நன்றி யுறுதலுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வறுமையில் வாடும் தமிழ்ப் புலவர்களுக்கு ஆண்டுதோறும் ஒரு பெரும் தொகையைக் கொண்ட பொற்கிழி அளிக்கவும், மாதந்தோறும் மானியம் வழங்கவும் தமிழிலே புலமை பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்புகளைப் பெருக்கவும், தமிழ்ப் புலவர்களின் பிறந்த நாட்களையும் மறைந்த நாட்களையும் ஆண்டு தோறும் கொண்டாடி வரவும் அ. இ அ. தி. மு. க. அரசு வழி வகை செய்து வருகிறது. இந்த அரசு தோன்றிய ஓராண்டுக் காலத்திற்குள் தமிழ்ப் பெருமக்கள் மனநிறைவு பெறும் அளவுக்குத் தமிழ்ப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பொதுவாக, நாடு சுதந்திரம் பெற்றதையடுத்து பத்தாண்டுக் காலத்திலும், அதனையடுத்துத் தமிழ் மொழி வழங்கும் நிலப்பரப்பு தனியரசு மாநிலமான பின்னுள்ள முதல் பத்தாண்டுக் காலத்திலும் காங்கிரஸ் ஆட்சியிலேயும் அதனையடுத்துத் தி மு க. ஆட்சிப் பொறுப்பிலிருந்த ஒன்பதாண்டுக் காலத்திலும், தமிழ் வளர்ச்சிக் கெனப் பலவிதமான சட்டங்களும் திட்டங்களும் ஆணை களும் அமுல் நடத்தப்பட்டு வந்துள்ளன ஆனால், வட புலத்திலுள்ள குஜராத், உத்திரப்பிரதேசம், பீகார், காஷ்மீர் ஆகிய மாநிலங்களில் ஆங்கில ஆதிக்கம் எத்த அளவுக்கு அகற்றப்பட்டதோ அந்த அளவுக்குத் தமிழகத்தில் அகற் றப்படவில்லை என்ற குறைபாடு இருக்கத்தான் செய்கிறது. ஆயினும், என்னருமைத் தமிழகத்திலும் ஆங்கில ஆதிக்கம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துகொண்டுதான் வருகிறது. வெகு விரைவில் தமிழர் வாழ்விலே எங்கும் தமிழ்; எதிலும் தமிழ் என்ற நிலை ஏற்படப்போவது உறுதி. இது நாடு விடுதலைபெற்றதன் நற்பலனாகும். அந்த விடுதலை வாழ்வைக் காப்பதன் மூலம்தான் இனியும் தமிழை வளர்க்க முடியும் என்பதைத் தமிழ் மக்கள் நினைவில் கொள்வாராக!

வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
வானம் அறிந்தது அனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!
எங்கள் தமிழ் மொழி
எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே

★


பூங்கொடி பதிப்பகம்